# பெண் கல்வி.

சித்திர சகிதமான ஒரு மாதாந்த சஞ்சிகை.

கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்.—திருக்குறள்.

தொகுதி 1.] 1911௵ ஜூன்மீ 22உ. [பகுதி 1.

## நமது பத்திரிகை.

சகோதரிகளே!

ஸ்திரீகளுக்குக் கல்வி அவசியமென்கிற விஷயம் யாவருமறிந்ததே. கல்வியைப்பரவச் செய்வதற்குப் பத்திரிகையே சிறந்த சாதனமென்பதும் யாவருமறிந்ததே. பெண்கள் சாதாரணமாய்க் கல்யாணமாகும் வரையோ, அல்லது புத்தியறியும்வரையோதான் பள்ளிக்கூடம் சென்று கற்க அனுப்பப்படுகிறார்கள். இச்சொற்ப காலத்துக்குள்ளாக அவர்கள் கற்கக்கூடியது மிகக்கொஞ்சம். ஒருவர் தம் ஆயுளெல்லாமே கற்பதென்றாலே கற்றுமுடியாத கல்விக்கடலில் சில வருஷங்களுக்குள்ளாக எவ்வளவு விஸ்தீரணம் அவர் அறியக்கூடும்? "கல்விகரையில கற்பவர் நாட்சில" என்றார் பெரியோர். "கல்வியே சிற்றுயிர்க்குற்ற துணையா"யிருக்கின்றது. மாதர்க்குக் கல்வியழகே அழகன்றோ? ஸ்திரீகளின் நாகரீகமும் கல்வியுமே ஒரு நாட்டின் உன்னத நிலையைக் குறிப்பிப்பதாயிருக்கின்றன. நம் நாட்டில் முற்கால மகோன்னத நிலைக்குக் காரணமாயிருந்தது பெண்கல்வியென்பதும், தற்கால க்ஷீண தசைக்குக்காரணமாயிருப்பது பெண்கல்வியின்மை யென்பதும் எவரும் ஆக்ஷேபணையின்றி ஒப்புக்கொள்ளத்தக்க விஷயங்கள்.

கல்விச்சிறப்பும் செல்வவுயர்வும் உடையோ மல்லேமாயினும் எம்மால் கூடிய அளவு பாடுபடத் தீர்மானங்கொண்டு, 1910௵ மார்ச்சுமீ முதல் அபேதைக்கியானந்தசங்கம் என்னும் ஒரு சங்கத்தைச் சில சிநேகிதர்களினுதவியால் சென்னையில் ஸ்தாபித்து அதில் பிரதி சனிவாரமும் ஸ்திரீகள் அறியவேண்டிய விஷ

161976

யங்களைப் பிரசங்கங்கள், சம்பாஷணைகள்— இவை மூலமாய் வெளியிட்டு வருகிறோம். மேலும், இச்சங்கத்தின் ஒருபிரிவாக ஏழைகள் நிமித்தமாய் இராத்திரிப்பள்ளிக்கூடமொன்றும் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. இதில் இலவசமாய் தினமும் மாலை 6½மணி முதல் 7½ மணி வரை ஆங்கிலபாஷை கற்றுக்கொடுக்கப்பட்டு வருகிறது. ஆயினும், இவையனைத்திலும் பத்திரிகையே கல்வி யபிவிர்த்திக்கு விசேஷ சாதனையாகையால் அச்சங்கத்தின் அங்கமாகப் பத்திரிகையொன்று நடத்த வேண்டுமென்ற எண்ணம் பலநாட்களாக எம்மனத்தில் குடிகொண்டிருந்தது. அதைநமது சக்கரவர்த்தியின் முடிசூட்டுக் கொண்டாட்ட தினமாகிய இன்று எங்கள் பேரானந்தத்தின் ஓர் அறிகுறிபாக ஆரம்பித்திருக்கின்றோம்.

இதில் ஸ்திரீகள், தாய், மனைவி, சகோதரி, புத்திரி முதலிய பல நிலைகளில் செய்ய வேண்டிய கடமைகளும், நடந்துகொள்ள வேண்டிய விஷயங்களும், ஜடசாஸ்திரம், வானசாஸ்திரம், தர்க்கசாஸ்திரம், பொருளாதாரம் முதலிய பல சாஸ்திர சாரங்களும் நம்நாட்டிலும் புறநாடுகளிலும் கல்வி, நாகரீகம்-இவைகளில் மேம்பாடடைந்த தற்கால முற்கால ஸ்திரீகளின் ஜீவியசரிதங்களும் மற்றும் ஸ்திரீகள் அறிவபிவிர்த்திக் கவசியமான பல விஷயங்களும் மிகவும் எளிய தமிழ் நடையில் வெளிவரும்.

இப்பத்திரிகைக்கு விஷயங்கள் எழுதுபவர்கள் ஸ்திரீகளே. பலமாதர்கள் பத்திரிகைக்கு விஷயதானங்கள் செய்வதாயும், அது நிலை பெற வேண்டும் உதவிகள் செய்து ஆதரிப்பதாயும் உறுதிமொழி கூறியிருக்கின்றார்கள். நம் ஸ்திரீகளின் பரிதாப நிலையை அறிந்து, அதை உயர்த்த முயற்சி செய்யும் தமிழறியாத அயல்நாட்டு ஸ்திரீகளும் வேறு இராஜதானியிலுள்ள ஸ்திரீகளும் விஷயதானங்கள் செய்வதாக வாக்குக்கொடுத்திருக்கிறார்கள். இவர்கள் ஆங்கிலத்தில் எழுதும் அருமையான வியாசங்களைமொழி பெயர்த்துப் பிரசுரிப்போம். விஷயங்களனைத்தும் கூடியவரை தகுந்த அனுபோகசாலிகளாலேயே கையாளப்படும்.

இப்பத்திரிகையில் வரும் வருமானத்தில் ஒருபகுதி மேற்குறித்த அபேதைக்கியானந்த சங்கத்தார் ஸ்தாபிக்க உத்தேசித்திருக்கும் விதவாமடம் பரிபாலனத்தின் பொருட்டும், மற்றொரு பகுதி மேற்குறித்த இராத்திரிப்பள்ளிக்கூடம் அபிவிர்த்தியின் பொருட்டும் செலவிடப்படுமாதலால், நமது தமிழ் நாட்டிலுள்ள

TL
TSS m 211, N11
N11·1
2



ஸ்திரீ ஜனங்கள் யாவரும் இதை மனப்பூர்வமாக ஆதரிக்குமாறு கோருகிறோம். ஸ்திரீகள் அங்ஙனம் செய்யுமாறு அவசியமுள்ள இடங்களில் புருஷர்கள் உதவி புரியவும், எவ்விதத்தும் அவர்கள் தடையாக நில்லாதிருக்கவும் வேண்டுமென்பது எமது முக்கிய அபேக்ஷை.

---

## சந்தா விபரம்.

| | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|
| வருஷ சந்தா ... ... | 2 | 8 | 0 |
| 6 மாதங்களுக்கு ... ... | 1 | 8 | 0 |
| 3 மாதங்களுக்கு ... ... | 1 | 0 | 0 |
| தனிப்பிரதி ... | 0 | 4 | 0 |

பத்திராதிபர்.

*P. S.* இப்பத்திரிகையை ஆதரிக்கக் கூடியவர்கள் என்று எமக்குத் தோன்றிய ஒவ்வொருவருக்கும் இம்முதல் சஞ்சிகை அனுப்பப்பட்டிருக்கின்றது. இதற்குச் சந்தாதாரராகப் பிரிய மில்லாதவர்கள் உடனே எமக்குத் தெரிவிக்கக் கோருகிறோம். அங்ஙனம் தெரிவியாதவர்களை யெல்லாம் சந்தாதாரராகப் பிரியமுள்ளவரெனக் கருதிப் பிரதிமாதமும் இப்பத்திரிகையை யனுப்பி வருவோம். அவருள் இப்பத்திரிகை பெற்றவுடன் சந்தாத்தொகையை மணியார்டர் செய்யாதவர்களுக்கு அடுத்த சஞ்சிகை வி. பி. யில் அனுப்பப்படும்—ப-ர்.

---

கடவுள் ஒருவரே யுளர். ஆனால் கடவுள் என்னும் அளவிறந்த மரமானது—அன்பு, ஞானம், சாந்தம், ஆனந்தம், பரிசுத்தம், ஒற்றுமை முதலிய பலகிளைகளை யுடைத்தாயிருக்கின்றது. தப்பிதமும் ஒன்றே யுளது. ஆனால் தப்பிதம் என்னுமரமானது கொடுமை, அநீதி, கொலை, பேராசை, காமம் முதலிய எண்ணிறந்த கிளைகளையுடைத்தாயிருக்கின்றது. இவ்விரு விஷயத்தையும் நன்றாகப் படிப்பீர்களாயின் உலகமானது எதைக்கடவுளாகவணங்கியிருக்கின்றதென்பதையும், எதைப் பிசாசமாகக் கருதிப் பயந்திருக்கின்றதென்பதையும் அறிவீர்கள். தவிரவும் சற்கருமிகள் கடவுளைக் காண்பித்து வந்தவர்களென்றும் துஷ்கருமிகள் பிசாசத்தைக் காண்பித்து வந்தவர்களென்றும் அறிவீர்கள்.—மிஸ்ஸஸ் மாலரி.

* * *

நித்திரை செய்யாதவனுக்கு இரட்டை வெகுமானம் உண்டு—ஹோமர்.

* * *

கெட்ட சிநேகிதர்கள் என்னைக் கெடுத்துப்போட்டார்கள். அவர்களுடன் அதிக நித்திரையும் சேர்ந்தது.—ஹோமர்

3

# முடிசூட்டுவைபவம்.*

---

சோதரிகளே ! பிரிய சோதரிகளே !

நாம் எல்லோரும் இன்று இங்கு கூடியது எதற்காக என்பது உங்களுக்குத் தெரியும். இராஜாதி இராஜனும் நமது சக்கரவர்த்தியுமாகிய V-வது ஜார்ஜுக்கு இன்று முடிசூட்டுக் கொண்டாட்டம். இக்கொண்டாட்டம் இன்று வெகு சிறப்பாக லண்டன் (London) மா நகரத்தில் நடைபெறும். இவ்வுலகின்கண் உள்ள எண்ணிறந்த நகரங்களுள் முதன்மையான நகரம் நமது சக்கரவர்த்தி வசித்து வருவதும், இன்று முடிசூட்டுக் கொண்டாட்டம் கொண்டாடப்படுவதுமான மேற்குறித்த லண்டன்மா நகரமேயாம் என நீங்கள் அறிவீர்கள். அந்நகரத்தில் இன்று நடக்கும் அலங்காரங்களையும், வேடிக்கைகளையும், விந்தைகளையும், பார்க்கவே கண்கள் ஆயிரம் படைக்கவேண்டுமென்றால் சொல்வதற்கு நாக்குகள் எத்தனைவேண்டும் ? ஆயினும் முடிசூட்டுச் சடங்கு சம்பந்தமாக நடக்கும் சில விசேஷங்களைக் கூறுகிறேன். சற்று செவிசாயுங்கள்.

இம்முடிசூட்டுச் சடங்கானது ஆதியில் ரோம் நகரத்தில் நடைபெற்று வந்தது. பாத், வின்சஸ்டர் முதலிய இடங்களிலும் நடைபெற்று வந்திருக்கின்றது. ஆனால், எட்வர்ட்-தி-கன்பெஸ்ஸர் என்பவர் வெஸ்ட்மினிஸ்டர் ஆபி என்னும் மடாலயத்தை ஸ்தாபித்த காலமுதல் இச்சடங்கு அங்கேயே நடந்தேறி வருகின்றது. இந்த ஆபியில் ஒருதேவாலயமும் அமைக்கப்பெற்றுள்ளது. இதில்தான் சடங்கு நடப்பது. இதன் நீளம் 416 அடி, அகலம் 203 அடி உயரம் 102 அடி. இதன் கோபுரங்கள் 225 அடி உயரம் உள்ளன. இது நிற்க,

முடிசூட்டுச் சடங்கு சம்பந்தமாக ஒருவிசேஷ ஏற்பாடொன்றுளது. அதாவது அச்சடங்கு சம்பந்தமாகப் பல வேலைகள் ஏற்பட்டுள்ளன. ஒவ்வொரு வேலையும் இன்னின்னரால் செய்யப்படவேண்டும் என்றும் குறிக்கப் பட்டுள்ளது. இதில் ஒருவருக்குப் பாத்தியப்பட்ட வேலையை மற்றொருவர் தமக்குப் பாத்தியப்பட்ட

---

* இஃது முடிசூட்டுக் கொண்டாட்ட தினத்தன்று அபேதைக்கியானந்த சங்கத்தில், பத்திராதிபரால் செய்யப்பெற்ற பிரசங்கத்தின் சாரம்.





தாக எண்ணிச் செய்ய நேரிடுமாதலால், அங்ஙனம் நேரிடாவண்ணம், ஆவலாதி நேரிடுங்காலத்துக் கக்ஷிகளின் பாத்தியதா பாத்தியதையைத் தீர்மானிப்பதற்கு வேண்டி, கோர்ட்டு ஒன்று ஏற்படுத்தப் பட்டுள்ளது. இக்கோர்ட்டு வெகுகாலத்திற்குமுன் ஸ்தாபிக்கப்பட்டதாகத் தெரியவருகின்றது. இது ஸ்டார்ச்சேம்பர் (Star Chamber) என்னுமிடத்தில் இருந்துவந்தது. தற்பொழுது இதற்கதிபதி நமது சக்கரவர்த்தியே யாவர். இதில் நடத்தப்படும் விசாரணைகள் மிகவும் பழையகாலத்து மாதிரியாகவே யிருக்கும். பழைய காலத்தைத் தற்காலத்தோடு சேர்க்கும் பல வழக்கங்களுள் இஃதொன்றாகும்.

ஒவ்வொருவருக்குச் சடங்கு சம்பந்தமான வேலைகள் இருக்கும் என்று கூறியுள்ளேன். அஃதெத்தன்மையன என்று உங்களுக்கு விளங்குமாறு சில உதாரணங்களாகக் கூறுகின்றேன்:—லண்டன்மா நகரத்து லார்ட் மேயர் என்பவர் இராஜனுக்குத் திராக்ஷப்பழ இரசத்தை ஒரு பாத்திரத்தில் ஊற்றிக் கொடுக்கவேண்டும். இவ்வூழியத்திற்காக எப்பாத்திரத்தில் திராக்ஷப்பழ இரசம் கொடுக்கப்படுகிறதோ, அப்பாத்திரம் அவருக்குச் சொந்தமாகும். ஆடிங்க்டன் மானர் பிரபுவானவர் அரசனது தலைமைப் பரிசாரகனால் ஆக்கப்பட்ட ஆகாரத்தைத் தீனிமேஜைக்குக் கொண்டுவரவேண்டும். இவ்விதமாகத்தான் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு வேலை நிச்சயிக்கப்பட்டிருக்கும்.

இனி அரசச்சின்னங்களைப்பற்றிச் சற்று கூறுகிறேன். அவைகள் பலவாயினும் அவற்றுள் முக்கியமானது முடி அல்லது கிரீடமாகும். கிரீடங்களும் பலவுள. அவற்றுள் ஒன்று சேயின்ட் எட்வர்டின் முடி என்று சொல்லப்படும். இது தான் அரசனுக்குரிய உத்தியோகக் கிரீடமாகும். இது ஒவ்வொரு முடிசூட்டுக் கொண்டாட்ட காலத்தும் கொண்டுவரப்படும். இன்றும் கொண்டுவரப் பட்டிருக்கும். இது ஸ்வர்ணத்தினால் ஆக்கப்பட்டு, வைரங்கள் முத்துக்கள் முதலிய இரத்தினங்களால் இழைக்கப்பட்டிருக்கும்.

மற்றொன்று விக்டோரியா மகாராணியின் முடியாகும். இது 1838-ம் வருஷத்தில் செய்யப்பெற்றது. இதில் உள்ள விலையுயர்ந்த கல்லுகளெல்லாம் பூர்வீகமாக இருந்துவந்த பல கிரீடங்களிலுள்ளனவேயாகும்.

மற்றொரு முக்கிய சின்னம் செங்கோலாகும். செங்கோல்களில் இரண்டு வகையுள. ஒன்றின் உச்சியில் சிலுவையும், மற்றொன்றினுச்சியில் புறாவும் வைக்கப் பெற்றுள்ளன. இவற்றுள் சிலுவையோடு கூடிய செங்கோல் ஸ்வர்ணத்தினால் ஆக்கப்பெற்றது. இதன் நீளம் 2–அடி 9-இஞ்சுகளாகும். புறா வைக்கப் பெற்றுள்ள செங்கோலும் மற்றதைப் போல ஸ்வர்ணத்தினாலேயே ஆக்கப்பெற்றதாகும். இதன் நீளம் 3-அடி 7 இஞ்சுகளாகும். இவ்விரண்டு கோல்களும் விலையுயர்ந்த கற்களினால் அலங்கரிக்கப் பட்டிருக்கும். இவ்விரண்டு செங்கோல்களும் இன்றுநமது சக்கரவர்த்தியால் உபயோகப்படுத்தப்படும். இவை தவிர, ஒரு பெரிய உடைவாள், குதிரைச் சவாரிக்கு வேண்டிய கால்முட்கள், முடிசூட்டுக் கரண்டி முதலிய சின்னங்கள் பல. இவையெல்லாம் இன்று உபயோகப்படுத்தப்படும். இவற்றின் விலை 30 லக்ஷம் பவுனுக்கு மேலாகும்.

இது நிற்க, முடி சூட்டுச் சடங்கு நடக்கும் விதத்தைப் பற்றிச் சற்று பேசுகிறேன்.

முடிசூட்டுச் சடங்கானது அநேகமாகப் பூர்வகாலம் தொட்டு நாளதுவரை ஒன்று போலாகவேதான் நடத்தப்பட்டுவருகின்றது. இச்சடங்கானது அரசனது சட்டத்தையனுசரித்து நடக்கும் சடங்கன்று. பின்னையோ, இது மத குருமார்களால் ஏற்படுத்தப்பட்ட ஒன்று. இம் முடிசூட்டுச்சடங்கில் முக்கிய சம்பந்தமுடையவர் காண்டர்பரி அத்தியக்ஷகுருவாவர் (Archbishop). இச்சடங்கின் முக்கிய அம்சங்கள் பின்வருவன:—

நமது சக்கரவர்த்தியும் சக்கரவர்த்தினியும் வெஸ்ட்மினிஸ்டர் மடாலயத்துக்குள் சென்றதும் "நாம் தேவாலயத்திற்குள் போவோம்என்று அவர்கள் சொன்ன பொழுது நான் சந்தோஷமடைந்தேன்," என்னும் கீர்த்தனையைப் பாடுவார்கள். இக் கீர்த்தனை பாடி முடியுமுன் அரசரும் தேவியும்தேவாலயத்திற்குள் பிரவேசித்து ஆசனங்களில் உட்கார்வார்கள். உடனே அத்தியக்ஷகுருவானவர் பிரதான உத்தியோகஸ்தர்கள் சகிதம்சென்று, அரசரை அங்கு கூடியிருக்கும் எண்ணிறந்த பிரஜைகளுக்குக் காட்டி "கிரீடம் தரித்திராவிடினும் இவரே நியாயமான அரசராவர்" என்று அறியுங்களென்று சொல்லுவார். இது தான் முடிசூட்டுச் சடங்கின்





முதல் கிரியை. உடனே பிரஜைகளெல்லாம் சந்தோஷத்தால் ஆர்ப்பரிப்பார்கள். இதற்குப் பின், அரசர் அத்தேவாலயத்தில் முழுங்கால் ஊன்றி, ஸ்வர்ண வஸ்திரங்களும் ஸ்வர்ணக்கட்டியும் சர்வேஸ்வரனுக்கு அர்ப்பணம் செய்தல், இரண்டுகுருக்கள் முழங்காலூன்றிப் பிரார்த்தனைசெய்தல், யார்க் அத்தியக்ஷகுரு சுருக்கமாக உபதேசப்பிரசங்கம் ஒன்று செய்தல், அரசன்முழங்காலூன்றிக் கையை விவிலியத்தின் (Bible) மேல் வைத்துக்கொண்டு சத்தியம் செய்து கொள்ளல், V-வது எட்வர்ட் அரசரின் நாற்காலியில் அரசரிருக்க,வெஸ்ட்மினிஸ்டர் மடலாயகுருவானவர் பரிசுத்த எண்ணெயைக் கொண்டு வரவும், அத்தியக்ஷகுரு அதை ஆசீர்வதித்து அரசருடைய தலை, மார்பு, உள்ளங்கைகளில் தடவிஆசீர்வாதம் செய்தல், அரசர் ஸ்வர்ண வஸ்திரம் தரித்தல், கால் முட்கள் தரித்தல், உடைவாள் தரித்தல் முதலியசடங்குகள் முறையே ஒன்றன்பின் ஒன்றாக நடைபெற்றபின், மோதிரம் தரித்தலும், சிலுவையோடுகூடிய செங்கோலும், புறாவைக்கப்பெற்றுள்ள செங்கோலும்தரித்தலும் நடைபெறும். கடைசியில் மகுடம்தரித்தலோடு சடங்கு முடிவடையும்.

சற்று முன்னர் அரசர் சத்தியம் செய்து கொள்வார் என்று கூறினேனன்றோ? அஃதென்னவெனின், கடவுள் நியதிகளையும் கிறிஸ்து மத உண்மைகளையும், சட்டப்பிரகாரம் ஸ்தாபிக்கப் பட்டுள்ள சீர்திருத்தம் பெற்ற பிராடஸ்டெண்ட் மதத்தையும் தாம் தம்மாலியன்றவரை பரிபாலிப்பதாகச் சத்தியம் செய்வார். அரசர் உடைவாள் தரிப்பார் என்று கூறினேனன்றோ? அவ்வுடைவாளைப் பின்னர் அவர் கடவுளுக்கு அர்ப்பணம் செய்து விட்டு, 100 ஷில்லிங் விலையாகக் கொடுத்துத் திரும்ப மீட்டுவார். இவ்வழக்கம் இடையில் நின்றிருந்தபோதிலும், திரும்பவும் ஆரம்பிக்கப்பட்டு இன்றும் நடை பெறுமொன்றாக இருக்கின்றது.

அரசர் தலையில் முடியைச் சூட்டு முன் அத்தியக்ஷகுருவானவர் அதை ஆசீர்வதிப்பர். அதன்பின்னர் "கடவுள் அரசனை இரக்ஷிக்க" என்னும் கீர்த்தனையின் கோஷத்தினிடையே மகுடம் அரசாது தலையில் வைக்கப்பெறும். உடனே மேள தாளங்கள் நகராக்கள், பாண்டுகள்முதலிய பல வாத்தியங்கள் ஒருபுறம் கோஷிக்கும். அதே சமயம் மற்றொரு புறம் பீரங்கி வெடிகள் செவிகளைத்

துலக்கும். ஜனங்களின் சந்தோஷ ஆரவாரங்களோ கடலொலியை அடக்கும். பிரஜைகளின் இத்தகைய குதூகலக் குறிகள், சப்தங்கள், ஆரவாரங்கள்-இவை அமர்ந்ததும், அத்தியக்ஷ குருவானவர் பின்வரும் பிரார்த்தனையைச்செய்வார். பிரார்த்தனையாவது:—'மகிமை, நல்லொழுக்கம்—இவற்றால் ஆக்கப்பெற்ற மகுடத்தைக் கடவுள் உமக்குத் தரிப்பாராக. சத்கர்மப் பலன்கள் பலவும், மெய் விஸ்வாசமும் உடைய எங்கள் ஆசீர்வாதத்தால், என்றும் அழியாத ராஜ்யத்தின் அதிபதியினிடமிருந்து என்றும் நிலைபெறும் இராஜ்ஜியத்தின் மகுடத்தை நீர்பெறக்கூடும்,' என்பதே.

ஐரோப்பாக் கண்டத்திலுள்ள அரசர்களுள், முடி சூட்டுங்காலத்து, மகுடத்தை முழங்காலூன்றிச் சிரமேல் ஏற்றுக்கொள்பவர் நமது சக்கரவர்த்தி யொருவரே யாவர். மகுடமானது சக்கரவர்த்தியின் நெற்றியில் அத்தியக்ஷ குருவால் வைக்கப்பெறும்.

மகுடம் புனைந்த பின்னர், அரசருக்கு ஒரு விவிலியம் கொடுக்கப்படும். அதன் பின் சிம்மாசனம் ஏறுதல் நடைபெறும். அப்பொழுது இவ்வுபதேசம் கூறப்படும். அதாவது:—

'எங்களுக்கு யோக்கியதை யில்லாவிட்டாலும், கடவுளின் ஊழியக்காரரும் குருமாரும் ஆகிய எங்கள் கைகளினால் சர்வசக்திமானாகிய கடவுளின் பேரிலும் அவரது ஆக்ஞையினாலும் உமக்கு இன்றுகொடுக்கப்பட்டிருக்கும் அரசனுக்குரியவும் ஏகாதிபத்தியத்துக் குரியவுமான ஆசனம், ராஜ்ஜியம் - இவற்றை இன்று முதல் கெட்டியாகப் பிடித்துக்கொள்ளும்; இவற்றின் பக்கமே நில்லும்.' என்பதே.

இதற்குப் பின்னர், இளவரசர் முதல் சகலரும் முறையே அரசரை வணங்கிச் செல்வார்கள். இதுவே அரசரின் முடிசூட்டுச் சடங்கின் கடைசிக் கிரியையாகும்.

புதிய உத்தரவின் பிரகாரம், இது முடிந்ததும், பெருமை தங்கிய அரசியின் பட்டாபிஷேகமும் முடிசூட்டும் நடைபெறும். அத்தியக்ஷ குருவானவர் அரசிக்குத் தலையில் மாத்திரம் எண்ணெயைத் தடவி மோதிரம் தரிப்பார். அதன் பின் தலையில் கிரீடத்தைத் தரித்து, செங்கோலையும் புறாவைக்கப்பெற்றுள்ள தந்தக்கொம்பையும் கொடுப்பார். பின்னர், பிரார்த்தனை செய்தல், அரசர் ரொட்டியும் திராக்ஷப்பழ இரசமும் உதவுதல்





அரசர் இரண்டாவது தரம் ஸ்வர்ணமும் ஸ்வர்ண வஸ்திரமும் அர்ப்பணம்செய்தல், அரசியும் அவ்வாறே செய்தல் முதலிய பல சில்லரைக் கிரியைகள் ஒன்றன்பின் ஒன்றாக நடைபெற்ற பிறகு அரசர் செயின்ட்எட்வர்ட் தேவாலயத்துக்குச் சென்று, உடை மாற்றிக்கொண்டும், செங்கோலுக்குப் பதிலாகப் பூகோளச் சின்னத்தைப் பெற்றுக்கொண்டும், செயின்ட் எட்வர்டின் மகுடத்துக்குப் பதிலாக அதிக பளுவில்லாத ஏகாதிபத்திய முடியைத் தரித்துக்கொண்டும், அரசி சகிதமாக VII–வது ஹென்ரி தேவாலயத்துக்குப் போய், அங்கு அரசச் சின்னங்களில் பலவற்றை விட்டுவிடுவார். இத்துடன் முடிசூட்டுச் சடங்கு முடிந்ததென்று கூறலாம். இச்சடங்குகளை யெல்லாம் ஹிந்து இராஜபட்டாபிஷேகச் சடங்குகளோடு ஒத்துநோக்கினால், அநேகமாக ஒன்றுபோலவேதான் இருக்குமென்று தோன்றுகிறது.

இச்சடங்கானது இன்று வெகுசிறப்பாகவும் மிக்க கோஷத்துடனும் மேற்கூறியதுபோல, லண்டன் நகரில் நடைபெறும். இதைக்காணுவதற்கு இவ்வுலகெங்குமுள்ள சக்கரவர்த்திகள், அரசர்கள், பிரபுக்கள் எல்லாரும் ஒருங்கே அங்கு சென்றிருக்கிறார்கள். இவ்வுலகெங்கும் ஒன்றுபோல சந்தோஷத்தை யுண்டுபண்ணும் நாள் இந்நாள். எந்நாட்டரைப் பாக்கினும் நமது நாட்டாருக்கு இதில் அதிகக் களிப்படையக் காரணங்கள் பலவுண்டு. ஆகையால் நாமெல்லோரும் அரசருடையவும் அரசியுடையவும் முகாரவிந்தங்களைநேராகத் தரிசித்துக்களிப்படைய ஏதுவில்லையானாலும் இங்கிருக்கும் அவர்கள் படங்களைத் தரிசித்து இப்போது களிப்படைவோம். நமதுநாட்டில் டில்லிமாநகரத்தில் நடக்கும் பட்டாபிஷேககாலத்து நேரில் தரிசித்துக் கொள்வோம்.

சத்தியம், நீதி, நடுநிலைமைமுதலிய நற்குணங்களே உருவெடுத்தால் போன்றவர்கள் நமது சக்கரவர்த்தியும், சக்கரவர்த்தினியும். இவருக்கு ஆரோக்கிய சரீரமும், தீர்க்காயுளும், நீடித்த செங்கோலும் கடவுள் அநுக்கிரகிப்பாராக. இராஜ்யம் எங்கும் சமாதானமும் அமைதியும் பெருகட்டும். பிரஜைகளுக்கெல்லாம் சக்கரவர்த்தியினிடம் விஸ்வாசமும் சிநேகமும் அதிகரிக்கட்டும். நன்றுகாலிபெருகியும், செல்வம் ஓங்கியும், வியாபாரம்விருத்தியடைந்தும், கல்விவளர்ந்தும் நாடெங்கும் செழிக்கக் கடவுள் அநுக்கிரகிப்பாராக.—ப. ர்.

# ஸ்திரீகளுக்குக் கல்வி அவசியம்.

பூவுலகில் மானிடர் அடையக்கூடிய பலவிதச் செல்வங்களுள் தலையாய்நிற்பதும், அறம், பொருள், இன்பம், வீடு என்னு மிவற்றைப் பெறுதற்குச் சாதனமாயுள்ளதுமான கல்வி புருஷர்களுக்குப் போலவே பெண்களுக்கும் அத்தியாவசியகமே.

கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லாதவர்.

என்று கற்றறிவில்லாரைக் குருடருக் கொப்பிட்டார் திருவள்ளுவர். எப்படிக் குருடரைக்குருடர் நடத்துவது கூடாத காரியமோ, அப்படியே கற்றறிவில்லாப் பெண்கள் தங்கள் பிள்ளைகளை ஸன்மார்க்கத்தில் நடத்துவதும் கூடாத காரியம்.

அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பென்ன பயன்படுமென்றும், கற்றவள் கர்வங்கொள்வாளென்றும், சிலர் சொல்லக் கேட்கிறோம். இவ்விதச் சொற்கள் பொறாமையாலும் அறிவின்மையாலும் சொல்லப்படுகின்றன. இவ்விதப் பொய்யான ஆட்சேபனைகளை மறுத்துப் பெண்களுக்கு இம்மையிலும் மறுமையிலும் மேன்மையை யுண்டாக்குவது கல்வியென்று ரூபிக்கலாம்.

சிலர், 'பெண்கள் உத்தியோகம்செய்யப்போகிறார்களா? அவர்களுக்கு படிப்பென்னத்திற்கு? படித்தபெண் வீட்டு வேலையைச் சரியாய்ச் செய்யமாட்டாள். அவள் படிப்பினால் பலஹீனப்பட்டுக் குடும்பத்தைத் தாங்கத் திறமை யற்றவளாவாள். பூர்வகாலத்தில் பெண்கள் படிக்கவில்லை; ஆகையால்இப்போதும் படிக்கக்கூடாது' என்று ஆக்ஷேபிக்கின்றார்கள்.

பெண்கள் உத்தியோகம் செய்யக் கூடாதென்று வேதங்களில் எழுதியிருக்கவில்லை. பிறருடைய சம்பாத்தியத்தில் ஜீவிக்கும் சோம்பேறிகளைப் பார்க்கிலும் தங்கள் உழைப்பினால் ஜீவிப்பவர்கள் பாக்கியவான்கள். கடவுள் பெண்களைக் குருடாகவும் முடவராகவும் பிறப்பியாமல், அவர்களுக்கு எல்லா அவயவங்களையும் அறிவையும் தந்திருப்பதால், பெண்கள் முடவர்போல் வீட்டில் கிடந்து வருந்தவேண்டு மென்பது அவருடைய சித்தமல்ல; ஆனால், புருஷரைப்போலவே ஸ்திரீகளும் படித்து உலக விஷயங்களை அறிந்து, தங்களைத் தாங்களே காப்பாற்றிக் கொள்ள





வேண்டு மென்பதே அவருடைய சித்தம். இங்கிலாந்து தேசத்தில் பெண்களுக்குப் பூரண சுதந்தரமுண்டு. அநேக மங்கையர் இந்தக் காலத்தில் தபாலாபீசுகளிலும், முனிஸிப்பலாபீசுகளிலும், கலாசாலைகளிலும், வைத்தியசாலைகளிலும், வர்த்தகசாலைகளிலும் புருஷரைப் போலவே சாமர்த்திய முள்ளவர்களாய் விளங்குகிறார்கள்.

ஸ்திரீகள் உத்தியோகம் செய்யப்போனால் நாட்டுக்கு அநேக நன்மைகள் உண்டாகும். வீட்டில் வேலையற்றிருக்கும் பெண்கள் வாதாடி வம்பளப்பதினால் உண்டாகும் பழிகளும் விரோதங்களும் அநேகம். உத்தியோகம் செய்ய அறியாத ஒரு பெண் புருஷனை இழப்பாளாகில், தங்க இடமற்றவளாய், ஒரு பந்துவின் வீட்டைச் சேர்கிறாள். அதனால் அவளுக்கும் அவ்வீட்டாருக்கும் உண்டாகும் துன்பங்களும் மனஸ்தாபங்களும் கொஞ்சமல்ல. அவள் அவ்வீட்டெஜமானுக்கு பந்துவா யிருப்பாளாகில், அவன் மனைவிக்கு வருத்தமுண்டாகும்; எஜமானிக்கு பந்துவானால் எஜமானனுக்குக் கோபம். ஆகையால், அவ்வீட்டில் பிரிவினையும் சண்டையும் உண்டாகின்றன. இத்துர்ப்பாக்கியவதி குழந்தைகளை உடையவளாய் இருந்தாலோ அவளுடைய கஷ்டம் எழுதி முடியாது. இவ்விதம், நிற்க நிழலற்று, உண்ண உணவற்று, உடுக்க உடையற்று, அனைவராலும் இகழப்பட்டு வருந்தும் பெண்கள் சிலவேளைகளில் துர்ப்போதனைக்குட்பட்டுக் கெட்டுப் போவதுமுண்டு. பெண்கள் கல்விகற்று உத்தியோகம்செய்து, தங்களையும் தங்கள் பிள்ளைகளையும் காப்பாற்றத்திறமை யுள்ளவர்களா யிருந்தால் இவ்வித சங்கடங்கள் நேரிடா.

படித்த பெண் வீட்டு வேலையைச் சரியாய்ச்செய்ய மாட்டாளென்பது பிசகான எண்ணம். அது உண்மையானால், படித்த புருஷன் ஆபீசில் வேலைசெய்ய மாட்டானென்பதும் உண்மை. ஏனெனில், ஸரஸ்வதிதேவி பக்ஷபாதமற்றவளாய்த்தன்னையடுத்த அனைவருக்கும் ஒரே விதமான புத்தியைத்தருவாள். ஒரு வேளை அந்த தேவி வஞ்சகியாய் இருப்பாளாயினும், தன் இனமாகிய பெண்பாலுக்கே நல்லபுத்தியைத் தருவள் என்பதற்குச் சந்தேகமில்லை. படித்தவர்களாகிய ஆங்கிலப்பெண்கள் வீட்டு வேலைகளை ஒழுங்காய் நடத்தி, தங்கள் நாயகரை நேசித்து, குலத்தின் விளக்காய்

விளங்குவது அனைவரும் அறிந்தவிஷயம். உண்மையில் பெண்களுக்கு பலக்குறைவையும் அறிவின்மையையும் உண்டாக்குவது பால்யவிவாகமே யொழிய கல்வியல்ல.

'பாட்டிகாலத்தில் அவர் செய்யாத வேலையை நானும் செய்ய மாட்டேன்' என்பது சுத்த மதியீனம். தேவன்நமக்கருளிய பகுத்தறிவை உபயோகித்துக் காலானுகூலத்தை யனுசரித்து நடப்பது தான் மதி. முன்னோர்கள் செய்யாத வேலையை நாம் செய்யக்கூடாதானால், முன்னோர்கள் ஏறாத புகை வண்டியைவிலக்கி, கால்நடையாய்ப்பிரயாணம் செய்யவேண்டும்; அவர்கள்படியாத இங்கிலீஷ் பாஷையை இக்காலத்துப் புருஷர்களும் படியாமல், பன்னிரண்டு நாமங்களைத் தரித்துத் தற்பையைப்பிடித்துத்திரியவேண்டும். புத்தியில் அதிகரித்த புருஷர்கள் அப்படிச்செய்யாமல் காலத்தை அனுசரித்து நடப்பதால், ஸ்திரீகளும்அவர்களைப்போல புத்திக்கொத்த நடைகளில் பழகவேண்டும்.

உண்மையில் நம்முடைய முன்னோர்கள் இவ்வளவு புத்தியீனராக இருக்கவில்லை. முற்பிதாக்களாகிய ஆரியர்கள் தங்கள் ஸ்திரீகளுக்கு சர்வ சுதந்தரமும் கொடுத்துப்புருஷர்களுக்குச் சமானமாய் நடத்தினார்கள். புராணங்கள் எழுதப்பட்ட காலத்திலும் பெண்கள் படிப்பில் தேர்ந்தவர்களாய் இருந்ததாகக் காணப்படுகிறது. மகமதியர் படை எடுத்த காலத்தில்தான் பெண்களுக்கு எல்லா துர்ப்பாக்யங்களும் நேரிட்டுஇத்தேசம் க்ஷீணித்தது. தற்காலத்திய ஆங்கில அரசாக்ஷியிலோ எங்கும் சமாதானமே யுள்ளது; யாதொருபயமுமில்லை. உலகாதிபதியாகிய தேவனும், தேசாதிபதிகளாகிய அரசர்களும் பெண்களுக்கிரங்கி, அவர்களைக்கரையேற்றக்கைகொடுக்கின்றார்கள். பெண்கல்வியைத்தடைசெய்யும்சிலவிட்டதிபதிகள் மாத்திரம் மனதிரங்கி, தங்கள் பெண்களைப் பாடசாலைகளுக்கு அனுப்புவீர்களாகில் நம்முடைய தேசம் அதி சீக்கிரத்தில் நாகரீகத்திலும், செல்வத்திலும் விருத்தியடையும்.

P. திருவேங்கடம்மா.

ஸ்வர்ணம் காரணமாகப்பெற்றோர்களும் சகோதரர்களும் கூட விலைப் போகின்றார்கள்; யுத்தங்களும் கொலைகளும் உண்டாகின்றன. இவை மாத்திரமா? காதலர்கள் கூட விலைக்கு வாங்கவும் விற்கவும் படுகிறார்கள்:—அலெக்ஸாண்ட்ரைடிஸ்.



# ஒற்றுமை.

ஒற்றுமை யென்பது எக்காரியத்தையும் எவ்விதமான வேறுபாடின்றி யாவரும் ஒன்றுபட்ட மனத்துடன் சேர்ந்து செய்வதாம். இவ்வொற்றுமை எத்தகைய அற்பக்காரியத்துக்கும் இன்றியமையாததாயிருக்கின்றது. ஒற்றுமை யில்லாவிட்டால் எக்காரியமும் சரிவர நிறைவேறாதெனப்படு... மறிந்த விஷயம்.

மேனாட்டார் அடைந்திருக்கும் மேலான நிலை... மாயிருப்பது அவர்களிடமிருக்கும் ஒற்றுமையன்றோ? இந்நாட்டிலோ, முக்கியமாய் நம் நாட்டில் ஒற்றுமை மிகக் குறைவாயிருக்கின்றது. இதற்குக் காரணம் இங்கேயுள்ள ஜாதிமத வேறுபாடுகளென்று சொல்லப்படுகிறது. ஒற்றுமைக்கும் இவ்வேறுபாடுகளுக்கும் யாதொரு சம்பந்தமுமில்லாதிருக்க, நமது நாட்டார் இவைகளைப் பிரமாதமாகக் கருதி ஒற்றுமையில்லாமலும், எக்காரியத்திலும் ஒன்றுசேர்ந்து முயலாமலும், எவ்விஷயத்திற்கும் அன்னிய தேசத்தார் பொருளையும் உதவியையும் எதிர்பார்க்கிறார்கள். இவ்விஷயத்தைப் பற்றி நினைக்குந்தோறும் மனதிற்கு மிக விசனமுண்டாகிறது. முற்காலத்தில் மேலானநிலையிலிருந்த நம் நாடுதற்காலத்தில் மிகவும் கேவலமான நிலைக்கு வந்துவிட்டது. உலகமே புகழ்ந்து போற்ற நமது ஆங்கிலநாட்டார் அடைந்திருக்கும் விர்த்திக்கு நம் நாடே காரணமாயிருந்தது. அப்படியெல்லாமிருந்தும் ஒற்றுமைக்குறைவால்நம்நாடுதற்போதிய நிலைக்குவந்திருக்கின்றது.

நம் நாட்டில் அபூர்வமாய்ச் சிலர் கூடி ஒரு விஷயத்தைச் செய்ய ஆரம்பித்தால், அது விஷயத்தில் எல்லாரும் ஒன்று கூடி ஏகோபித்து உதவிபுரிவதை விட்டு, அதற்குக் கெடுதல் செய்யப் பலரும் முன் நிற்கின்றனர். அதிலும், ஸ்திரீகள் ஒன்று கூடி ஒரு விஷயத்தில் பாடுபடத்துணிந்தால், ஒருவரேனும் சகாயம் செய்ய முன்வாராமற் குற்றங்கூற முன்வருகிறார்கள்.

அற்ப ஜந்துக்களாகிய எறும்புகள் ஒன்றுகூடி ஒரு பெரிய புற்றை உண்டாக்குவது போல, நாம் எவ்வளவு சிறியவர்களானபோதிலும், யாவரும் ஒன்று கூடி முயற்சித்தால் எப்படிப்பட்ட பெரிய காரியத்தையும் செய்து முடிக்கலாம்.

K. மீனாக்ஷியம்மாள்.
அபேதைக்கியானந்த சங்கத் தலைவர்.

# நன்மை கடைப்பிடி

நன்மை கடைப்பிடி என்றால் என்ன? நமக்கு நன்மையை விளைவிக்கக்கூடிய விஷயங்களையும் ஒழுக்கங்களையும் உறுதியாய்ப் பிடித்துக் கொள்ளவேண்டும் என்று அர்த்தம். இதற்கு ஆராய்ச்சிவேண்டும். நமது [illegible] மிகுந்தபடிப்பும் அறிவும் [illegible] ரத்தினங்கள் இருந்திருக்கிறார்கள். அவர்களில் பொருந்[illegible]வும் புகழடைந்தவர் ஔவை பிராட்டி முதலாயினோர். அவரால் ஸ்திரீஜாதியாகிய நமக்கெல்லாம் மிகுந்த பெருமை உண்டாயிருக்கிறதல்லவா? முக்காலத்திற்கும் பொருத்தமானதாயும், எவ்வகை மதஸ்தர்களாலும் கொண்டாடத் தகுந்ததாயும், கடுகைத் துளைத்துக்கடலை அடைத்தது போல, மிகவும் மேன்மை பொருந்திய வாசகங்களை நமக்கு அளித்திருக்கும் ஔவையாரைத் தெய்வமாகப் புகழ்ந்து வணங்குகின்றோமல்லவா? ஔவையார் நன்மையையே கடைப்பிடித்தவர். நன்மைகடைப்பிடி என்னும் வாக்கியத்தைச் செவ்வையாய் ஆராய்பவர்கள் மிகச் சிலரேயாதலினால், நமது ஸ்திரீகளுக்குள் அஞ்ஞானம் மலிந்திருக்கிறது. நம்முள் படியாத ஸ்திரீகளோ நன்மையைக்கடைப்பிடிப்பதற்குப் பதிலாக அறியாமை அல்லது மூடத்தனத்தாலுண்டாகும் பிடிவாத குணத்தை யுடையவர்களாக இருக்கிறார்கள். இவர்களுடைய பிடி குரங்குப்பிடியாக இருக்கிறது. இந்தக் குரங்குப்பிடியை ஒழித்து "பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல கால வகையினானே" என்றபடி காலவர்த்தமானங்களுக்குத் தக்கவிதமாய் நம்மிடமிருக்கும் கொடிய வழக்கங்களை மாற்றிக்கொள்ள வேண்டியது. நன்மை தீமைகளை அறியும் பகுத்தறிவை அடைவதற்குக் கல்வியே முக்கிய சாதனம். கொஞ்சப்படிப்பால் ஆராய்ச்சி செய்ய முடியாது. அதனால் நாளுக்குநாள் பெண்கள் கல்வியை விர்த்திசெய்ய வேண்டும். அதற்கு முக்கியசாதனம் பத்திரிகை தான். பத்திரிகையைப் போல மாந்தர்களிடமிருக்கும் அறிவின்மையென்னும் இருளை ஒழிக்கும்படியான தீபம் யாதுமில்லை. நடுவில் சில நூறு வருஷங்களாகத்தான் அறிவின்மை, மூடத்தனம் என்னும் இருள் வந்து மூடி, ஸ்திரமாக இருக்கத் தொடங்கிற்று. அது ஸ்திரீகளையே பலமாய்ப் பிடிக்கத் தொடங்கிற்று. இந்த அந்தகாரத்





தை ஒழிக்கப் பத்திரிகா தீபங்கள் பலவேண்டும். அவற்றால் அந்தகாரம் நீங்கிப் பிரகாசமுண்டாகும். அந்தகாரத்தில் தான் நன்மை தீமை அறியப்படா. பிரகாசத்திலோ அவை நன்றாக விளங்கும். விளங்கின், அவற்றுள் தீயவற்றைத் தள்ளி நன்மையைக் கடைப்பிடிக்கலாம்.

எட்டு ஒன்பது வயதுச் சிறுமிக்கு மணமுடித்து விதவை எனும் ஜன்மத்திற்குள்ளாக்கி ஆயுள் முடிய அழச்செய்வதும், சிறுவர் சிறுமியரை விவாக பந்தத்தால் பிணைத்து வருத்தப்படுத்துவதும் தர்மமா? பால்மணம் மாறாத இச்சிறு குழந்தைகளுக்கு முதலில் ஒன்றும் தெரிவதில்லை. வயது வந்த பிறகோ, ஆயுள் முடிகிற வரையில் அழுகை தான். மதியீனத்தால் செய்யும் இச்செயல்களை அவரவர் தலைவிதி யென்கிறார்கள். விதியே இல்லையென்று நாம் சொல்லவில்லை. ஆனால் புத்தியின்மையாலும் மடைமையாலும் அசிரத்தையாலும் நடக்கும் காரியங்களை விதியென்றுசொல்லும் போது எமக்கு மிகுந்த ஆச்சரியமுண்டாகிறது. சிறுகுழந்தைகளுக்குக் காதுகளில் பத்துப்பதினைந்து துளைகளுக்குமேல் இருக்கின்றன. காதுகுத்திக்கொள்ளும் வேதனையோ மிகப்பெரிது. அளவற்ற பாரங்களைக் காதுகளில் மாட்டிக் கொண்டு பெருமாள் மாடு போல சுமை தூக்கும்பொழுது எவ்வளவு ஹிம்சை! என்ன அநாகரீகம்! மடைமைக்கும் ஆசைக்கும் மிக்க சம்பந்தமுண்டு போலும். இவ்வழக்கங்களெல்லாம் நன்மைக்கு எதிரானவையும் நீக்கத்தக்கவையு மன்றோ? அந்தகாரமாகிய அஞ்ஞானத்துள் இருப்பவர்களே! பத்திரிகையென்னும் சூரியவெளிச்சத்தின் முன்பாக வாருங்கள். அப்பொழுது கண்கள் தெரியும். சூரிய வெளிச்சத்தில் வந்தாலும் கண்ணைமூடிக்கொள்கிற சகோதரிகளும் உண்டு. அத்தகைய நமது சகோதரிகளை முன்னுக்குக் கொண்டுவரவேண்டியது விவேகமுள்ள மாதர்களின் முதன்மையான கடமையாகும். இரண்டுபேர் கூடினால் வம்பும் வீணும் பேசி வீணாய்க் காலத்தைக் கழிக்காமல் நன்மை விளையக்கூடிய விஷயங்களைப் பற்றிப் பேசி, மனதில் உறுதிசெய்து கொள்ள வேண்டும். பகலில் ஒழிவு நேரங்களில் சோம்பிப்படுத்திருப்பதை யொழித்து, விசித்திரமான தையல் வேலைகளைச் செய்யலாம். "ஊக்கமது கைவிடேல்" என்றார் ஔவையார். பிரதிதினமும் பாடுபட்டால் நமதெண்ணம் சித்தியாகாதா? "வைகறைத் துயிலெழு"

என்றபடி அதிகாலையிலெழுந்து ஸ்நானம் செய்து சுகந்த மலர்களைச்சேகரித்து இஷ்டதேவதையை வணங்கி, சிரகர்த்தியங்களில் பிரவேசித்தால், அது எவ்வளவு மனோஹரமாக இருக்கும்! சாயங்காலம் ஓழிவு நேரங்களில் இளந்தென்றல் மெதுவாக வந்து கொண்டிருக்கும் தோட்டத்திலுள்ள மரங்களினடியில் தோழிகளோடு உட்கார்ந்து அறிவைப்பெருக்கும் மதுரமான விஷயங்களைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தால் எவ்வளவு ரம்மியமாக இருக்கும்! களங்கமற்ற நீலநிறமான ஆகாயமும், உற்சாகமே குடிகொண்ட பக்ஷி ஜாதிகளின் தீங்குரலும், மலர்கள் தோறும் சென்று தேனைக் குடித்துவிட்டு ரீங்காரம் செய்யும் வண்டுகளின் தொனியும், அன்பான தோழியின் அறிவுள்ள சம்பாஷணையும் மனதைப் பரிசுத்தப் படுத்துமல்லவா? ஒருவர்க்கொருவர் அடிக்கடி சந்தித்துப்பேசி அவரவரிடமுள்ள குற்றங்குறைகளை நிவர்த்திசெய்துகொள்ளப் பாடுபடவேண்டும். பல விஷயங்களையும் தீர ஆராய்ந்து நமக்கும் நம்மைச்சேர்ந்த சகோதரிகள் எல்லாருக்கும் எது நன்மையை விளைவிக்குமோ அதைக் கெட்டியாய்க் கடைப்பிடிக்கவேண்டும். குரங்குப் பிடியாய்ப் பிடித்துக்கொண்டாலும் சம்மதந்தான். ஒரு விஷயத்தில் நன்மையைக் கண்டால் அதை அனுஷ்டானத்திற்குக் கொண்டுவரவேண்டும். ஆனால் அது சுலபமில்லை. நமது அத்தை பாட்டிமார்களுடைய வழக்கமென்னும் சட்டத்தைமீறி, நாம் நிச்சயித்துத் தெளிந்திருக்கும் விஷயத்தை நிலைநாட்டுவதென்றால் இலகுவல்ல. மிகுந்த பிரயாசைப் பட்டுத்தான் ஆகவேண்டும். கருமமே கண்ணாயினார் எவ்வகை வருத்தத்தையும் லக்ஷியம் செய்யாமல் தாங்கள் நிச்சயித்த நன்மைவிளைவிக்கக் கூடிய விஷயத்தை ஸ்தாபிப்பார்கள்.

மெய்வருத்தம் பாரார் பசிநோக்கார் கண்துஞ்சார்
எவ்வெவர் தீமையு மேற்கொள்ளார்—செவ்வி
அருமையும் பாரார் அவமதிப்பும் கொள்ளார்
கருமமே கண்ணாயினார்.

C. சிங்காரம்மாள்.

தனக்குள்ள சக்திக்கு அதிகமாக வீராதிவீரனும் சண்டை செய்ய முடியாது;—ஹோமர்.

* * *

எவனும் எக்காலத்தும் கடவுளை நேராகக்கண்டதில்லை:—ஜான்.



# யோகசித்தி பெற்ற ஓர் பெண்.

வட அமெரிக்கா கண்டத்தைச் சேர்ந்துள்ளது கானடா நாடு. இந்நாட்டில் பிறந்துவளர்ந்த மேரி மெறில் என்ற யோக சித்திபெற்ற மாதின் அபூர்வமான மனோசக்தியைப்பற்றி அவர் சகபாடியாகிய டாக்டர் B. F. ஆஸ்டின் பின்வருவமாறு எழுதுகிறார்:—

"ஆத்மசக்தி பரிசீலனை சங்கங்களினால் அநேக வருஷங்களுக்குமுன்னும் இறந்துபோனவர்களின் செயல்களும் தோற்றங்களும் நாளுக்குநாள் எல்லாரும் பிரமிக்கும் வண்ணம் கண்டுபிடிக்கப்பட்டு ரூபிக்கப்பட்டுவரும் இக்காலத்தில், முற்காலத்திலிருந்ததுபோல யோகசித்தி பெற்றவர்களில்லை என்று சாதிப்பதானது மௌட்டீகமாகும்.

நான் ஆன்டேரியோவில் பெல்வில்லிக் கலாசாலையில்படித்துக்கொண்டிருக்கையில் என் சகபாடியாக மேரி மெறில் என்ற மாது வாசித்துக்கொண்டிருந்தார். அவர் கலாசாலையில்வாசித்த 18 மாதங்களுக்குள்ளாகக் கல்வியில் பூர்ணபாண்டித்தியமும் ஆத்ம சக்தியில் விசேஷமான வல்லமையும் பெற்றவரென்று அவர் புகழ் கானடா நாடெங்கும் பரவியது.

இம்மாதைக் குறித்த விருத்தாந்தங்கள் சிலவற்றை அம்மாதின் சகோதரி வாயிலாக நான் அறிந்துகொண்டேன். சிறு பிராயமுதல் இவரின் மனோசக்தி அபாரமானதாக விருந்தது. பள்ளிக்கூடத்தில் கிரமமாய் வாசிக்காமலே பப்ளிக் ஸ்கூல் பரீக்ஷைக்குச் சென்றார். அவர் தந்தை தம் மகள் தேர்ச்சியடைவாளென்று கனவிலும் கருதவில்லை. ஆயினும், மிக்க மேன்மையாகத் தேர்ச்சியடைந்து உயர்தரப்பரீக்ஷைகளுக்கும்தொடர்ந்து வாசித்தார். கலாசாலைக்குச் சரிவரப் போகிறதில்லை. பரீக்ஷை சமீபித்தபொழுது படிக்கவேண்டிய புஸ்தகங்களை எடுத்து ஆழ்ந்து படித்துக் கொண்டிருந்தபடியே சமாதியில் புகுந்து விடுவார். இந்நிலையிலேயே ஒருநாள் முழுதும் இருந்தாலும் இருப்பார். பிறகு, ஜாக்கிராவஸ்தையடைந்து சந்தோஷத்துடன் "எல்லாம் வந்துவிட்டது; தெரிந்துகொண்டேன். படித்து முடித்

3

துவிட்டேன்." என்று சொல்வார். அவ்வாறே பரீக்ஷைகளில் அதிக மார்க்குகள் பெற்றுத் தேர்வார்.

யுனைடெட் ஸ்டேட்ஸிலுள்ள பிலடல்பியா சர்வகலா சங்கத்தைச் சேர்ந்த கணிதசாஸ்திர விற்பன்ன சங்கம் 1876-ம் ஆண்டில் கூடிய கூட்டத்தில் சிக்காகோவைச்சேர்ந்த கணிதசாஸ்திரப்பண்டிதரொருவர் அக்கிராசனத்தின்கீழ் நடைபெற்ற கணித சாஸ்திரப் பரீக்ஷைக்கு அமெரிக்கா, ஐரோப்பா நாடுகளிலிருந்து வந்தவர்களைக் காட்டிலும் மேரிமெறில் அதிகமான மார்க்குகள் பெற்றார். இவருக்கு 1000-க்கு 988 கிடைத்தது. இக்காரணத்தால் இவரது விசேஷப் புலமையைக் கருதி, இவருக்கு அச்சங்கத்தின் வைஸ் பிரசிடெண்ட் ஸ்தானம் கொடுத்தார்கள். இச்செய்தியைத் தெரிவித்து பெல்லில்லியிலிருந்து பிலடல்பியாவுக்குஅவரை மரியாதையுடன் அழைத்துவர ஒரு மாட்ரனைச் சங்கத்தார் அனுப்பினார்கள். இம்மாது வரவை மிக்க ஆவலுடன் எதிர்ப்பார்த்திருந்த சங்கமெம்பர்கள், இவர் சாதாரண உடுப்புடன் உட்பிரவேசித்ததும், மிக்க பிரக்யாதியும் விசேஷசாமர்த்தியமும் படைத்தவர் இம்மாது தானோ என்று சந்தேகித்தார்கள். அக்கிராசனாதிபத்தியம் வகித்திருந்த பண்டிதர் தம் ஸ்தானத்தில் இம்மாதை இருக்கச்செய்து, ஒரு பிரசங்கம் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டார். இம்மாது சற்றும் தாமதியாமல் கணித சாஸ்திர வரலாற்றைக் குறித்து யாவரும் அது பரியந்தம் கேட்டேயறியாத பல அருமையான விஷயங்களைச் சொல்லி சுமார் 1½-மணி அவகாசம் ஓயாமல் பிரசங்கம் செய்தார். முடிவில், "நான் சொன்னவைகளைக் கவனமாய்க் காதுகொடுத்துக் கேட்டதற்குத் உங்களுக்கு வந்தனம். நான் சொன்னவையெல்லாம் எனக்கு முன்பேதெரியா. நான் ப்ரசங்கம் செய்யும் பொழுதுதான் அவைகளை அறிந்தேன்." என்று சொன்னார்.

இம்மாதுக்கு இந்திரியங்களுக்கெட்டாத இடங்களில் நடக்கும் விஷயங்கள் கூடத் தெரியும். வேற்றிடங்களில் இரகசியமாய் நடந்த சம்பாஷணைகளை வெளியிடுவார். கணகணவெனவிருக்கும் நெருப்புத் தணல்களைக் கையில் வாரி யெடுத்துச் செண்டாடுவது போல் ஆடுவார். அவர் கைகள் வெந்து போகா. ஜடப்பொருள்களாகிய நாற்காலி, மேஜைகள் முதலியன கூட அவர் சொல்லுக்குக் கீழ்ப்படிந்து இடம் பெயர்ந்துசெல்லும். இம்





மாது, ஒருவர் முற்பிறப்பையும், அப்பிறப்பில் அவர் செய்த காரியங்கள் முதலிய வரலாறுகளையும் கேட்டோர் பிரமிக்கும்படி சொல்லுவார்.

ஸ்தூல உடலைவிட்டு சூக்ஷ்ம உடலுடன் இம்மாது சஞ்சரிப்பதுண்டு. ஒரு சமயம் அவர் தாயார் அயலூரில் அசௌக்கியமாயிருக்கும் இம்மாதின் சகோதரரைப் பார்க்கப்போக நேரிட்டது. அவர் தகப்பனாரும் ஊரை விட்டு வெளியே சென்றிருந்தார். சிறு குழந்தைகளையெல்லாம் பார்த்துக்கொண்டு இம்மாது வீட்டிலேயேயிருந்தார். அவர் வசம் ஒப்புவிக்கப்பட்டிருந்த குழந்தைகளெல்லாம் வருத்தமுறுவதைக் கண்டு, தம் சகோதரனது தேகசௌக்கிய நிலையை அறியவிரும்பி, தம் படுக்கையறைக்கு இரவில் சென்று இடதுபக்கம் படுத்து சற்று பிராணயாமம் செய்ததும் ஆத்மா வெளிக்கிளம்பிவிட்டது. இரவெல்லாம் கழிந்து பொழுதுவிடிந்தும், உடலுக்கு ஆத்மா திரும்பிவாராததால், குழந்தைகள் உருட்டி எழுப்பப் பார்த்தும் முடியாமல்போயிற்று. உடனே, அம்மாது இறந்துவிட்டாரென்று பரிசோதனைசெய்து டாக்டர்கள் சொல்லிவிட்டபடியால், அவரைக் கல்லறையில் அடக்கம் செய்வதற்காக மிகக்குளிர்ச்சி பொருந்திய ஒரு அறைக்குள் வைத்திருந்தார்கள். தம் புத்திரியின் யோகசக்தியைத் தெரிந்துள்ள தந்தை தெய்வகடாக்ஷத்தால் அச்சமயம் ஊருக்குத் திரும்பிவந்ததால், அவர் அம்மாதினுடலை அடக்கம் செய்வதைத் தடுத்து, அதைப் பிளானலில் சுற்றி உஷ்ணமான அறைக்கு எடுத்துச் சென்று பத்திரமாய் பாதுகாத்துவந்தார். சில தினங்களுக்குப் பின் அம்மாது பிரக்ஞை அடைந்து உயிர்த்தெழுந்தார். ஆனால் மிகக்குளிர்ந்த அறையில் உடலைப்போட்டு வைத்திருந்த காரணத்தால் முன்னிருந்த அளவு தற்சம்யம்சக்தியுடையவராயில்லை."

R. கனகன்னதல்லி.

துக்கத்தினின்றும் தப்புவது அசாத்தியம்; ஒவ்வொரு தினமும் துக்கத்திற்கேதுவாக யாதேனும் ஒன்று வந்து கொண்டேயிருக்கின்றது.—பாஸிடிப்பஸ்.

* * *

என்ன சம்பவிக்குமோ என்னும் பயத்தினால் கோழைத் தனமாய் சும்மா குந்தியிருப்பதைவிட, கெம்பீர தைரியத்தினால் நாம் எதிர்பார்க்கும் கெடுதிகளுள் பாதிக்குள்ளானாலும் மேன்மையே.—ஹெரடோட்டஸ்.

# மாப்பிள்ளைகளின் விக்கிரயம்.

பழையன கழிதலும் புதியன புகுதலும் அவசியமேயாயினும் சில விஷயங்களில் இம்மாறுதல்கள் விரும்பக்கூடியனவாயில்லை. உதாரணமாக, பால்ய விவாகம் தடுக்கப்படுதலும் விதவா விவாகம் அநுசரிக்கப்படுதலும் கால நியாயத்தைக் குறித்து விரும்பப்படுவனவாகும். ஆனால், மாப்பிள்ளைகளின் விக்கிரயமென்று நூதனமாக முக்கியமாய்ப் பிராமண வகுப்பாரில் பரவி வரும் கொடிய வழக்கம் வெறுக்கத்தக்கதாகும். இவ்வழக்கத்தின் வரலாற்றை ஒருவாறு கீழ்வரைகின்றேன்.

சுமார் கால்நூற்றாண்டுக்குமுன் பெண்கள் கலியாணத்துக்குக் கிடைப்பதரிதாயிருந்தது. அதனால் விவாகம் செய்துகொள்ள விரும்புகிறவர்கள் பெண்களுக்கு நகை போடுவதென்ற வழக்கமிருந்து வந்தது. இவ்வழக்கம் ஒரு விஷயத்தில் சிலாக்கியமென்றே கூறத்தகும். குறைந்தது 200-ரூபா நகை போட சக்தியில்லாவிட்டால் ஒருவனுக்குப் பெண் கிடைப்பதரிதாகும். இதனால் வரன் குடும்பத்தை சம்ரக்ஷிக்கப் போதுமான பூர்வீக ஆஸ்தியை உடைத்தாயிருக்கிறான், அல்லது, சம்பாதித்துக் கொண்டிருக்கிறான் என்று ஏற்படும். இது நல்லதென்றே கூறத்தகும். ஏனெனில், சம்பாதிக்கச்சக்தியற்றவனைக் கல்யாணம் செய்துகொள்வதினின்றும் விலக்குவதற்கு இது ஊகமான வழியாகும். அநேகர் இதுபற்றி விவாகமில்லாமலேயிருந்திருக்கிறார்கள். சிலர் பணம் சம்பாதித்து 35, 40-வயதுகளில் கலியாணம் செய்துகொண்டிருந்திருக்கிறார்கள். இது தவிர, விவாகச் சிலவுக்கு ஏழைப்பெண்களின் பெற்றோர்கள் மாப்பிள்ளைகளிடமிருந்து பணம் வாங்கிக்கொண்டுமிருந்தார்கள். காலம் மாறிவிட்டது. வழக்கமும் மாறிவிட்டது. பெண்களுக்கிருந்த கிராக்கி ஒழிந்துவிட்டது. பெண்களைப் பெற்றவர்கள் பாடு பெருங் கஷ்டமாய் விட்டது. பெண்களை விற்பதொழிந்து மாப்பிள்ளைகளை விலைக்கு வாங்கும் வழக்கம் வேரூன்றி வருகிறது. மாப்பிள்ளைகள் விலையும் நாளுக்கு நாள் உயர்கிறது. மாப்பிள்ளைகள் தங்கள் நெற்றியில் பரீக்ஷைப்பட்டமும் அதற்குத் தக்க விலையும் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். மெட்ரிக்குலேஷனென்றால் விலை ரூபா





500; எப். ஏ. ஆனால் 750 ரூபா; பி. ஏ ஆனால் 1000 ரூபா, பி. எல் ஆனால் 2000 ரூபா. சற்றும் பெண்கள் பெற்றோரின் வறுமை நிலையைக் கருதாது, கன்னெஞ்சராய் விலையைச் சரிவரக் கேட்கிறார்கள். படிப்பிருந்தாலும் ஒழிந்து போகிறது. படிப்பில்லாதவர்கள் கூடக் கலியாணத்துக்குப் பணம் கேட்கிறார்கள். படித்தவர்கள் வழியைப் பின்பற்றுவது படியாதவர்களின் இயல்பாதலினால், படித்தவர்களில் சிலர் தங்களுக்குப் பணம் வாங்குவது பிரியமில்லையென்றும், பெற்றோர்களுக்குக் கீழ்ப்படிந்து நடக்கவேண்டியதாயிருக்கிறதென்றும் பாசாங்கு செய்கிறார்கள். எல்லாவற்றிலும் பெற்றோருக்கு விரோதமாய் நடந்து, பணம் வாங்கும் விஷயத்தில் மட்டும் கீழ்ப்படிந்து நடக்கும் உத்தம புத்திரர்களின் குணத்தை என்னென்று கூறுவது! தேசச் சரித்திரத்தில் இவர்கள் அடிமைவியாபாரத்தைப் பற்றிய கண்டனத்தை எவ்வளவோ விரிவாய் படித்திருப்பார்கள். பிரசங்கமும் செய்திருப்பார்கள். தாங்கள் பணம்வாங்கி விக்கிரயம் செய்துகொள்வது அடிமை வியாபாரமன்றிப் பிறிதென்ன? இவ்வடிமை வியாபாரத்தைத் தடுக்க இராஜாங்கச் சட்டமில்லாதது விசனிக்கத்தக்கதே. ஒரு சட்டமிருக்குமாகில் எத்தனைபேர் குற்றவாளிகளாவார்கள்? இராஜாங்கச் சட்டம்தான் எதற்கு? பெண்களுக்கு ருதுவாகுமுன் கலியாணம் செய்யவேண்டுவது கட்டாயமில்லையென்று ஏற்பட்டுவிட்டால், அனேகமாய் மாப்பிள்ளைகளுக்குப் பணம் கொடுப்பது நின்றுவிடும். படித்தவர்கள் பணம் பெறுவதைக் கேவலமாகக் கருதித் தங்கள் விவாகத்தில் பணம் வாங்கக்கூடாது. தவிரவும், தங்கள் பந்துக்களும் நண்பர்களும் வாங்காதபடி அவர்களுக்குப் போதிக்கவும்வேண்டும். இங்ஙனமாயின் விக்கிரயம் எங்ஙனம் நடைபெறும்? சென்ற மாதத்தில் பாலக்காட்டில் ஹைகோர்ட்ஜட்ஜ் மிஸ்டர் பி. ஆர். சுந்தரம் ஐயர் அவர்கள் அக்கிராசனத்தின் கீழ் ஒரு மீட்டிங் நடந்ததில் மாப்பிள்ளைகளின் விக்கிரயம் கண்டனம் செய்யப்பட்டுத் தீர்மானங்கள் செய்யப்பட்டுள்ளன.

ஆகையால், பொருளீட்டல் அவசியமானாலும், அதற்கு இதையொரு வழியாக நினையாமலும், இதிலுள்ள அற்பபுத்தி, மானமின்மை, முதலிய கேவலத்தன்மைகளை நினைத்தும், இதை முற்றிலும் விட்டுவிடும்படியாக மாப்பிள்ளை வீட்டுக்காரர்களையும்

பெண்கள் ருதுவாகியானாலும் வதுவை செய்து கொடுப்பதே தவிர, விவாகம் செய்து கொள்வதற்காக மாப்பிள்ளைக்கு ஒரு காசுபோலும் கொடுப்பதில்லை என்றும், பெண்களின் கல்வி குணம், அழகு, குடும்பம் முதலியவற்றைக் கருதாது விக்கிரயத் தொகையின் கூடுதல் குறைவே விவாகத்தை நிச்சயிக்கும் சாதனமாகக் கருதும் மாப்பிள்ளைகளுக்கே பெண்களைக் கொடுப்பதில்லையென்றும் உரமான நிச்சயத்துடன் இருக்கும்படி பெண்வீட்டுக்காரர்களையும் வேண்டிக்கொள்கிறேன்.

P. காமாக்ஷி.

## திருப நேயர்களுக்கு அறிக்கை.

---

நமது பத்திரிகைக்கு ஸ்திரீகள் எழுதும் நிருபங்கள் மாத்திரமே அங்கீகரிக்கப்படும். நிருபங்கள் சுருக்கமாகவும், எளிய நடையிலும், காகிதத்தின் ஒரு புறத்தில் மாத்திரமும் எழுதப்பட்டிருக்க வேண்டும்.

ப—ர்.

## சமாசாரங்களும் குறிப்புகளும்.

கிரேட்பிரிட்டனில் முடிசூட்டு உற்சவ சம்பந்தமாக வாணவேடிக்கைகளுக்காகமாத்திரம் 10-லக்ஷம் பவுன் செலவாகுமென்று சொல்லப்படுகிறது. ஓஷியானிக் அவுஸ் என்னும் மாளிகையில் மாத்திரம் 45,000 மின்சார விளக்குகள் போடப்படும். இவ்விளக்குகளுக்கு மத்தியில் 30-அடி குறுக்களவுள்ளதும் 2,000 விளக்குகளடங்கியதுமான ஒரு பெரிய நக்ஷத்திர விளக்கு வைக்கப்படும். டெப்ட்பர்ட் பரோ கவுன்சிலிலிருந்து வயதுமுதிர்ந்த ஏழைகளுக்கு ஆயிரக்கணக்கான கூடைகளில் சிற்றுண்டிகளும் இறைச்சிக்காக ஒரு ஷில்லிங்கு டிக்கட்டும் வீதித்துக்கொடுக்கப்படும். பர்மாண்ட்ஸி என்னுமிடத்திலுள்ள ஒவ்வொரு குழந்தைக்கும் சாக்கலேட் பெட்டியொன்றும் சினமெட்டகிராப் வேடிக்கை பார்க்க ஒரு டிக்கட்டும் இலவசமாய்க் கொடுக்கப்படும்.

* * *

இம்மாதம் 16-தேதியன்று ருதுவான 15-வயதுள்ள ஸ்ரீமதி கிருஷ்ணாபாயிக்கும் மசூலிப்பட்டணம் நோபில் காலேஜில் உபாத்தியாயராயிருக்கும் சுமார் 25-வயதுள்ள மிஸ்டர் T. வெங்கட்டராமையாவுக்கும் கோக்கனடாவில் வெகு சிறப்பாகவும் சாஸ்திரோக்தமாகவும் விவாகம் நடந்தேறியது.





கல்கட்டாவில் மகிலா ஸமிதி என்ற பேருடன் இந்தியமாதர்களின் கூட்டமொன்றிருப்பதாய்த் தெரிகிறது. அந்தக் கூட்டத்தாரின் பலநோக்கங்களில் இந்திய மாதர்களுக்குள் கல்வியைப் பரவச்செய்வது மொன்று. அந்தச் சங்கத்தார் போதனாமுறை படித்துவிட்டுவர ஸ்காலர்ஷிப் கொடுத்து ஒரு இந்தியப் பெண் பட்டதாரியை இங்கிலாந்துக்கு அனுப்புவதற்காக நிதிசேர்த்திருக்கிறார்கள். அந்நிதியிலிருந்து 300-பவுன் ஸ்காலர்ஷிப் கொடுத்து மிஸ் ரோடா பட்டாச் சார்ஜியா என்ற இந்தியமாதை இந்த வருஷம் இங்கிலாந்துக்கு அனுப்பியிருக்கிறார்கள். போக்ராவாசியாகிய நவாப்சயித் அப்துஸ்ஸோவான் சௌதூரி என்ற கனவான்மேலே சொன்ன ஸ்காலர்ஷிப்புக்காக ரூபா 1,200 கொடுத்திருக்கிறாரென்று அந்தச் சங்கத்தார் தெரிவித்திருக்கிறார்கள்.

* * *

மிஸ். கே. கோரி யென்னும் தீயஜாதி மாது இவ்வருஷத்தில் நடந்த பி-ஏ பரீக்ஷையில் தேறினாள். மலையாளத்துத் தீயஜாதியில் முதல் முதல் பி-ஏ பரீக்ஷையிற் தேரியமாது இவ்வம்மையே யாம்.

* * *

இவ்வருஷத்தில் நடைபெற்ற மெட்ரிக்குலேஷன் பரீக்ஷையில் P. ருக்குமணி யம்மாள், H. ருக்குமணி யம்மாளென்னும் இரண்டு பிராமண ஸ்திரீகள் தேரியிருக்கிறார்கள்.

* * *

உலகத்துள் பெண்களாற் பிரசுரஞ் செய்யப்படும் மாதாந்தப் பத்திரிகைகள் 200-இருக்கின்றனவாம்.

* * *

சீனதேசத்திலுள்ள பெண்களுக்குப் புருஷர்களைப்போன்று இராஜாங்க வியுவகாரங்களைப்பற்றித் தெரியுமாம். ஆங்கில ஸ்திரீகள் சுதந்தரம் பெறும்போது சீன தேசத்துப் பெண்களும் சுதந்தரம் பெறுவார்களென்று சீனமந்திரி கூறியிருக்கின்றார்.

* * *

கெயிக்வார் மஹாராஜா அவர்கள் இங்கிலாந்திலிருந்து வந்து தமது இராஜ்ஜியத்துக்குப்போகு முன் பம்பாயில் தங்கிய சில நாட்களுள் ஆசாரச் சீர்திருத்த விஷயத்திற் கனுகூலமான ஒரு பெருங்காரியம் செய்தனர். அதாவது ஆரிய சகோத்ரத்வ சங்கத்தார் மஹாராஜா அவர்களுக்கு ஒரு விருந்து செய்ய, அப்போது ஹிந்து ஸ்திரீகளும் புருஷர்களோடு பந்தியில் சமமாக இருந்து போஜனம் செய்தார்கள்.

* * *

மிஸ் நல்லம்மா முருகேசன் என்ற இலங்கை மாது எடின்பரோ நகரிலுள்ள வைத்திய சர்வகலாசாலையில் எல். ஆர். ஸி. பி. எஸ் என்ற பட்டம்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
30 ... 1911
MADRAS.

பெற்று, இலங்கைத் தலைநகராகிய கொளும்புக்குத் திரும்பிவந்த பொழுது அந்நகர் மாதர் சங்கத்தாரால் வெகு சிறப்பாக வரவேற்கப்பட் டுபசரிக்கப் பட்டார். தற்பொழுது அந்நகரிலேயே இருந்து வைத்தியம் செய்து வருவதாக அறிகிறோம்.

* * *

ஹிமியா என்னும் தீவில் ஒரு விந்தையான விவாக வழக்கம் நடந்து வருகின்றது. அங்கு குடியிருக்கும் கிரீக் தேசத்தார் அநேகமாகக் கடற்பஞ் செடுத்துக் காலக்ஷேபம் செய்து வருகிறார்கள். இவ்வளவு ஆழத்திலிருந்து இத்தனை பஞ்சுகள் எடுத்து வரவேண்டுமென்ற ஒரு கணக்குண்டு. அப்பிரகாரம் எடுத்துவந்தாலொழிய எந்தப் பெண்ணும் கலியாணம்செய்து கொடுக்கப்படமாட்டாது. வேறு சில கிரீக் தீவுகளில் இந்நிபந்தனை மாப்பிள்ளைகளுக்கு வைக்கப்பட்டிருக்கின்றது.

* * *

அமெரிக்காவில் லாஸ் ஆங்கில்ஸ் என்னும் நகரத்தில் மிஸ்டர் ஜான்ஸ்டன் என்பவரின் குழந்தைகள் தங்கள் தகப்பனாரைத் தேடிக்கொண்டிருக்கின்றன. அவருக்கு வயது 91. அவர் 75 வயதுள்ள ஒரு ஸ்திரீயைக் கூட்டிக்கொண்டு ஓடிப்போய் விட்டதாகத் தெரிகிறது. அவர் மூத்தகுமாராகிய 62 வயதுள்ள மிஸ்டர் சார்ல்ஸ் ஜான்ஸ்டன் என்பவர் தம் தகப்பனது கலியாணத்தைத் தடுக்க வேண்டுமென்று போலீஸ்காரரோடு வேண்டிக்கொள்ள, அவர்கள் "அவர்என்ன சிறுபிள்ளையா?" என்று சொல்லித்தாங்கள் அக்காரியத்தில் தலையிடமாட்டோ மென்று சொல்லிவிட்டார்கள். ஆனால் அவர் இருக்குமிடத்தைக் கண்டுபிடிக்க வேண்டிய ஏற்பாடு செய்வதாகச் சொன்னார்கள்.

* * *

ஹிந்து ஸ்திரீகள் அணியும் தண்டையென்னும் நகையைப் பற்றிய விந்தையான சமாசாரம் இங்கிலிஷ்மன் பத்திரிகை வெளியிடுகின்றது. அது பின் வருமாறு:— "இவ்வுலகத்திலெல்லாம் மிக்க செல்வவந்தராகிய மிஸ்டர். ஜான். டி. ராக்பெல்லர் என்பவரின் மகள் மிஸ்ஸஸ் ஹாரோல்ட் எம். மெக்கார்மிக்என்னும்அம்மாள்காலில்தண்டை அணிந்துவருகிறார்களாம். தங்கள் செல்வமிக்கசகோதரி இங்ஙனம் அணிந்துகாட்டியதண்டையென்னும் ஆபரணத்தை எல்லாரும் அணிவதாஎன்பதைப்பற்றிஸ்திரீகள் கூட்டம்கூடிப் பேசிவருகிறார்கள். மிஸ்ஸஸ் மெக்கார்மிக்அம்மாளைப்பலர்போய்க்கண்டனர். அத்தண்டையை எக்காலில் அணிந்துவருவதென்றோ எப்பொழுதணிவதென்றோ கூற அவ்வம்மாள் மறுதலித்து விட்டார். அத்தண்டை ஸ்வர்ணத்தினால் ஆக்கப்பெற்றது. வேறேயும் பலஸ்திரீகளிடம் இவ்வாபரணம் இருப்பதாகவும் ஆனால் அவர்கள் உபயோகப்படுத்துவதில்லையென்றும் தெரிகிறது." நகைப்பித்து அமெரிக்காவிலும் சென்றுவிட்டது மிக விசனிக்கத்தக்கதே.



மிஸ்ஸஸ் ஸரோஜினி நாயுடு.
(வயது 19.)



...TRAR OF BOOKS ... AS.


# பெண் கல்வி.

சித்திர சகிதமான ஒரு மாதாந்த சஞ்சிகை.

கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்.—திருக்குறள்.

தொகுதி 1.]    1911௵ ஸெப்டம்பர் ௴ 22உ    [பகுதி 2.


## மிஸ்ஸஸ் ஸரோஜினி நாயுடு.

வயிறாரப்புசித்தும், ஆடையாபரணங்களால் அலங்கரித்தும் கல்வியென்னும் அமிர்தம் வேம்புபோல் கசக்க, அயல்வீட்டு மாதர்களுடன் வீண் வார்த்தையாடிக் காலம்போக்கும் சாதாரண ஸ்திரீகளைப்போலன்றி, 'கல்வியழகே யழகு' என்பதை ஓர்ந்து, அதன்வசப்பட்டு, அதிலுள்ள ரசங்களை மாந்திக்களிக்கும் மாதர்களுக்கு நடு நாயகம்போல் விளங்கும் மிஸ்ஸஸ் ஸரோஜினி நாயுடு என்றழைக்கப்படும் மாது 1879ம் ௵ பிப்ரவரி ௴ 13உ ஹைதராபாத் என்னும் நகரில் ஜனித்தார். இவர் தந்தை டாக்டர் அகோரநாத் சடோபாத்யா என்பவர். சமஸ்கிருத வித்வதைக்கும் யோகாப்பியாசத்திற்கும் கீழ்வங்காளம் முழுவதும்பேர்போன ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர் இவர். இம்மாதுக்கு மிகச் சிறு பிராயத்திலேயே ஆங்கிலம் கற்றுக்கொடுக்கப்பட்டது. ஆனால் அப்பாஷையைப் பேசாமல் பிடிவாதமாக இருந்ததுடன் ஒரு தினம் பேசும்படியாகக் கேட்டுக்கொள்ள அப்பொழுதும் மறுதலித்ததால், அவர் தந்தை அவரை ஒரு நாள்முழுவதும் ஒரு அறையில் தனியாக அடைத்துவைத்திருந்தார். அவருக்கு அப்போது வயது ஒன்பதேயாகும். இந்த சம்பவத்திற்குப்பிறகு அவர் தந்தை சிக்ஷிக்கும்படியாக நேர்ந்ததேயில்லை. இம்மாதே தம் கடிதங்களுள் ஒன்றில் எழுதுகிறார்:—"நான் அவ்வறை... லிருந்து வெளியில் வந்தபொழுதே ஒரு பாஷா வல்லவியா... க்கேன்."

இம்மாது கணக்கில் மிகவும் வல்லவர் ஆவார் அல்லது சாஸ்திரத்தில் நிபுணர் ஆவார் என்று அவர் தந்தை மதித்தார். ஆனால் அவரது குடும்ப பரம்பரையாகவுள்ள காவியவாசனை மேலிட்டு நின்றது. அவருக்கு 11-வயதாக இருந்தபொழுது ஒருநாள் ஒரு கணக்குப் போடுவதற்காக மிகவும் ஆழ்ந்து யோஜனைசெய்து கொண்டிருக்கையில், அவர் சொல்லுகிறார்:—"எனக்கு அது சரியாக வரவேயில்லை. ஆனால் அதற்குப் பதிலாக ஒரு பெரிய கவி தோன்றிற்று. அதை உடனே எழுதிவைத்தேன்." அந்நாள் முதல்தான் அவர் கவி எழுத ஆரம்பித்தது. 13-வயதாயிருக்கும் பொழுது, ஆறு தினத்திற்குள்ளாகப் பல செய்யுள்களடங்கிய ஒரு பெருங்காவியத்தைச் செய்தார். தவிரவும், 2000 வரிகளடங்கிய ஒரு நாடகமும் எழுதி முடித்தார்.

1895-ம் வருஷத்தில் அவர் விருப்பத்திற்கு மாறாக இங்கிலாந்திற்கு அனுப்பப்பட்டார். அங்கு அவர் 1898ம் வருஷ வரைத் தாமதித்தார். முதலில் ல்ண்டன்மாநகரத்திலுள்ள ஒரு கலாசாலையிலும், பின்னர் கர்ட்டன் நகரத்திலுள்ள ஒரு கலாசாலையிலும் கல்வி கற்று வந்தார். மத்தியில் ஒரு சமயம் இட்டலி தேசத்துக்குப் போய் வந்தார். 1898-ம் வருஷத்தில் ஹைதராபாத்துக்குத் திரும்பி வந்தவர் அவ்வருஷத்திலேயே ஜாதிக்கட்டை உதறியெறிந்து, ஜனங்களெல்லாம் நிந்திக்க, பிராமணகுலத்தில் ஜனித்த தாம் டாக்டர் G. நாயுடு என்பவரை மணந்தார்.

தம் இல்வாழ்க்கையைப்பற்றிப் பேசும் பொழுது அவர் சொல்லுகிறார்:— "என் சிறு இல்லில் சந்தோஷமே குடிகொண்டிருக்கின்றது. தோட்டத்தில் பக்ஷிகளின் மனோகரமான கீதங்களும் வெளிவராந்தையில் குழந்தைகளின் இனிய குரல்களும் நிறைந்திருக்கின்றன. கடவுள் என் பேரில் பக்ஷம் வைத்து எனக்கு ஆரோக்கியத்தை மாத்திரம் தந்தருள்வாரானால் அதுவே என் வாழ்க்கையைப்பூர்த்தி செய்யப் போதியதாகும்."

இப்மாதுக்கு வனைப்பில் வெகு பிரியம். அப்பிரியாதிக்கமே அவரைக் கவியாக்கிற்றெனக் கூறலாம். ஆர்தர் சைமண்ட் என்பவர் இம்மாது இங்கிலாந்திலிருந்த பொழுது அவரைப்பற்றி வர்ணிக்கிறார்:—"அச்சிறு உருவத்தின் ஜீவசக்தி முழுவதும் கண்களிடத்தில் ஒருமைப்பட்டிருப்பதாகத் தோன்றும். எங்கேனும் அழகைக்கண்டால்சூரியகாந்திப் புஷ்பம் சூரியனையேநோக்குவது





போல, அக்கண்கள் அதனை நோக்கும். நோக்க நோக்க, கண்கள் விசாலிக்கப் பெற்று, பார்ப்பவர்க்கு அவை தவிர மற்றொன்றும் காணாதன வாகும். அவர் குரல் சங்கீதம் போன்ற தீங்குரலாகும். இவ்வம்மையார் எங்கிருந்தாலும் தனித்திருப்பதாகவே தோற்றுவர். அவ்வாறேதான் அவர் கீழ்த்தேசத்திய ஞானத்தை கிரகிக்கிறார் என்று தோன்றுகின்றது." இம்மாது அவ்வளவு சிறு வயதிலேயே புத்திக் குரிய விஷயங்களின் ரசங்களை மாந்தி ஜீவித்து வந்தார். மனச் சாந்தியின் கண் அவருக்குள்ள அடங்கா விருப்பத்தின்முன் சிறு தொந்தரைகளெல்லாம் அக்கினியில் பட்ட துரும்பேயாம்.

இவ்வம்மையார் பரிகாச ரசங்களிலும் வெகு பிரியமுடையவர். மனங்குளிரச் சிரிப்பதை வெகுவாக மதித்தவர் இவர். இதுவும் இவருக்குப் பரம்பரைப் பாத்தியதையாகக் கிடைத்திருந்தாலும் இருக்கலாம். ஏனெனில், அவர் தந்தை சிரித்தால் வீட்டுக்கூரை தகர்ந்து விழும் என அவரே சொல்வர்.

இவர் நம் நாட்டுஸ்திரீகள் கல்வி, நாகரிகம் முதலியவற்றில் உன்னத நிலையை அடையுமாறு சமயோஜிதம் போல சோஷியல் கான்பரன்ஸ் முதலிய சபைகளில் விரிவாகவும், கேட்போர் மனதைக் கவரும் படியாகவும் பேசி எவ்வளவு உழைப்பெடுத்து வருகிறாரென்பது எல்லார்க்கும் தெரிந்ததே. இத்தகைய மாதர் ஒரு நூறு நம்நாடு உடைத்தாயிருக்குமாயின், நம் நாட்டுப் பெண்களின் ஊர்த்துவ கதியைத் தடுக்க எவரால் இயலும் ?

ஹே! சகோதரிகளே! பெண்ஜன்மம் கேவலமென்றும், அது படைப்பதினும் வேறெந்த ஜன்மம் படைப்பினும் நன்று என்றும் நினைத்து வருந்தும் சகோதரிகளே! இவ்வம்மையார் பெண்ணோ? ஆணோ? இவர்போல் கண்டார் மகிழ, கேட்டோர் புகழ வாழ்வார் ஆடவரில்தாம் எத்தனை பேரிருப்பர்? ஆதலின், ஜன்மத்திலென்ன உயர்வு தாழ்வு? உயர்வையும் தாழ்வையும் ஆக்குவன, அழிப்பன, கல்வி, ஒழுக்கம், நாகரிகம்—இவையும், இவையின்மையுமேயாம்.

பத்திராதிபர்.

# பெண்கல்வி அவசியம்.

இந்நாட்டுப் பெண்கள் கல்வியில்லாமையால் அஞ்ஞான இருளில் ஆழ்ந்திருக்கின்றனர். சில பெண்களுக்குக்கல்வி அவசியந்தானென்று ஒப்புக்கொண்டாலும், அநேகர் பெண்கள் கற்றுயாது செய்யப்போகிறார்களென்றும், அதனால் அவர்கட்குக் கர்வமும் அடக்கமின்மையும், உத்தியோகம், தொழில் முதலியவற்றில் முயற்சியும், போட்டியும், நன்னடக்கைக்குறை முதலிய பலகெடுதல்களும் உண்டாகுமென்றும் ஆக்ஷேபம் செய்கின்றனர். இவர்கள் அபிப்பிராயப்படியே கல்வி யாவர்க்கும் அறிவொழுக்க முண்டாக்கும். உத்தியோகம் தொழில் முதலிய வேறு விஷயங்களுக்கும் உபயோகப்படும். ஆனால், சிலர் சொல்லுகிறபடி கற்ற பெண்கள் எந்நாட்டிலும் ஆடவர்செய்யும் தொழில் முதலியவைகளைச் செய்து, பொதுவாய் ஆடவர்க்கே விரோதமாய் நிற்பதில்லை. இப்பேர்ப்பட்ட பெண்கள் அரிதாய்ச் சிற்சில தேசங்களில் இருப்பினும், அது பொதுவிதி யாகமாட்டாது. அமெரிக்கா முதலிய தேசங்களிலும்கூடப் பெண்கல்வியால் அத்தேச ஆடவர் கல்வியறிவொழுக்கமும், தொழில் முயற்சியும், மற்றும் பலவழிகளில் விர்த்தியும் பெற்றனரே யன்றி வேறென்னை? ஆதலால் இத்தேச ஆடவர்களிற் பலரும் இத்தகைய வீண்பயத்தை விட்டொழிக்கவேண்டும். முற்றிலும் ஐரோப்பியப் பெண்களைப்போலவே நம்தேசப்பெண்களும் கற்கவேண்டுமென்பதென்னுடைய கருத்தல்ல. வீட்டிலேயே தங்கள் தங்களுடைய கணவரின் தொழில் முதலியவற்றிற்கு ஏற்றவாறு துணைபுரிந்து மற்றவர்களையும் ஆதரித்துவரும் கல்வியையே இப்போது கற்க வேண்டி இருக்கிறது. பெண்கள் கற்காவிட்டால் இல்லறத்தை நடத்தும் சக்தி எப்படி யுண்டாகும்? ஆடவர்கள் ஆண்மையிலும் அறிவிலும் அந்தஸ்திலும் தொழில் முதலிய முயற்சியிலும் மூதன்மை பெற்றவர்கள். அவ்வாறே பெண்பாலரும் கிரககிருத்தியங்களின் முதன்மையும், பொறுப்பும், சார்தமும் பெற்றவர்கள். இவ்விருதாரத்தினரும் தங்கள் தங்கள் கடமைகளைக் கற்றுணர்ந்து அவைகளின்படி நடப்பாராயின், இந்நாட்டிற்கு எவ்வளவோ சுபிக்ஷமுண்டு. பெண்கள் அறிவுக்கேற்றபடியே தேச[illegible]





க்ஷேமமும் நாகரிகமும் இருக்குமன்றோ? இவ்வுலகத்தில் புருஷர்களாயினும் பெண்களாயினும் தனித்து மற்றவர் உதவியின்றி இருத்தல் முடியாது.

இதனால் ஸ்திரீ புருஷர்கள் சமானஸ்தர்களேயன்றி ஒருவர் மற்றொருவர்க்கு அடி[illegible]மாட்டார். ஒருவரையொருவர் வெறுத்துத் தனித்துவாழ்வது தகுதியும் உலக இயற்[illegible]காது. இயற்கைக்கு மாறாய்த் தன்னந்தனியே இருக்க விரும்புகிறவர்கள் மிகச்சிலரே. இவர்களுள்ளும், சந்நியாசிகளைப்போல் நடிப்பவர் சிலரும், தாய்தந்தையர்களின் அஜாக்கிரதையாலும், சுயமுயற்சியின்மையாலும் விவாகமாகாமல் இருப்பவர் சிலரும், வேறு இழிவான பந்தத்தால் விவாகத்தை வெறுப்பதுபோல் நடிப்பவர் சிலருமாவர். இவர்கள் யாவரும் நீதியோடுவாழ்வாராயின், அப்போது அவர்கள்மீது பிழைசொல்வோர் ஒருவருமில்லை. பெண்துணையில்லாத ஆடவர்களிற் பலர் வீணாய்ப் பொருளைப் போக்கியும், தங்கள் சரீரசுகமுதலியவற்றைத் தாங்களே கெடுத்துக் கொண்டும், பலராலும் இகழப்பெற்றும், டம்பமாகவோ இழிவாகவோ உடைதரித்தும் வேடிக்கை விநோதங்களில் தங்கள் வாணாளை வீணாளாக்கியும், ஒன்றிலும் உறுதியும் ஒழுங்குமின்றி இருக்கின்றனர். இத்தகைய ஆடவருக்கு மனமுவந்த வாழ்க்கைத் துணைவிகள் இருப்பார்களாயின் அப்போது இவ்விபரீதங்களுக்கு இடமிராதன்றோ? ஒவ்வொரு குடும்பத்திலும் விவேகியான மனைவியின் துணை கடலில் கப்பலானது காற்றுமுதலிய ஏதுக்களால் அசையாமல் அமைதியாய் நிற்கச்செய்யும் நங்கூரம் போன்றது. சிநேகத்துளெல்லாம் மனைவியின் சிநேகமே விசேஷித்ததும், நீடித்து நிற்பதும், இகபர சம்பந்த முடையதுமாம். எல்லா விஷயங்களிலும் உதவி செய்யக் கூடிய எத்தனையோ பெண்களை எப்போதும் அடுப்பின் கரையையே அடைகாக்கச் செய்து, அவர்களை அஞ்ஞானத்திலாழ்த்தி அடிமையிலும் கேடாய் வைத்திருப்பது ஆடவர்களுக்குத் தகுதியன்று. பெண்களுக்கு பகுத்தறிவில்லாமலிருந்தாலன்றோ அவர்கட்குக் கல்வி அநாவசியகம் என்று கூறலாம்? இந்நாட்டுப் பெண்கள் யாவரும் படிக்கவேண்டுமேயன்றி, சிலர் மட்டும் படித்துப் பயனில்லை. பிரபுக்களாயுள்ளோர் பெண் பாடசாலைகளைப் பற்பல விடங்களிலும் வைத்து அவைகளில் ஏழைப்பெண்களைச் சம்பளமில்லாமல் படிப்பிக்க வேண்டும்.

பாடசாலையின் வருஷோற்சவங்களிலும், பிற சமயங்களிலும் பரிசு முதலியவைகளைக் கொடுத்து உற்சாகப் படுத்தவேண்டும். கல்வியில் ஊக்கமுள்ள பெண்களுக்கு உபகாரச் சம்பளங்கள் ஏற்படுத்தவேண்டும். நம் நாட்டுப் பெண்களுக்குக் கல்வியறிவுண்டாயின், அதற்கேற்றபடி மக்களுக்குள் ஒற்றுமையும் தேசாபிமானமும் பிரபலிக்கும். கற்றறிந்த பெண்கள் எக்குடியிற் பிறந்தவரேயாயினும் அவர்கள் கல்வியறிவொழுக்கத்திற் கேற்றபடி நன்கு மதிக்கப்படுவார்கள். கற்றறிந்த பெண்களுக்கு வீட்டிலும் நாட்டிலும் மதிப்பு ஏற்படும். இத்தகைய பெண்களிடம் கணவன் முதலியோர் கொள்ளும் நட்பானது நுனியிலிருந்து தின்னப்படும் கரும்புபோல வர வர அளவற்ற இன்பத்தைக் கொடுக்கும். கல்வியறிவில்லாத பெண்கள் தங்கள் புருஷர்களையும் பொது நல விஷயங்களிற் சிந்திக்க விடமாட்டார்கள். மற்றும் எவ்வித நற்காரியத்தைச் செய்யவும் சம்மதியார்கள். தானதருமங்களைச் செய்யப்புகினும் ஈடுபடார்கள். ஆதலால் பெண்கல்வி பிரபலமாகிற வரையில் இந்நாட்டினர் க்ஷேமப்படுவரென்பது சந்தேகமே. கல்வியறிவில்லாத பெண்களுக்கு பொது நல விஷயங்களைப் பற்றியும், இல்லற தர்மத்திற் குரிய நற்கருமங்களைப் பற்றியும் சொல்லினும் விளங்காது. ஆதலின் பொதுநலத்தைக் கோரும் ஒவ்வொருவரும் தங்கள் தங்களுடைய மனைவி மக்களையும் சகோதரிகளையும் கல்வி கற்கச் செய்யவேண்டுவது எத்தனை அவசியமென்பது சொல்லாமலே விளங்கும்.

இ. வே. சாரதாம்பாள்.

தேவனே ஏழைகளையும் ஐஸ்வரியவந்தரையும் உண்டாக்குகிறார். தாழ்த்துகிறவரும் உயர்த்துகிறவரும் அவரே. புழுதியில் கிடக்கும் ஏழையை உயர்த்துகிறார். சாணக்குப்பையில் கிடக்கும் பிச்சைக்காரனை உயர்த்துகிறார். எங்கு? அரசபதவிக்கு.—சாமுவேல்.

* * *

நமக்குப் பின்வரும் சந்ததிகளை நிலைபெறச் செய்பவர்கள் நம் நாட்டு ஸ்திரீகளே. சிறுவர் சிறுமிகளை வளர்த்துப் படிப்பிக்கிறவர்கள் தாய்மார்களல்லவா? இவ்வாறிருக்க, அவர்கள் ஞான சூன்யர்களாயிருந்தால் நம்ஜாதி ஈடேறுவதெப்படி ?—சர் குருதாஸ் பானர்ஜி.

* * *

மடமையைப்போல் துணிவது எதுவுமின்று:—மெனன்டர்.



# இயற்கை அற்புதங்கள் சில.

கண்ணுள்ளார்க்கு இயற்கையின் அற்புதங்கள் எண்ணிறந்தன. கொடி, செடி வர்க்கங்களைப்பார்க்கட்டும், உயிர்ப்பிராணிகளைப் பார்க்கட்டும், எங்குப் பார்த்தாலும் அற்புதங்களே கண்ணில் படுவன. மனிதனுடைய விஸ்வாசமுள்ள ஸ்நேகிதனென்று சொல்லத்தக்க நாயென்ன, கம்பீரமுள்ள குதிரையென்ன, பொறுமையுள்ள கழுதையென்ன, அமரிக்கையான பசுவென்ன, இவைகளுக்கெல்லாம் நாம் பிரதியுபகாரம் செய்து முடியுமா? அங்ஙனமிருக்க, நாம் அவைகளை எங்ஙனம் நடத்துகிறோம் பாருங்கள். உயிர்ப்பிராணிகளென்று சற்றும் கருதாமல், அவைகளையெல்லாம் உயிரற்ற இயந்திரத்திற்குச் சமமாக நடத்துகிறோமே! ஹா! என்ன பரிதாபம் !!

இது நிற்க, உயிர்ப்பிராணிகள் பல்வகைப்பட்டு விளங்குகின்றன; சில தரையிலும் சில நீரிலும் வாழ்கின்றன; நீர்வாழ் ஜந்துக்களில், சில நதிகளிலும், சில ஏரிகள் அல்லது குட்டங்களிலும், சில கடற்கரைகளிலும், வேறு சில சமுத்திரத்தின் ஆழமான இடங்களிலும் வாழ்கின்றன. சில ஜந்துக்கள் பூமியில் புதைந்து கிடக்கின்றன. சில ஆகாயத்தில் வசிக்கின்றன. சில மிகக் குளிர்ச்சி பொருந்திய இடங்களிலும், வேறு சில மிக உஷ்ணம் பொருந்திய மணல் வனாந்தரங்களிலும் வசிக்கின்றன. இத்தகைய பேதங்கள் தவிர, சில மாம்ச பக்ஷணிகளாயும், சில சாகபக்ஷணிகளாயும், சில விதைகள், பழங்கள்—இவைகளைப் பக்ஷித்து உயிர்வாழ்வனவாயும் இருக்கின்றன. இவைகள் ஒவ்வொன்றும் அமைக்கப்பட்டிருக்கும் அமைப்பின் வனப்பும், ஒவ்வொன்றின் நிறத்தின் அழகும், ஒரு இனத்திற்கும் மற்றொரு இனத்திற்குமுள்ள ஒற்றுமை பேதங்களின் விசித்திரங்களும், ஒரு இனத்துலேயே ஒன்றிற்கும் மற்றொன்றிற்குமுள்ள பேதங்களும் ஒற்றுமைகளும்—இவைகளிலுள்ள விசேஷத்தையும் ஆச்சரியத்தையும் எழுதி முடியுமோ !

சகோதரிகளே ! பாருங்கள். சில ஜந்துக்கள் அவற்றின் அழகால் நம்மை சந்தோஷிப்பிக்கின்றன. வேறு சில அவற்றின் ஆகிருதியால் சந்தோஷிப்பிக்கின்றன. பக்ஷிகள் எத்தனை அழகாயி

ருக்கின்றன! யானை, திமிங்கலம் முதலியன எத்தனைபெரிதாயிருக்கின்றன! இவை தவிர, கூட்டம் கூட்டமாக வாழும் ஜந்துக்கள் நமக்கு மிகவும் வியப்பைத்தருகின்றன. இவ்வர்க்கங்களுள் நாம் கவனிக்கத்தக்கன தேனீக்களும் எறும்புகளுமாம். தேனீக்களால் நாம் அடையும் பிரயோஜனம் உங்களுக்குத் தெரிந்ததே. எத்தனை மதுரமான தேனை அவைகள் நமக்குக் கொடுக்கின்றன! ஆனால் இயற்கைப்பொருளாராயச்சியில் வல்லவர்களான கவுல்ட் முதலிய பெரியோர் தேனீக்கள் எறும்புகளைப்போல அவ்வளவு புத்தியுள்ளவைகளல்லவென்றும், அவைகள் கூடிவாழ்வதில் இவைகள் வாழ்வதில் போல அவ்வளவு ஆச்சரியகரம் இல்லையென்றும் கூறுகிறார்கள்.

எறும்புகளின் அறிவு, செய்கை, வழக்கம்—இவைகளைப்பற்றிக் கவனித்து வந்தவர் பலர். எறும்பு வர்க்கத்தில் ஆயிரத்திலதிகம் பிரிவுகளிருப்பதாகச் சொல்கிறார்கள். இவற்றுள் ஒவ்வொரு இனமும் வெவ்வேறு பழக்கங்களுடையதாம். இவற்றைக் கவனித்த ஒருவர் சொல்லுகிறார்:— "நான் வைத்திருந்த எறும்புகளில் வேலை செய்கிற எறும்புகள் ஏழுவயதுவரையும், இராணி எறும்புகள் 15 வயதுவரையும் உயிர் வாழ்ந்திருக்கின்றன. எறும்பினங்கள் ஒவ்வொன்றிலும் சிறு எறும்புகள் தவிர, வேலை செய்யாத ஆண் எறும்புகளும், இறக்கையற்ற வேலை செய்கிற எறும்புகளும், ஒன்று அல்லது ஒன்றிலதிகம் இராணி எறும்புகளும் இருக்கும். இராணி எறும்புகளுக்கு முதலில் இறக்கை இருக்கும். ஆனால் கல்யாணத்திற்காக அவைகள் ஒருசமயம் வெளியில் பறந்து சென்று மீளும். மீண்டதும் இறக்கைகளைத் தூர எறிந்துவிடும். ஏனென்றால், அதற்கப்புறம் அவைகள் கூட்டைவிட்டு எக்காலத்தும் வெளியில் போவதின்று. வேலை செய்யும் எறும்புகள் சாதாரணமாக முட்டையிடுவது வழக்கமன்று. ஆனால், தம்கூட்டத்திற்கு வேண்டிய சகல காரியங்களையும் அவைகளே பொறுப்பாகச் செய்யும். சிறு எறும்புகள் கூட்டிலிருந்துகொண்டு அறைகளும், டன்னல்களும் செய்து கொண்டிருக்கும். தவிரவும், அவற்றிலும் சிறு எறும்புகளை வயதுக்கிரமமாகப் பிரித்து வைத்துப்போஷிக்கவும் பாதுகாக்கவும் செய்துவரும். பள்ளிக்கூடங்களில் பல வகுப்புகளில் பிள்ளைகள் ஒழுங்காகவைக்கப்பட்டிருப்பதுபோல் என் கூடுகளில் பலசமயம் இச்சிறு எறும்புகள் வைக்கப்பட்டிருப்பதைப் பார்த்திருக்கிறேன்."





இவற்றுள் ஒருவகுப்பு 'படை' எறும்புகள் என்று சொல்லப்படும். இவை அமெரிக்காவில் சில இடங்களில் காணப்படுகின்றன. இவற்றை யடுத்துச் செல்வதரிதாம். தம் கூட்டத்தார் எங்காவது சென்று ஆகாரங்களைக் கொண்டுவரும் காலத்தில் அவைகள் பக்கமாக இப்படை எறும்புகள் பட்டாளத்து சிப்பாய்கள்போல கூட வருமாம். வேலைசெய்யும் எறும்புகளும், தேனீக்களைப்போல தங்கள் இராணி நேரே எப்பொழுதும் தங்கள் பின்பாகத்தைக் காண்பிக்காமல் தலைப்பாகத்தையே காண்பித்து நடமாடும் வழக்கமுடையனவாம். இராணி எறும்பு இறந்து போனால் மற்ற எறும்புகளெல்லாம் அதன் பக்கத்தில் துக்கம் கொண்டாடுவது போல் சூழ்ந்துகொள்ளும்.

ஒருகூட்டத்திலுள்ள எறும்புகள் ஒன்றிற்கொன்று இனம் நன்றாகத் தெரிந்துகொள்ளும். அவைகளை இரண்டாகப்பிரித்து ஒன்றிரண்டு வருஷம் வைத்திருந்து, பின் ஒரு வகுப்பிலுள்ள ஒரு எறும்பை மற்றொரு வகுப்பினடுத்துவிட்டால் அவை ஒன்றிற்கொன்று தெரிந்து கொண்டு சேர்ந்துகொள்ளும். ஒரு கூட்டத்திலுள்ள எறும்புகள் மற்றொரு கூட்டத்திலுள்ள எறும்புகளை கிட்டவரவொட்டா.

ஒரு கூட்டத்திலுள்ள எறும்புகள் ஒன்றிற்கொன்று மிகவும் ஸ்நேகவாஞ்சையும் பச்சாதாபமும் காட்டிவரும். ஒரு கூட்டிலுள்ள ஒரு எறும்புக்குத் தற்செயலாய் கால்கள் நொண்டியாய்ப்போக, படுக்கையிலேயே மூன்றுமாதம் வரைக் கிடக்க நேரிட்டதாம். அப்பொழுதுமற்ற எறும்புகளெல்லாம் அதற்கு உணவளித்து இரக்ஷித்து வந்தனவாம். இதுபோலவே, மற்றொரு எறும்பின் கொம்புகள் ஒடிந்துபோக, அது சிலநாட்களாகக் கூட்டைவிட்டு வெளியில் போகாமலே இருந்ததாம். கடைசியாய் ஒரு நாள் வெளியில்போக, ஒரு வேற்றெறும்பு அதைக்கண்டு தாக்கிற்று. அதனால், அவ்வெறும்பு எழுந்திருக்க சக்தியற்றதாய்த் தரையில் தானே கிடந்ததாம். அவ்வழியேபோன பல எறும்புகளும் அதைக் கவனிக்காதிருக்க, ஒரு தனியெறும்புவந்து அதைப்பார்த்ததாம். பார்த்ததும், தன் கொம்புகளால் தரையில் கிடக்கும் எறும்பை ஸ்பரிசித்துப் பார்த்து, அதை மெல்லெனத் தூக்கிக்கொண்டு தன் கூடு சென்றதாம். ஹா! என்ன அன்பு! என்ன பச்சாதாபம்! சகோ

தரிகளே! நமக்குள் இத்தனை இருந்தால் போதாதா? எறும்பினிடமிருந்து படிக்கத்தக்க பாடங்கள் பல.

இது நிற்க, நாய், பூனை முதலிய சில பிராணிகளை அவை வசிக்கும் இடத்தைவிட்டு வெகுதூரம் கொண்டு போனாலும் திரும்பத் தங்களிடத்திற்கு வந்துவிடப் பார்க்கிறோம். அவற்றின் இயற்கை அறிவைப் பார்த்தீர்களா? ஆனால், இதற்கு ஒரு மாற்று டார்வின் சாஸ்திரியார் கூறியிருக்கிறார். அதாவது இங்ஙனம் தன்னிருப்பிடம் தெரிந்து செல்லக்கூடிய ஜந்துக்களை ஒரு பெட்டியில் அடைத்துக்கொண்டுபோய், பெட்டியிலிருந்து வெளியே விடுமுன் பெட்டியோடுவிரைவாகப் பலதரம் சுற்றிப்பின் பெட்டியைத்திறந்து விட்டால் அவற்றிற்கு வழி தெரியாதாம். பிரான்சு தேசத்தில் பூனைகளுக்கு இப்படிச் செய்து ஓடிப்போகாமல் தடுத்துக்கொள்கிறார்களாம்.

இது நிற்க, உயிர்ப்பிராணிகளின் ஆகிருதியைப்பாருங்கள். கிராப்பி என்று சொல்லப்படும் ஜந்து 20 அடி உயரம் வளர்கின்றது. திமிங்கலம் 80 முதல் 90 அடிவரை நீளமாயிருக்கின்றது. யானை காண்டாமிருகம் முதலியன நீங்கள் பார்த்திருப்பீர்கள்.

இனி, ஜீவஜந்துக்களின் வயதைப்பார்ப்போம். முயலுக்கு வயது 10, ஆடு, நாய்களுக்கு 10-12, பன்றிக்கு 20, குதிரைக்கு 30, ஒட்டகத்திற்கு 100, யானைக்கு 200, கிரீன்லாண்டு திமிங்கலத்துக்கு 400 (?): பக்ஷிகளுள், கிளிக்கு 100, காகத்திற்கு அதற்கு மேல். மீன்களுள், ஒரு ஜாதிக்கு வயது 150; மற்றொரு ஜாதிக்கு 200 லதிகமாம். ஊர்வனவற்றுள், ஒரு ஆமை 500 வருஷத்திலதிகம் ஜீவித்திருந்ததாம். இவையெல்லாம் முற்றிலும் சரியென்று எமக்குச்சொல்ல இயலாது.

இனி, ஓரறிவுயிரைப்பற்றிப் பார்ப்போம். இவற்றுள் விசேஷமாகக் கவனிக்கத்தக்கது மாம்சபக்ஷணிகளாயுள்ள செடிகளேயாம். இவற்றைப்பற்றி நீங்கள் அதிகமாகக் கேட்டிருக்கமாட்டீர்கள். டையோனே என்று சொல்லப்படும் செடி இவ்வினத்தைச் சேர்ந்ததாகும். இதன் இலைகளின் ஓரங்களிலெல்லாம் அரும்பு போல அதாவது தேங்காய் திருகும் கருவியில்போல உரோமங்கள் அல்லது மீசைகள் இருக்கும். ஈ முதலிய சிறுபறவைகளில் ஏதேனும் இச்செடியின் இலையில் வந்துட்காருமாயின், அவ்விலை உடனே தன் மீசைகளுடன் மூடிக்கொண்டு ஈயை வெளி





யில் விடாது. இதற்குள்ளாக அகப்பட்ட ஈ இலையிலுள்ள வழுவழுத்த ஒருவகை ஜலத்தில் அமுக்கப்பட்டு இலையின் மத்திய பாகத்திற்குக் கொண்டுபோகப் படும். அவ்விடத்தில் வைத்தே ஈயை ஜீரணமாக்கிக் கொள்ளும். இச்செடிக்கு நமக்கமைக்கப்பட்டிருக்கும் நரம்புகளுக்குள்ள உணர்ச்சியைப்பார்க்கிலும் அதிக உணர்ச்சி அமைக்கப்பட்டிருக்கின்றது. ஒரு உரோம நுனியத்தனை மாம்சத்துண்டை அதன் இலையில் போடுவோமாயின் உடனே அவ்விலை மூடிக்கொள்ளும். பின்னும் இதிலுள்ள ஒருவிசேஷம் என்னவெனின், இவ்விலைகள் மாம்சம் தவிர வேறு எந்தப்பதார்த்தத்தையும் பக்ஷிப்பதில்லை. அதாவது, ஒரு காகிதத் துண்டை அவ்விலையின்மேல் போட்டால், அது அதைக் கவனிப்பதே யில்லை; இலைமூடுவதில்லை. மாம்சத்திற்கும் மாம்சமல்லாததற்கும் உள்ள வித்யாசத்தை அது நன்கறிகின்றதென்று விளங்குகிறது.

இங்ஙனம் இயற்கை அற்புதங்களை பற்றி விசாரிக்கப்புகின் அவை எண்ணிறந்தன. நாம் அறியவேண்டியவை எத்தனையோவுள.

வியாசம் நீண்டு விட்டதென்று இம்மட்டில் இப்போது நிறுத்துகிறேன். வேண்டுமானால், இனி ஒருசமயம் இவ்விஷயத்தைப்பற்றியே எழுதுகிறேன்.

S. சின்னம்மாள்.

ஓ ! கடவுளே !! நாங்கள் பிரார்த்தித்தாலும் பிரார்த்தியா விட்டாலும் நல்லதெல்லாம் எங்களுக்குத்தருவீராக. நாங்கள்வேண்டுமென்று பிரார்த்தனைகள் பலபுரிந்தாலும் தீயவற்றை விலக்குவீராக:—ப்ளேட்டோ.

* * *

சில திராக்ஷப்பழ ரசங்கள் தித்திப்பும் புளிப்புமாக இருப்பது போன்று ஒரு மனிதனே சாந்தனாகவும் முரடனாகவும் இருக்கக்கூடும்; தோற்றத்தில் மிக்க சாந்தமும் பக்ஷமுமுடையவனாக இருப்பவனே அவனோடு நெருங்குபவர்களால் சகிக்கக்கூடாதவனாகவும் துன்பப்படுத்துகிறவனாகவும் இருக்கலாம்.—ப்ளூட்டார்க்.

* * *

துக்கத்திற்குப் பாதங்கள் பல.—பாஸிடிப்பஸ்.

* * *

சிநேகிதர்களுடைய ஐஸ்வரியம் மாத்திரமல்ல ;அவர்களுடைய ஞானமும் முன்னறிவுங்கூடப் பொது உடைமைகளாகும்:—மெனான்றர்.

# பால்ய விவாகம்.

இந்துக்களுள் பெண்களுக்கு அவர்கள் பருவமடைவதற்கு முன் விவாகம் நடப்பது சகஜம். இத்தகைய பால்யவிவாகத்தால் பால்யவிதவைகளின் எண்ணிக்கை வருஷாவருஷம் அதிகரித்து வருகிறது. பால்ய விவாகம் கூடாதென்றும், பால்யவிவாகத்தால் விதவைகளாய்ப் போய்விடுபவர்கள் புனர்விவாகம் செய்து கொள்ளலாமென்றும், இப்படிச் செய்வது சாஸ்திர சம்மதமென்றும் ரூபித்து பிரசங்கிக்கப்பட்டு வருவதின் பயனாக நம் நாட்டில் அபூர்வமாய் மூலைக்கொரு பால்ய விதவா விவாகங்கள் நடை பெறுகின்றன. இப்படி ஒருதாரம் இழந்த லாலாஹரிதாஸுக்கும் 10 வயதுள்ள ஒரு பால்ய விதவைக்கும் விவாகம் நடந்தேறியதாகப் பத்திரிகை மூலமாய் அறிந்த அமெரிக்கா கண்டத்து யுனைடெட் ஸ்டேட்ஸைச் சேர்ந்த டாக்டர் J. M.. பீப்ள்ஸ் என்பவர் பால்ய விவாகத்தைக் கண்டனம் செய்து தம் மபிப்பிராயத்தை வெளியிட்டிருக்கிறார். அதை ஒருவாறு கீழ் வரைகிறேன்.

ஆ! என்ன கொடுமை! 10 வயதுள்ள குழந்தை 80 வயதுள்ள முதல்தாரமிழந்தவனைக் கல்யாணம் செய்து கொண்டாள்! இதென்ன! 10 வயதுப் பெண்ணுக்குக் கல்யாணம்! 11 வயதுக்குள் அப்பெண் ஓர் தாய்! குழந்தைகள் குழந்தைகளைப் பெறுவதா? வைத்தியர், மனோதத்வ சாஸ்திரிமுதலானவர்களுக்கு இவ்விஷயங்கள் அசம்பாவிதமானவை, மிக்க கொடூரமானவை, யென்று தோற்றும்.

கல்யாணம் செய்துகொண்ட மனிதனுக்கு புத்தியிருக்கிறதா? அவருக்கு சந்ததிவிர்த்தி, தேகதத்வ சாஸ்திரம், குடும்பவாழ்க்கை—இவைகளைப்பற்றிக்கொஞ்சமாவதுதெரியுமா? அவர்உண்மை காதலால் தூண்டப்பட்டா விவாகம் செய்து கொண்டது? அல்லது நரகத்துக்கு ஏதுவான சிற்றின்ப இச்சை மேற்கொண்டா?

இயற்கைக்கு விரோதமாகயாவரும் நடக்கக்கூடாது. அப்படி நடந்தால் அதற்கேற்ற தண்டனையை அனுபவித்தே தீரவேண்டும்; நிவர்த்தியில்லை. இயற்கையின் ஆக்கினை இதுதான்:— "எனக்குக் கீழ்ப்படிந்து நட, சுகமாய்வாழ். இல்லையேல் கஷ்டமனுபவித்து அற்பாயுசுள்ளவனாய்ப்போ".





விவாகம் மிக்க புனிதத்தன்மையானது. சுயநல மானதும் கேவலமானதுமான சிற்றின்பம் விவாக நோக்கமாக இருக்கக்கூடாது. நாகரீக முதிர்ச்சியுள்ளவர்களிலே பெரும்பான்மையோர் பருவத்துக்குமுன் விவாகம்செய்து கொள்கிறார்களே! புருஷர்களுக்குக்கல்யாணப்பருவம் 25 வயதிலிருந்து 28 வயதுவரை. ஸ்திரீகளுக்கு 23 வயதிலிருந்து 26 வயதுவரை. இவ்வயதுகளுக்குமுன் அவர்கள் கல்யாணத்துக்குத் தக்கவர்களல்லர்.

தேகக்கூறறிந்த வைத்தியர்கள் பருவத்துக்குமுன் விவாகம் செய்து கொள்வதே துன்பங்களுக்குக் காரணமாயிருக்கிறதென்று அபிப்பிராயப்படுகிறார்கள். விவாகத்தால் விளைந்திருக்கும் மனோவியாகூலங்களைப்பற்றி நமக்கு அதிகமாய்த் தெரியாமலிருக்கிறது. ஸ்திரீகளே புருஷர்களைப் பார்க்கிலும் துன்ப மனுபவிக்கிறவர்களா யிருக்கிறார்கள். சில இராக்ஷச கணவர்கள்கையில் சிக்கிப் படாதபாடு பட்டுத் துன்புறுகிறார்கள்.

உஷ்ணப் பிரதேசங்களிலுள்ள 10 வயதுக்குட்பட்ட குழந்தைகள் கெட்டவழிகள் பிடிபட்டுக் கெட்டழியாவண்ணம் பெற்றோர்களும் வைத்தியர்களும் அவர்களைப் பாதுகாக்கவேண்டும். பேதமையால் பாபகிருத்தியங்களைப் பலர் செய்கிறார்கள். பேதமையாலும், மிலேச்ச சிற்றின்ப ஆசையாலும் பால்யவிவாகங்கள் நடைபெறுகின்றன என்று கருதவேண்டி யிருக்கிறது. அந்தரங்கமான காதலின்றி அந்தஸ்து, செல்வம், தாழ்வான நோக்கம்-இவைகளால் தூண்டப்பட்டு நடை பெறும் விவாகம் சரியானதாகாது.

குஷ்டரோகம் முதலிய தொத்து வியாதியஸ்தர்கள் விவாகம் செய்துகொண்டு தங்கள் சந்ததிகள் வாழ்நாளைக்கஷ்டப்பட்டுக் கழிக்கச் செய்யக்கூடாது. அவர்கள் எக்காரணத்தாலும் விவாகம் செய்துகொள்ளக்கூடாது.

அநேகர் யாதொரு நோக்கமும் காரியமுமின்றி விவாகம் செய்து கொள்கிறார்கள். ஒரு ஸ்திரீயும் ஒரு புருஷனும் மனமொத்து விவாகம் செய்து கொண்டு வாழ்வதினும் சிறந்ததொன்றில்லை. அவர்களிருவரும் ஒருவருக்கொருவர் உயிரும் உடலுமாயிருந்து சந்ததி விர்த்தி செய்யவேண்டும்.

தற்காலத்தில் பிரசவங்கள் அதிகரித்துவருகின்றன. எண்ணிக்கையில் பிரயோஜனமேயில்லை. எண்ணிக்கையில் குறைந்தாலும்

மேன்மையுள்ளனவாயிருக்கவேண்டும். ஆபிரிக்காகண்டத்தில்வசிக்கும் மிலேச்ச ஜாதியார்களில் சிலர் தங்கள் குழந்தைகள் எவ்வளவுபெயர் என்று எண்ணிக்கூறவும் முடியாத அறிவிலிகளாயிருக்கிறார்கள். ஞானிகளுக்கும் தத்வசாஸ்திரிகளுக்கும் குழந்தைகள் அதிகமிருப்பதில்லை. இருக்கும் குழந்தைகள் மணிகளாயிருக்கும். இம்மாதிரிக் குழந்தைகள் எண்ணிக்கையில் அதிகரிக்கவேண்டும். மனிதர்கள் பகுத்தறிவுடையவர்களாகையால் அவர்கள் சரியாய் யோசிக்கவேண்டும். நியாயமான காரணம் கூறவேண்டும். சன்மார்க்கமாய் வாழவேண்டும். சரியானபடி விவாகம் செய்துகொள்ளவேண்டும். மனிதர்கள் தங்களை விட மேன்மையான சந்ததிகளை உண்டாக்குபவர்களாயிருக்கவேண்டும்.

ஒவ்வொரு விவாகமும் பருவத்தில் நடந்தேறவேண்டும். உண்மைக் காதல் சகிதமான விவாகப்பயனாகவே பகவான் கிருஷ்ணனும், புத்தரும், கிறிஸ்துவும் பிறந்தார்கள். மானிடர் ஒவ்வொருவரின் நோக்கமும் பகவானைப் பெறும் நோக்கமாயிருக்கவேண்டும்.

P. காமாக்ஷி அம்மாள்.

## காப்பி கெட்டதா?

பிரான்சு தேசத்து வித்வானும் வைத்தியருமான டாக்டர் வாலன்டைன் நல்பலே என்பவர் காப்பியை நல்லமாதிரியாகத் தயார்செய்து நிதானமாக உபயோகப்படுத்திவந்தால் தேகாரோக்கியத்துக்கு அநுகூலத்தைத்தரும் என்று அபிப்பிராயப் படுகிறார். அவர் சொல்லுகிறார்:—

‘‘காப்பியானது நல்ல மாதிரியில் தயார்செய்யப்பட்டு, நிதானமாகக் குடிக்கப்பட்டு வந்தால், அதுபோல நல்ல பானசாதனம் கிடைப்பதரிது. அது ஜீரணசக்தியை அதிகப்படுத்துகின்றது. மூளைக்கு நல்ல தெளிவையும் கற்பனாசக்தியையும் கொடுப்பதே அதன் முக்கியகுணம். காப்பியைக் குடித்தால் சில சமயங்களில் ஞாபகசக்தி மிகவும் ஆச்சரியப்படத்தக்க விதத்தில் சுறுசுறுப்பாக இருப்பதையும், வார்த்தைகளும் எண்ணங்களும் மிகவும் சுலபமாகவும் அழகாகவும் ஓடி வருவதையும் பார்க்கலாம். காப்பி





க்ஷீணத்தை சாந்திசெய்வதால் சரீரமும் சுறுசுறுப்பாக இருப்பதற்கு ஹேதுவாகின்றது. உஷ்ணதேசங்களில்வசிக்கும்ஐரோப்பியர்கள் உற்சாகத்தைக் கொடுப்பதற்காகவே காப்பியைக் குடித்து வருகிறார்கள். தாகத்தைத் தணிப்பதற்கும்உற்சாகத்தைக் கொடுப்பதற்கும் காப்பியைப்போல வேறு சாதனமில்லையென்று அவர்கள் சொல்லுகிறார்கள்.

“சாப்பாட்டுக்குப்பிறகு காப்பி குடித்தால் அது ஜீரணத்திற்கு அநுகுணமாக இருக்கின்றது. அதன் சக்தியினால் ஜீரணம் பூர்த்தியாகவும் சீக்கிரமும் ஆகிறது. இந்நேர்த்தியானபானம்நல்ல சூட்டுடன் சாப்பிட்டால் இரைப்பைக்கு மிக்க உபகாரம்செய்வதாகின்றது. அது இரைப்பைக்கு இளஞ்சூட்டைக் கொடுத்து பக்கத்திலிருக்கும் சதைகளை உயிர்ப்பித்து, இரக்த் தோட்டத்தை அதிகப்படுத்தி, ஜீரணத்திற்கு ஆவசியகமான நீர்களை அதிகமாக வடியச் செய்யும்.”

தவிரவும், சாலன்ஸ் என்னுமிடத்தில் கூடாரத்திலிருந்த பட்டாளத்து சோல்ஜர்களுடையவும், இட்டலியில் உயுத்தகாலத்து போர் வீரர்களுடையவும் தேக சௌக்கியத்திற்குக் காரணமாக இருந்தது காப்பியேயாம் என்பதாக சைனிய ஸர்ஜன் H. லேரே என்பவர் 1857ம் ௵த்தில் சொல்லியிருப்பதாக ‘ரிவியூ’ என்னும் பத்திரிகை மூலமாகவும் தெரியவருகிறது.

எலிசபெத் டேரே என்னும் மாது 1827ம் ௵த்தில் பிரான்சு கோர்ட்டு முன்பாகக் கொண்டு போகப்பட்ட பொழுது 114 வயதாக இருந்தார். அம்மாதுக்கு முக்கிய போஷிப்பு காப்பியாகவே இருந்தது. ஒருதினத்துக்கு, சிறுகோப்பையால் 40 கோப்பைகாப்பி அவர் சாப்பிட்டு வந்தார். இடைவிடாது காப்பி குடித்துவந்த பாண்டநெல்லே என்பவர் 100௵த்திலதிகம் ஜீவித்திருந்தார். காப்பியானது கொடிய விஷமென்று ஜனங்கள் அவரோடு சொன்னபொழுது அவர் “அது விஷமாக இருந்தால் மிகமிகக் குறைந்த சக்தியுள்ள விஷமென்பதற்கு நானே சாக்ஷி” என்று பதில் சொன்னார். வால்டேர் என்னும் பெரியவர் அபரிமிதமாகக் காப்பி குடித்துவந்தார். மனத்திற்கும் தேகத்திற்கும் இளமைக்குரிய உற்சாகத்தை அது கொடுத்துவந்ததாக அவர் சொல்லியிருக்கிறார். அவர் 80 வயதுவரை ஜீவித்திருந்தார். நெப்போலி

யன் ! ஒவ்வொரு தினமும் 20 கோப்பைக்குமேல் காப்பி குடித்துவந்தார். அதனால் அவருக்கு ஒரு கேடும் உண்டானதாக இல்லை.

இது நிற்க என் அநுபவத்திலும் காப்பி மிகவும் நல்ல பான சாதனமாகவே தோன்றுகின்றது. எனது முக்கிய ஆகாரம் காப்பியேயாம். டாக்டர் வாலன்டைன் நல்பஸே அதைப்பற்றி மேலே சொல்லியவெல்லாம் சரியென்பதே எனது அபிப்பிராயமும்.

ஆனால் காப்பியை உபயோகப்படுத்துவதில் கொஞ்சம் ஜாக்கிரதையாக இருக்கவேண்டுமென்றும், ஹிருதயரோகிகள் காப்பி குடித்தல் தகாதென்றும், குழந்தைகள் காப்பி குடிக்கவேகூடாது அதவா ஒருவேளை குடித்தாலும் காப்பிப்பொடிமிகக் குறைவாகப் போடப்பட்டிருக்கவேண்டுமென்றும், அதிகமாகக் குடித்தால் ஹிருதயத்திற்குத் தொந்தரவுண்டாகுமென்றும் டாக்டர் கார் என்பவர் கூறுகிறார்.

K. மீனாக்ஷியம்மாள்.

(அபேதைக்யானந்த சமாஜத்தலைவர்.)

---

# உத்தம மனைவி.

---

இதிஹாசங்களிலும் புராணங்களிலும் சீதா, திரௌபதை சாவித்திரி முதலிய உத்தம மனைவிகளைப்பற்றி விரிவாய்க் கூறப்பட்டிருப்பதை எனது சகோதரிகள் படித்தோ கேள்விப்பட்டோ இருப்பார்களென நம்புகிறேன். ஒவ்வொரு ஸ்திரீயும் அவ்வுத்தமிகள் வரிசையில் ஒருவராகவேண்டுமென்பதைத் தன் வாழ்க்கையின் இலக்ஷியமாகக்கொள்ளவேண்டும். உத்தம மனைவியாக விரும்பும் ஒருவள் தன் கணவனிடத்திலும் அவர் பெற்றோர் உற்றோரிடத்திலும் மிக்க மரியாதையுள்ளவளாயிருக்கவேண்டும். நயமொழியன்றிக் கடுமொழி கருத்திலும் அவள் கொள்ளக்கூடாது. கிரக கிருத்தியங்களைச் சரிவரப் பார்க்கவேண்டும். வீடு தேடிவருபவர்களுக்கு இனிமையாய் விருந்தோம்ப வேண்டும். இத்தகைய ஒரு ஸ்திரீயைப்பெற்றோர்கள் என்னதவம் செய்தார்களோ என்றும், இவ்வுத்தமியை வாழ்க்கைத்துணையாகக்கொண்ட





வர்பாக்கியம் பொறாமைப்படத்தக்கதென்றும்உலகத்தார்கூறும்படி ஒரு ஸ்திரீ நடந்துகொள்வாளாகில் அவள் அடைய வேண்டிய பெரும்பேறு இம்மையிலேயே கிடைத்துவிட்டது. ஒருஸ்திரீ புருஷனுக்கு எதுவிருப்போ அதை விரும்பவேண்டும். எது வெறுப்போ அதைவெறுக்கவேண்டும். தன்னால் புருஷனுக்கு சுகத்துக்கும் மனச்சாந்திக்கும் இடையூறு எவ்விதத்திலும் உண்டாக்கக்கூடாது. கொண்டான் குறிப்பறிவாளன்றோ பெண்டாட்டி என்னப்படுவாள்? எவ்வழிகளிலும் கணவனின் வாழ்க்கையை இனிதாகச் செல்லச் செய்யும் ஸ்திரீ தன் வாழ்க்கையையும் அவ்வாறேசெய்து கொள்கிறாள். கணவனுக்குக் கஷ்டகாலங்களிலும் விசனகாலங்களிலும் தகுந்தயுத்திபுத்திகளை போதித்துத் தேற்றி உற்சாகப்படுத்தும் மனைவியைக்காட்டிலும் ஒருவன் விரும்பத்தக்கதெது? இப்படி ஒழுகும் ஒரு ஸ்திரீ கணவன் எங்கிருந்தாலும் எச்சமயத்திலும் அவன் மனதில் குடிகொண்டிருப்பாள். அவளைப் பிரிந்திருக்கும் ஒவ்வொரு கணமும் அவனுக்கு ஒரு யுகமாகத் தோன்றும். இவ்வாறுதான் நம் பூர்வீக ஸ்திரீகள் நடந்து, ஸ்திரீ ரத்னங்களாய், இறந்து பல ஆயிரவருஷங்களாயினும் இன்றும் அழியாப் புகழுடனும் பேருடனும் விளங்குகிறார்கள். நாம் நடந்தொழுகுவதற்கு அவர்கள் வழிகாட்டிகளாகவுமிருக்கிறார்கள். நாமெல்லாரும் இவர்களின் வழிகளைப் பின்பற்றி வாழ்க்கையாகிய கடலைக்கடக்கக் கடவுள் கடாக்ஷம் செய்வாராக.

A. நாஞ்சாரம்மா.

---

அடிக்கடி மாறும் மனமானது சிநேகிதர்களால் விஸ்வாஸம் வைக்க யோக்கியதையில்லாத ஒரு ஹீன உடைமையாகவிருக்கின்றது.—யூரிப்பைடிஸ்.

* * *

உன்னைப்பற்றி உலகம் என்ன நினைக்கிறது, அல்லது என்ன சொல்கிறது, என்று ஏன்கவலைப்படுகிறாய்? ஏனென்றால் உலகமானது சரியாக நிதானிக்கும் நியாயாதிபதி அல்ல; அது எப்பொழுதும் அப்படித்தானிருக்கும். உன் மனச்சாட்சியே உலகத்தைப்பார்க்கிலும் பெரியதும் உண்மையுள்ளதும் சரியானதுமான நியாயாதிபதியாகும்.—E. W. மெக்கவென்.

* * *

சுத்தமான மனச்சாட்சி நிந்தையென்னும் ஆயுதங்களால் தாக்கப்படுவதற்கு அரியதாகும்.—E. W. மெக்கவென்.

# இன்றே செய்தல்.

---

நாம் பல காரியங்களை முடிக்கவேண்டுமென்று ஆசைகொண்டு அனைத்தையும் ஆரம்பித்து விடுகிறோம். முடிவைப்பார்த்தால் நாம் செய்தது சொற்பமாயிருப்பதைக்கண்டு மனவருத்தமடைகிறோம். இதை ஒவ்வொருவரும் அனுபவத்திலறியலாம். நம்கையிலிருப்பது நிகழ்காலம். இக்காலத்தைஎவ்வளவு உபயோகமுள்ளதாய்க் கழிக்கமுடியுமோ அவ்வளவு உபயோகமுள்ளதாய்க் கழிக்கவேண்டும். நாம் ஒரு காரியத்தை நாளைச் செய்யலாமென்று மனத்தைத்தேற்றிக்கொண்டு இன்று செய்ய வேண்டியதை முற்றும் துறந்துவிடுகிறோம். ஆகையால், நாம் செய்ய வேண்டிய காரியத்தை நாம் இப்பொழுதே செய்வோமாக. காரியம் எத்தகைத்தாயிருந்தாலும் சரி. அதை நம் சக்திக்கு இயன்றவரை சரியாய்ச்செய்வோமாக. யாரொருவர் முன் அனுபவித்த சுக துக்கத்தை நினைந்து வாழ்கிறாரோ அவர் நிகழ்காலத்துக்கு உரியரல்லர். மேலும் இனி வரப்போவதை நினைந்து உற்சாகமோ வருத்தமோ கொள்கிறவரும் நிகழ்காலத்துக்குரியவரல்லர்.

இன்று நாம் செய்யவேண்டுவதை இன்றேசெய்யவேண்டும். இதைச் செய்வதில் நம் சக்தி, மனது எல்லாவற்றையும் செலுத்த வேண்டும். இப்படிச்செய்தால்தான் காரியத்தில் ஜயமுண்டாகும். இறந்தகாலத்தைப்பற்றிச் சிந்திப்பதில் ஒரு பயனுமில்லை. வருங்காலத்தைச் சிந்திப்பதிலும் இப்படியே. நிகழ்காலமே நம் காலம். இக்காலத்தில்தான் நாம்வாழவேண்டும், உழைக்கவேண்டும். நம் சக்திக்கியன்றதைச்செய்யுங்காலமும் இஃதே. ஆகையால் இறந்த காலத்தையாவது எதிர்காலத்தையாவது நினைந்து செய்யும் காரியத்தில் நம் சிரத்தையைக் குறைவு செய்யாமலிருப்போமாக. இவ்விதமாக அமெரிக்காவிலுள்ள மிஸ்ஸஸ் எஸ்டெல்லா புலிங்கர் என்னும்மாது "நியு ரிபார்மர்" என்னும் மாதாந்த ஆங்கில பத்திரிகையில் எழுதிகிறார்.

மிஸ். R. நனுகன்னதல்லி அம்மாள்



# பிரிய நாயகன்.

---

'பிரிய நாயகன்' என்பவன் "ஸ்திரீயின் சந்தோஷகரமான நல்ல சிநேகிதன்" என்று ஒருவன் சொல்லக் கேட்டேன். உடன் 'இதைப்போல பர்த்தா இலக்கணத்தை விளக்கக்கூடிய வாக்கியம் வேறின்று' என எனக்குத்தோன்றிற்று. முழுமனதோடுகூடிய பர்த்தா தன் மனைவிக்கு சந்தோஷகரமான ஒரு நல்ல சிநேகிதன் ஆவானே தவிர, எப்பொழுதும் குறைகூறுவதும் கோபம் கொள்ளுவதும் சந்தேகிப்பதுமே தொழிலாகவுடைய ஒருவனாகான். தங்கள் மனைவிகளுக்குத் தாங்கள் மிகவும் நல்ல சிநேகிதர்களே என்ற எண்ணமுடையவர்களாகப் புருஷர்கள் இருப்பார்களானால் எத்தனையோ கலியாணச் சடங்குகள்முன்னோர்களால் உத்தேசிக்கப்பெற்றனபோல் மங்களகரமான சடங்குகளாகவே முடிந்திருக்கும், முடியும்.

புருஷர் ஸ்திரீகளுக்குள் உண்டாகும் மனஸ்தாபங்களுக்கு முக்கியகாரணம் என்ன? தனித்த சுவதந்தரம் பாராட்டக்கருதும் இருவர் சுபாவத்தாலுமன்றோ? ஒருத்தியை ஒருத்தன் மணந்தால், அதனால் அவளை அவன் அடிமையாகக்கருதலாமோ? அல்லது அவள் அவனை அடிமையாகக்கருதலாமா? இரண்டுமின்று. தாம் விரும்பும் சுவதந்தரம் எல்லாம் மற்றவருக்கும் வேண்டியதன்றோ? நம் நாட்டில் பெரும்பாலும் புருஷர்கள் ஸ்திரீகளை அடிமைகளாகவே பாவிக்கிறார்கள். "பழகப்பழகப்பாலும் புளிக்கும்" என்பது போல புருஷர்கள் ஸ்திரீகள் செய்யும் கிரக காரியங்கள் ஒவ்வொன்றிலும்தலையிட்டுக்கொண்டு அவர்கள்வெறுப்பை சம்பாதித்துக் கொள்கிறார்கள். தங்களுக்கு எடுத்துக் கொள்ளும் சுவதந்தரங்களில் பாதியேனும் புருஷர்கள் ஸ்திரீகளுக்குக் கொடுப்பார்களானால், உயுத்தகளமாக இப்போது காணப்படும் ஒவ்வொரு கிரகமும் மன்மதனும் ரதியும் வசிக்கும் இல்லென விளங்காதா? ஸ்திரீகள் எவ்வளவு தூரம் தங்கள் சந்தோஷத்திற்குரிய காரியங்களையும், ஸ்நேகிதர்களையும், மனோபீஷ்டங்களையும் விலக்கி வைத்து, புருஷர்களுடன் ஒற்றுவாழ வேண்டியிருக்கின்றது! புருஷர்களே! நீங்கள் சற்றுஸ்திரீகளின் நல்லசிநேகிதர்களாக மாத்[illegible]ம் இருக்கப் பாருங்கள். உங்கள் வீடுகள் மோக்ஷவீடுகளா

மாறும். நீங்கள் உங்களுக்குப் பிரியமான நியாய வழிகளில் வாழ விரும்புவது போல, ஸ்திரீகளையும் அவர்களுக்குப் பிரியமான நியாய வழிகளில் வாழ இடங் கொடுங்கள். அப்போது எவ்வளவு மனோகரமான தோழர்களாக உங்கள் ஸ்திரீகள் இருக்கிறார்களென்பதைப் பார்ப்பீர்கள். அப்பொழுது, வேலைசெய்து களைத்திருக்கும் நீங்கள் 'எப்பொழுது வீட்டுக்குப்போய் நம் மனைவிகளின் முகாரவிந்தங்களைப் பார்ப்போம்' என்று உங்கள் மனம் பதை பதைக்கும். உங்கள் நாயகிகளின் முகங்களும் ஆதித்தனைக் கண்ட செந்தாமரைபோல் விகசிக்கும். ஹா! எல்லாம் அன்பின் மாட்டேயுள. "தன்னைப் போல் பிறரையும் நேசிக்கக் கடவன்." என்னும் வாக்கியம் தம் சுகத்தின் பொருட்டேனும் தம் வாழ்க்கைத் துணைவரோடாவது நாயகர் நாயகிகள் ஒப்பற்பாலது.

மிஸ். R. ஜயலக்ஷ்மி அம்மாள்.

---

## சந்தாதார்களுக்கு அறிக்கை.

---

இப்பத்திரிகை முதல் சஞ்சிகை பெற்ற பலர் சந்தாத்தொகையை இதுவரை அனுப்பக்காணாததனால் அவர்களெல்லாரும் வி. பி. யில் அனுப்பக்கோருகிறார்களென நம்புகிறோம். வருஷ சந்தாத்தொகையாகிய ரூ. 2-8; வி.பி. கமிஷன் 1 அணா ஆக ரூ.2-9க்கு இச்சஞ்சிகையைப்பலருக்கு வி. பி. யில் அனுப்பியிருக்கிறோம். மற்றவர்கள் இப்பத்திரிகையைப் பெற்றவுடனேனும் சந்தாவை யனுப்பித்தரவேண்டிக் கொள்கிறோம். இவ்வறிக்கையில் நீலப்பென்ஸிலால் மார்க் செய்துள்ள சஞ்சிகைவரப் பெற்ற சந்தாதார்களுக்கெல்லாம் அடுத்த சஞ்சிகை வி. பி. யில் அனுப்பப்படுமென்பது கவனிக்கத்தக்கது. அவர்களெல்லாரும் வி. பி. யைத் தாமதமின்றிப் பெற்றுக் கொள்வார்களென்று நம்புகிறோம்.—ப.ர்.

---

## சமாசாரங்களும் குறிப்புகளும்.

---

ட்ரிஸ்டான் டா குன்ஹ என்னும் தீவில் 14 புருஷர்களும், 20 ஸ்திரீகளும் 43 குழந்தைகளும் மாத்திரமே குடியிருக்கிறார்கள். இத்தீவைக் கப்பல்களும் அடிப்பதில்லை. ஆகையால், இத்தீவுவாசிகள் தாங்கள் செய்துள்ள தட்டுக்களில் 10 மயில் முதல் 20 மயில் வரைத் தூரங்கள் போய்க் கப்பல்களை யனுபித் தங்கள் சாமான்களை விற்றுவருகிறார்கள்.





இங்கிலாந்து அரசரின் சிம்மாசனம் வெஸ்ட்மினிஸ்டர் மடாலயத்தில் வைக்கப்பெற்றிருக்கிறது. இச்சிம்மாசனத்தில் உட்காரவேண்டும் என்ற எண்ணத்துடன் ஒரு வெஸ்ட்மினிஸ்டர் ஸ்கூல் பையன் 1800 வருஷத்தில் ஓர்நாளிரவு மடாலயத்தில் ஒளிந்திருந்து, இரவெல்லாம் சிம்மாசனத்தில் வீற்றிருந்தபடியே உறங்கினான். மேலும் அவன் சிம்மாசனத்தில் "P ஆபட் இந்த சிம்மாசனத்தில் தூங்கினான். 1800" என்று எழுதிவைத்தானும். இம்மாதிரியே வேறு இரண்டு பள்ளிப்பிள்ளைகள் மடாலயத்திலொளித்திருந்ததாகவும், இருவரும் சிம்மாசனத்தில் உட்கார்ந்திருந்ததாகவும், உண்மையை வெளியிட்டார்களாம்.

* * *

மைசூரில் நாளது செப்டம்பர் மாதம் 25 ந்தேதியன்று பொருட்காட்சி ஒன்று ஆரம்பமாய் அக்டோபர் 15 ந் தேதிவரை நடைபெறப் போகிறது. இப்பொருட்காட்சியை நடத்த கமிட்டி மெம்பர்களாக 34 கனவான்களும் 6 ஸ்திரீகளும் நியமிக்கப் பெற்றிருக்கிறார்கள். இந்த 6 ஸ்திரீகளில் இருவர் ஹிந்து ஸ்திரீகள் என்று அறிகிறோம்.

* * *

பம்பாய் இராஜதானியைச் சேர்ந்த பார்சி மாதாகிய மிஸ். தாசிபாய் ரஸ்டம் ஜி கோவாஸ்ஜி பெடேல் பம்பாய் கிராண்ட் மெடிகல் காலேஜில் வாசித்து, L. M. S. பட்டம் பெற்று, உயர்ந்த வைத்தியப் பரீக்ஷைகளில் தேர்ச்சிபெற இங்கிலாந்துக்குச் சென்று, சென்ற வருஷம் மே மீ 'ராயல் காலேஜ் ஆப் சர்ஜன்ஸ்' என்னும் கலாசாலையில் சேர்ந்தார். இக்கலாசாலையில் சேர்த்துக் கொள்ளப்பட்ட மாதர்களில் மிஸ்பெடேல் முதன்மையானவர். இம்மாது லண்டன் M. B. பரீக்ஷையிலும் M. R. C. S., M. R. C. P. முதலிய பரீக்ஷைகளில் தேறி பட்டம் பெற்றிருக்கிறாரென்று அறிந்து சந்தோஷப்படுகிறோம்.

* * *

அலக்சாந்த்ரா ராணியார் வின்ட்சர் மடாலயத்திலிருந்து லண்டனுக்கு மோடார் வண்டியில் வந்து கொண்டிருக்கையில் சிஸ்விக் ஹை ரோட்டில் மோடார் வண்டியால் மோதப்பட்டு, காயங்கள் கொண்டு மூர்ச்சையான ஒரு பெண்ணுக்கு சிகிச்சை செய்து கொண்டிருந்ததைக் கண்ணுற்று, தம் வண்டியை நிறுத்தி சமாசாரத்தை விசாரித்தாராம். காயம் சொல்பமானது என்று அறிந்து மன நிம்மதி பெற்றுச் சென்றார். ராணியாரின் அனுதாபத்தைக் கேள்விப்பட்ட அந்தப்பெண் தன் பாக்கியமெனக் கருதினளாம்.

* * *

ஒரு ஜந்து 113 வருஷமும் மற்றொரு ஜந்து 145 வருஷமும் ஜீவித்திருந்ததாக ஜூயிஷ் கிரானிக்கிள் பத்திரிகை எழுதுகிறது. இரண்டாவது ஜந்துவுக்கிருந்த பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், கொள்ளுப் பேரப்பிள்ளைகள் முதலியவர்கள் 145 பேர்களாம்.

உலகத்திலெல்லா பாகங்களிலும் ஒரு வருஷத்துக்குள் பிரசுரிக்கப்படும் புஸ்தகங்களின் தொகை 128, 530 என்று ஒரு பிராஞ்சு தேசத்துக் கனவான் ஏகதேசக்கணக்குப்போட்டிருக்கிறார்.

• • •

கல்கத்தாவிலுள்ள "பால்ய விவாக நிவர்த்தி சங்கத்தார்" றால் ஏற்படுத்தப்பட்டிருக்கும் கணக்கின்படி இந்தியாவிலுள்ள பால்யவிதவைகளின் தொகை அடியில் வருமாறு:—

| | |
|---|---|
| ஒரு வயதுக் குழந்தைகள் | 859 |
| 2-வயது முதல் 3-வயது வரையில் | 1,886 |
| 3-வயது முதல் 4-வயது வரையில் | 3,732 |
| 4-வயது முதல் 5-வயது வரையில் | 8,180 |
| 5-வயது முதல் 10-வயது வரையில் | 78,407 |
| 10-வயது முதல் 15-வயது வரையில் | 2, 27, 367 |
| ஆக மொத்தம் | 3,20,431. |

• • •

சக்கரவர்த்தியாகிய ஜார்ஜ் அவர்கள் இந்தியாவிற்கு வருவதற் கறிகுறியாக 10-ரூபாய் தங்கநாணயம் வெளியிடப்படுமென்று தெரியவருகிறது.

• • •

சென்ற மாதம் 23-ந் தேதி பகல் 12 மணிக்கு ஹிர்துப்பூரில் ஒரு வெள்ளாடு முன்புறத்தில் ஒரு தலையும் இரண்டு முகமும், பின்புறத்தில் நான்கு கண்களும் காதுகளுமுடைய ஒரு குட்டி போட்டது. இந்த இரட்டைக்குட்டி போலிருக்கின்றது. இரண்டு குட்டிகளின் கழுத்தும் மார்பும் ஒன்று சேர்ந்து இரண்டு மார்பிலும் முன்கால்களிரண்டிருக்கின்றன. வயிறும் இடுப்பும் இரண்டு பின்கால்களாலும் வாலினாலும் பிரிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் நாபிக்கொடி யொன்றுதானிருக்கின்றது. இக்குட்டிகள் உயிருடன் பிறந்து சில நிமிஷத்திலிறந்துபோயின. இரண்டும் பெண் குட்டிகளே.

• • •

கீர்த்திபெற்ற ஒருபத்திராதிபர் இங்கிலாந்தில் ஸ்திரீ சுதந்தர வாதிகளில் ஒருவரிடம் சம்பாஷித்துக்கொண்டிருக்கையில், "ஸ்திரீகள் புருஷர்களுக்கு சமானமானவர்களாகார்கள். இங்கிலாந்துக்கும் ஜர்மனிக்கும் சண்டை கிளம்பிவிட்டது என்று வைத்துக்கொள்வோம். அம்மா! நீர் அப்பொழுது என்ன செய்வீர்?" என்று கேட்டார். அதற்கு அந்த ஸ்திரீ, "நீர் என்ன செய்வீர், அதைநானும் செய்வேன். பொது ஜனங்களை யுத்தத்துக்குச் சென்று போர்புரியும்படி மேஜையண்டை உட்கார்ந்து உம்மைப்போல் பத்திரிகைகளில் எழுதிப்பிரசுரிப்பேன்." என்று பதிலளிக்க, பத்திராதிபர் தலைகுனிந்தார்.



சக்கரவர்த்தி ஜார்ஜ் V. சக்கரவர்த்தினி மேரி.

திருவாங்கூரில் பிராம்மணரில் முதன் முதலாக மெட்ரிகுலேஷன் பரீட்சையிற் றேறிய ஸ்ரீமதி W. அபயம்மாள் மைசூர் மஹாராணி பெண்கலாசாலையில் எப்-ஏ. பரீட்சைக்குப் படிக்குமாறு ஷை சமஸ்தானத்தார் மாதமொன்றிற்கு ரூபாய் 30-ஸ்காலர்ஷிப் கொடுத்திருக்கின்றனர்.

* * *

காலஞ் சென்ற எட்வர்ட் சக்கரவர்த்தியவர்களின் குடும்பச் செலவிற்காக வருஷமொன்றுக்கு 98,28,500 ரூபாய் பார்லிமெண்டார் கொடுத்து வந்தார்கள். இப்போது ஜ்யார்ஜ் சக்கரவர்த்தியவர்களுக்கு 95, 10, 000 ரூபாய் கொடுக்கிறார்கள். இதில் 10, 50, 090 ரூபாய் ஜார்ஜ் சக்கரவர்த்தியவர்களின் தாயாராகிய அலெக்ஸாண்டிராவுக்குக் கொடுத்துவிட வேண்டுமாம்.

* * *

ஆங்கிலக் குடும்பத்தில் ஆயாளாக விருக்கும் மெலினி என்னும் பிரஞ்சுச் சிறுமி ஒருநாட்காலையில் தன் எஜமானியின் பெண்ணோடு உலாவுவதற்காக ஹைட்பார்க்குக்குப் போயிருந்தாள். அந்தப் பார்க்கில் அன்று சக்கரவர்த்தி ஜார்ஜ் V குதிரைச்சவாரி செய்யப்போவதாகக் கேள்விப்பட்டு, அவரைப் பார்க்கமிக்க ஆசையாயிருந்தாள். சற்று நேரத்தில் ஜார்ஜ் சக்கரவர்த்தியும், மேரி சக்கரவர்த்தினியும், இராஜகுடும்பத்துக்குழந்தைகளுள் இரண்டும் மற்றப்பரிவாரங்களும் குதிரைமேல் விஜயம் செய்தார்கள். சக்கரவர்த்தியைக் கண்டதும் அப்பிரஞ்சுச்சிறுமி பிரஞ்சு பாஷையில் "அரசன் நீடு வாழ்க. வாழ்க" என உரக்கக்கூவினாள். அது கேட்ட சக்கரவர்த்தி குதிரையை நிறுத்தித் திரும்பிப் பார்த்து, "யாரோ நேர்த்தியான பிரஞ்சு பாஷையில் என்னை வாழ்த்தினாரே. அவருக்கு வந்தனம் சொல்வதற்காக நாங்கள்நிற்கின்றோம்," என்று சொன்னார். வெட்கத்தினால் மெலினியின்முகம் மிகச் சிவக்க, இராஜனைக் கண்டசந்தோஷத்தால் வாழ்த்தி விட்டதாகவும், வாழ்த்தினது தான் தானென்றும்அச்சிறுமி தன் வாய்க்குள் முணுமுணுத்தாள். அதுகேட்ட சக்கரவர்த்தி மிக சந்தோஷத்துடன் "இதுவரை இவ்விதமாகப்பிரஞ்சுபாஷையில் நான்மரியாதை செய்யப்பட்டதேயில்லை. இது தான் முதல் தடவல்' என்று மறுமொழி கூறினாள். சக்கரவர்த்தினியும் அச்சிறுமியுடன் சற்று சம்பாஷணை செய்தார். அச்சம்பாஷணையில் "உனக்கு இங்கிலாந்து தேசம் மனோகரமாக இருக்கிறதா" என்று சக்கரவர்த்தினி அச்சிறுமியைக் கேட்டதற்கு, அச்சிறுமி எப்போதும் மழைபெய்கிறதாக இல்லாமலிருந்தால்எனக்கு சந்தோஷமாக இருக்கும்," என்று சொல்ல, சக்கரவர்த்திக்குப் புன்சிரிப்பு உண்டாகி விட்டது. இவ்விதம் பலகேள்விகள் கேட்டபிறகு, சக்கரவாத்தி சக்கரவர்த்தினி முதலாயினோர் குதிரைமேல் ஏறிச்சென்றனர். கொஞ்சதூரம் சென்றபிறகு, அவர்களெல்லாரும் மெலினியைத்திரும்பிப் பார்த்துப் புன்சிரிப்புடன் சென்றார்கள். இது பொய்க்கதை யல்ல. வாஸ்தவமாக நடந்ததெனத் தெரியவருகின்றது.

அமெரிக்கா கண்டத்திலுள்ள அன்னிவெல் கென்ஸஸ் என்னுமிடத்தில் "ஸ்திரீ இராஜ்யம்" ஸ்தாபிக்கப்பெற்றிருக்கிறது. போலீஸ் சைந்நியத்துக்கு அதிபதியாயிருப்பவரும் ஸ்திரீயே. நியாயாதிபதியாயிருப்பவரும் ஸ்திரீயே. மேயர்ஸ்தானம் வகிப்பவரும் ஸ்திரீயே.

* * *

எக்காடெரி நொஸ்லாவ் என்னுமிடத்தில் ஒருவனுடைய நீண்ட நித்திரையை வைத்தியர்கள் பரிசோதித்து வருகிறார்கள். 1908ம் ௵ உண்டானதும், ஒரு கார்டு கொலை யுண்டதும், மற்றொருவன் காயப்படுத்தப்பட்டதுமான ஒரு ரெயில்வே கலகத்தில் ஆயுதபாணியாக நின்றெதிர்த்தவருள் ஒருவனே 49 தினங்களாக நித்திரை செய்பவன். மார்ச்சு மாதம் 19௳ இவ்வாலிபன் ஒருமயக்கமான நித்திரையில் விழுந்தான். கண்களும் வாயும் மூடின. அவன் எழும்படி செய்த பிரயத்தனங்கள் யாவும் விருதாவாயின. இவ்விதம் 14 தினங்கள் யாதொருஆகாரமும் பானமுமின்றிக்கிடந்து. 15ம் நாள் எழுந்தவன் ஒரு பிரார்த்தனை மாத்திரம் தேவனை நோக்கிச் செய்து விட்டுத் திரும்பவும் படுத்துக் கொண்டான். ஜெயில் உத்தியோகஸ்தர்கள் இவன் பாசாங்கு செய்வதாகவே கருதினார்கள். பின் அவனை வண்டியில் கொண்டுபோய் நியாயஸ்தலத்தில் வைத்து, வைத்திய நிபுணர்களைக் கொண்டு பரிசோதிக்கச் செய்தார்கள். அப்பொழுது தான் அவன் செய்வது பாசாங்கல்ல என்றறிந்தார்கள். பின், அவனைத்திரும்பவும் ஜெயிலுக்குக் கொண்டுபோய் எப்பிரல் மாதம் 14௳ வரை வைத்திருந்தார்கள். அப்பவும் யாதொரு ஆகாரமும் பானமும் உட்செல்லவில்லை. கடைசியாக செம்ஸ்ட்வொ ஆஸ்பத்திரிக்கு அவன் கொண்டு போகப்பட்டான். அங்கு அவன் அறியாமலே ஆகாரத்தை மற்றவர்கள் சில உபாயத்தால் உட்செலுத்த, வாடியிருந்த அவன் தோற்றம் மாறிற்று. அவன் சரீரத்தின் கீழ்ப்பாகங்களில் உணர்ச்சியில்லை. அவனுக்கு பையப்பைய உணர்ச்சியுண்டாகி வருகிறதென்றும், நகரவும் பேசவும் இயலவில்லையாயினும் காதுநன்றாகக் கேட்கிறதென்றும் டாக்டர்கள் அபிப்பிராயப்படுகிறார்கள். அவன் காதுகள் மாத்திரம் இந்நாற்பத்தொன்பது நாட்களும் வேலை செய்துவந்தன என்று ஒரு டாக்டர் அபிப்பிராயப்படுகிறார்.

* * *

## பத்திரிகை வரவு.

விவேகபோதினி:—இஃது மைலாப்பூர் ஜெனரல் சப்ளைஸ் கம்பெனியாரால் பிரசுரிக்கப்பெற்றுவரும் ஒருதமிழ் மாதாந்த சஞ்சிகை. இதன் வருஷசந்தா ரூபாய் 3.

இப்பத்திரிகையின் ஜூலை ஆகஸ்டு மாத சஞ்சிகைகள் எமது பார்வைக்குவரப்பெற்றோம். இதில் பல அரிய விஷயங்கள் தக்க பண்டிதர்களால எழுதப்பட்டிருக்கின்றன. இப்பத்திரிகையில் ஸ்திரீகளுக்காகவும் சில்லக்கங்கள் விடப்பட்டிருப்பதைப் பற்றி சந்தோஷிக்கிறோம்.



சகோதரர் இராமானந்தர்.



சகோதரி ஓமா.





# பெண் கல்வி.

சித்திர சகிதமான ஒரு மாதாந்த சஞ்சிகை.

கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்.—திருக்குறள்.

தொகுதி 1.] 1911ஹு அக்டோபர்மீ 22உ [பகுதி 3.

## சகோதரி ஓமா.

சகோதரி ஓமா என்றழைக்கப்படும் அம்மையார் நேப்பால்தேசத்தைச் சேர்ந்தவர். இவர் தந்தை இவரை பம்பாய்க்கனுப்பி ஆங்கிலம் படிப்பித்தார். இவர் 12 வருஷகாலமாக ஐரோப்பா அமெரிக்கா, ஆஸ்திரேலியா முதலிய கண்டங்களிலெல்லாம் இராமானந்தர் என்று சொல்லப்படும் தம் குமாரனோடு சஞ்சாரம் செய்துவிட்டு, இப்போது சில மாதங்களாக மைலாப்பூரில் தாமதித்துவருகிறார். இவ்வம்மையார் உருவம் சற்று குறுகியதாகிலும் மனோதிடம், எடுத்த காரியத்தை முடிப்பதில் உறுதி, கஷ்டப்படும் ஜீவராசிகளுக்கு உதவ முன்வரும் தகைமை, சாந்தம் முதலிய நற்குணங்களெல்லாமே திரண்டு உருவெடுத்தால் போன்றவர் இவர். இவர் மைந்தரும் சுந்தரவடிவமும், வாக்கு சாதுர்யமும் உத்தமகுணங்களும் அமையப்பெற்றவர். அவர், தமக்கு 13 வயது முதல் தம் மாதாவுடன் சஞ்சரிப்பாராயினர். இவ்வம்மையாருக்கு இப்போது வயது 45 ஆகும். அவர் மைந்தற்கு 24 ஆகும்.

இவ்வம்மையார் மேனாட்டு வழக்க பழக்கங்களில் அவ்வளவு மோகம் உடையவராகத் தெரியவில்லை. அவர் சொல்லுகிறார்:—“நேப்பால்தேசத்தாராகிய எங்களுக்கு மேனாட்டு பயக்கமில்லை. நாங்கள் பழைய உலகத்தில் மீந்தவர்களாக இருக்கிறோம். எங்கள் தேசத்தில் ஆரிய தாது யாதொரு கலப்புமின்றி சுத்தமாகவே யிருக்கிறது. அங்கு பெரும்பாலரும் புராதன நிலையிலேயே இருக்கிறார்கள். எங்களுக்கு வடபாகம் கீழ்பாகங்களிலும் அவ்வ

ளவு கலப்பில்லை. தெற்கேதான் கலப்புள்ளது. இவ்விடங்களில் போல கீழ் ஜாதியாரை நாங்கள் கேவலமாக நினைக்கமாட்டோம். ஆனால், அவர்களுக்காகவும் அவர்களோடும் வேலை செய்வோம். எங்கள் நாட்டிலும் ஹிந்து க்ஷேத்திரங்களிருக்கின்றன. ஆனால் இங்குப்போல கணக்கிலடங்காத அத்துணை இல்லை. எங்கள் சமயம் அன்பாகும்."

இவ்வம்மையார் ரோகிகளுக்கு 'தெய்வீக சிகிச்சை'யும் செய்து வருகிறார். அமெரிக்காவில் மிஸ்ஸஸ் எட்டி என்னும் மாதின் 'தெய்வீக சிகிச்சை' முறைக்கு 'கிறிஸ்தவ சாஸ்திரம்' (Christian Science) என்றுபேராகும். அவர் காலம் சென்று போனாரேனும் அவர் சிஷ்யர்கள் பலரால் அம்முறை இன்னும் அதிகவியாபகம் உடையதாகவே இருந்துவருகின்றது. அவர் முறைக்கும் சகோதரி ஓமா அம்மையார் முறைக்குமுள்ள பேதாபேதத்தைப்பற்றி ஒருவர் கேட்டபொழுது, இவ்வம்மையார் சொல்லுகிறார்:-"அதற்கும் இதற்கும் பேதம் அதிகமுண்டு. மிஸ்ஸஸ் எட்டி கிறிஸ்துவில் நம்பிக்கை வைத்துள்ளார். நாம் கடவுளில் நம்பிக்கை வைத்துள்ளோம். அவர் பிரார்த்தனையில் மாத்திரம் நம்பிக்கை வைத்துள்ளார். நாம் பிரார்த்தனை செய்கையாகிய இரண்டினிடத்தும் நம்பிக்கை வைத்துள்ளோம். 'இயற்கைவழி திரும்பு' என்பது எமது பழமொழியாகும். செய்கையோடு சம்பந்தப்படாத வெறும் நம்பிக்கை உபயோகமில்லாதது. நாம் ஔஷதம் பிரயோகிப்பதுகிடையாது. எமதுமுறை 'இயற்கை முறை'யேயாகும். மேனாட்டாருக்குப்பார்க்கிலும் இந்தியர்களாகிய நமக்கு அநேக அநுகூலங்கள் உண்டு. முதலாவது, மேனாட்டார் வசிக்குமிடம் மிகவும் நெருக்கமுள்ளதாகும். அவர்கள் தரிப்பது கம்பளத்தாலாகிய உடைகளாகும். அவர்கள் பாதம் பூமியைத் தொட்டறியாது. நாம் அங்ஙனமல்ல. நாம் சுவாசிப்பது நல்லகாற்றேயாகும். நமது உடை மிகவும் சாதாரணமானது. அநேகமாக நாம் தரைமீதேதான் பாதம்வைத்து நடக்கிறோம். பெரும்பாலும் இயற்கை நம்மைச் செய்த்வாறே நாம் இருந்துவருகிறோம். நம் நாட்டு நோயாளிகளைப் பார்க்கிலும் மேனாட்டு நோயாளிகளைச் சிகிச்சை செய்வது மிகக்கஷ்டமான காரியம். நாங்கள் போன இடங்களிலெல்லாம் எங்களைவந்துசூழ்ந்தவர் எண்ணிறந்தார். எங்களிடத்தும், எங்கள் சிகிச்சை முறையிடத்தும் நம்பிக்கை வைத்தார் கணக்கிலார். அவரெல்லாரும் சொஸ்தப்படுத்தப்பெற்றார். 'எங்களிடத்





தில் ஏதோ தெய்வீக சக்தி இருக்கிறது; அதனால் நாங்கள் வியாதிகளை சொஸ்தப்படுத்தி விடுகிறோம்' என்பதல்ல. நாங்கள் செய்வதெல்லாம் தெய்வீகசக்தியினால் சொஸ்தப்படுத்தப்பெறவழிகாண்பிப்பதேயாகும். எமது முறையினால் சில சமயங்களில் செவிடர் செவிகளும், ஊமையர் வாய்களும் திறக்கப்பட்டுள்ளன. நோயாளியைத் தன்னிடத்தில் தான் விசுவாசம்வைக்கும்படி கேட்டுக்கொள்கிறோம்; அங்ஙனம் செய்வதற்கு உதவியும் செய்கிறோம்."

இவ்வம்மையார்க்குக் கீர்த்திப்பிரதாபத்தில் சற்றும் விருப்பம் இருப்பதாகத்தெரியவில்லை. அமெரிக்கா முதலான இடங்களில் இவ்வம்மையார் பிரசங்கங்கள் கேட்ட உணர்ச்சியினின்றும் எத்தனையோ சங்கங்களும் ஸ்தாபனங்களும் தோன்றியுள்ளனவேனும் அவற்றுள் எதனோடும் தமது பெயரை சம்பந்தப்படுத்த இடங்கொடுக்கவில்லை. அவ்வவ்விடங்களிலுள்ளாரே அந்தந்த ஸ்தாபனங்களின் மேல்காரியங்களை வகித்துள்ளார். அங்கங்கு செய்துள்ள சிகிச்சைகளுக்குப் பிரதிபிரயோஜனமாகக் கிடைத்துள்ளது பணமேயாகும். ஆயினும் அவர் நோக்கம் பணமன்று. தமது வீட்டிலிருந்து அடிக்கடி பணம் தமது செலவுக்காக வந்துள்ளதெனக் கூறுகிறார். இவர் சிகிச்சையின் அற்புதத்தைக்கண்டு, சிலர் கிறிஸ்துவே தங்களைசொஸ்தப்படுத்தினதாகக்கருதினர்; இவரைப் போல் படம் வரைந்து அதையும் மற்றஞானிகளின் படங்களுடன் தங்கள் ஆலயங்களில் தூக்குவாராயினர். இவர் மைந்தர் இராமானந்தருக்கு வர்ணச் சிகிச்சை என்று சொல்லப்படும் "குரோமாப்பதி" யும் தெரியவருமென்று தோன்றுகிறது. சமயசம்பந்தமாக அவர் சொல்லுகிறார்:—"நான் எச்சமயத்திற்கும் விரோதியல்ல. ஹிந்துக்கள், மகம்மதியர்கள், கிறிஸ்தவர்கள், பார்ஸீகர்கள்- இவர்கள் ஆலயங்களிலெல்லாம் நான் கடவுளைத் தொழுதிருக்கிறேன். எமது கடவுள் இறந்து போனவரல்லர்; எப்பொழுதும் ஜீவித்திருப்பவராவர் என்னும் ஒரு எண்ணமே எமது முக்கிய கொள்கையாகும். சகுணசமயத்தில் நாங்கள் விசுவாசம் வைக்கிறோம். கடவுளின் பிதாத்தன்மையையும் மனிதரின் சகோதரத்தன்மையையும் நாங்கள் நம்புகிறோம். ஒவ்வொரு மதஸ்தரும் அவரவர் மதத்தை நன்குணர்தல் நன்றாகும். அதுவும் விசுவாசத்துடன் செய்யவேண்டும். மதசம்பந்தமான விஷயங்களில் உபேக்ஷையாக இருந்த ஒருவள்—ஒருமந்திரியின் குமாரத்தி—என்பிரசங்கத்தைக் கேட்டுவிட்டு என்னிடம்வந்து, என்பிரசங்கம்கேட்டஅன்றுதான்கிறிஸ்துவைப்

பற்றித் தான்உணர்ந்ததாக வெளியிட்டாள். மதசம்பந்தமாக நான் செய்துவரும் வேலை இதிலிருந்து நன்கு புலப்படுமென்று நம்புகிறேன். அவரவர்கள் கடவுளைப்பற்றிய உணர்ச்சியை அவரவர்களுக்கு நான் உண்டுபண்ணுகிறேன்.''

பின் விவிலியத்தைப் பற்றிப் பேசும்பொழுது அவ்வம்மையார் சொல்லுகிறார்:—“விவிலியத்திலுள்ள உவமைகளெல்லாம் கீழ்நாட்டிற்குரியன. இயேசுவே கீழ்நாட்டார். அவர் அவருடைய 13வது வயதிலிருந்து 30-வது வயது வரை திபெத் தேசத்தில் இருந்திருப்பதாக ருஷியர் ஒருவரால் பிரசுரிக்கப் பெற்றுள்ள ஒரு ‘கிறிஸ்துவின் அறியப்படாத ஜீவிய சரித்திரத்’தினால் வெளியாகின்றது. விவிலியத்தில் இவ்விஷயத்தைப்பற்றியே ஒன்றும் காணோம்.”

விக்கிரக ஆராதனையைப்பற்றியும் அவருக்குத் தாழ்வான அபிப்பிராயம் இல்லை. அது நல்லதென்றும் சிலருக்கு அவசியம் தானென்றும் கூறுகிறார்.

இவ்வம்மையார் இதுவரை சஞ்சாரத்தில் கழித்த நாளெல்லாம் வீணாளாகக் கருதுகிறார். இங்கு இந்தியாவில் செய்யப்படவேண்டியதாக இருக்கும் பல முக்கியமான காரியங்களை நினைத்து வருந்துகிறார். கீழ்ஜாதியாரின் உத்தாரணத்தின்பொருட்டுச் செய்யவேண்டியிருக்கும் வேலை பெரிதென்றும், அதற்காக முன்வந்துள்ளார் மிகச்சிலரே யென்றும் கருதுகிறார். கீழ் ஜாதியாரைப் பற்றிப் பேசும்பொழுது அவர்சொல்லுகிறார்:—“பறையன் அழுக்குப்பற்றிய கிழிந்தவஸ்திரங்களைத்தரித்தும், ஆபாஸமான குடிசைகளில் வசித்தும்வரினும், அவன் அதிக புத்திசாலியே யாவன். நல்ல உபயோகமுள்ள குடியானவனாக மாற்றப்படுவதற்குத் தக்கவன்.''

இவர் முக்கிய நோக்கம் எல்லாரையும் இராஜ விசுவாசமுள்ள குடிகளாக்குவதும், உபயோகமுள்ளகுடித்தனக்காரராக்குவதும், நல்லதொழிலாளர்களாக்குவதுமேயாம். மேனாட்டார்,நடக்கும் காரியத்தைப் பார்ப்பவர்களாகவும், கீழ்நாட்டார் ஆத்மார்த்தத்தைப் பார்ப்பவர்களாகவும் இருக்கிறார்கள். இவ்விரண்டையும் ஒன்றாகக் கலப்பதே தமது முக்கிய கருத்து என்கிறார்.

ஆஸ்திரேலியாவில் ஆசியாகண்டத்தார் யாரையும் உள்ளேயோவெளியேயோ விடுவதில்லையாம். அதனால் நம் அம்மையார்க்கு





ஐரோப்பிய வஸ்திரமேதரித்துக்கொண்டிருக்கும்படியான இடைஞ்சல் நேரிட்டதாகத்தெரிகிறது. அவர் இதைப்பற்றிப்பின்வருமாறு கூறுகிறார்:—“நாங்கள் எப்பொழுதும் இந்தியர் உடையே தரித்திருந்தோம். ஐரோப்பிய உடைதரிக்க நேர்ந்தது நாங்கள் ஆஸ்திரேலியாவில் இருந்தபொழுது மாத்திரமேயாம். ஆஸ்திரேலியாவுக்கு உள்ளும் புறம்பும் ஆசியர்களை விடுவதில்லை. ஆனால் நாங்கள் முதல்முதல் ஆஸ்திரேலியாவுக்குப்போனபொழுதுநேரே அமெரிக்காவிலிருந்து போனோம். எங்களை யாதொரு தடையுமின்றி விட்டுவிட்டார்கள். அது ஒருவேளை நாங்கள் இந்தியர் உடைதரித்த பைத்தியக்கார அமெரிக்கர்கள்தாம் என்ற எண்ணத்தின் பேரிலிருக்கலாம்.''

இத்தென்னிந்தியாவில் நம்மம்மையார் செய்ய உத்தேசித்திருக்கும் காரியங்கள் பின்வருவன:—

1. ஏழைகளுக்காக ஒரு வைத்தியசாலை கட்டுவித்தல். இதில் தமது சிகிச்சை முறையை ஸ்தாபிப்பார்.

2. இந்தியமாதர்களுக்காக ஒரு பள்ளிக்கூடம் கட்டுவித்தல்.

3. ஒரு பத்திரிகை நடத்தல்.

இவ்வம்மையாரைத் தமது குமாரன் சகிதம் ஊர்வந்து சேருமாறு இவர்பர்த்தா வேண்டிக்கொள்கிறாரேனும், இவர் பரோபகாரார்த்தமாகத் தம் சுயநலம் துறந்து, மற்றார்க்கு வேண்டுவன புரிதலே ஆக்கமாகக் கருதி, இங்குத்தாமதிக்கிறாரென அறிந்து சந்தோஷிக்கிறோம். இத்தகைய பொதுநலப்பிரியர் ஆணிலேனும் பெண்ணிலேனும் மிகச்சிலருளராயினும் இந்தியர்கள் பொதுப்படவும், கீழ்ஜாதியார் விசேஷமாகவும் ஈடேறுவதற்குப் போதியதாகும் என்பதற் கையமில்லை. அங்ஙனம் போதிய சிலர் உண்டாகும் நாள் எந்நாளோ அந்நாளே நமக்கெல்லாம் நன்னாளெனக் கூறலாம். இவ்வம்மையார்குமாரரும் மாதாகருத்துக்கிணங்கப் பரோபகார நிமித்தம் தம் வாணாளைக் கழித்துவருவது அவ்வம்மையாரின் பெருமையைப் பின்னும் விளக்கிநிற்கின்றது. நம்மிளம் சகோதரிகளொவ்வொருவரும் இவ்வம்மையாரைப் போன்று கல்வி, கேள்வி, ஈஸ்வரபக்தி, இராஜபக்தி, பரோபகாரசிந்தை முதலிய பலநற்குணங்களமைபப் பெற்று வாழ்ந்திடக் கடவுள் அநுக்கிரகிப்பாராக.

பத்திராதிபர்.

# ஊன்றி விசாரித்தல்.

பிரபஞ்சம் வளர்ந்துகொண்டே போகின்றது. ஒரு விநாடி கூட நின்றநிலையிலேயே நில்லாமலும், பின்னோக்கிச் செல்லாமலும், முன்னோக்கியே சென்றுகொண்டிருக்கின்றது. இதன் உண்மை நம் சாதாரண தின அநுபவங்களிற் காணலாம். ஒவ்வொரு குடும்பங்களிலும் மூத்தோனில் இளையோனும், மூத்தாளில் இளையாளும் அதிபுத்திசாலிகளாக இருப்பதைப் பார்க்கலாம். தகப்பனிலும் பிள்ளைகள் பெரும்பாலும் புத்திசாலிகளாகவே இருக்கிறார்கள், இருப்பார்கள். தற்காலத்திய சிறுவர் சிறுமிகளைப் பாருங்கள். அவர்கள் வாயிலிருந்து வினாக்கள் ஒன்றன்பின்னொன்றாகப் புறப்பட்டுக்கொண்டேயிருக்கும். நாமுமறியாத பல விஷயங்களைப்பற்றி அவர்கள் கேள்விகள் கேட்பதை நாம் கேட்கலாம். பெற்றோர்களில் அநேகர் அதன் முக்கியத்தை உணராமல் அவர்கள் வாயை மூடிவிடுவார்கள்; அல்லது மூடிவிட எத்தனிப்பார்கள்.

நம்முடைய தீர்மானங்கள் அல்லது முடிவுகள் சரியாக இருக்கவேண்டுமானால், எவ்விஷயம் சம்பந்தமாகத் தீர்மானிக்க வேண்டுமோ, அவ்விஷய சம்பந்தமாக அறிந்திருக்கவேண்டிய விஷயங்களெல்லாம் அறிந்திருந்தாலொழிய, நாம் செய்யும் தீர்மானம் சரியான தீர்மானமாக அமையப்பெறாது. எவ்விஷய சம்பந்தமான அறிவும் விசாரணையின்றி வராது. சரியான விசாரணையில் விளங்குவதே உண்மையாகும். இந்திரியங்கள் நேரே எதிரிடையாக சாக்ஷி கூறினும், விசாரணையில் தெளிந்ததே உண்மையென்பார் அறிவுடையார்.

“காளை கன்று ஈன்றது” என்றால், “கயிறெடு கட்ட” என்பாரே பெரும்பாலர். நம்புத்தி விர்த்தியடைய விரும்பினும், விஷயங்களின் எதார்த்த நிலை அறிய விரும்பினும், நாம் அங்ஙனமிருத்தலாகாது. “காளை கன்று ஈன்றது” என்றால் காளை எங்கேனும் ஈனுமா என்று ஆலோசிக்க வேண்டும். காளை ஈன நாம் பார்க்கவில்லையானால், ‘காளை பெறவே பெறாது’ என்று கூறலாமா என்பாருமுளர். அவர் கூறுவதைக் கேட்டால் நாம் நம்பக்கூடாதது ஒன்றுமில்லையென்று ஏற்படும். அசம்பாவிதங்களெல்லாம் சம்பாவி





தங்களாகும். ஆகையால், அறிவை வளர்க்க விரும்பும் ஒவ்வொருவரும் செய்ய வேண்டுவது யாதெனின், தங்கள் புத்திக்கும் அநுபவத்துக்கும் எட்டியதை மாத்திரம் ஒப்புக் கொண்டு, மற்றவைகளுக்கு சாக்ஷியங்களை அபேக்ஷிக்க வேண்டும்.

அங்ஙனம் இன்றேல் மூடநம்பிக்கை யென்னும் மிரளுகிற குதிரை வாலில் கட்டுண்ட ஒருவனாய் அறியாமையாகும் மேடுகாடுகளெல்லாம் இழுக்கப்பட்டுத் துன்பத்திற்குள்ளாக வேண்டிவரும்.

விசாரணை யென்பது ஏதோ ஒன்றிரண்டு விஷயங்களில் மாத்திரம்செய்ய வேண்டுவ தொன்றன்று. விசாரணையின்றிச் செய்யக் கூடிய விஷயம் ஒன்றுமே இல்லையென்று சொல்லலாம்.

எல்லாக்காரியங்களிலும் விசாரிக்கும் சீலமுடையார் புருஷர்களுக்குள்ளேயே சிலரே காணப்படுவர். ஆயின், நமக்குள் கேட்பானேன். நாமெல்லோரும் நமது சகோதரிகளுக்கும் குழந்தைகளுக்கும் இதையே வற்புறுத்திப் போதிக்கவேண்டும்.

விசாரணையில்லாதாருக்கும் கண்ணில்லாதாருக்கும் வித்தியாசம் கிடையாது. கண்ணில்லாதாரே பாக்கியசாலிகளெனக் கூறலாம். அஞ்ஞானம், அறியாமை என்று பலவாறாகக் கூறப்படும் அந்தகாரத்திற்கு விசாரணையே நெருப்புக்குச்சி.

விசாரிக்கும் சக்தியில்லார் சாஸ்திரப்பயிற்சி செய்யினும் சரி, வேறெவ்வாயிலாக அறிவை வளர்க்க விரும்பினும் சரி, அறிவை மாத்திரம் கிரகிக்க அறியார். அறியாமையின் கலப்பில்லாதிருத்தல் அசாத்தியம். இருந்தால் “குருட்டுப்பூனை விட்டத்தில் பாய்ந்தது” போல்தான்.

கேள்விக்கிடங் கொடுக்கும் விஷயங்களில் எல்லாம் ‘ஏன்’ ‘எதற்காக,’ ‘எவ்வளவு,’ ‘எப்படி’ முதலிய கேள்விக்குரிய வார்த்தைகளைப் போட்டு, கேள்வி கேட்டு அதற்கு விடையறிய முயல வேண்டும். நான் இங்குக் கூறுவது அவிவேகபூரணகுருவின் உபதேசத்தை அவர்சிஷியர்கள் ஏற்றதுபோலிருக்கலாகாது. கேள்விக்கிடமில்லாத விஷயங்களிலும் கேள்விபோட முயலாதீர்கள். எவராவது ஒரு சங்கதி சொன்னால், அதில் கேள்விக்குவிடையுண்டா என்று முதலில் நோக்கவேண்டும். உண்டேல் கேட்டறிந்தே தீர வேண்டும். கேள்விகளினாலேயே உண்மை புறப்படும். அதனாலே

யே நியாயஸ்தலங்களில் வக்கீல்கள் செய்வதெல்லாம் வெறும் கேள்வி கேட்டலாகவே இருக்கின்றது.

விசாரணையில்லாக் குறையாலன்றோ நமக்குள் பலர் 'பழையன' எத்தனை அசம்பந்தமானவையாக இருந்தாலும் தழுவி வருகிறார்கள்; புத்திக்கொத்தவும் எண்ணிறந்த காரணங்களால் கொள்ளத்தக்கனவுமாகிய எத்தனையோ 'புதியன' என்று புறக் கணிக்கின்றார்கள்,

காலதேச பேதங்களுக்குத் தக்கபடி எத்தனையோ பழக்க வழக்கங்கள் மாறவேண்டி வருமன்றோ? ஒருகாரியம் செய்வதின் உத்தேசத்தையும் பிரயோஜனத்தையும் பார்க்க வேண்டுமே யல்லாது, இது முன்னோர்கள் செய்துவந்ததா? எல்லாரும் செய்கிறார்களா?– என்பவற்றைக் கவனிப்பானேன்? விசாரணை யென்னும் கண்ணுடையாரிலும் சிலர் இங்ஙனம் கவனித்துக் கண்ணில்லாராகத் தோற்றுகின்றனர்.

ஆகையால், சகோதரிகளே! எக்காரியத்தையும் செய்வதற்கு முன்னும், செய்துவரும் எக்காரியத்தையும் நிறுத்துவதற்கு முன்னும், செய்வதினாலும் விடுவதினாலும் உள்ள பிரயோஜனாப்பிரயோஜனத்தையும், ஆவசியகத்தையும் நன்றாக விசாரித்துப் பார்த்து வரும் தீர்மானப்படி செய்யுங்கள். விசாரிக்காதே மற்றவர் சொல்வதற்காக எதையும் செய்யவோ விடவோ செய்யாதேயுங்கள். விசாரியுங்கள், விசாரியுங்கள். உங்கள் தற்கால நிலைமைகளையும் அசம்பந்தமான வழக்கங்களையும்பற்றி ஊன்றி விசாரித்து நல்ல முடிவுக்கு வாருங்கள்.

கா. மீனாட்சி அம்மாள்.

(அபேதைக்யானந்த ஸமாஜத்தலைவர்.)

உத்தமகுலத்தில் பிறந்தவர்கள் எப்போதும் உண்மை பேசுகிறவர்களாகவே யிருக்கவேண்டும்.—யூரிப்பைடிஸ்.

* * *

துர் அதிர்ஷ்டமுள்ளவர்கள் பயப்படுகிறது சரியல்ல; அவர்கள் எப்போதும் நல்ல காலத்தை எதிர் பார்க்கவேண்டும்.—அப்பலோடோரஸ்.

* * *

எளியோர்களை வலியோர்கள் ஆளுவது இயற்கைச் சட்டமாக யிருக்கிறது. இது ஒரு காலத்திலும் மாறாது.—டைனுஷியஸ்.



# கற்பு.

“எண்சாண் உடம்புக்கும் சிரசே பிரதானம்” என்பதுபோல் ஸ்திரீகளுக்கு சகல குணங்களிலும் கற்புநிலைமையே முக்கிய ஆபரணமாயிருக்கின்றது. அக்கற்புநிலை தவறாதவர்கள் முக அழகு இல்லாதிருந்தாலும் புகழப்படுவார்கள். கற்பு நிலை கெட்டவர்களோ அதிசௌந்திரியவதிகளாயிருந்தாலும் யாவராலும் இகழப்படுவார்கள். உலகத்தில் ஒருவனுக்குத் தீங்கு செய்கிறவன், அவனுக்குமட்டும் துரோகியாகிறான். பரபுருடரை இச்சிக்கிற ஸ்திரீகளோ, பல பேர்களுக்குத் துரோகிகளாகிறார்கள். அவர்கள் தங்களையும் கெடுத்து, அந்நிய புருடர்களின் பத்தினிகளுக்கும் துரோகிகளாகிறார்கள். அவர்களுடைய துன்மார்க்கத்தால் அவர்களுடைய புருடர்களுக்கும் அந்நிய புருடரது பத்தினிகளுக்கும் உண்டாகிற சஞ்சலமும், பொறாமையும், கஸ்தியும் துக்கமும் அபரிமிதமல்லவா? அன்றியும், “கோடாரிக்காம்பு குலத்திற்கீனம்” என்பதுபோல், கற்புநிலை கெட்டவர்கள் தங்களுடைய உற்றார், பெற்றார் முதலியவர்களுக்கும், தங்களது கணவர்களின் சுற்றத்தவர்களுக்கும், மாறாத அவமானத்தையும் இழிவையும் நிந்தனையையும் உண்டுபண்ணுகிறார்கள். இப்பாழ் உலகமானது அவர்கள் செய்த குற்றத்திற்காக நிரபராதிகளான அவர்களது புருடர்களையும் பிள்ளைகளையும் அவமானப்படுத்தித் தண்டிக்கின்றது. மற்றக் குற்றங்களெல்லாம் கொஞ்சக்காலத்தில் மறைந்துபோகும். துன்மார்க்கத்தோஷமோவென்றால், உலகமுள்ளமட்டும் மறையாது. அவர்களிறந்தாலும் அவர்களுடைய அபகீர்த்தி இறவாமல் என்றும் சிரஞ்சீவிப்பட்டம் பெற்றிருக்கும். மற்றக் குற்றங்களுக்கெல்லாம் ஒவ்வொரு பிராயச்சித்தம் உண்டு; பதிவிரதா பங்கத்துக்கோ யாதொரு பிராயச்சித்தமுமில்லை. “கெட்டுப்போன கற்பு எட்டுநாள் அழுதாலும் வருமா?” பதிவிரதாபங்கம் பல பாபங்களை விளைவிக்கிற வித்தாயிருக்கிறது. ‘கருடன் காலில் கச்சை கட்டியதுபோல்’ எப்படியும் துன்மார்க்கத்தோஷம் பகிரங்கமாகிவிடும். அக்குற்றத்தை மறைக்க எத்தனிப்பது ஆகாயத்தைப் படல் கொண்டு மூடுவதற்கும், பூனை தன்கண்ணை மூடிப் பால் குடிப்பதற்கும் சமானமாயிருக்கின்றது. புருடனும் பெண்

சாதியும் தங்கள் ஆயுள் காலம் வரை அந்நியர் முகம் பார்ப்பதில்லை யென்று விவாக காலங்களில் தெய்வ சந்நிதியில் பிரமாணபூர்வமாகச் சங்கற்பஞ் செய்து, பின் அந்நியரைக் கூடுவது மகா கொடியபாவமாகையால், அப்படிப்பட்ட பாவிகள் மோக்ஷத்தை யிழந்து, அவியாத அக்கினியில் பூத பைசாசங்களால் உபாதிக்கப்படுவார்களென்று வேதசாஸ்திரங்கள் பல முறையிடுகின்றன. இவ்வுலகில் கற்புநிலை தவறியவர்கள், சகலராலும் கைவிடப்பட்டுத் தரித்திரமும் பலவித வியாதிகளும் துன்பங்களுங் கொண்டு சந்தி சிரிக்கத் திரிகிறதை நாம் கண்ணால் கண்டுளோம்.

ஸ்திரீகள் பிராணன் போனாலும் கற்புநிலை தவறுகிறதில்லையென்கிற மனவைராக்கிய முடையவர்களா யிருக்கவேண்டும். மானத்திற்கு முன் பிராணனைத் திரணமாகவெண்ணிக் கற்பைக் காப்பாற்றிய தமயந்தி, பாஞ்சாலி, நளாயனி, அருந்ததி முதலிய பதிவிரதா சிரோமணிகளை நாம் குருவாகக் கொள்ளவேண்டும். ஸ்ரீராமபிரானுடைய மனைவியாகிய சீதாபிராட்டியாரின் நற்குண நற்செய்கைகளை அறியாதார் யார்? ஸ்ரீராமபிரான் அரசிழந்து, நாடுதுறந்து காட்டுக்குச்சென்ற காலத்தில், தானும் கூடச்சென்று, எல்லாச்செல்வங்களும் நிறைந்த அரண்மனையின் அந்தப்புரத்தில் இருக்கவேண்டிய தனது அழகையும் அந்தஸ்தையும் பாராட்டாமல், தன்கணவனுடன் வனவாசிகளது நாகரீகமற்ற குடிசைகளில் காலங்கழித்து, எப்பொழுதும் சந்தோஷத்தோடும் மனத் திருப்தியோடும் இருந்தாள். பிறகு தன்கற்பைக் குறித்து ஸ்ரீராமபிரான் வீணான சந்தேகங் கொண்டு, குற்றஞ்சாட்டியதை வெகு பொறுமையும், வணக்கமும், தாழ்வும், கம்பீரமும் நிறைந்த கண்ணியமுடனே சகித்துக்கொண்டு, முகமலர்ச்சியுடன் அக்கினிப் பிரவேசஞ் செய்து, தன் அன்பை இவ்வுலகத்தார் யாவரும் மெச்சித் தன்னைத் தெய்வமாகப்புகழ்ந்துகொண்டாடும்படி கீர்த்தியை நிலைபெறச் செய்தாள். சாவித்திரியோ அகால மரணத்திற்குள்ளாய்க் காலன் கையிற் சிக்குண்ட தன் அருமைக்கணவன் சத்தியவானை, தன் கற்பின் வலியால் மரணத்தினின்று விடுவித்தாள். எல்லா நற்குணங்களையும் ஒருங்கே அமையப்பெற்ற ஸ்திரீ யார் என்று ஒருவர் கேட்டால், சகுந்தலையைத் தவிர வேறு ஒருவரையும் சொல்ல முடியாதென்று, ஜர்மன் தேசத்து மகா கவிஞராகிய "கத்தே" என்பவர் எழுதியிருக்





கிறார். இவர்களைப்போல் புகழைப் பரவச் செய்த மற்ற ஸ்திரீகளைக் கணக்கிடுவோமாயின் இவ்வியாசம் இன்னும் நீண்டு கொண்டேபோகும். இவர்கள் இத்தகைய நற்பெயரெடுத்ததற்குக் கல்வியே முதற்காரணமும் முக்கிய காரணமுமாகும். ஆதலால், பெண்கள் கல்வியிற் பயின்று, புத்திசாலிகளாகி, அழியாத கற்பும் கெடாத பேரும் பெற்று, நம் அழகிய தேசத்தின் பொது நன்மைக்காகப் பாடுபடுவார்களாக.

இ. வே. அபிராமி.

## கனகாம்புஜம்
## என்னும்
# கற்புக் காதலி.

### அதிகாரம் 1.

சில நூற்றாண்டுகளுக்கு முன் மானபங்கன் என்னும் ஓரரசன் மாயாபுரியை ஆண்டுவந்தான். இவனுக்கு குணசீலன் என்ற ஒரு புத்திரனும் மனோரமை என்ற ஒரு புத்திரியுமிருந்தார்கள். குணசீலன் திடசரீரமில்லாதவனாய் சதா நோயாளியா யிருந்தான். அது அரசன் மனதுக்கு வியாகூலத்தை யுண்டாக்கிற்று. எவ்வளவோ தகுந்த மருந்துகளை வைத்தியநிபுணர்களைக்கொண்டு குணசீலனுக்குக் கொடுத்து வந்தும் அவன் சரீரம் முன்போலவே இருந்து வந்தது. மானபங்கன் தனக்குப்பின் சிம்மாசன மேறவேண்டியவன் குணசீலனாகையால் அவனைக் கண்ணின் மணியினும் அதிகமாகப் போற்றி வந்தான். சந்ததி பெருகவேண்டுமென்னும் பேரவா உடையவனாக இருந்ததால் அதிசீக்கிரம் தன் புத்திரனுக்கு விவாகம் செய்யவேண்டுமென நிச்சயித்து, தேவகிரி அரசன் புதல்வி கனகாம்புஜத்தைத் தீர்மானம் செய்தான். கனகாம்புஜமும் விவாகத்துக்கு முன்னமேயே மாயாபுரிவந்து சேர்ந்தாள் குணசீலனின் வருஷப்பிறப்புநாளை முகூர்த்த தினமாகத் தீர்மானித்தார்கள்.

மானபங்கன் கல்யாண விஷயத்தில் காட்டிய ஆத்திரத்தைக் கண்டு, அவன் குடும்பத்தார்களில் சிலரும், குடிகளில் சிலரும் அவனை ஏளனஞ் செய்தார்கள். அரசனின் பிடிவாத குணத்தை

நன்குணர்ந்தவர்கள் தங்களபிப்பிராய பேதத்தைத் தெரிவிக்க அஞ்சி, வாய்பொதிந்து வாளாவிருந்தார்கள். இராணி ஹிரண்மயி மாத்திரம் துர்ப்பலனாகிய தன் புதல்வன் குணசீலனுக்கு விவாகத்தை அவன் திட சரீரியான பிறகுதான் செய்வது யுக்தமாகுமென்று சமயம் வாய்த்த பொழுதெல்லாம் சொல்லியிருக்கிறாள். இப்படி அவள் சொல்லுஞ் சமயங்களில் மானபங்கன், "நீ துர்ப்பாக்கியவதி! ஒரே ஒரு ஆண்பிள்ளையையே பெற்றிருக்கிறாய். வாய்மூடு. உன்புத்திமதி போதும்" என்று சொல்லி அவளைக் கடுகடுப்பான். மந்திரி பிரதானிகளும் அரசன் கோபத்துக் கஞ்சியாதொன்றும் சொல்லாமலிருந்தார்கள்.

கல்யாணத்துக்காக ஏற்பாடுகள் செய்யப்பட்டன. சம்பந்திகள் முதலானவர்கள் முகூர்த்த தினத்தன்று கல்யாணமண்டபத்தில் கூடியிருந்தார்கள். சடங்குகள் துவக்கவேண்டும். மாப்பிள்ளையைக் காணோம். முகூர்த்தகாலம் சமீபித்துவிட்டது. குணசீலனைத் தேடி நாலாபக்கங்களிலும் ஆள்கள் சென்றார்கள் எங்கு தேடியும் காணாமையால், பலர் ஒன்றும் தோன்றாமல் திகைத்து நின்றார்கள். மானபங்கன் முகூர்த்தகாலம் தப்பிப்போகிறதை உத்தேசித்து, அங்குள்ளவர்களைக் கறுக்கவும்சிவக்கவும் விழித்தான். குணசீலனைத் தேடச் சென்றிருந்த ஒரு வேலையாள் உடல் நடுங்கிக்கொண்டு அரசன் முன்னிலையில் வந்து, மௌனமாய் நின்றான். அவன் கண்கள் விழித்த வண்ணமாகவே யிருந்தன. வாயில் நுரைகள் வழிந்து கொண்டிருந்தன. அவன் செயலற்றவனாயிருந்தான். அவன் நிலை அவனைக் கண்டவர் மனத்தில் பயத்தை யுண்டாக்கியது. விவாகக் குதூகல சமயத்தில் இது என்ன காட்சி! தன் மகன் காணாமல் போனவிஷயம் தெரிந்ததும், ராணி ஹிரண்மயி பிரக்ஞையற்றுக் கீழே விழுந்து விட்டாள். பிரமித்து, விஷயம் தெரியாதவர்களாய் நின்றபடி நின்றார்கள் பலர். மானபங்கன் கோபமேலீட்டால் "சங்கதி என்ன?" "சங்கதி என்ன?" என்று அதட்ட, அவ்வேலையாள் நடுநடுங்கி "கிரீடம், கிரீடம்" என்று சொன்னான்.

இதற்குள், சிலர் கூக்குரல்களைக் கேட்டு, அரண்மனைப் பின்புறத்தை நோக்கி விரைந்துசென்றார்கள். ஒருவராவது அரசனுக்கு விஷயம் தெரிவிக்க வந்தார்களில்லை.





மூர்ச்சையான ஹிரண்மயியை உயிர்ப்பிக்க மனோரமையும் கனகாம்புஜமும் முயன்று கொண்டிருந்தார்கள். கனகாம்புஜம் இத்தொழிலில் மனத்தைச் செலுத்துவதால் இராஜகுமாரன் காணாமல் போனதைக்கண்டு ஆத்திரங்காட்டாமலிருக்கிறாளென்று ஜனங்கள் எண்ணிக்கொள்ளட்டு மென்றிருந்தாள். அவளுக்கு குணசீலனை விவாகம் செய்துகொள்வதில் சற்றும் பிரியமில்லை. விவாகம் தப்பிப்போகவேண்டுமென்பதே அவள் பிரார்த்தனை.

மானபங்கன் சற்றுநேரம் காத்திருந்தும் யாரும் வாராததால் மிக்ககோபாவேசனாய், "எல்லாரும் என்னசெய்கிறீர்கள் ? குணசீலனெங்கே?" என்று உரக்கக் கத்தினான்.

பலர் ஒருமிக்க, "ஓ ! மஹாராஜ்! மஹாராஜ்! இளவரசு! இளவரசு ! கிரீடம் ! கிரீடம்" என்று சொன்னார்கள்.

மானபங்கன் இவர்களின் கூக்குரல்களைக் கேட்டு, மனவருத்தமுற்று, திகிலடைந்து, அவசரவசரமாய் முடி கிடக்குமிடம் நோக்கிச் சென்றான். ஆனால், அக்காட்சியைக்காண அவன் கண்கள் என்ன பாபம் செய்தன ! தன்மகன் சின்னாபின்னமாய்ச் சிதருண்டு கிடக்கவும், அவன்மீது பிரமாண்டமான ஒரு கிரீடம் விழுந்து கிடக்கவும் கண்டான் ! சாதாரணமாய் முடியில் அணிந்துகொள்வதோ அக்கிரீடம்! அன்று. 1000 மடங்கு பெரிது; பளுவானது. கிரீடம் தெரியாதபடி கருஞ்சிறகுகள் அதைமூடியிருந்தன.

இக்கொடுங்காட்சியின் அலங்கோலமும், இச்செயல் நடந்த வரலாறு தெரியக்கூடாத தன்மையும், மானபங்கன் கண்டு, பயமும் துக்கமும் குடிகொண்டவனாய், வாய்திறந்து பேச நாவெழாமல் நின்றான். அவன் மௌனம் விசனத்தாலுண்டானதைக்காட்டிலும் நீடித்திருந்தது. தான் கண்டது பொய்த்தோற்றமென்று சந்தேகித்து, இமைகொட்டாது அக்காட்சியை உற்றுநோக்கிக் கொண்டிருந்தான். அவன் நோக்கம் தன் ஏகபுத்திரன் மடிந்ததைப்பற்றிக் கவலை செலுத்துவதாக இருக்கவில்லை. அவன்மனம் கிரீடத்தைப்பற்றியே யிருந்தது. அவன் கிரீடத்தை ஸ்பரிசம் செய்தும் சோதித்தும் பார்த்தான். இளவரசின் பிரேதத் துண்டுகள் அவன் கண்களைக் கிரீடத்தினின்றும் விலக்கவில்லை.

குணசீலனிடம் அரசனுக்கிருந்த விசேஷப் பிரீதியைக் கண்டு ஜனங்கள் கொண்டிருந்த வியப்பைவிட, கிரீடத்தினிடம்

அவர்களுக்குண்டான வியப்பு அதிகமாயிருந்தது. அரூபமாய்க் கிடந்த குணசீலன் சவத்தைச் சிலர் அரண்மனைக்கு எடுத்துக் கொண்டு சென்றார்கள். அரசன் கல்யாண நிமித்தமாக வந்திருந்த ஸ்திரீகளைப்பற்றிச் சற்றும் கவனிக்கவேயில்லை. தன் மனைவியைப்பற்றியும் மகளைப்பற்றியும் அவன் ஒன்றும் பேசவில்லை. ஆனால், அவன்வாயினின்று வெளிப்பட்ட வார்த்தைகள் "கனகாம்புஜத்தை ஜாக்கிரதையாய்ப் பார்த்துக்கொள்ளுங்கள்" என்பனவே. அரசனின் உட்கருத்தை ஒருவரும் அறியவில்லை.

(இன்னும் வரும்)

வி. செல்லம்மாள்.

---

# ஓர் அதிசயப் பெண்.

## முன் ஜன்ம விஷய விருத்தாந்தம்.

இந்துஸ்தானம் ஐக்கியமாகாணங்களிலுள்ள பிதுனு ஜில்லாவைச்சேர்ந்த ஆடன் என்னும் ஒரு சிறு கிராமத்தில் 1903 வருஷம் ஓர் அதிசயமான பெண் ஜனித்தாள். இப்பெண் முன் ஜன்மத்தில் தான் யாரென்பதைப்பற்றியும் அக்காலத்தில் நடந்த விருத்தாந்தங்களைப் பற்றியும் தன் பெற்றோர்களிடம் நாலாவது வயதிலேயே சொன்னாளாம். அக்காலத்தில் 'குழந்தை பிதற்றுகிறாள்' என்று பெற்றோர்கள் அலக்ஷயமாயிருந்து விட்டார்கள். மூன்று வருஷங்களுக்குப்பின் அதாவது 7-வது வயதில் அவள் ஸ்பஷ்டமாய் பின்வருமாறு சொன்னாள்:—

"எடாவா ஜில்லா, பரலக் புரத்தில் என் புத்திரர்களாகிய இந்திரஜித், பகன்லால் இருவரும் வாழ்கிறார்கள். முன் ஜன்மத்தில் அவர்களை நான் பெற்றேன். அங்கே என் வீட்டிற்கு முன் ஒரு ஆலமரமும் பெரிய கிணறுமிருக்கின்றன. என் பேரப்பிள்ளையொன்று பிளேக் வியாதியில் இறந்துபோயிற்று. இது என் மனதுக்கு மிக்க வருத்தம்."

இந்த அதிசயமான விருத்தாந்தத்தைக் கேட்ட பெற்றோர்கள் இனபந்துக்கள் நண்பர்கள் முதலானவர்களிடம் பிரஸ்தாபம் செய்தார்கள். அவர்களில் சிலர் 'அது உண்மையாயிருந்தாலுமிருக்க





லாம்; ஆகையால், அதைத் தீர விசாரிக்கவேண்டும்' என்றார்கள். உண்மையையறிய இந்திரஜித் ஆடனிலிருந்து வரவழைக்கப்பட்டார்.

இந்திரஜித்தைக் கண்டமாத்திரமே அந்தப்பெண் அவரைத் தெரிந்துகொண்டாள். இந்திரஜித்துக்கு ஒன்றும் அறியக்கூடவில்லை. அப்பெண், "அப்பா ! மகனே !! பரலக்புரகிராமத்தில் பிளேக் வியாதி பரவியிருக்கையில் உன் குழந்தை பிளேக்கால் இறந்துபோயிற்று. நானும் இறந்துபோனேன். நீ என்னுடைய சவத்தை ஆனையா நதியில் எறிந்துவிட்டாய். இதற்குச் சற்றுப்பின் மூல்சந்துபே என்பவர் குதிரைமீதேறி அந்த நதியைக்கடந்து வந்தார். நான் அவர் குதிரைவாலில் உட்கார்ந்துகொண்டுவந்தேன். பிறகு அவருக்குக் குழந்தையாய்ப் பிறந்தேன். நீ முன் ஜன்மத்தில் என் பிள்ளை" என்று சொன்னாள்.

இந்த விருத்தாந்தத்தைக் கேட்ட பண்டிதர் இந்திரஜித் "ஆம். அம்மா! என் தாயார் 60 வயதில் பிளேக்கால் இறந்துபோக அவள் சவம் ஆற்றில் போடப்பட்டது" என்று ஒத்துக்கொண்டார்.

பரலக்புரம் நதிக்கரையிலிருக்கிறது. ஆடனுக்கும் பரலக்புரத்துக்கும் 28 மைல்தூரம். அந்தப் பெண் தான் முன்ஜன்மத்தில் பணம் புதைத்து வைத்திருந்த இடத்தை இந்திரஜித்துக்குக் குறிப்பிட்டுச் சொன்னாள். அவள் சொன்னபடியே அந்த இடத்தில் புதையலிருந்தது.

இதுமாத்திரமல்ல, அவள் சொல்லும் பலவிஷயங்கள் உண்மையாயிருக்கின்றன. இப்பெண் எடவாவில் உபாத்தியாயர் தொழிலிலிருக்கும் ராமஸ்வரூபரை மணந்துக்கொண்டிருக்கிறாள். இவர் மூலமாய் மேற்கண்ட விஷயங்களைக் கேட்டு ஒருவர் "சரஸ்வதி" என்னும் பத்திரிகைக்கு எழுதியிருக்கிறார்.

ச. பூகீரதி அம்மாள்.

நியாயத்திலிருந்தும், உண்மையிலிருந்தும் தவறாதவர் ஒருபொழுதும் திடீரெனப் பணக்காரராக முடியாது.—மெனன்றர்.

* * *

எனக்குப் பாடுபட்ட ஒரு கிழ எருதையும் நான் விற்கமாட்டேன்.—ப்ளூட்டார்க்.

# ஆயுள் விருத்தி.

நம்மவர் பலர் மனதில் மனிதரின் ஆயுள் பிரமாணத்தைப் பற்றிய தப்பெண்ணம் குடிகொண்டிருக்கிறது. ஒருவருக்கு 70 வயதாய் விட்டால் அவர் கிழவரென்றும், 80 வயதாய் விட்டால் அவர் வாழத் தகுதியுள்ளவரல்லரென்றும், 90 வயதாய் விட்டால் நூதனாதிஸ்தலத்தில் அதிசயப் பொருளாய் வைக்கப்படத்தக்க பொருளென்றும் நாம் எண்ணுகிறோம். இப்படி நினைப்பவரின் எண்ணிக்கை அதிகப்பட அதிகப்பட வயதுகள் நிறையுமுன்னேயே இறப்பவர்களின் எண்ணிக்கையும் அதிகப்பட்டு வரும். ஒருவர் 90 வயதிலாவது 100 வயதிலாவது இறக்கவேண்டுமென்பது கட்டாயமொன்றுமில்லை. அவரவர்கள் அவரவர்களிஷ்டம் வரை ஜீவிக்கலாம். ஏன் மனிதர்கள் 200, 250 வயதுவரை உயிர் வாழக்கூடாது? அநேக காலம் ஜீவித்திருப்போம் என்று எண்ணவும், அதற்குத் தகுந்தவாறு மனதைத் திடப்படுத்திக்கொள்ளவும், நடக்கவும் செய்வார்களாயின், மனிதர்கள் நீண்ட காலம் வாழ்வது சாத்தியமென்று அநுபோகஸ்தர்கள் சொல்கிறார்கள். அவர்கள் மனம்போலவே வாழ்க்கையிருக்குமென்று உறுதியாய்க் கூறுகிறார்கள். நம்மவர் பலர் அற்பாயுசுள்ளவராவதற்குக் காரணம் அவர் மனோநிலைமையே யாகுமென்று அபிப்பிராயப்படுகிறார்கள். இது உண்மையென்பதை நம்மநுபவத்திலேயே நாமறியலாம். திடசுகசரீரமுள்ளவன் ஒருவனைப் பலர்கண்டு, "உனக்கு உடம்பு அசௌக்கியமா? ஏன் இப்படி இருக்கிறாய்? சிகிச்சை செய்துகொள்ளக் கூடாதா?" என்று கேட்பதால் அவன் மனம் அசௌக்கியம், அசௌக்கியம் என்று சிந்திக்க அவன் உண்மையிலேயே அசௌக்கியமுடையவனாகிறான். நாம் மரணாவஸ்தையிலிருப்பவருக்கு, "மரணாபத்தில்லை; வியாதி சௌக்கியமாய் விட்டது" என்று தேறுதல் சொல்வதால் அவர் மரணம் சில காலம் ஒத்திப்போகிறது.

நாம் ஒவ்வொருவரும் எவ்வளவு காலம் ஜீவித்திருக்க முடியுமோ, அவ்வளவு காலம் ஜீவித்திருப்போமென்று மனதில் உறுதிகொண்டு அதற்குத்தக்கபடி நடப்போமாக. நம் வாழ்க்கை உபயோகமுள்ளதாகக் கழியட்டும்.

வி. பார்வதி அம்மாள்.



# குழந்தைகள் பயிற்சி.

குழந்தைகளைச் சரியாய் பயிற்சி செய்வித்தல் இலேசான காரியமல்ல. எல்லாப் பெற்றோர்களும் இக்காரியத்திற்குத் தகுதியுடையவரல்லர். பெற்றோர்களுடைய குணங்களும் வழக்க பழக்கங்களுமே குழந்தைகளுக்குப் பயிலும். ஆகையால், பெற்றோர்கள் குழந்தைகளை நடத்துவதில் மிக்க கவனம் செலுத்தவேண்டும். குழந்தைகள் சரியாய்ப் பழகி உத்தம பிரஜைகளாவதற்கு அவர்களின் பெற்றோர்கள் புத்திமான்களாயிருப்பது மிக்க அவசியம். இளமையில் அவர்களுக்கு நல்லவைகளைக் கற்பித்துக் கொடுக்க வேண்டும். 'தொட்டிற் பழக்கம் சுடுகாடுமட்டும்'; ஆதலால் நல்லதல்லாதவைகளை அவர்கள் கற்காமல் பாதுகாக்க வேண்டும். இது மிக்க பொறுப்பும் சிரமமுமான காரியம். குழந்தைகள் அறியாமலோ அறிந்தோ பிழைகள் செய்வது சகஜம். நம்மவர்கள் சாதாரணமாய்ப் பிழைகள் செய்வதற்காகக் குழந்தைகளைத் தண்டனை செய்வதுதான் அவர்களைத் திருத்தி நல்வழிப்படுத்து முறை என்று எண்ணியிருக்கிறார்கள். இது பெரும் பிசகு. பிழைக்குத் தண்டனை சட்டரீதியானதாயினும், நாம் குழந்தைகளைத் தண்டனை செய்யாது அவர்களைத் திருத்த முயலவேண்டும். திருத்துவதில் கூட அவர்களை அவர்கள் வழியிலேயே விட்டு, சரியான வழிக்குத் திருப்பவேண்டும். அவர்களுக்கு நாம் திருத்துகிறோம் என்பது கூடத் தெரியக்கூடாது.

ஒரு குழந்தை ஒரு பிழை செய்துவிட்டால் அப்பிழையை அது மறுபடியும் செய்யக்கூடாதபடி வேறு வேலைகள் கொடுத்து அதன் மனதைத் திருப்பி, பிழையை மறக்கடிக்கச் செய்யவேண்டும். குழந்தை முன்பாக அது செய்த பிழையைப்பற்றிப் பிரசங்கம் செய்வதிலும், பலர் முன்னிலையில் அதைத் திருப்பித் திருப்பிச் சொல்லி அவமானப்படுத்துவதிலும் கேடு விளையுமேயன்றி யாதொரு நன்மையும் விளையாது. இப்படிச் செய்வதால் சில சமயங்களில் தீக்குணங்களிலேயே அதன் மனம் நாடி விடுகிறது.

குழந்தைகள் சரிவரப்பழக சில விதிகள் ஏற்படுத்தி அவைகளின்படி நாமும் நடந்து அவர்களைப் பழக்கவேண்டும். சாப்பிடும் காலம், பள்ளிக்குச் செல்லும் காலம், விளையாடுங்காலம், படிக்கும்

காலம், உறங்குங்காலம்—முதலியன குறிக்கப்படுவதால், அவர்களுக்கு நல்ல பயிற்சி யுண்டாகும்.

குழந்தைகளின் சுபாவங்கள் வேறுபடுவன. அவர்களுடன் நன்றாய்ப் பழகி அவைகளை அறிந்து அவைகளுக்குத்தக்கபடி அவர்களைப் பழக்கி வரவேண்டும். ஒரு குழந்தை உண்மையே பேசும். மற்றொன்று பொய்யே பேசும். முந்திய குழந்தையை வீண் புகழ்ச்சி செய்வதும் பிந்திய குழந்தையைத் தாழ்வுபடுத்திக் கூறுவதும் கூடாது. பொய் பேசுவதற்கு இடம் சந்தர்ப்பமொன்றும் கொடுக்காமல் பாதுகாத்து சிலகாலம் வருவோமானால் பொய்பேசும் சுபாவம் அக்குழந்தைக்கு மாறுபட்டுப் போகும். தண்டனை யன்றி ஒரு பிழைக்கு நிவிர்த்தியில்லை யெனில், தனியாக ஒரு அறையில் சிலகாலம் அடைத்துவைப்பது மேலானது. இந்த அறை இருட்டறையாகவாவது அசௌகரியமானதாகவாவது இருக்கக்கூடாது. அக்குழந்தை தன் பிழையைப்பற்றி தானே சிந்திக்கவிடவேண்டும். அதன் மனம் வேறொன்றில் நாடும்படி அந்த அறையில் யாதொன்று மிருக்கக்கூடாது. இப்படிச் செய்வதால் குழந்தைகள் திருந்தி நல்வழிப்படுவது அனுபோகரீதியாய்த் தெரியவந்திருக்கிறது.

எத்தகைய தண்டனையும் கூடாது. ஒரு விதப்பிழை ஒரு குழந்தை செய்யுமாகில் அதை மறுபடியும் அது செய்யசமய சந்தர்ப்பம் நேரிடாதபடி நாம் செய்யவேண்டும். சிறியோர்செய்த சிறு பிழையைப் பெரியோராயின் பொறுப்பது கடன். பிழையைமறந்து இனி பிழைநேரிடா வண்ணம் பாதுகாப்பது நமது கடமையாகும்.

சு. சின்னம்மாள்.

பெரிய ஆபத்திலிருந்து மிகுந்த பலனுண்டாகும்.—ஹிரடோடஸ்.

* * *

ஒரு சுகத்துக்கு இரண்டு துக்கங்கள் வீதமாக மனிதர்களுக்கு தேவர்கள் சுகதுக்கங்களைக் கொடுக்கிறார்கள்.—பின்டார்.

* * *

பணக்காரராக இருப்பதின் முக்கிய பிரயோஜனம் பணத்தைப்பற்றி நினைக்கவேண்டிய ஆவசியகத்தினின்றும் விடுபடுதலேயாம்; ஆனால் அதைப் பற்றி நினைப்பது மேலும் மேலும் விருத்தியாதலே பயனாக முடியுமாயின் நாம் அதிகத்தீங்கு செய்பவர்களே யாவோம்.—லார்ட் ஆவ்பரி.

* * *

மானிடருக்குச் செய்யும் ஊழியமே தேவ ஆராதனை.—மிஸ் கிப்ஸன்.



# உப்பின் உபயோகங்கள்.

உணவிற்கு உப்பு வெகு அவசியமானதென்று அனைவருக்கும் தெரியும். 'ஏது இருந்தாலும் இல்லாவிட்டாலும் நாலு பருக்கையும் இரண்டு உப்புமாவது இருந்தால் போதும். மற்றவைகளைப்பற்றி அவசியமில்லை' என்று சர்வசாதாரணமாய்ச் சொல்லிக் கொள்ளப்படுவதை நாம் பலதடவைகளில் கேட்டிருக்கிறோம். 'உப்பில்லாத பண்டம் உளுத்துப்போவதுபோல்' என்றுபழமொழியாகப்பலர் உபயோகப்படுத்துவதையும் நாம் அறிந்திருக்கிறோம். இம்மாதிரி ஆங்கிலத்தில் 'உப்பில்லாத முட்டை' என்றால் உபயோகமற்றதும் ருசியற்றதும் என்று பொருள்படும். ஜனங்கள் மிருகங்களுக்குச்சமானராய் நாகரீகமென்பதேயில்லாது இருந்துவந்த காலத்தில் உப்பின் அவசியம் அவ்வளவாய்த் தோன்றியிராது.

புலி, சிங்கம், ஓநாய், சிறுத்தை இவைகளைப்போல பச்சைமாமிஸத்தைப் பதக்கென்று மனிதர் கடித்துத் தின்றார்களாதலால் அவர்களுக்கு உப்பு அவசியமிருந்திருக்காது. மாமிஸத்தை வேவித்துத் தின்னவும், காய்கறி பதார்த்தத்தைக் அரிந்து தின்னவும், ஏற்பட்ட பின்னரே, உப்பினுடைய பெருமையும் உப்பினுடைய உபயோகமும் உப்பினுடைய இன்றியமையா இயற்கையும் வெகு நன்றாய்த் தெரியவந்தன. இதனாலல்லவா, நம்மவர்கள் உப்புக்கும் உணர்வுக்கும் ஒருவித சம்பந்தம் உண்டாக்கினார்கள்? 'உப்புப்போட்டு தின்னவில்லையா, உணர்ச்சிகெட்டவனே!' என்று நம்மவர்கள் ஏசுவதை நாம் கேட்டிருக்கிறோமல்லவா? உப்பைப் போட்டுத் தின்னாவிட்டால், உணர்ச்சியில்லாத மிருகத்தன்மைபூண்ட நிலைமையிலிருக்கிறோமென்றும், பகுத்தறிவுண்டாய் மனிதத்தன்மை மேலும் மேலும விகசித்துக்கொண்டு வரும்போது உப்பைக்கட்டாயம் உபயோகிக்க நேரிடுகிறதென்றும் மேற்கூறிய பழமொழிகள் சூசிப்பிக்கின்றன.

உப்பினுடைய உபயோகம் யாது என்று நாம் யோசிக்குங்கால் அது பலவிதமாகிறது. நாவில் ஊறுகிற ஜலத்திற்கு உமிழ்நீர் என்றுபெயர். இந்த உமிழ்நீரில் நாம் சாப்பிடுகிற உணவு நன்றாய் ஊறுவதால் மென்று விழுங்கச்சாத்தியமாகிறது. மேலும் நாம் சாப்-

படுகிற உணவு ஜீரணமாவதற்கு இந்த உமிழ்நீர் இன்றியமையாததாயிருக்கிறது. உப்பு நாக்கில் படுவதினால் நாக்கு நரம்புகள் மீது தாக்கி, உமிழ்நீர் அல்லது எச்சில் என்று சாதாரணமாய்ச் சொல்லும் ஜலம் பெருகுகிறது.

உப்பில்லாவிட்டால் பண்டம்கெட்டு அழிந்து போகும். அழிந்த பண்டத்தைத் தின்பதினால் உடம்பிற்கு எவ்வளவோ கெடுதி சம்பவிக்கும். இக்காரணத்தாலே ஊறுகாய் முதலியவைகளுக்கு நாம் உப்பிட்டே வைக்கிறோம். பல்லிடுக்குகளிலகப் பட்டுக்கொண்ட சாதம் அல்லது கறித்துணுக்கைகள் கெட்டுப் போய் துர்நாற்றம் எடுக்காமலிருப்பது அவைகளிலுள்ள உப்பின் தன்மையால்.

இரைப்பையில் உணவை ஜீரணஞ் செய்வதற்கு 'காஸ்ட்ரிக் ஜ்யூஸ்' என்னும் ஒருவித ஜலம் ஊறுகின்றது. இது எவ்வளவு மிகுதியாயும் நல்ல ஸ்திதியிலு மிருக்கிறதோ அவ்வளவுக்கவ்வளவு நம் ஆகாரம் ஜீரணமாய் நமக்குப்பசியெடுக்கும். அது எவ்வளவுக்கெவ்வளவு குறைவா யிருக்கிறதோ அவ்வளவுக் கவ்வளவுஜீரண மின்மையும் பசிக்குறைவும் நேரிடும். இதைத்தான் நம்மவர்கள் வயிற்றில் அக்கினியென்றும், பசி தீபனம் என்றும் சொல்லுகிறார்கள். 'வயிற்றில் என்ன போட்டாலும்பஸ்மமாய் விடுகிறதே, கல்லைத்தின்று கல்லைச் செரித்துக் கொள்கிறானே' என்று நம்மவர்கள் குறிப்பாகச் சொல்வது, இந்த 'பசிதீபனத்திரவம்' என்று சொல்லக்கூடிய 'காஸ்ட்ரிக்ஜ்யூ' ஸால்தான். உப்புக்கும் இதற்கும் மிகவும் சம்பந்தம் உண்டு. உப்பினால் பசிதீபனம் அதிகமாக உண்டாகிறது.

மேலும், குடலில் உணவு அழிந்து அழுகி துர்நாற்றமுண்டாகிக் கெட்டவாயுக்களாக மாறி தேகத்துக்குக்கெடுதி செய்யாமல்காப்பதும் உப்பே. இரத்தத்திலும் தசையிலுமுள்ள சில வஸ்துக்கள் தக்கபடி ஜலத்தில் கரைந்து சேர்வதற்கும் உப்பே காரணமாயிருக்கிறது.

வாந்திபேதி முதலிய கொள்ளைநோய்க் காலங்களில் உப்பை அதிகமாய் உபயோகப்படுத்த வேண்டுமென்று சொல்வது வழக்கம் இதனால் ஜீரணசக்தி மிகவும் விர்த்தியாவதற்கும், வயிற்றில் கெட்ட வாயுக்கள் சேராமலும் உண்ட உணவு கெட்டுப்போ





காமலுமிருப்பதற்கும் ஏதுவுண்டாகும். ஹாலண்டுதேசத்திற்குற்றவாளிகளுக்கு உப்பில்லாமல் தீனிபோடுவது ஒரு பெருத்த தண்டனையாயிருந்ததாம். அந்தக்குளிர் தேசத்தில் உப்பில்லாததினுடைய பலன் வெகு நன்றாய்த்தெரியுமென்று சொல்லப்படுகிறது. அப்பன் மாண்டால் அப்பன் அருமை தெரியும்; உப்பில்லாவிட்டால் உப்பின் அருமை தெரியும்.—பிரஜானுகூலன்.

---

## சந்தாதார்களுக்கு அறிக்கை

நமது பத்திரிகையின் முதல் சஞ்சிகையைப் பார்த்தவுடன் சந்தாதாராகப் பிரியமில்லாதவர்கள் உடனே தெரிவித்திருக்கலாம். இரண்டாவது சஞ்சிகை வி. பி. யில் சென்ற மாதம் அனுப்பப்பட்ட பொழுது சிலர் ஆதரிக்கக் கூடியவர்களா யிருந்தும், வி. பி—யை வேண்டாமென்று திருப்பி விட்டதால் வீணானஷ்டம் நேரிட்டது. சந்தாதாராகப் பிரியமில்லாதவர்கள் உடனே நமக்குத் தெரிவித்து விட்டால் பெருத்த உபகாரமாயிருக்கும். இப்பத்திரிகை பரோபகாரார்த்தமாக நடத்தப்பெறுகிறது என்பதை சந்தாதார்கள் கவனிப்பார்களாக. இதை நடத்தப்போதிய பணத்திற்கு மேல் சந்தாத்தொகை வசூலாகுமாயின் சந்தாவைக் குறைக்கவோ பத்திரிகையின் பக்கங்களைப் பெருக்கவோ செய்வதாகும். நாம் அனுப்பும் வி. பி—யைப் பெற்றுக்கொண்டு பத்திரிகையை ஆதரிக்குமாறு வேண்டிக்கொள்கிறோம்.

ப—ர்.

---

## வந்தனம்.

நமது பத்திரிகையின் முதல் இரண்டாவது சஞ்சிகைகளைப் பெற்று பத்திரிகாபிவிருத்தியில் மிக்க அனுதாபங்காட்டி அதுநடைபெறுவதற்காக 10-ரூபாய் நமக்கு அனுப்புவித்ததற்காகவும், நம் முயற்சியில் ஊக்கம் காட்டி நம்மைப் பெருமைப்படுத்தியதற்காகவும், இலங்கை சொலிசிடர் ஜெனரலாகிய கனம் ஸ்ரீமான் பி. ராமநாதன், கே. சி. எம். ஜி., அவர்களுக்கு நாம் நம் மனப்பூர்வமான வந்தனத்தைச் செலுத்துகிறோம். ப—ர்.

## சமாசாரங்களும் குறிப்புகளும்.

அமெரிக்காவிலுள்ள கர்னல் எட்வர்ட் என்னும் ஐசுவரியவானின் குமாரத்தி மணத்திற்குரிய பருவத்தினளாயிருக்கிறாள். அவளுக்கு 500-வாலிபர்கள் கலியாண விஷயமாகக் கடிதம் எழுதியிருக்கின்றார்கள். அவர்களெல்லாரும் ஒரே சமயம் அங்குள்ள ஒருசபாமண்டபத்தில் வந்து கூடுமாறு தனித்தனியாக அவர்களுக்குக் கடிதம் எழுதப்பட்டிருக்கின்றது. இது ஒரு சுயம்வரம் போல் நடைபெறும் போலும்.

*　　*　　*

நார்வே நாட்டிலே தையல் சமையல்—இவைகளில் வல்லவர்களாயிருக்கும் பெண்களைத்தான் புருஷர்கள் விவாகஞ் செய்துகொள்கிறார்களாம்.

*　　*　　*

பிரிட்டனி என்னும் இடத்திலே, மனிதசஞ்சாரமில்லாத டோனிஸ் என்னுமிடத்தில் உள்ள தீபஸ்தம்பத்திற்கு விளக்கேற்றிவந்த அரன் பாது காப்பாளன், நோயால் பீடிக்கப்பட்டிருந்தபொழுது, அவன்மனைவி விளக்கேற்றுவதற்காக மேலே போய் வருமுன் நாயகனிறந்து கிடப்பக்கண்டு மனம் வருத்தமுற்றிருந்தபொழுது, சுழன்றுகொண்டிருக்கவேண்டிய விளக்குச்சுழலாது இருப்பதைக்கண்டு, இருபிள்ளைகளை மேலேற்றி, விடியும் வரையும் விளக்கைச்சுழற்றிக்கொண்டு இருக்கும்படி செய்து, மற்றை இருபிள்ளைகளுடன் தான் இறந்தவனருகே இருந்தாள். தீபம் சுழலாதாயின், மரக்கலங்கள் வழிதப்பிப் பெருங்கேடு விளையுமென்று அறிந்து இவள்செய்தது மிகவும் பாராட்டிப் புகழத்தக்கது.

*　　*　　*

பிரான்ஸுக்கும் இங்கிலாந்துக்கும் மத்தியிலுள்ள இங்கிலீஷ் சானலானது 21-மைல் அகலமுள்ளது. இதை நீந்தித் தாண்டுவதென்று இங்கிலாந்திலும் பிரான்ஸிலுமுள்ள சில ஸாஹஸக்காரர்கள் பிரயத்தனப்பட்டுக் கூடாமல் கைவிட்டு விட்டனர். 5, 6 வருஷங்களுக்கு முன் காப்டன் கூக்ஸ் என்ற ஒரு ஆங்கிலேயர் 24 மணி சாவகாசத்தில் இச்சமுத்திரத்தை நீந்திக் கடந்தாரென்று கேள்வியுற்றோம். அதற்குப் பிறகு இக்காரியத்தில் தலையிட்டவர்கள் இல்லை. இப்பொழுது பர்கஸ் என்ற ஒருவர் இக் கடலைக் கடப்பதற்குப் பல தடவை பிரயத்தனப்பட்டுத் தோல்வியுற்றிருந்தார். இப்பொழுதோ அவர் ஸவுத்போர்ட்லண்ட் லயிட் ஹவுஸில் 5-9-11-ல் காலை 10. 50 மணிக்கு சமுத்திரத்தில் இறங்கி, நீந்த ஆரம்பித்து பிரான்ஸில் கிஸ்நெஸ் முனையில் 6-ம் தேதி காலை 10 மணிக்குக் கரையேறினாராம்.





இம்மாதம் முதல் கர்ரன்ஸி நோட்டுகள் முழுநோட்டுகளாயிருந்தாலுஞ் சரி, அரைநோட்டுகளாயிருந்தாலுஞ்சரி, இன்ஷூர் செய்யப்பட்டிருந்தாலன்றித் தபால் மூலமாய் அனுப்பப்படமாட்டா என்ற உத்திரவு அமுலுக்கு வந்திருக்கிறது.

*　　*　　*

அமெரிக்கா ஐக்கிய மாகாணத்தைச் சேர்ந்த இந்தியானா இராஜ்யத்தில் விவாகம் செய்து கொள்ளப் பிரியமுள்ள ஆடவர்கள் கல்யாண லைசென்ஸ் பெறப்போகும்பொழுது தாங்கள் தேகசௌக்கியமுடையவர்களென ஒரு வைத்தியரிடமிருந்து சர்ட்டிபிகேட் பெற்றுச் செல்லவேண்டுமாம்.

*　　*　　*

வைர ரத்தினக் கற்களைப் பரீக்ஷிப்பதற்கு ஓர் பத்திரிகை மிகச் சுலபமான முறையொன்றைக் கூறுகின்றது. கடுதாசியிலே ஈயப்பென்சிலால் அல்லது மையால் ஓர் குற்றிட்டு, அதை வைரக்கல்லுக்கு ஊடாகப் பார்த்தால் மேற்படி குற்று ஒற்றையாய் மாத்திரம் தோற்றுமேயாகில், இரத்தினக் கல் சரியானது. ஒன்றுக்கு மேற்பட்ட குற்றுகள் தோற்றினால் சரியான கல்லன்று.

*　　*　　*

அமெரிக்கா தேசத்துச் சக்கிலியர்கள் போஸ்டன் என்னுமிடத்தில் கூடிய ஒரு பொதுக்கூட்டத்தில் போன தலைமுறை ஸ்திரீகளைவிட இத்தலைமுறை ஸ்திரீகளுக்குப் பாதங்கள் பெரிதாகயிருக்கிறதென்று அபிப்பிராயப்பட்டார்கள். இப்படி ஸ்திரீகளுக்குப் பாதங்கள் பெரிதானதற்குக் காரணம் அவர்கள் செய்யும் வேலையும், தேகப்பயிற்சியுமாமென்று ஒருவர் சொன்னார்.

*　　*　　*

ஜப்பான் தேசத்தில் பிரின்ஸ் கட்ஸுரா என்பவரால் ஜனோபகார சங்கமொன்று ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இச்சங்கத்தவர்கள் இரண்டரை லக்ஷம் பவுன் முதல் வைத்து அதில் வரும் வட்டியைக் கொண்டு பிணியால் வருந்தும் ஜனங்களுக்கும், ஏழைகளுக்கும் தர்மத்திற்குச் செலவு செய்வதென்று தீர்மானித்திருக்கிறார்கள். ஜப்பான் தேசச் சக்கரவர்த்தி தம் சொந்தப் பணத்திலிருந்து லக்ஷம் பவுன் இச்சங்கத்துக்கு உதவிசெய்திருக்கிறார்.

*　　*　　*

வாஷிங்டன் என்னும் பட்டணத்திலுள்ள சிலான் ஏரிக்குச் சமீபத்தில் ஒரு ஆப்பிள் மரம் ஆறாயிரம்பவுன் விலைக்குக் கேட்கப்பட்டது. அம்மரச் சொந்தக்காரர் அம்மரம் பெரியதாய் அதன் பழங்களை சந்தையில் விற்றாலே அதிகப்பணம் வருமென்று நினைத்து, விலைக்குக் கொடுக்கச் சம்மதிக்கவில்லை. இந்தமரம் இருபது வருஷத்துக்கு முந்தி ஒரு இந்தியனால்பயிரிடப்பட்டு விர்த்திக்குக் கொண்டு வரப்பட்டதாம். இதன் பழம் மஞ்சள் நிறமாம். அநேக நாட்கள் கெடாமலிருக்கின்றது. ஸ்போகேன் என்னுமிடத்தில் ஆப்பிள்பழக் காட்சியில் இம்மரத்தின் ஆப்பிளுக்கு முதன்மையான பரிசு கிடைத்தது.

அமெரிக்காவில்தான் ஸ்திரீகள் மற்றத் தேசங்களை விட அதிகமாக குமாஸ்தாக்கள், சம்பிரதிகள் முதலான அலுவல் பார்த்து வருகிறார்கள். இனி ஸ்திரீகளை வேலைக்கு அதிகமாய் வைத்துக்கொள்ளக் கூடாதென்று ஐக்கிய மாகாணங்களில் அநேக பெரிய வர்த்தகர்களும், கவர்ன்மெண்டு அதிகாரிகளும் தீர்மானஞ் செய்திருக்கிறார்கள். சாதாரணமாய் ஸ்திரீகளுடைய முக்கிய நோக்கம் கலியாணத்தைப் பற்றியிருப்பதாலும், உத்தியோகஞ்செய்வதை அதற்குச் சாதனமாக அவர்கள் பாவிப்பதாலும், அந்தந்த உத்தியோகத்தில் தாங்கள் அநுபோக மடைந்து முன்னுக்கு வரவேண்டுமென்ற எண்ணம் அவர்களுக்கு இல்லாதபடியாலும், உத்தியோகங்களுக்கு அவர்கள் தகாதவர்களென்று அமெரிக்கர்கள் அபிப்பிராயப்படுகிறார்கள்.

* * *

ஜப்பான் தலை நகரமாகிய டோக்கியோவில் ஹானன் உமா மாஸி என்ற சிற்பி, மரத்தில் தம்மைப்போல் ஒரு சிலை செய்திருக்கிறார். இச்சிலையையும் அவரையும் பக்கத்தில் வைத்து பார்ப்பவர்களுக்கு இது சிலை, இது உருவமென்று கண்டு பிடிக்க முடியாதபடி சிலை அவ்வளவு நேர்த்தியாய்ச் செய்யப்பட்டிருக்கிறதாம்.

* * *

அழகாபுரியில் ஒரு செட்டியார் வீட்டில் ஒரு ஸ்திரீ சில வாரங்கட்கு முன்னர் ஒரே முறையில் மூன்று ஆண் குழந்தைகளை யீன்றாள். அக்குழந்தைகட்குப் பிறந்த முறைப்படி இராமன், இலட்சுமணன், பரதனெனப் பெயரிடப்பட்டிருக்கின்றதாம்.

* * *

பிரான்சுதேசத்தில் ஸ்திரீகள் பாரிஸ்டர் பரீக்ஷைகொடுத்து நியாயவாதிகளாக இருந்து வருகிறார்கள். மாடம் இஸ்ஹார்ட் என்னும் ஸ்திரீ பாரிஸ்டர் அவிக்னன் மாஜிஸ்திரேட் ஸ்தானத்தை அபேக்ஷித்து மனுக்கொடுத்திருக்கிறார்.

* * *

நமது மாக்ஷிமை தங்கிய ஜார்ஜ் சக்கரவர்த்தியவர்களது மகுடாபிஷேகம் இங்கிலாந்தில் நடந்ததல்லவா? அச்சமயம் போபால் மஹாராணி அவர்களுக்கு ஜி. ஸி. ஐ. இ. என்ற பட்டம் அளிக்கப்பட்டது. இந்திய ஸ்திரீகளுக்கு இப்பட்டம் இதுவரை கொடுக்கப்பட்டதேயில்லை. இதுவே முதல் தடவையாகும்.

* * *

பிக்கா டெல்லி என்னுமூரில் ஒரு ஐரோப்பிய ஸ்திரீக்கு நாய் முகத்தோடு கூடிய ஒரு குழந்தை பிறந்திருக்கிறது. அக்குழந்தை அநேக நாள் ஜீவித்திருக்குமென்று வைத்தியர்கள் சொல்லுகிறார்கள்.

——— 76



ஜார்ஜ் சக்ரவர்த்தியும், மேரி சக்ரவர்த்தினியும்.



காலஞ்சென்ற சகோதரி நிவேதிதா தேவி.

(பக்கம் 21.)



டில்லி தர்பார் ஸ்பெஷல் நம்பர்.

# பெண் கல்வி.

161976

சித்திர சகிதமான ஒரு மாதாந்த சஞ்சிகை.

கண்ணுடையரென் பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்.—திருக்குறள்.

தொகுதி 1.] 1911ஃ நவம்பர்–டிசம்பர்மீ [பகுதி 4-5.

## ஸ்ரீபாரத சக்ரவர்த்தி நி சக்ரவர்த்தியார்
## ஸ்ரீமார்யா-ஸ்ரீஜயார்ஜியார்-அபிஷேக மஹோத்ஸவம்.

---

(ஸ்ஸ்ரி-நீஸ்ரி-க்க்ம-காரிஸ்-ரிஸ்ரி-ஸா)

ஸ்ரீராஜராஜர்கள் சேர்ந்துபுகழ் பஞ்சம
ஸ்ரீஜ்யார்ஜீ யெனும் சிறந்தநாம
மார்யர்களுள்ளத்தி லாங்கலாதீசரி
னத்புதச் செயல்களை யாழ்த்துமன்பால்;
யாவரேனும்புவியி லித்தகைய கீர்த்தியொடு
யாண்டுமே யரசர்க ளிருந்ததில்லை;
ஸ்ரீமார்யை யென்னுமோர் சீர்த்திபெயர்பூண்டொழுகும்
ஸ்ரீமஹா ராணியுடன் தில்லிநகரில்,
ஜய! ஜயா! வென்ன பாரதச் சக்ரவர்த்தி
யார்ய பூபர்கள் தொண்டு கொட்டாண்டுவந்த
ஜித்ஸ ராஸநந்தன்னிலே சேர்ந்து வாழ
யார் கொலன்புடன் களித்துற ரிந்தியர்காண்!
அகில புவநங்களையு மொரு குடைதண்ணிழலில்
அன்போடு நமையாளு மாங்கலர்கோன்
பிருது கொடிபோலு மிப்பிருதிதலந் தன்னிலே
பிரபைபோல் விளங்குமத் தில்லிநகரில்
ஷேக்ஸ்பியர் மஹாகவி வரைந்த ஹாம்லெட்டெனுஞ்
சீர்பெறு நாடகம் மொழிபெயர்ந்த
கவிவாணர் கீர்வாண பாஷைதனி லெழுதிய
கம்பீர கவிதையால் கௌரவிக்க
மஹித மார்யா ஸமேதராய் மாட்சியாய்ம
ஹோத்ஸவத்தோடிபாரதர் ஹூணர்தாமும்
ஸகல வைபத்தோடுமே ஸம்ஸ்துதிக்க
வருக! வருக!! நம்மரசர்கோன் வாழ்க! வாழ்க!!

### ஆங்கில கீதி.

(ப்ப்ப்–ப்ரம்க்–ம்ம்ம்–ம்ரக்ரி–காம்கரஸ–காமப–தமகாரி–ஸா.)

ஜய ! ஜ-யீபவ ! ஜய ! ஜ-யார்ஜிம-ஹீப-தே !
ஜகத-யீஸ்வர ! மஹித-ஸ்ரீமார்-யாப-தே !!
ஜய ! ஜயா ! பவநி-பரண-நிபுண !
ஜநஹித-தோரத ! ஸார்வபௌம !
தயய ! பாரத-ஹ்ருத்ய-ரஞ்ஜந !
ராஹஜ-நாவக ! தைர்யபீம ! ஜய ஜயீபவ.

## டில்லிதர்பாரும் நமது கடமையும்.

---

இப்பூவுலகத்திற்கு ஒளியும் வெப்பமும் அளிக்கும் சூரியன் ஒருபோதும் அஸ்தமிக்காத சிறந்த இராஜ்யமென்று புகழப்பட்டு, இப்பூமண்டலமெங்கும் பரவியுள்ள பிரித்தானிய இராஜ்யமுழுமையிலும் இவ்வருஷம்சென்ற ஜூன்மீ 22தேதி ஒரு பெரிய திருநாளாகக் கொண்டாடப்பட்டதல்லவா? நமது சக்கரவர்த்தியாரால் ஒற்றைக் குடையின்கீழ் ஆளப்படும் கோடானுகோடிப் பிரஜைகளும், "மகாராஜா இன்று மகிமைபொருந்திய சிங்காதனமிவர்ந்து இனிப்பிரஜாகோடிகளைப்பரிரக்ஷித்துக்கொண்டு பல்லாண்டு பல்லாண்டாக வாழ்ந்திருக்கக் கடவுள் கடாக்ஷிப்பாராக" என்று மனத்தால்இராஜபக்தியுடன்கடவுளைப்பிரார்த்தித்துக்கொண்டதுமன்றி, வாயாரத்துதிபாடியும் கடவுளைத்தோத்திரஞ்செய்தும் வாழ்த்தினார்கள். இப்பிரஜாகோடிகளிலெல்லாருமே அவரைக் கண்ணாரக் காணவும், அவர் அமுதவாக்கைக் காதால் கேட்கவும் பாக்கியம் பெற்றவர்களல்ல; அவரது பாதம் படாத தேசாந்திரங்களிலிருந்துகொண்டு அவரது பெயரை மட்டுமே கேட்டு, அவரது தர்ம அரசியலின் பலன்களை அனுபவித்துவரும் கோடானுகோடிப் பிரஜைகளாம். இவர்களனைவருக்கும் தெரிந்த விஷயமொன்று: இங்கிலாந்தில் மகாராஜா பொன் சிங்காசனத்திலமர்ந்து, முடியில் கிரீடமும் கையில் செங்கோலும் தரித்து, ஏகசக்கிராதிபதியாய், நீதிமுறைவழுவாமல், தம்பிரஜைகளைப் பரிபாலித்து வருகிறாரென்பது. இப்படி ஒருநாளும் கண்ணால் காணாத தூரதேசங்களிலிருக்கையிலும், அங்குள்ள பலவகைப் பிரஜைகளும் அன்பும் பக்தியுமுடையவர்களாய்க் கொண்டாடிக் கொ





டாடி வாழ்த்தும்படியான அருமை பெருமை மகாராஜாவின் நீதிபரிபாலனமல்லவா? அளி, கொடை, செங்கோல், குடியோம்பல் முதலிய மன்னவர்க்குரிய மேலான குணங்கள் குடிகொண்டவராகிய மன்னவர் திலகமாக அவர் விளங்குகிறார்.

பலவாண்டுகளாக ஈஸ்டிந்தியா கம்பெனியாரின் அதிகாரத்திற்குட்பட்டிருந்த நமது நாட்டின் ஆளுகையை 1857-ஆம் வருஷத்தில் நடந்த பெரிய கலகத்திற்குப்பின், 1858-ஆம் வருஷம் நவம்பர்மீ 1 தேதியன்று காலஞ்சென்ற விக்டோரியா மகாராணியார் தாமே வகிப்பதாக ஒருசாஸனம் விடுத்தார். அக்காலமுதல் நாகரீகத்திலும் கல்வியிலும் நம்நாடு விசேஷ அபிவிருத்திபெற்று வருகிறது. அதுமுதல் விக்டோரியாமகாராணியார் இத்தேசத்துமன்னுயிர்களைத் தம்முயிர்போல் பாதுகாத்து, இத்தேசம்முழுமையும் தம்மாட்சிக்குள்ளடக்கி ஏகசக்கிராதிபதியாகப் பரிபாலித்து வந்தார். ஆயினும், இத்தேச பரிபாலனத்திற் கறிகுறியா யிருக்கும்படி பிரத்தியேகமான பட்டமொன்றையும் அவர் சூடிக்கொள்ளாமலிருந்தது பெருங்குறைவாயிருந்தது. இந்தியாவின் க்ஷேமத்தில் அவரின் சிரத்தை அதிகப்பட்டுக்கொண்டேவந்தது. அவர்தம்அருமைமகனை வேல்ஸ் இளவரசாயிருந்த எட்வர்டை 1875-ஆம் வருஷம் இந்தியா யாத்திரைக்கு அனுப்பினார். அக்காலம் இந்தியப்பரிபாலனத்திற்குரிய பட்டமொன்று மகாராணியார் அணிந்துகொள்ளுதல் உசிதமாகுமென்று வைசிராயாயிருந்த நார்த்புரூக் பிரபு பிரேரணை செய்தார். 1876-ஆம் ஆண்டில் மகாராணியார் செய்த பிரசங்கமொன்றில், வைசிராயின் பிரேரணையை ஆமோதித்துத் தாம் இந்திய மன்னர்களிடமும் பிரஜைகளிடமும் கொண்டுள்ள அனுதாப உணர்ச்சி விசதமாக, தாம் ஒருபட்டம் ஏற்றுக்கொள்வதாகச்சொன்னார். உடனே வைசிராயும் அவர் சபையாரும் இதற்குச் சம்மதித்தார்கள். 'சக்கிரவர்த்தினி' என்றபட்டத்தை மகாராணியார் அங்கீகரிப்பதை, 1877-ஆம்வருஷம் ஜனவரிமீ 1 தேதி டில்லிமாநகரில் ஒருதர்பார்கூட்டி, பகிரங்கப்படுத்துவது என்று இராஜாக்ஞை பிறந்தது. இராஜப்பிரதிநிதியாகவிருந்த லிட்டன்பிரபு இத்தேசத்தில் முன்னர் மகம்மதிய மொகலாய ராஜாக்களுக்குப் பலவருஷகாலம் இராஜதானியாகவிருந்த டில்லிமாநகரத்திற்கு மேற்கில், சந்திரவம்சத்து இராஜாக்களான பாண்டவர்கள் இராஜசூயயாகம் செய்த தருமக்ஷேத்திரமான குருக்ஷேத்திரத்தில், 1200

சிவில் உத்தியோகஸ்தர்கள், 14,000 பிரிட்டிஷும் சுதேசமும் சேர்ந்த சைநியங்கள், 77 இராஜர்கள் தலைவர்கள், 300 பிரபுக்கள் கனவான்கள், ஒட்டுமொத்தம் 68,000 ஜனங்கள் கூடிய மகாசபையைச்சேர்ந்து, 'இந்து தேசச் சக்கரவர்த்தினி' என்னும் பட்டப்பெயரை மகாராணியார் வகித்தவிளம்பரத்தை நானாபாஷையிலும் மொழிபெயர்த்துப் படித்துப்பிரகாசம் செய்து, பலவகை வாத்தியங்களும் முழங்க, பீரங்கிகள் வெடிதீர்க்க, அவரவர்க்குரிய பிருதுகளும்,பட்டங்களும்ஏற்றபடி அளித்துஉபசாரம்செய்து அனுப்பினார். அச்சுபதினம் ஒப்புயர் வற்ற பெரிய திருவிழாவாகக்கொண்டாடப்பட்டது. அன்று அந்த அலங்காரமான மகாசபையில் பட்டுப்பீதாம்பரங்களும், நவரத்தின கசிதமான கவசங்களும், கோடிசூரியன உதித்தாற்போலக் கண்களைப்பறிக்கும்படியான பூஷணங்களுமணிந்து மன்னவர்கள் கூடியிருந்தகோலக்காட்சியையாவரே சரியாய் வருணித்து எழுதியுள்ளார்.

மகாராணி சக்கரவர்த்தினி விக்டோரியா அம்மாளவர்கள் 1901-ஆம்வருஷம் ஜனவரிமீ 22தேதி தேகவியோகமடைய வேல்ஸ் இளவரசாயிருந்தவர் ஏழாவது எட்வர்ட் என்றபட்டஞ்சூடி சிங்காதன மேறினார். இங்கிலாந்தில் அவர்முடிசூட்டு வைபவம் 1902-ஆம்வருஷம் ஜூன்மீ 26 தேதியன்று நிச்சயிக்கப் பெற்றது தடைபட்டு, ஆகஸ்டுமீ 9 தேதிகடவுளருளால் நிறைவேறியது. இம்மகோத்ஸவத்திற்கு இந்தியாவிலிருந்து சிலரேபோனார்களாதலால் எட்வர்டரசர், அம்மகோத்ஸவத்தைத்தாம் நன்றாயறிந்தும் பழகியுமுள்ள இராஜவிசுவாசமுள்ள இந்தியப்பிரஜாகோடிகள் அனைவரும் கொண்டாட, ஓர்சந்தர்ப்பம்கொடுக்கக்கருதி, டில்லியில் 1903-ஆம் வருஷம் ஜனவரிமீ 1 தேதி தர்பார் நடத்த ஏற்பாடுசெய்ய, இராஜப்பிரதிநிதியாகவிருந்த கர்ஸன்பிரபுவுக்கு 1902-ஆம் வருஷம் அக்டோபர் மீ 22 தேதி ஆக்கினை செய்தார்.

சுமார் 6 கோடி ஜனங்களை ஆட்சிபுரிந்துவரும் 100 சுதேச மன்னர்களும், 2,30,000 சைநியங்களும்,23 கோடி ஜனங்களின் பிரதிநிதிகளாக உத்தியோகஸ்தர்களும் உத்தியோகஸ்தரல்லாதவர்களும், இராஜாதிராஜனிடம் தங்களுக்குள்ள பக்தியைப்புலப்படுத்த விஜயம்செய்திருந்தார்கள். அச்சமயம் கர்சன் பிரபு எட்வர்ட் சக்கரவர்த்தி, கிருபைகூர்ந்து அனுப்பினசாஸனத்தை மகத்தான சபையில் வாசித்தார்:





"என்னுடைய மகுடாபிஷேகத்தைக்கொண்டாடும் இந்தியா மகாஜனங்களுக்கு நான் வந்தனோபசாரத்தை அனுப்புவது எனக்கு மிக்கச் சந்தோஷத்தைக் கொடுக்கிறது லண்டனில் நடந்தேறின மகுடாபிஷேகத்துக்குச்சில இந்தியமன்னர்களும் பிரதிநிதிகளுமே வரச்சாத்தியமாயிற்று. ஆதலால், இந்தியமன்னர்கள், தலைவர்கள், ஜனங்கள், இராஜாங்க உத்தியோகஸ்தர்கள்- அனைவரும் இம்மங்கள சம்பவத்தைக்கொண்டாட ஒருசமயமுண்டாக, டில்லியில்ஒரு தர்பார் நடத்தவைசிராய்-கவர்னர்ஜெனரலுக்குத்தெரிவித்தேன். நான், 1875-ஆம்வருஷம் இந்தியாவுக்கு விஜயம் செய்து, திரும்பியகாலமுதல் அந்நாட்டினிடத்திலும்குடிகளிடத்திலும் அந்தரங்கப்பிரியம் கொண்டிருக்கிறேன். என்வம்சத்தினிடமும் என்னிடமும் அவர்களுக்குள்ள மனப் பூர்வமான இராஜபக்தியை நான் அறிந்திருக்கிறேன். சிலவருஷங்களுக்குள்ளாக இராஜபக்தியைவிளக்க பல சாக்ஷயங்களிருக்கின்றன. என்சக்ராதிபத்யத்தில் நடந்தேறிய யுத்தங்களில் இந்திய சைநியங்கள் விசேஷமான ஊழியங்கள் செய்திருக்கிறார்கள்.

"எனது அருமை மகனாகிய வேல்ஸ் இளவரசும் இளவரசியும் சமீபத்தில் இந்தியாவிற்கு விஜயம் செய்வார்கள். நான் அவர்கள் இந்தியாவைப்பார்க்கவேண்டுமென்ற என்னிஷ்டத்தைத் தெரிவித்திருக்கிறேன். அவர்களும் அவ்வாறேபார்க்க ஆவலாயிருக்கிறார்கள். இச்சந்தர்ப்பத்தில் கூடுமானால் நானே நேரே வந்திருப்பேன். இருந்தாலும், எனது முடிசூட்டு வைபவகாலத்தில் என்வம்சத்தவரிருக்கவேண்டி, எனது சகோதரர் கன்னாட் பிரபுவை அனுப்பியிருக்கிறேன்."

விக்டோரியா சக்கரவர்த்தினியார் நம்மிடம் கொண்டிருந்த அன்பைக்காட்டிலும் எட்வர்ட் சக்கரவர்த்தியின் அன்பு அதிகமாகப்புலப்பட்டது. இவரைக்காட்டிலும் இவர் திருமகன் ஜார்ஜ் அரசரின் அன்பு அதிகம்.

இவ்வருஷம் மார்ச்மீ 22 தேதி யன்று இவர் டில்லியில் முடிசூட்டு வைபவத்துக்கு முகூர்த்தநாள் தீர்மானிக்கவேண்டுமென்று ஓர் இராஜாக்கினையைப் பிரசுரம் செய்தார்:

"நாம் மனதில் வைத்துப்போற்றும் (எமது தந்தை) எட்வர்டரசர் 1909-ஆம் ஆண்டு மேமீ 6தேதியன்று காலகதியடைந்தா

ராதலால், நாம் அவருக்குப்பின் கடவுள் கடாக்ஷத்தால் ஐக்கிய இராஜ்யமாகிய கிரேட்பிரிட்டன் ஐர்லாந்து—க்கும், கடலுக்கப்பாலுள்ள இராஜ்யங்களுக்கும் அரசராயும், மதசம்ரக்ஷகராயும், இந்தியாச்சக்கரவர்த்தியுமாயும், 5-வது ஜார்ஜ் என்ற பட்டப் பெயருடன் சிங்காதன மிவர்ந்தோமாதலாலும், நமது ஆட்சியில் முதலாண்டில் 1909 ஆம்வருஷம் ஜூலை 19ந்தேதியிலும் நவம்பர் 7ந்தேதியிலும் விடுத்த சாஸனங்களில், சர்வவல்லமையுடைய கடவுளின் அநுக்கிரகத்தாலும், ஆசீர்வாதத்தாலும், 1911-ஆம் வருஷம் ஜூன் மீ 21 ந்தேதியன்று நமது மகுடாபிஷேகத்தைக் கொண்டாடுவதாக நமக்குள்ள விருப்பத்தைவெளியிட்டோமாதலாலும், நம்மிந்தியா நாட்டிலுள்ள அன்பார்ந்த குடிகளுக்கு அம்மஹோத்ஸவம் நடைபெற்றதைத் தெரிவிக்கவேண்டுமென்பது நமது ஆசையும் ஆவலுமாதலாலும், இதற்காக நம்முடைய ஆதீனத்துக்குட்பட்ட கவர்னர்களையும், லெப்டினண்ட் கவர்னர்களையும், அரசர்களையும், தலைவர்களையும், பிரபுக்களையும், இந்தியச்சக்கிராதிபத்யப் பிரதிநிதிகளையும் நம்சன்னிதானத்துக்கு அழைக்க விருப்பமிருப்பதாலும், நாளது டிசம்பர் மீ 12 ந்தேதியன்று டில்லியில் தர்பார் நடத்தி நம்மகுடாபிஷேகத்தைப் பகிரங்கப் படுத்தவேண்டுமென்ற நோக்கத்தை இச்சாஸனத்தால் தெரிவிக்கலானோம். இது காரியார்த்தமாக வைசிராயும் கவர்னர்ஜெனரலுமாகியும் நம் பூர்ணநம்பிக்கையும் அன்பும் பெற்ற சார்ல்ஸ் பரான் ஹார்டிஞ்சு ஆப் பென்ஹர்ஸ்ட் என்பவரை சகல முயற்சிகளும் செய்யும்படி ஆணையிடுகிறோம்.”

இவ்வாக்கினையைச் சிரமேற்கொண்ட நமது வைசிராய் தமது ஆலோசனைசபை மெம்பர்களிடம் தெரிவித்து, அவர்களின் சம்மதியின்மேல் இந்தியாப்பிரதேசமெங்கும் இணையற்றதும், கம்பீரமானதும், மங்களகரமானதுமான மகுடாபிஷேகத்தைக்கொண்டாட மாகாணக் கவர்ன்மெண்டார்களுக்கு உத்தரவு செய்தார். மாகாணக் கவர்ன்மெண்டார் தங்களுக்கு அடங்கியுள்ள கலெக்டர் முதலானவர்களுக்கு உத்திரவைத் தெரிவித்தார்கள். இவ்விதமாய் டில்லிமுடிசூட்டு தர்பார் நடைபெறும் விஷயம் நாடெங்கும் பிரசுரமாகியது. ஐந்தாவது ஜார்ஜரசர் தம்பதி சமேதராய் விஜயஞ்செய்து சக்கரவர்த்தி என்ற பட்டத்தைவகித்து, நேரில்வந்து தர்பார் நடத்தப்போகிறதாகச் செய்தி பரவியதும் சகலஜனங்களும்





அளவிலா ஆனந்தமடைந்தார்கள். நம்மை ஆண்டுவந்த இங்கிலாந்து சக்கரவர்த்திகளுள் இந்தியாவுக்கு விஜயம்செய்து இராஜாங்க தர்பார் முகதாவில் நடத்துகிறவர் ஐந்தாவதுஜார்ஜே. இது கிடைத்தற்கும் காணற்கும் அரிய சம்பவம் என்று கூறாமலேவிளங்குகிறது. எந்தப் பூமியின்மேல் இராஜா பாதஸ்பரிஸம் உண்டாகின்றதோ, அத்தேசமும், ஜனங்களும் பரிசுத்தமடைகிறார்களென்பது நம் புராணக்கொள்கை. ஆகையால், நம்சக்கரவர்த்தியின் இராஜ்யம் மேன்மேலும் பெருகவும், சக்கிராதிபத்யம் நாளுக்குநாள் செழித்தோங்கவும், நமது சக்கிரவர்த்தியும் சக்கரவர்த்தினியும் அமராசனத்திலமர்ந்து செங்கோல் செலுத்தி, பிரஜைகளுக்கெல்லாம் பெற்றோராகப் போற்றப்பட்டும் கொண்டாடப்பட்டும் பல்லாண்டு பல்லாண்டு இராஜ்ய பாரம் செய்யவும், சுகஜீவிகளாக வாழவும், மங்களவாத்திய கோஷத்துடனே கடவுளை இமயமலைமுதல் கன்னியாகுமரி வரையிலும் பரவியிருக்கும் இப்பரதகண்டத்திலுள்ள சகலரும் பிரார்த்திப்பார்களாக.

பத்திராதிபர்.

---

## இராஜ தம்பதிகளின் இந்திய யாத்திரை.

---

நமது சக்கிரவர்த்தியாகிய ஐந்தாவது ஜார்ஜ் அரசர், தம்பதி சமேதராய் இந்தியாவில் டில்லி முடிசூட்டுவைபவத்துக்கு வரும் நோக்கத்துடன் இங்கிலாந்தைவிட்டு நவம்பர் மீ 11உ யாகிய சுபதினத்தில் சுபகாலத்தில் புறப்பட்டார். இவர்கள் வாஸஸ்தலமாகிய பக்கிங்காம் மாளிகையிலிருந்து புறப்பட்டு ஊர் வலம்செய்துகொண்டு விக்டோரியா ஸ்டேஷனுக்குச்சென்று ரயிலேற வேண்டியதாதலால், அவர்கள் செல்றாஸ்தாக்களிலுள்ள மகாஜனங்கள் இராஜதம்பதிகளின் பவனியைச் சௌகரியமாய்க்கண்டு களிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. பிரின்ஸ் ஆப் வேல்ஸும், மேரி ராஜகுமாரத்தியாரும் பின்தொடர்ந்து வரவும், லாண்டோவண்டியில் திறந்தவண்ணமாக முன்னும்பின்னுமாக குதிரைச்சாரதிகள் கவிர்ந்துவரவும், புறப்பட்டார்கள். ஜனங்கள்

அனேகமாகத் தெருப்பக்கங்களில் வரிசைதீர்ந்து அவர்கள்போன மார்க்கமெல்லாம் மனப்பூர்த்தியாகத் தரிசனஞ்செய்து கொண்டாடிக்கைகொட்டினார்கள். விக்டோரியா ஸ்டேஷனுக்கு, இராஜதம்பதிகளுக்கு ஆசிகூறி வழியனுப்புவதற்காக, பிரபலகனவான்களும் ராஜவம்சத்தைச் சேர்ந்த ஒவ்வொருவரும், அம்பாஸடர்களும் மிஸ்டர் ஆஸ்குவித் என்னும் பிரதான மந்திரியாரும், அவர்மனைவியாரும், ராஜாங்கஆலோசனைச்சபையாரும், காண்டர்பரிஆர்ச்பிஷப்பு என்னும் அத்யக்ஷகுருவும், ராஜாங்கப்பிரதிநிதிகளும், ஸ்தானாதிபதிகளும், இந்தியா ஆபீஸ் உத்தியோகஸ்தர்களும் ஆக 300-பேர் வரையில் முன்னாடியே சென்று காத்துக் கொண்டிருந்தார்கள். இவர்களெல்லாம் உபசாரம் சொல்லி முடிந்து ரயில் புறப்பட அரைமணி தாமதப்பட்டது. இராஜதம்பதிகள ரயிலேறி போர்ட்ஸ்மத்துறைமுகத்துக்குச்சென்று கப்பலேற வேண்டுமாதலால், அதற்காக வேண்டிய ஏற்பாடுகள் சரியாகவிருக்கின்றனவா என்றுபார்த்துக் கொள்ளும்பொருட்டு மிஸ்டர் வின்ஸ்டன் சர்ச்சில் முன்னாடியே அங்கு சென்றிருந்தார்.

கோல்ட் ஸ்டீம் கார்டுகள் மரியாதையாக சலாம் செய்தார்கள். தேசகீதம் பாண்ட் வாசித்தபிறகு, கால்மணிநேரம் உற்சாகமான வார்த்தைகள் பேசி முடிந்தவுடன் 'கடவுள் ராஜாவைக்காப்பாற்றவேண்டும்' என்பதாகவிடாத கூச்சலிடப்ப, ரயில் வண்டி விக்டோரியா ஸ்டேஷனிலிருந்து புறப்பட்டு விட்டது. போர்ட்ஸ்மத்வரையில் தாய்ராணியாகிய அலக்ஜாந்திரா ராணியாரும், ஆர்தர் கன்னாட் என்னும் இளவரசரும் கூடவே சென்றார்கள். போர்ட்ஸ்மத் சேர்ந்தவுடன் நேர்த்தியான கப்பற் சைன்யங்களும், பட்டாளங்களும் நானாவித பாண்ட் வாத்தியங்களும், ராஜவரவிற்காக எதிர்ப்பார்த்திருந்தவர்கள் சலாம் வாங்கி மரியாதை செய்தார்கள். ஸ்டேஷனிலிருந்துசென்று இவர்கள்மெடீனா ஸ்டீமர் ஏறின உடனே, அதன் பாய்மரத்தில் கொடி ஏற பீரங்கிவெடிகள் முழங்கின அலெக்ஸாந்திரா ராணியார், மாட் இராஜகுமாரத்தி, வேல்ஸ் இளவரசர், மேரி இராஜகுமாரத்தி ஆக ராஜ குடும்பத்தாரெல்லாரும் பலகாரம் அருந்தினார்கள்.

பிறகு கொஞ்சநேரம் வரையில் வழிப்பிரயாண உபசாரவார்த்தைகள் ஒருவருக்கொருவர் கலந்துபேசிச் செலவுபெற்றுக்கொண்டார்கள்.





இராஜ தம்பதிகளுக்காகப் புதிதாய்ச் செய்யப்பட்டிருக்கும் P & O புகைக் கப்பலின் பெயர் மெடீனா. இக்கப்பலில் சகல சௌகரியங்களும் ஏற்பட்டிருக்கின்றன. இதன் நீளம் 560-அடி, அகலம் 63½ அடி. இது 1,30,000-டன் பாரமேற்றற் குரியது. இது 16,000 குதிரையின் வேகமுடையது. இது மணிக்கு சுமார் 23-மைல் ஓடும். இதன் மேற்புறத்திற் பட்டத்துக்கொடி பறக்கிறது. இது கப்பற்படை வீரர்கள் நிறையப் பெற்று, அட்மிரல் நெப்பஸாலென்பவராற் செலுத்தப்படுகிறது. இராஜக்கிரீடங்கள் இராஜசின்னங்களாகிய செங்கோல் முதலியனவும், சக்ரவர்த்தினி அணிந்துகொள்ளும் ஆபரணங்களும், சில விலையுயர்ந்ததும் பெயர்போனதுமான ரவைக்கற்களும், இரும்புப் பெட்டிகளில் சேதித்து வைக்கப்பட்டு, பிரத்தியேகமான அறையொன்றில் அதற்காக நியமிக்கப்பட்டிருக்கும் ஒரு உத்தியோகஸ்தரின் பந்தோபஸ்தில் கொண்டுவரப் படுகின்றன. இக்கப்பலுக்குக் கம்பியில்லாத தந்திவைக்கப் பெற்றிருக்கிறது. கப்பலில்நடந்தேறும் ஒவ்வொரு சமாசாரமும் இத்தந்திமூலமாய் வெளியே பிரபலமாய்க் கொண்டுவருகிறது. மெடீனாக்கப்பலுடன் வரும் மலோஜா என்னும் கப்பலில் டெல்லி தர்பாருக்கு இராஜவரவழைப்புக்குடன்பட்ட சிலமுக்கியஸ்தர்கள் வருகிறார்கள்.

பிரயாணஞ் செய்து வருபவர்கள்: டிவன்ஷையர் ட்யூக், ட்யூக் அண்டு டச்செஸ் ஆப் ஹாமில்டன், லார்டு அண்டு லேடி லாண்டெஸ்பரோ, அவர்களின் குமாரத்தி, லேடி வீன்டெனிசன், லார்டு அண்டு லேடிபூட், லேடி டோனிகால், லேடிகிளாஸ்கோ, லார்டு அண்டு லேடிமாரும் நெல்லியும், லார்டு ஐபாக், லார்டு டன்கானன், லார்டு அண்டு லேடி கிரார்டு, லார்டு சார்லெஸ் மாண்டேகு, லார்டு அண்டு லேடி கவான், லார்டு செம்பில் எவிலன், லேடி ஆலிங்டன், ஸர் ஆர்ச்சிபால்ட்டு, லேடி ஹண்டர், கொரலேடி ஸ்ட்ராபோர்டு, மிஸ்டர் கென்னார்டு, மிஸ்டர் ஆர்தர் பிராடரிக், சர் ஹியூ, லேடி. ஷா ஸ்டூவார்ட், லேடி பிராசிஹர்ஸ்ட், காப்டன் மிஸ்ஸர்ஸ் ஸ்பெண்டர்க்ளே.

இராஜபந்துக்கள் செலவு வாங்கிக்கொண்டு வெளியேறின பிறகு, ஹார்பரைவிட்டு பீரங்கி வெடி முழங்கவும், கப்பல்களிலும் கரைகளிலும் உள்ளபாண்டுகள் சுதேசகீதம் வாசிக்கவும், இராஜ தம்பதிகள் கப்பல் மேடையின் பேரில் நின்றுகொண்டு கப்பல்

மறைகிறவரையில் கைக்குட்டையை வீசிக்கொண்டேயிருந்தார்கள். கப்பல் புறப்பட்டவுடனே மனக்கலக்கம் உண்டாகும்படியான விஷயம் ஒன்று நடந்தது. அதாவது கப்பல் சாமான்கள் வைக்கும் தொட்டியின் வாருணாது நங்கூரத்திலிருந்து அறுவுண்டு 'மெடீனா' என்னும் ஸ்டீமரில் மோதிற்று. ஆயினும் மெடீனா ஜாக்கிரதையாக நடத்தப்பட்ட சாமர்த்தியத்தால் ஆபத்து நேரிடாமல் தப்பிப்போய்விட்டது.

ஸ்பிட் ஹெட் என்னுமிடத்தில், போர்கப்பற் கூட்டத்தின் முதல் டிவிஷனும் சானலில் சிறிதுதூரம் காவலாக வந்த முதல் காவற்கப்பல் கூட்டமும் எதிர்கொண்டு மெடீனா என்னும் ஸ்டீமரைக் காத்திருந்து சந்தித்தன. இந்தக் கப்பல் கோலமானது மனதில் கம்பீரமாகப் பதிபத்தக்கதாக உலகத்தில் இதுவரையில் எங்கும் எப்போதும் இருந்தது கிடையாதாம்.

14 தேதி யன்று மாலை இக்கப்பல்கள் ஜிப்ரால்டர் வந்து சேர்ந்தன. புயல்காற்றின் தொந்திரவால் மரியாதைக் குண்டுகளும் அலங்காரங்களும், உபசரிப்பு ஆடம்பரங்களும் நடைபெறக்கூடாமல் போயிற்று. அட்லாண்டிக் கடற்படை இராஜதம்பதிகளை எதிர்கொண்டழைப்பது போன்று மெடீனாக்கப்பலை நெருங்கியது. இங்கிருந்து 18 உ யன்று கப்பல்புறப்பட்டது. மரியாதைக்குண்டு வெடிகள் தீர்க்கப்பட்டன.

20 தேதி யன்று கப்பல் போர்ட் செயிட் துறைமுகம் சேர்ந்தது. ஈஜிப்ட் தேசத்தின் தலைவராகிய கிடைவும் உத்திபோகஸ்தர்களும் இராஜதம்பதிகளை தரிசனம் செய்தார்கள். லார்ட்கிட்சனர் இராஜதம்பதிகளுடன் விருந்துண்டார்.

23தேதியன்று டர்க்கி இளையசுல்தானுக்கு இராஜதம்பதிகள் பேட்டி கொடுத்தார்கள். ஜார்ஜ் சக்கரவர்த்தி சுல்தானுக்கு ஒரு உபசாரக்கடிதம் திம்கையாலே எழுதிக்கொடுத்தார்.

27 தேதி யன்று இராஜதம்பதிகள் ஏடன்சேர்ந்துகரையிறங்கி உபசரிக்கப்பட்டார்கள்.

சண்டை நிமித்தம் நிறுத்தப்பட்டிருந்த விளக்குக்கூண்டுகள் ராஜதம்பதிகள் செங்கடல் மார்க்கமாக போகும் சமயம் ஸ்பெஷலாக மறுபடியும் ஏற்றப்பட்டிருந்தன. துருக்கி கவர்ன்மெண்டார்உத்திரவு செய்திருந்தபடி கரையோரங்களிலும், பட





குகளிலும், இதர கப்பல்களிலும் ஜனங்கள் ஏராளமாகச் சேர்ந்து வேடிக்கை பார்த்தவண்ணமாயிருந்தார்கள். டிசம்பர் மாதம் 2-ஆம் தேதி சக்ரவர்த்தியின் ஸ்டீமர் துறைமுகம் வருகிற அடையாளம் தெரிந்தவுடன் பத்து வினாடிகளுக்கு ஒரு முறையாக மூன்றுதரம் வெடிகள் போடப்பட்டன. ஸ்டீமர், ஹார்பரில் வந்துசேர்ந்து நங்கூரம் போட்டவுடன் ஹார்பரில் 101 குண்டுகள் போடப்பட்டன. இந்திய ராஜப் பிரதிநிதியும், பம்பாய் கவர்னரும் அன்று மாலை 3-50 மணிக்கு அபோலோ பந்தருக்குப் போனார்கள். மாலை 4 மணிக்கு ஜியார்ஜ சக்கரவர்த்தியும், மேரி சக்கரவர்த்தினியும் மார்க்விஸ் ஆப் க்ரூ முதலானவர்கள் சகிதம் துறைமுகம்வந்து சேர்ந்தார்கள். ராஜதம்பதிகள் 101 குண்டுகள் போடப்பட்டுமுடிய அபோலோ பந்தர் என்னுமிடத்துக்கு வந்துவிட்டார்கள். இந்திய ராஜப் பிரதிநிதி, பம்பாய் கவர்னர், அவர் மனைவி லேடி கிளார்க், சுதேசமன்னர்கள், முதலானவர்கள் சக்கரவர்த்தியையும் சக்ரவர்த்தினியையும் எதிர் சென்று உபசரித்தார்கள். சக்கரவர்த்தி அமர்வதற் கென்று அமைக்கப்பட்டிருந்த மண்டபத்திற்கு அவரை எல்லோரும் அழைத்துச் சென்றார்கள். அங்கே பம்பாய் முனிஸிபாலிட்டியாரால் சக்கரவர்த்திக்கு ஒரு வந்தனப் பத்திரிகை படிக்கப்பட்டது. அதன் பிறகு இராஜதம்பதிகள் அபோலோ பந்தரிலிருந்து புறப்பட்டு ராஜவீதிகள் வழியாய் நகரைச் சுற்றிப் பார்த்தார்கள். பம்பாய் நகரத்தை அலங்காரம்செய்வதற்கு ஒப்புக் கொண்டிருந்த கண்டிராக்ட்காரர்கள் இரவும் பகலும் ஓயாமல் தங்கள் வேலையை மிக விரைவுடன் செய்துமுடித்தார்கள். பம்பாயில் அரசர் செல்லும் வழியில் ஒரு அடி நிலம் கிடைக்கவேண்டி, அதற்காக எவ்வளவோ பெருந்தொகையான பொருள்கொடுக்கப்பட்டது சிறுவர்களுக்கு வேண்டிய சௌகரியங்களைச் செய்ய அதிகாரிகள் தங்களாலான வரையில் முயன்றார்கள். சிறுவர்கள் அரசரை நன்றாய்ப் பார்க்கும்பொருட்டு உயரமானமேடைகள் சிற்சில இடங்களில் அமைக்கப்பட்டிருந்தன. சுமார் 28,000 சிறுவர்கள் தாராளமாய் நின்று அரசரைத் தரிசனம் செய்தார்கள். நகரைத் தீபாலங்காரஞ் செய்வித்தற்குப் மகத்தான ஏற்பாடுகளைக் கவர்ன்மெண்டார் செய்திருந்தார்கள். நகரைச்சுற்றிபார்த்தபின்னர் மறுபடியும் இராஜதம்பதிகள் தங்கள் இருப்பிடம் வந்து சிறிது நேரம் தங்கிவிட்டுமறுபடியும் பம்பாய் நகரத்தைவிட்டுப் புறப்பட்டார்கள். அப்

படிப் புறப்படும்போதும் வெடிகள் முழங்கின. அப்போது ஆபிஸர்கள், இந்தியர்கள் முதலியோர் யாவரும் அவரவர்களுக் குரிய வுடைகளைத் தரித்திருந்தார்கள்.

இராஜதம்பதிகள் பப்பாயிலிருந்து புறப்பட்டு ரயில் மார்க்கமாய்ப் பிரயாணம்செய்து டெல்லிக்கோட்டை செலிகல்கார் ஸ்டேஷனை டிசம்பர் மீ 7தேதி சேர்ந்தார்கள். இவர்களை வரவேற்க, கவர்னர் ஜெனரல் ஹார்டிஞ்சு, பிரபு மாகாணக் கவர்னர்கள், முக்கிய சேனாதிபதி, வைசிராய் சட்டநிரூபண சபை அங்கத்தினர்கள், மிலிடரி, சிவில் உத்தியோகர்கள் முதலானோர்கள்—ஸ்டேஷனுக்குவந்திருந்தார்கள். கவர்னர்ஜெனரல் முக்கியஸ்தர்களையெல்லாம் இராஜதம்பதிகளுக்கு முகமன் செய்து வைத்தார். இராஜதம்பதிகள் கோட்டையிலவர்களுக்காக இயற்றியிருக்கும் கூடாரத்துக்குச் சென்றார்கள். இங்கே சுதேசமன்னர்களும் அதிபதிகளும் இராஜதம்பதிகளுக்கு முகமன்செய்து வைக்கப்பட்டார்கள். இதற்குப் பிறகு இவர்கள் டெல்லியின் முக்கிய தெருக்கள் வழியாய் பவனி சென்றார்கள். இவர்களை வரவேற்று உபசரித்து, பிரிட்டிஷ் இந்தியப்பிரதிநிதிகளுக்காக கவர்னர் ஜெனரலின் சட்டநிரூபண சபை வைஸ்பிரசிடெண்ட், ஒருசிறிய உபசாரப்பத்திரிகைபடித்துக் கொடுத்தார். இங்கிருந்து இராஜபவனி மூன்றுவரிசையாகக் கிரமப்படி புறப்பட்டது. முன்வரிசையில் கவர்னர்கள், லெப்டினண்ட் கவர்னர்கள், சீப்கமிஷனர்கள், முதலானவர்களும், மத்தியில் இராஜதம்பதிகளும், பின்வரிசையில் சுதேச மன்னர்களும் தலைவர்களும் கோலாகலமாய்ச்சென்றார்கள். உயர்வகுப்பைச்சேர்ந்த கோஷா ஸ்திரீகள் அவர்களுக்காக நியமிக்கப்பட்ட ஸ்தலங்களிலிருந்தும் பள்ளிப்பிள்ளைகள் பவனிமார்க்கங்களிலுள்ள பிரத்தியேக ஸ்தலங்களிலிருந்தும் இப்பவனியைக் கண்ணாரக்கண்டு களித்தார்கள். டெல்லி முனிசிபாலிடியார் சாதாரண ஜனங்களும் பவனியைக்காணும்படி பாதைகளிருபுறங்களிலும் வேண்டிய ஸ்தலங்களமைத்திருந்தார்கள்.

ஒரே ஒரு விஷயத்தில் தான் ஸ்திரீகளிடம் எனக்கு நம்பிக்கை. அவர்கள் செத்தால் பிழைக்கமாட்டார்கள். இதைத் தவிர்த்து அவர்களிடம் எனக்கு நம்பிக்கையே கிடையாது.—அன்டி பானிஸ்.

* * *

உண்மையை யறிய முயலுவதே வாழ்க்கைப் பயன். உண்மை கண்டறிந்த நிமிஷமே வாழ்க்கை ஒழிகிறது.—ரஸ்கின்.

## டில்லி நகர் அலங்காரச்சிறப்பு.

டில்லியிலே செய்யப்பட்டுள்ள அலங்காரங்கள் மிகவும் அதிசயிக்கத் தக்கனவா யிருக்கின்றன. அந்நகரத்திலே செய்யப்பட்டுள்ள அலங்காரங்கள் மனிதர்களுடைய மனோபாவக உணர்ச்சியை எழுப்பிவிட்டு அவர்களை இமைகொட்டாமல் பார்க்கச் செய்யும் பேரற்புதக் காட்சிகளாய் விளங்குகின்றன. பனிக்கட்டியைப் போல் வெண்ணிறமாயுள்ள கூடாரங்களுக்கு இடையிடையே பசிய புற்றரைகள் காணப்படுவது, வைரப்பாறையின் ஊடேயூடே மரகதப்பச்சைக் கற்கள் வைத்தழுத்தி யிருப்பதுபோல் தோன்றுகிறது. இராஜபாட்டைகள் புதுப்பிக்கப்பட்டுப் பரிசுத்தமாய் விளங்குவது சந்தனக்கால்வாய்கள் ஓடுவதுபோல் தூரநின்று பார்ப்பவர்களுக்குப் புலப்படுகிறது. ராஜபாட்டைகளிலும்குறுக்கு வழிகளிலும் வளைவு விளக்குகளும் கூண்டுவிளக்குகளும் இராக்காலங்களில் கலந்து பிரகாசிப்பது பார்ப்போர் கண்களைப் பூக்கச் செய்துவிடும் போலிருக்கிறது. போனவுடன் முதல் முதல் ஒருவர் காணக்கூடியன பத்திரிகை நிருபர்களுக்காக ஏற்படுத்தப்பட்டிருக்கும் கூடாரங்களும், தந்தி ஆபீஸுக்காக ஏற்படுத்தப்பட்டிருக்கும் கூடாரங்களும், ஸிவில் உத்தியோகஸ்தர்களுக்காக ஏற்படுத்தப்பட்டிருக்கும் கூடாரங்களுமேயாம். ஆசியா குடியரசு நாடுகளின் கவர்னர்களும், அந்நிய இராஜ்யக் கான்ஸல்களாய் இந்தியாவிலிருப்பவர்களும், பிரபலமான 100 பத்திரிகாப்பிரதிநிதிகளும் இந்தியாகவர்ன்மெண்டாரின் விருந்தினர்களா யிருப்பார்கள். இவர்களின் காம்பு சக்கரவர்த்தி காம்புக்குப் பக்கத்திலுள்ளது. இவைகளுக்கு சமீபத்தில் மத்திய தந்தி ஆபீஸ் அமைக்கப்பெற்றிருக்கிறது. சமாசாரங்கள் அப்பொழுதைக்கப்பொழுது அனுப்பப்படும். 31 தபாலாபீஸ்களும் 10 தந்தி ஆபீஸ்களும் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. நகரத்தின் நடுமத்தியிலே மேரி அரசியாருக்கு ஜாகை, அந்தப்புரம்முதலியன ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. அவைகட்கு அடுத்தாப்போல் சக்கரவர்த்தியின் வரவேற்பு மண்டபம் அமைக்கப்பட்டிருக்கிறது. இதில் சுமார் மூவாயிரம் அல்லது நாலாயிரம்பேர், ஏககாலத்தில் தாராளமாய்த் தங்கலாம். அக்கூடாரங்களைச் சுற்றிலும் பரவியிருக்கும் காம்பில் தான் சக்கரவர்த்தியவர்கள் இருந்து வருவார்.

ராஜதம்பதிகள் இருவரும் வேல்ஸ் இளவரசர் இளவரசியாக டில்லிக்கு விஜயஞ்செய்திருந்தபொழுது, கர்ஸான்பிரபுவால் கட்டிவைக்கப்பட்ட ஸர்க்யூட் ஹௌஸில் (Circuit House) தங்கியிருந்தனர். ராஜப்பிரதிநிதிக்கும் ஆலோசனைச்சபை மெம்பர்களுக்கும் உயர்ந்த பதவியையுடைய ராஜாங்க உத்தியோகஸ்தர்களுக்கும் காம்புகள் பக்கத்தில் ஏற்பட்டிருக்கின்றன. ஹார்டிஞ்சு பிரபுவும் ஹார்டிஞ்சுபெருமாட்டியும் தங்களுடைய விடுதியில், ஏராளமான விருந்தினர்களை வரவழைத்து உபசாரஞ் செய்வார்கள். அவ்விருந்தினர்களுள் ராஜப்பிரதிநிதியவர்களின் சகோதரரான வைகவுண்ட் ஹார்டிஞ்சும், மாஜிபம்பாய்க் கவர்னர்களான லாமிங்டன் பிரபுவும் ஹாரிஸ்பிரபுவும் ஆவார்கள். ஆனால் இவர்கள் தங்கிவரும் காம்புகளுக்கும் ராஜா சக்கரவர்த்தியவர்கள் தங்கும் காம்புக்கும் வித்தியாசமுண்டு. இதற்கு இடது கைப்புறத்தில் பரவியிருக்கும் காம்புகளில் பல மாகாணக் கவர்ன்மெண்டார் இருந்து வருவார்கள் பர்மா, பம்பாய், சென்னை, ஆஸ்ஸாம், பங்காளம், முதலிய மாகாணங்களைச் சேர்ந்த கவர்னர்கள் தங்கும் காம்புகளுக்குச் சிற்சில அடையாளங்கள் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. சேனைத் தலைவர்களுக்குச் சாதாரணமாய் யுத்தவீரர்களுக்கு ஏற்பட்ட கூடாரங்கள் தயார் செய்யப்பட்டிருக்கின்றன. இவைகளுக்குச் சமீபத்திலேயே இந்த மைதானத்தைச் சேர்ந்தஇந்த பாகத்திலேயே பாரன் ஆபிசர்களுக்கும் தெற்கு வடக்குபாகங்களிலுள்ள சேனைகளுக்கும் முக்கியசைந்நியாதிபதிக்கும்காம்புகள் ஏற்பட்டிருக்கின்றன. ஜலம்நன்றாய் பாயப்பெற்ற புற்றரைதான், போலோ விளையாட்டுப்பூமியாக உபயோகப்பட்டுவரும். இந்தக் காம்புகளுக்கு நெடுந்தூரத்தில் தேசமன்னர்களின்காம்புகள் ஏற்பட்டிருக்கின்றன. தேவதச்சனால் இயற்றப்பட்டிருக்கின்றனவோ என்று பார்ப்போர் அதிசயிக்கும்படியாய்இந்தியாவின் சிற்பவேலைத்திறமை சித்திரவேலைத்திறமை முதலியவைகளைக் காட்டிக்கொண்டு, ஹிந்து அரசர்களின் காம்புகள் விளங்குகின்றன. இந்தக்காம்புகளில் பலவித விருக்ஷங்கள், பசும்புற்றரை, ஜலவசதி, சிங்காரத் தோப்புகள் ஏற்பட்டிருக்கின்றன. லண்டன் நகரில் மகுடாபிஷேக சந்தர்ப்பத்தில் ராஜாங்க முறையிலும், அந்தரங்க முறையிலும் உபசாரம் பெற்ற இந்திய மன்னர்கள் தங்களுக்குக் காண்பிக்கப்பட்ட உபசாரத்தைத் திருப்பிச்செய்வதற்குச் சந்தர்ப்பம் வாய்த்திருக்கும் டெல்லி தர்பாரில்,





பிரதியுபசாரத்தைக்காட்டத் தயாராக இருக்கின்றனர். அனேக மகாராஜாக்கள் லண்டனில் பலருக்குவரவழைப்புக் கடிதங்களைக் கொடுத்திருக்கின்றனர். சிலர் மலாஜாக்கப்பலில் வந்திருக்கிறார்கள்.

இதற்கப்புறம் 50,000 துருப்புகள் அல்லது சேனைகள் வந்து தங்குவதற்கு அலங்காரமான மைதானம்ஏற்பட்டிருக்கின்றது. ராஜசக்ரவர்த்தியின் காம்பிலிருந்து தேசமன்னர்கள்இறங்கும்காம்புகளுக்கு மத்தியில் தர்பார் நடக்கும் விசித்திரமண்டபம் ஏற்பட்டிருக்கிறது. சிறியவளைவில் மாகாண அதிபதிகவர்னர்கள, சேனைத்தலைவர், லெப்டினண்ட் கவர்னர்கள், அரசர்கள், பிரிட்டிஷ் இந்தியாவிலிருந்து சுதேசமன்னர் இராஜ்யங்களிலிருந்தும் வந்துள்ள பிரதிநிதிகள், கவர்ன்மெண்ட் காம்புகளுக்குவந்துள்ள விருந்தாளிகள் முதலானோர்களுக்கு ஸ்தானங்களும், பெரிய வளைவில் பொதுஜனங்களுக்கு ஸ்தானங்களும் நிருமிக்கப்பட்டிருக்கின்றன. பெரியவளைவில் 50,000 ஜனங்கள் உட்காரலாம். இதில் 5,000 பள்ளிப்பிள்ளைகளுக்கு ஸ்தலங்களும் டிக்கட் பெற்றுப்பார்க்கவரும் 11,000 பேர்களுக்கு ஸ்தலங்களுமுள்ளன. இதர இடங்களிலிருந்து சாதாரண ஜனங்கள் சௌகரியமாய்த் தர்பாரைக்கண்டு களிக்கவசதிகள் செய்யப்பட்டுள்ளன. காம்புகளிலுள்ள ஜனங்களின் தொகை 2,50,000 இருக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது. தேசமன்னர்கள் இறங்கும் காம்புகளுக்கும், சேனைகள் இறங்கும் மைதானத்திற்கும் மத்தியில் பல விசித்திரமான புஷ்பச்செடிகளும், விருக்ஷங்களும் கொடிப்பந்தல்களும், வளைவுப் பந்தல்களும் ஏற்பட்டிருக்கின்றன. கர்ஸன்பிரபுவால் ஏற்கெனவே கட்டப்பட்ட குதிரைக்குளம்பு போன்ற அலங்காரக் கட்டிடம் ஒன்றைத் தற்காலம் விஸ்தரித்து அலங்கரித்திருக்கின்றனர். இதன் கூரையின் மீது தங்கரேக்குகள் அடித்திருப்பதால், வெயில் காயும் பொழுது, பளபளவென ஜொலிக்கும். இதில் தான் இந்து தேசத்து மன்னர்கள் தங்கி தர்பாரின்போது வேடிக்கை பார்த்து வருவார்கள். இதற்கெதிரில் அமைத்திருக்கும் விசித்திரக் கட்டிடம் அநேக தூரம் பரவியிருக்கிறது. ராஜ தம்பதிகள் தர்பாரில் வீற்றிருப்பதையும் ராஜசக்கிரவர்த்தியவர்கள் அச்சமயம் சாஸனம் வாசிப்பதையும் சகலரும் கண்டு களிக்கும்படியாய் அவ்வளவு புத்தியையும் யுக்தியையும் உபயோகித்து அமைத்திருக்கிறார்கள். இந்த மண்டபத்திற்கு வலது புறமாய் நதிவரையிலும் எட்டியிருக்கும் மூன்று

மைல் விஸ்தீரணத்திலும், மற்றொரு பக்கமாய் மொகலாய மசூதி வரையிலும் எட்டியிருக்கும் 7 மைல் விஸ்தீரணத்திலும், ஏகமாய் சமுத்திரம் போல் துருப்புகள் வரிசைக்கிரமமாய் அணிவகுக்கப் பட்டிருக்கும். மூன்று ரயில் பாதைகளும் பல கிளைப்பாதைகளும் சேனைக் காம்புகளுக்கும் மைதானத்திற்கும், தர்பார் மேடைக்கும் இடையே போடப்பட்டிருக்கின்றன. தர்பாரின் போதும், பட்டணப்பிரவேசத்தின் போதும், சக்கிரவர்த்தி தங்குவதற்கென்று ஏற்பட்ட ஸ்டேஷனில் கொஞ்சநேரம் தாமதிக்கும் போதும், பவனி வரும்போதும், ஜும்மா மசூதி வழியாகவும் கோட்டையின் வழியாய்ச் செல்லும் போதும் துருப்புகள் காவலாக நிற்கும். கோட்டைக்கு உட்புறத்தில் நடந்தேறும் தோட்டக்கச்சேரி விசேஷமாக இருக்கும். அன்று இரவு கோட்டைக்கு வெளியே வாணவேடிக்கைகள் நடந்தேறும் ராஜ சக்கிரவர்த்தியின் காம்பில் ராஜாங்க விருந்து நடந்தேறும்.

ஜல வசதியும் சுகாதாரமும் கவனிக்கப்பட்டு வரும். காம்புகள், தோட்டங்கள், கட்டிடங்கள், சாலைகள், பாதைகள், மின்சார விளக்குகள், தந்தி, தபால், ரெயில்பாதை முதலியவைகளும் ஏற்பட்டு விட்டன இவ்வளவு ஏற்பாடும் மிக்க மேதாவிகள் சார்ந்த கமிட்டியால் செய்யப்பட்டிருக்கின்றன. மோட்டார் முதலிய வண்டிகளும் தயாரிக்கப்பட்டிருக்கின்றன. இவ்வளவு சிறந்த ஏற்பாடுகள் இதுவரையிலும் எப்பொழுதும் செய்யப்பட்ட தில்லையென்று இந்தியா கர்வப்படுவதற்கு நியாயமுண்டு. ராஜ தம்பதிகளே இங்கு விஜயம் செய்யப்போகிற படியால் இவ்வளவு சிறந்த சம்பிரமம் எங்கும் காண்பது அரிது. இப்படிப்பட்ட அலங்காரம் எந்தக்காலத்திலும், எந்தத் தேசத்திலும், செய்யப்பட்டதில்லை என்று எல்லோரும் வியந்து வியந்து பேசுகிறார்கள்.

ஆத்மா முக்தியடைவதைக் கெடுக்க காத்திருக்கும் சிற்றின்ப இச்சையை நாடாதே.—பீடர்.

* * *

நீ ஏதோ சிரஞ்சீவியாய் கல்பகோடிவருஷம் வாழ்வாய் என்று நினையாதே. யமன் காத்துக்கொண்டே யிருக்கிறான். உனது வாழ்க்கையில் நேர்மையுள்ளவனும் சன்மார்க்கனுயும் வாழ்.—மார்க்கஸ் அன்டோனியஸ்.

* * *

சர்வ ஜஸ்வரியவானாய் சகல சாம்பிராயத்தையும் அனுபவிக்கிறவன் சுகியல்ல. எவனொருவன் துயரமே யில்லாதவனோ அவனே சுகியாவான்.—அப்பலோடோரஸ்.



## டில்லி தர்பார் மஹோத்ஸவம்

டிசம்பர் மாதம் 7-ந்தேதி வியாழக்கிழமை:—முற்பகல் 10-மணிக்கு ராஜபவனி; பிற்பகல் 3-மணிமுதல் 5-மணி வரையில் அரசர்களை வரவேற்றல்.

8-ந்தேதி வெள்ளிக்கிழமை:—முற்பகல் 11-30-மணிமுதல் 1-30-மணிவரையில் தேசமன்னர்களை வரவேற்றல். பிற்பகல் 3-40 மணிக்குச் காலஞ்சென்ற எட்வர்ட் சக்ரவர்த்தியின் ஞாபகார்த்தச் சின்னத்துக்கு அஸ்திவாரக்கல் நாட்டல். இரவு 8-மணிக்கு ராஜ தம்பதிகளின் விருந்து.

9-ந்தேதி சனிக்கிழமை:—தேசமன்னர்களை முற்பகல் 11-30-மணி முதல் 1-30-வரையிலும் வரவேற்றல். போலோ விளையாட்டும், கால்பந்துவிளையாட்டும் பிற்பகல் 3-30-மணிக்கு நடைபெறும்.

10-ந்தேதி ஞாயிற்றுக்கிழமை:—முற்பகல் 10-30-மணிக்கு மிலிடெரி காம்பில் சர்ச்சு சர்விஸ் நடைபெறும்.

11-ந்தேதி திங்கட்கிழமை:—முற்பகல் 11-மணிக்குப்போலோ கிரவுண்டில் பலநிறமுள்ள கொடிகள் 3 பிரிடிஷ் சைந்நியங்களுக்கும் 2 இந்திய சைந்நியங்களுக்கும் கொடுக்கப்படும். போலோ முடிவாட்டம் பிற்பகல் 3-30-மணிக்குத் தொடங்கும்.

12-ந்தேதி செவ்வாய்க்கிழமை:—1877-ஆம் ஆண்டு லிட்டன் பிரபுவும், 1903-ஆம் ஆண்டு கர்ஸன்பிரபுவும்தர்பார் நடத்தியஸ்தலத்திலேயே அமைக்கப்பெற்றுள்ள சிங்கார அரங்கில் பகல் 12-மணிக்குத் தர்பார் நடைபெறும்.

13-ந்தேதி புதன்கிழமை:—முற்பகல் 10-45-மணிக்கு ராஜ சக்கரவர்த்தி யவர்கள் காம்பில் வாலண்டியர் ஆபீஸர்களையும் இந்தியா ஆபீஸர்களையும் வரவேற்றல். பிற்பகல் 3-30-மணிக்கு ராஜதோட்டக் கச்சேரியும், ஜனங்களுக்கு விருந்தும் நடைபெறும். இரவு 8-மணிக்கு ராஜதம்பதிகளுக்கு விருந்து நடைபெறும்.

14-ந்தேதி வியாழக்கிழமை:—முற்பகல் 10-30-மணிக்கு படையணிபார்த்தலும், பிற்பகல் 3-30-மணிக்கு ஹாக்கி விளையாட்டும், இரவு 9-30-மணிக்குப்பட்டமளிக்கும் காரியங்களும் நடைபெறும்.

15-ந்தேதி வெள்ளிக்கிழமை :—முற்பகல் 11-மணிக்குப் பேலோ கிரவுண்டில் போலீஸ் படைகளைப் பார்வையிடல். பிற்பகல் 3-மணிக்கு மிலிடெரி விளையாட்டுக்கள் பல நடைபெறும். இரவு 9-மணிக்கு மல் யுத்தம் அல்லது குஸ்தி நடைபெறும்.

16-ந்தேதி சனிக்கிழமை :—பகல் 1-மணிக்கு மகாராஜாவும் பரிவாரங்களும் புறப்படுதல்.

---

## டில்லி தர்பாரில்
## சென்னை இராஜதானி மகாஜனங்களின்
## விஞ்ஞாபனப் பத்திரிகை.

---

"ஐக்கிய இராஜ்யமாகிய கிரேட்பிரிட்டனு (இங்கிலாந்து, ஸ்காத்லாந்து, உவேல்ஸ்)க்கும் ஐர்லாந்துக்கும், சமுத்திரங்களுக்கப்பாலுள்ள இராஜ்யங்களுக்கும் காவலராகியும், மதசம்ரக்ஷகராகியும், இந்தியா சக்கிரவர்த்தியாகியும் விளங்கா நிற்கும் மிக்கக் காருண்யவள்ளலான ஐந்தாம் ஜார்ஜ் அவர்களுடையவும், காருண்யவள்ளலாகிய மேரி அவர்களுடையவும் திவ்யசமுகங்களுக்கு:

"கீழ்க்கையொப்பம் செய்திருக்கும் அடியார்கள் சென்னை இராஜதானியிலுள்ள சகலஜாதி, மதம், வகுப்பு—இவைகளைச் சேர்ந்தவர்களின் பிரதிநிதிகளாகி, இச்சுபமங்கள முகூர்த்தத்தில் மகாராஜா சக்கிரவர்த்தி, மகாராணி சக்கரவர்த்தினி ஆகிய ஹோதாவில் தேவரீர்கள் திருவிஜயம் செய்திருப்பதைக் கருதி, விநயபூர்வமாகவும், இராஜபக்திபூர்வமாகவும், மனப்பூர்வமாகவும் ஆசிமொழிகள் செப்பப்பிரார்த்திக்கின்றோம்.

"தென்னிந்தியாவிற்கு முன்னொருமுறை தேவரீர்களிருவரும் வேல்ஸ் இளவரசு, வேல்ஸ் இளவரசி—ஆகிய ஹோதாவில் விஜயம் செய்து, தங்கள் நாடு திருப்பிய சம்பவத்தை நாங்கள் மறக்கமுடியாது. பிரிட்டிஷ் துரைத்தனத்துக்கு இந்தியாவில் சுவாதீனமான நாடுகளில் சென்னை இராஜதானி முதன்மையானது. ஆதலின் இப்பிராஞ்சியத்தைச் சேர்ந்த மகாஜனங்கள் தேவரீர்களை வரவேற்று உபசரித்து, பிரிட்டிஷ் ஆட்சிக்கும் தங்களுக்கும், தங்கள் மனதில்வேரூன்றிக்கிடக்கும் அபாரமான இராஜபக்தியை நிரூபிக்கப் பலவகையிலும் ஆக்கிரமுடையவர்களாயிருப்பது சகஜமேயா





கும் என்றாலும், தேவரீர்கள் அங்கே எழுந்தருளி மகாஜனங்களின் ஆசீர்வாதங்களை அங்கீகரிக்க தேவரீர்களுக்கு சௌகரியப்படாமல் போயிருக்கும் விஷயம் விசாரிக்கவேண்டிய விஷயமாயினும், இச்சந்தர்ப்பத்தில் மகாஜனங்களுக்குப் பிரதிநிதிகளாக நின்று அவர்களின் இராஜபக்தியையும் இராஜ விசுவாசத்தையும் மனச்சந்துஷ்டியாக தேவரீர்கள் சமுகத்தில் சமர்ப்பிக்க அடியார்களுக்குப் பாக்கியம் சம்பவித்ததை உத்தேசித்து அடியார்கள் மிகவும் சந்துஷ்டியுடையவர்களாயிருக்கிறோம்.

"தேவரீர்களின் மகாவமிசகுலதிலகர்களாகிய முன்னோர்களும், அவர்கள் வழிவந்த தேவரீர்களும் இந்தியாவிஷயமாகப் புலப்படுத்தியிருக்கும் சிரத்தைக்கும் தயைக்கும் சாக்ஷியங்கள் பலவகையாகவும் பலவகைப்பட்டவாகவுமிருப்பதில், இம்மங்கள மஹோற்சவ சமய சந்தர்ப்பமாக தேவரீர்களின் பிரஜைகளாகிய இந்திய மகாஜனமத்தியில் அன்புகூர்ந்து தேவரீர்கள் எழுந்தருளி, விளங்குவதையே மகாஜனங்கள் சிறந்தசாக்ஷியமாகப் பாவிக்கிறார்கள். ஏனெனில், இத்தகைய சம்பவம் இதுவரை நடவாதது; இதுவே முதல் தடவையாகும். ஆதலால் அடியார்களைப் பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுத்த பிரஜாகோடிகளின் சந்தோஷத்தை விளக்கி மகுடாபிஷேகமஹோத்சவ தர்பார் நிமித்தம் தேவரீர்கள் இந்தியாவுக்கு விஜயம் செய்து, தரிசனம் தந்தருளிய கிருபாவிசேஷத்தை அடியார்கள் எவ்வளவிற்கும் பெரிதாகவும், இந்நாட்டிற்குப் பூஷணமாகவும் பாவிக்கிறார்களென்பதை தேவரீர்கள் அறியப் பிரார்த்திக்கிறோம். தவிர, இச்சுபமுகூர்த்தத்தில் இச்சம்பவம் அதிசயத்திலும் அதிசயமென்பதை யபேக்ஷித்து விநயபூர்வமாக ஆசிமொழிகள் வழங்கவேண்டியும் பிரார்த்திக்கிறோம்.

"சர்வேசுவரனருளால் தேவரீர்கள் இப்பெரிய சக்கிராதிபத்தியத்தை பல்லாண்டு பல்லாண்டு ஆட்சிபுரிய தீர்க்காயுளுடையவராயிருக்கவேண்டுமென்று நாங்கள் மனதாரப் பிரார்த்திக்கிறோம். தேவரீர்களோ இத்தேசக்ஷேமத்திற்காகத் தேவரீர்களின் முன்னோர்களும் மகானுபவர்களுமான மகாராணி சக்கரவர்த்தினி விக்டோரியா தேவி, மகாராஜா சக்கரவர்த்தி ஏழாம் எட்வர்ட், சக்கிரவர்த்தினி அலக்ஸெந்திராதேவி முதலியோர்களால் ஏற்பட்டிருக்கும்ஸ்மிருதிகளையும் நியமங்களையும் வழுவாவது, பரிபாலனஞ்

செய்து தேச க்ஷேம விஷயத்தில் அபாரகருணையும் சிரத்தையும் காட்டி ஆதரித்து வந்திருப்பவராகிறீர்கள்.

"ஆதலால் இம்மகோற்சவ சம்பிரமத்தில் சகல விசேஷ மங்களங்களுக்கும் காரணமாகிய இச்சுப முகூர்த்தத்தில், இம்மகாசம்பவத்தை அநுசரித்து, சென்னை இராஜதானியிலுள்ள தேவரீரவர்களின் சமஸ்தமான பிரைஜைகளுக்குமுள்ள இராஜ பக்தியையும் ஆசிமொழிகளையும் நாங்கள் தங்கள் முன்னிலையில் சமர்ப்பிக்கும்படி தேவரீர்கள் பிரசாதித்த பேருருளுக்காக அபாரநன்றியுடன் நாங்கள் இதனடியில் கையொப்ப மிட்டிருப்பதையும் தேவரீர்களுக்கு ஊழியர்களாயு மிருப்பதையும் தெரிவிக்கிறோம்."

---

## சென்னை இராஜதானியில் தர்பார் மஹோத்சவம்.

(சர்க்கார் உத்திரவு.)

---

நமது மகாமாக்ஷிமை தங்கிய சக்கிரவர்த்தியும் சக்கரவர்த்தினியும் இராஜ கோலமாய் டில்லிநகரப்பிரவேசம் செய்யும் சுபதினமாகிய வியாழக்கிழமை டிசம்பர்மீ 7 தேதி-முதல் சக்கிராதிபத்ய தர்பார் நடக்கும் 12-தேதியாகிய வெள்ளிக்கிழமைவரை இந்தியா முழுவதும் விடுமுறைநாட்களாகக் கவனிக்கப்படும்.

நமது சென்னை இராஜதானியிலுள்ள ஜில்லாக்களின் தலைமை ஸ்தலங்களிலும், கிராமங்களிலும் இராஜசாஸனம் 12 தேதியன்று பகல் 12 மணிக்கு வாசிக்கப்பெறும். அச்சமயம் சக்கரவர்த்தி சக்கரவர்த்தினி—களின் படங்கள் சகலரும் தரிசனம் செய்யும்படி வைக்கப்படும். பகிரங்கப் பத்திரங்கள் எல்லாபாஷைகளிலும் தர்ஜமா செய்யப்பட்டு அச்சான காப்பிகளும், இராஜதம்பதிகளின் திருவுருவப்படங்களும் ஜனங்களுக்கு இலவசமாக வளங்கப்படும். ஒவ்வொரு ஜில்லாக்கலெக்டர்களும் தங்களுக்கு எவ்வளவு ஒவ்வொன்றிலும் அவசியமென்பதைத் தெரிவித்திருக்கிறார்கள். தலைமைஸ்தலங்களில் கலெக்டர்கள் அன்று தர்பார் நடத்தி சக்கரவர்த்தியோ, கவர்னர் ஜெனரலோ, பிரதேசகவர்ன் மெண்டாரோ, கனவான்களுக்குக் கிருபைகூர்ந்து அளித்துள்ளப்படங்களையும், நற்சாட்சிப்பத்திரங்களையும், மெடல்களையும், பகிரங்கமாக அளிப்பார்கள். சந்தோஷ அறிகுறியாகவும் மரியாதையாகவும்





சைந்நியமில்லாத ஸ்தலங்களில் சாஸனம் வாசித்து முடிந்ததும், போலீஸ் சைந்நியத்தார் அதிர்வெடிகள், தீர்க்கும்படி போலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் உத்திரவு செய்திருக்கிறார்.

முடிசூட்டுத் திருவிழாவை ஜனங்களே தாமே முன்வந்து நடத்தவேண்டும். கம்பனிகள், ஆபீஸ்கள், கிரகங்கள், கோவில்கள், சத்திரங்கள் முதலிய இடங்களில் தீபாலங்காரம் செய்யப்படல் வேண்டும். ஏழைகளுக்கு அன்னமிடல், குழந்தைகளுக்கு தின்பண்டங்கள், பூக்கள், பழங்கள் முதலியன வளங்குதல், வாணவேடிக்கைகள் முதலிய காரியங்கள் சந்தோஷ அறிகுறிகள். இவைகளெல்லாம் உத்தியோகஸ்தரல்லாத கனவான்களால் உத்தியோகஸ்தரின் அநுதாப உணர்ச்சியையும் சகாயத்தையும் ஆதரவாகக்கொண்டு விமர்சையாய் நடத்தப்பெறலாம். இப்படி உற்சவங்கள் நாடெங்கும் மிக்கத் திருப்திகரமாய் நடைபெறும் என்று கவர்ன்மேண்டார் எதிர்பார்க்கிறார்கள்.

பிரதேச கவர்ன்மெண்டார் பந்தல்போடுதல் தீபம் ஏத்துதல் முதலியவைகளுக்குப் பிடிக்கும் சிலவைத்தாமே வகிப்பதாகவும் ஒத்துக் கொண்டிருக்கிறார்கள்.

கோவில்களிலும் மசூதிகளிலும், சர்ச்களிலும் ஜபதப பூஜைப் பிரார்த்தனைகள் நடைபெறலாம்.

---

## காலஞ்சென்ற சகோதரி நிவேதிதா தேவி.

---

உலகத்திலுள்ள பல மதங்களின் முக்கியப் பிரதிநிதிகள், வருஷமொருமுறை ஐரோப்பா, அமெரிக்கா முதலிய கண்டங்களிலுள்ள பிரதான நகரமொன்றில் கூட்டம் கூடி, சகல மதங்களுக்கும் பொதுவான கொள்கைகளையும், பிரத்தியேகமாய் ஒவ்வோர் மதத்துக்கும் அமைந்திருக்கும் மேம்பாடுகளையும் சிறப்புகளையும் பற்றிப் பேசித்தீர விசாரித்து, மானிடர் பெறற்கரிய சாம்பிராஜ்யப்பேற்றையடையும் நோக்கத்தால் மதங்களைச் சீர்ப்படுத்தவோ, உயர்த்தவோ முயற்சிசெய்து வருகிறார்கள். இத்தகைய வருஷாந்தக்கூட்டம் நம்மிந்தியாவில் பிரதிவருஷமும் முக்கிய நகரங்களில் நடக்கும் காங்கிரஸ் சபைபோன்றது. மேற்கூறிய கூட்டம் மதக்

காங்கிரஸ் என்ற பெயரால் வழங்கிவருகிறது. சுமார் 10, 12 வருஷங்களுக்குமுன் வட அமெரிக்காவைச் சேர்ந்த யுனைடட்ஸ்டேட்ஸின் முக்கியபட்டணங்களிலொன்றாகிய சிகாகோவென்னுமிடத்தில் பிரபலமான மதக்காங்கிரஸொன்று நடைபெற்றகாலத்தில், உலகத்திலுள்ள பல பாகங்களிலிருந்து சில மதாபிமானிகள், தங்கள் தங்கள் மதங்களைப் பற்றிப் பேசும் நோக்கத்துடன் காங்கிரஸ் காரியதரிசிகளால் வரவழைக்கப்பட்டு உபசரிக்கப்பெற்றார்கள். மிகத்தொன்மையான நம் இந்துமதத்தைப்பற்றிப் பேசுவதற்காக காலஞ்சென்ற ஸ்ரீலஸ்ரீ சுவாமி விவேகானந்தர் சிகாகோவுக்குப் புறப்பட்டுச்சென்றார். இம்மகானின் மகிமையையும், ஞானத்தையும், மதவிஷயத்திலுள்ள பாண்டித்யத்தையும், இவர் பிரசங்கங்கள் கேட்டவர்கள் அறிந்தவர்களாய், இந்துமதத்தின் வைதிகக் கோட்பாடுகள், சம்பிரதாயங்கள்போன்ற உண்மையுயர்வுகளை ஆராய்வதற்கும் அறிந்துகொள்வதற்கும் ஆவல் கொண்டார்கள். அமெரிக்காவில் இந்துமதத்தைப்பற்றிப் பல பிரசங்கங்கள் சுவாமிகள் செய்ததன் பயனாக, பல நகரங்களில் இந்து மதஸ்தாபனங்கள் ஸ்தாபிக்கப்பட்டன. அனேகர் சுவாமிகளிடம் உபதேசம்பெற்று சிஷ்யர்களானார்கள். சுவாமிகளின் சிஷ்யர்களில் முக்கியமானவரும், சிலாக்கியமானவரும் அந்தரங்க பக்தி பூண்டவருமானவர் மிஸ் மார்க்கரெட்நோபிள் என்னும் ஆங்கிலப்பெயர் புனைந்தமாது. இம்மாது சகோதரி நிவேதிதை *என்னும் தீக்ஷாநாமம் வகித்து பரதகண்டத்தை மாத்ரு க்ஷேத்திரமாகக்கொண்டு, தம் வாழ்க்கையை இந்தியாவுக்கு அர்ப்பணம் செய்துவிட்டார். இவ்வம்மாளுக்கு இந்துமதத்திலும் இந்துக்களின் ஜாதிமத ஆசார ஒழுக்கங்களிலும் விசேஷப்பிரேமையுண்டாக, அவைகளை மிக்சிரமப்பட்டு பரிச்சயம்செய்துகொண்டார். நம்மதம் ஆசாரம், சம்பிரதாயங்கள் முதலியவைகளில் குணமான பல அம்சங்கள் அவருக்குத் தோற்றின. இவர் களங்கமற்ற தம் மனதில் தமக்குத்தோன்றியவைகளை உள்ளதுள்ளபடியே திரட்டிப் பத்திரிகா விஷயங்களாகவும், நூல்களாகவுமெழுதியுமியற்றியு முள்ளார்.

---

*'நிவேதிதை' என்பதற்கு உடல், பொருள், ஆவி—ஆகிய மூன்றையும் ஈஸ்வரார்ப்பணமாக சமர்ப்பித்து, அவருடையவும், அவரின் பிரஜாகோடிகளுடையவும் க்ஷேமத்துக்கு வாழ்நாளைக்கழிப்பது என்ற சங்கல்பம் கொண்டவர் என்பது தாத்பரியம்.





இவர்தாம் 'அசல்' இந்துவாய்விடவேண்டுமென்று தம் ஜன்மபூமியைத் துறந்து, கல்கத்தாவுக்கு வந்து, சம்பிரமமாகக் காலங்கழிக்கும் ஆங்கிலயோர்கள் வசிக்கும் ஆரோக்கிய ஸ்தலங்களை நாடாமல், சாமான்ய இந்துக்கள் வாழும் ஸ்தலங்களில் அவர்கள் மத்தியில் ஓர் கிரகமமைத்து வாழ்ந்து வந்தார். இவர் நல்ல பதவியிலிருக்கும் ஆங்கிலேயருக்கு வாழ்க்கைப்படாமலும் உயர்பதவியிலுள்ளவர்களின் தயவைக்கோராமலும் மனச்சாந்தியுடன்வாழ்ந்துவந்தார். இவர் கல்கத்தாவில் வந்து தங்கி சுமார் 10 வருஷங்களுக்கு மேலாகிறது.

இவர், தாம் அனுபவப்பூர்வமாகக் கண்டவைகளையெல்லாம் திரட்டி இந்தியர்வாழ்க்கையைப்பற்றி 'தாலாட்டுக்கதைகள்' என்ற நூலியற்றியிருக்கிறார். ஆசாரச்சீர்திருத்தக்காரர்கள் கண்டனஞ்செய்யும் பால்ய விவாகம், விதவைகளின் பரிதாப நிலை, ஜாதிக் கோட்பாடுமுதலியவைகளில்கூட சிரேஷ்டபாகங்கள் இவருக்குப் புலப்படுகின்றன. குணம் நாடிக்கொள்ளுதல் இவரின் சுபாவம்.

அவர் கூறுகிறார்: "விவாகம் புனிதமும் நிரந்தரமுமானது தெய்வசங்கல்பத்தால் ஈடேறுவது. நல்ல இல்லாளைப் பெற்றுள்ள வீட்டைக்காட்டிலும் ஒருவர் விரும்பத்தக்கது வேறொன்றுமேயில்லை. ஜனசமூகத்தின் தாதுவாகும் ஒவ்வொரு இல்லமும். ஆகையால், இல்லறகிருத்தியங்கள் ஜனசமூகப்பிரயோஜனத்தை நாடினவையாயிருக்கவேண்டும். ஒரு ஸ்திரீ,தன் இல்லத்தை விட்டுவெளியேறுவாளாயின் அவளுக்கு சாந்தியுமில்லை, அவள் பாபத்துக்குப் பரிகாரமுமில்லை"

அவர் இந்து குடும்ப கிருத்தியங்களைப் பற்றிச் சிலாகித்துப் பேசுகையில் சொல்கிறார்: "ஒவ்வொரு இல்லத்திலும் சமையல், குழந்தைகளைப் பயிற்றல் முதலிய கிருத்தியங்களை இல்லாள் எவ்வளவு உயர்ந்த ஸ்திதியிலிருந்தாலும் தானே நிர்வகிக்கிறாள்." இன்னுமொரு சந்தர்ப்பத்தில் அவர் கூறுகிறார்: "ஒருவர் ஊர்ப்பிரயாணம் போகும் பொழுதும், ஒருகாரியத்தை ஆரம்பிக்கும் பொழுதும் ஸ்திரீகளிடம் ஆசிபெறுவது சிலாக்கியமெனக் கருதப்படுகிறது. தாயைப்பக்ஷமாய் நடத்தலும் அவரின் மனதுக்கு சந்துஷ்டியைக் கொடுத்தலும் குடும்ப விருத்திக்கு இன்றியமையாதனவென்று கருதப்படுகின்றன. குடும்பங்கள் சரிவர நடைபெறுகிறது மனைவியால் தான்."

இம்மாதிரியே நமது வழக்கபழக்கங்களிலுள்ள சிரேஷ்ட பாகங்களே இவருக்குப் புலப்படுகின்றன.

சகோதரி நிவேதிதை தேவியார் பார்வைக்கு திடகாத்திரமும் அதற்கேற்ற உயரமும் படைத்தவர். அவரின் முகம் அவர் உள்ளத்தின் தன்மைகளைப் பளிங்கு போல் விளக்கிக்காட்டும். அவரின் ஊக்கமும் மனோவன்மையும் முகத்தில் ஜ்வலித்துக் கொண்டிருக்கும். அவரின் பேச்சுத்தீங்குரலாய் சங்கீதம் போன்று செவிக்கு இன்பம் பயக்கும். அவரின் அபாரமான மனோ சக்தியும், கவிவன்மையும், சம்பாஷணை சாதுர்யமும், எடுத்த விஷயத்திலுள்ள நாட்டமும், ஊக்கமும் சிலவார்த்தைகளாவது அவருடன் பேசும் பாக்கியம் பெற்றவர்களுக்கு புலப்படாமலிரா. இவ்வம்மையாரை சிநேகத்துக்குச் சிறந்த பாத்திரமென்றே சொல்லவேண்டும் இவரின் சுபாவம் ஒன்று மனப்பூர்வமாக நேசிப்பது; இல்லையோ, நேசிப்பதேயில்லை. இவருடைய நேசரானோரின் பாக்கியமே பாக்கியம். ஏனெனில், இவர் நேசரிடம் இரகசியம் பாராட்டுவதில்லை. நேசருக்குதவிசெய்யச்சிரமம், சிலவு, கஷ்டம், ஒன்றையும் பொருட்டாக்கமாட்டார். கருமமே கண்ணாயினராய் விளங்குவார். எடுத்தகாரியத்தைத் திருந்தச் செய்து முடிப்பார். நேசரின் கஷ்டதுக்கங்களை தம்முடைய தெனவே கருதுவார். இவர் கிருத்தியங்களிலெல்லாம் மனம் வாக்கு செயல் ஒற்றுமைப்பட்டு விளங்கிநிற்கும். இவர் புஸ்தகங்களையும், வியாஸங்களையும் காட்டிலும் சம்பாஷணை ஒருவருக்கு இன்பம் மிகப்பயக்கும். பிரஸ்தாப விஷயம் எவ்விஷயமாகட்டும் மதமோ, சாஸ்திரமோ, இராஜரீகமோ, அவரின் பூர்ணஞானம் அதில் பொலிந்து நிற்கும்.

இந்தியர்கள் ஒரு ஜாதியாராய், மேனாட்டு நலம் பெற்றுள்ள ஜாதியர்களைப் போன்று மேம்பாடடைய வேண்டுமென்பதைத் தமது நோக்கமாகக் கொண்டிருந்தார் இவ்வம்மையார். ஆகையால் பங்காளத்தில் இந்தியர்கள் மேம்பாடடையச் செய்துவந்த முயற்சிகளிலும், கல்வி, கைத்தொழில், வியாபாரம்போன்ற லௌகிகக்காரியங்களிலும் அநுதாபமும் ஊக்கமும் காட்டி உழைத்து, அவர்களுக்கு உற்சாக மூட்டிவந்தார். ஜாதீய உணர்ச்சியைப்பற்றி விசேஷமான கருத்துக்களும் ஆழ்ந்த யோசனைகளு மடங்கிய பிரசங்கங்கள் பலசெய்திருக்கிறார். இவ்விஷயமாகப் பலவியாஸங்களும் எழுதியிருக்கிறார். சமீபத்தில் லண்டனில் நடந்தேறிய ஒரு பெரிய





சபையில் இந்திய மாதர்களின் நிலையைப்பற்றி ஒரு அருமையான பிரசங்கம் செய்தார். இதுவே அவரின் கடைசிப் பிரசங்கம்.

இங்கிலாந்திலிருந்து திரும்பியபின் தேக சௌக்கியத்தின் நிமித்தம் டார்ஜிலிங்குக்குப் போனவிடத்தில் வயிற்றுக்கழிச்சல் வியாதியால் பீடிக்கப்பட்டு யமனுக்கிரையானாரென்று கேள்விப்பட மிக்க வருத்தமுற்றோம். இவர் மத்திம வயதிலேயே காலஞ்சென்றதைக் கண்டுப்பேதமையால்மனம்வருந்துகின்றோமாயினும், அவர் புகழுடம்புநம்மிடையே இருந்து நமக்கு ஊக்கம் கொடுத்துவரும். அவரியற்றிய நூல்கள் அநித்தியமானசரீரம் போலல்லாது, அவரின் மெய்பாகத்தை நம்மனதில் என்றும் நிலைபெறச் செய்யும். இவர் தம் சொத்தெல்லாவற்றையும்கல்வி விஷயமாக உபயோகித்தல்வேண்டுமென்று உயில் எழுதிவைத்திருக்கின்றார்.

சகோதரி நிவேதிதையைப் போன்று சுயநலமற்று பரோபகார நிமித்தம் வாழ்பவர்கள்வெகுசிலரேயாகும். நாமும் நம்வாழ்க்கையில் அவரின் உத்தம குணங்களைநாடி அவற்றின்படி நடந்தொழுக ஈசன் கடாக்ஷிப்பாராக.

பத்திராதிபர்.

## நகைப் பைத்தியம்.

---

பைத்தியங்கள் பலவிதம். இவை மானிட ரெல்லாருக்கும் பொது. இருந்தாலும் இந்தியர்களுக் கிருக்கும் ஒரு விதப் பைத்தியம் வேறெஜ்ஜாதியாருள்ளும் அவ்வளவாக வில்லை யென்றே கூறலாம். இப்பைத்தியம்தான் நகைப் பைத்தியம். நகைப் பைத்திய மென்றாலென்ன? அநாவசியமான நகைகளை அணிந்துகொள்வதில் நம்நாட்டார், முக்கியமாய் ஸ்திரீகளிடம் காணும் ஒருவிதப் பிரேமை. இஃதிவாறாக, நகை போட்டுக் கொள்ளும் வழக்கம் ஆதியில் ஏற்பட்டதைக் குறித்து விசாரிப்போம்.

நல்லதும் நீதியானதுமான துரைத்தனமில்லாத காலத்தில் கொள்ளைக்காரர்கள், திருடர்கள் முதலிய வர்களிடமிருந்து செல்வத்தை காக்கும்நோக்கத்துடன் நமது முன்னோர்கள் தங்கள்பணத்தை ஆபரணங்களாகச் செய்துவந்தார்கள். இவ்வாபரணங்களைப் பாதுகாப்பின் நிமித்தம் ஸ்திரீகளை அணிந்து கொள்ளச் செய்தார்கள்.

திரவியங்களைப் பத்திரமாய் வைப்பதற்கு தற்காலத்திலிருப்பது போலபாங்கிகளொன்றும் அக்காலத்திலில்லை. இந்நோக்கத்துடன் செய்யப்பட்டு அணிந்து கொள்ளப்பட்ட ஆபரணங்கள், அதை பூண்டவர்களைப் பேய் போல் பிடித்து இன்றும் ஆட்டுகிறது. ஆஹா! என்ன பரிதாபமான காரியம். பணத்தைச் சற்றும் பயமில்லாமல் வேண்டியளவு சர்க்கார் பாங்கியிலாவது வேறு நம்பிக்கையுள்ள பாங்கியிலாவது போட்டுவைக்கலாம். எச்சமயத்தில் எந்நிமிஷத்தில், எவ்வளவு, வேண்டுமானாலும் பெறலாம். திருடர் பயமே வேண்டுவதில்லை. இப்படி பாங்கியில் பணம் போடப்படுவதால் பணத்துக்கு வட்டி கிடைக்கப்பணம் விருத்தியாகும். பணத்துக்கு அவசியமுள்ள வர்த்தகர்கள் முதலானோர்கள் பணத்தைக் கடன் வாங்கி உபயோகித்தல் சாத்தியமாகும். இப்படிப் பாங்குகளில் பணம் போடப்படுவதாலேயே உலகத்தில் வியாபாரம் விருத்தியாகி வருகிறது. மேனாடுகளில் வர்த்தகம் விருத்தியடைவதற்கும், பாங்குகள் புதிது புதிதாய்க் கிளம்புவதற்கும் காரணமாயிருப்பது ஜனங்கள் தாங்கள்செலவு செய்வதுபோக மீதியிருக்கும் பணத்தைச் சேதித்து வைப்பதற்காகவும், விருத்தி செய்வதற்காகவும் பாங்கியில்போடும் இவ்வுபாயமாகும்.

மேனாட்டு ஸ்திரீகள் ஆபரணங்கள் வெகு சிலரே அணிந்து கொள்கிறார்கள். அதுவுங் கூட கீழ்நாட்டாராகிய நம்முடன் வழக்க பழக்கங்கள் ஏற்பட்ட பின்னரே அவர்களுக்கு ஆபரணத்தில் ஆசையுண்டாயது. நம்மிந்தியாவிலோ, கோடி.கோடிப் பணங்கள் பொன் வெள்ளி நகைகளாகவும், ரத்தினங்களாகவும் மாறிப் பயனற்றுக் கிடக்கின்றன. பழைய இராஜாங்கம் மாறி, களவு பயம் எல்லாம் ஒழிந்த இக்காலத்திலும் கூட நகைப்பைத்தியம் நம் ஸ்திரீகளிடம் நீங்காமலிருக்கிறது பரிதபிக்கத் தக்கது. இப்பைத்தியம் கல்வியின்மையாகிய மடமையால் முதிர்ந்து கொண்டு வருகிறது. இப்பைத்தியத்தைப் போக்கடிக்கும் மருந்து கல்வியேயாகும். நம் புத்திரிகளுக்கும் சகோதரிகளுக்கும் கல்வியைப்புகட்டல் மிக்க அவசியமாகிறது. கல்வியறிவிருந்தாலே பணத்தின் மகிமையும், அதன் பிரயோஜனமும், ஒருவருக்குத்தெரியும். நகைகள் பணமாகமாறி நிலத்திலோ வியாபாரத்திலோ முதலாகப்போடப்பட்டால் பணமும் லாபமும் கிடைக்கும். விருத்தி செய்யப்படாத பணம் நாசப்படும் பணத்துக்குச் சமமா





கின்றது. பணத்தை வீண்செலவு செய்ய நாம் சம்மதிக்கிறோமா? இல்லையே. இப்படியிருக்க, நகையாகயாறிப்பணமிருப்பதால்பயனற்று, பணம் விருத்தியடையாமலும், யாருக்கும் யாதொருபயனும் விளைக்காமலுமிருக்கிறதைக்கண்டு மனம் நோவாமலிருப்பது நியாயமா? இதனால் நகைகளே செய்யக்கூடாதென்றும், நகைகளைச் சகோதரிகள் அணிந்துகொள்ளக்கூடாதென்றும் நாம் சொல்லுவதாக தப்பெண்ணங்கொள்ளக் கூடாதென்று வேண்டிக்கொள்ளுகிறோம். அவசியமான அளவு செய்து கொள்ளலாம். மிதமிஞ்சிப்பணம் நகைகளில் சிக்கிப்பயனற்றுக்கிடப்பதைக் கண்டே விசனிக்கிறோம். இஃதிவ்வாறாக, கவனிக்கத்தக்கது இன்னொரு விஷயமுமிருக்கிறது. நகைக்காசப்பட்டு நகை பூண்டிருக்கும் குழந்தைகளைத் திருடர்கள் கொன்றுவிடுகிறார்கள். குழந்தைகளுக்கு அழகுக்காகவும் டம்பத்துக்காவும் போடப்படும் ஆபரணங்கள் அவைகளின் உயிருக்குக் காலனாய் முடிகின்றன. ஆபரணங்களைக் களவாடிக் குழந்தைகளைக் கழுத்தைத்திருகி கள்ளியிலெறிந்துவிட்டதாகக்கேஸ்கள் எவ்வளவோ வருகின்றனவே! இதற்கெல்லாம் காரணம் நகைப்பித்தல்லவா? மேலும், நம்மவர் பணத்தையெல்லாம் நகைகளாகச்செய்துபேழையில் பொதிந்துவைத்துத் திருடர்களுக்குப் பறிகொடுத்துப்பேதைகளாயும் அனாதைகளாயும் விழிக்கிறார்கள். நகைகளாயிருப்பதால் பணம் பத்திரமாயிருக்கிறதென்று நினைப்பது அறிவின்மையாகும். மேலும், இன்னொரு விஷயம், நகைகளை நாம் அவசியமாயிருக்கும்பொழுது அதிகவிலை கொடுத்து வாங்குகிறோம். அவைகளை அவசர நிமித்தம் விற்க நேரிடுகையில் நாம் வாங்கின விலையில் பாதியோ முக்காலோதான் கிடைக்கிறது. கல் நகைகளில் போடும் பணம் இதிலும் பெருத்த மோசமாயிருக்கிறது. இதனால் நகையில் போடப்படும் பணம் விருத்தியாகமல் தான் போனாலும் போகட்டுமென்றாலும், நஷ்டத்தையல்லவா உண்டாக்குகிறது? இவ்விஷயங்களையெல்லாம் நீங்களே நினைத்துப்பாருங்கள். இனியாவது பணத்தை நகைகள் செய்து பாழ் செய்யாதேயுங்கள்.

கா. மீனாக்ஷி அம்மாள்.

மனிதனுக்கு இடர் ஆபத்துக்கள் உண்டாவது சகஜமே. இக்காலங்களில் மனமுடைந்து தயங்கித்தவிப்பது பேதமை. நல்ல காலம் வரும் என்று மனத்தைத் தேற்றிக் கொள்ள வேண்டும்.

# குணம் நாடிக் கொள்.

மனிதர் இயற்கையும் சுபாவமும் வேறுபட்டே யிருக்கின்றன. சிறு பான்மையோர் பிறரிடமிருக்கும் நல்ல குணங்களை நாடும் சுபாவ முடையவர்களாயும், பெரும்பான்மையோர் பிறரிடமுள்ள துற்குணங்களைக் காணும் சுபாவமுடையவர்களாயு மிருக்கிறார்கள். "உண்டு குணமிங்கொருவர்க்கெனினுங்கீழ் கொண்டு புகல்வதவர் குற்றமே" என்பது கீழோரின் லக்ஷணமிதென்பதை விளக்கி நிற்கிறது. நாம் கண்ணாடியில் பார்ப்போமானால் நம்முடைய உருவமே பிரதிபலிப்பதைக் காண்கிறோம். அவ்வாறே பிறரிடம் நாம் காணும் சுபாவங்கள் நம்மிடமிருக்கும் குணங்களின் பிரதிபிம்பங்களேயாம். ஒருவரிடமுள்ள துற்குணங்களையும் தோஷங்களையும் அவரைக்கண்டமாத்திரமே யூகித்தறியும் சக்தி தமக்குள்ளதென்று சிலர் வீண்பெருமை பாராட்டிக்கொள்வதை நாம் காண்கிறோம். மற்றவரிடம் அயோக்கியம், சுயநலம், திருட்டு, பொறாமை, வீண்டம்பம்-போன்ற விரும்பப்படாதனவான துற்குணங்களிருப்பதாக எடுத்துச் சொல்வதிலேயே இவரின் சதாகாலமும் கழிகிறது. இவர் நோக்கம் இப்படித் தாம் செய்வதால் தம்முடைய புத்தியும் சாமர்த்தியமும் மெச்சப்படும்; அதனால் லாபமுண்டாம் என்னும் சுயநலமாம். குற்றங்களெல்லாம் இவரிடம் தான் குடியிருக்கும். இத்தகைய மனிதர்களாலே தான் உலகத்தில் குற்றங்கள் மலிந்து வருகின்றன. கோள்சொல்லும் சுபாவமுடையவரையும், பிறர் குற்றத்தை நாடித் திரிபவரையும் நாம் பக்கத்தில் சேர்க்கவே கூடாது. இவர்களைப் போன்ற அபாயகரமான மனிதர்கள் வேறெவருமேயில்லை. ஆகையால், பிறரிடம் குற்றங்காணும் சுபாவ முடையவர்களுடன் நாம் சகவாசமே செய்யக்கூடாது.

உம்மிடம் அயலாரிடம் குற்றங்காணும் சுபாவமிருப்பின், அது இக்ஷணமே உம்மை விட்டு ஒழியட்டும். பரம அயோக்கியர்களென்றும், கொலைபாதகர்களென்றும், கன்னெஞ்சர்களென்றும், சூதுவாதுக்காரர்களென்றும் அபகீர்த்தி பெற்றிருப்பவர்களிடமே நாம் நாடிக் கொள்ளற்குரிய நற்குணங்களில்லாமலிரா. மகாக் கெட்டதிலும் சிறிதளவு நன்மையிராதிராது, உயிரைப் போக்கடிக்கும் கொடிய விஷம் கூட சில வியாதிகளுக்கு நல்





மருந்தாவதில்லையா? நாம் நாடிக்கொள்ள முயல வேண்டுவது நற்குணங்களேயாம். இப்படி நீர் நடப்பதால் துர்க்குண அவதாரமா யிருப்பவர்கள் கூட சன்மார்க்களாவார்கள். இவர்கள் உம்மை விசுவசிப்பது போல வேறெவரையுமே விசுவசியார். குணம் நாடும் மனிதர்களால் உலகத்துக்கு நீதிபதிகளைக் காட்டிலும் பெருந்த நன்மைகள் உண்டாயிருக்கின்றன. கிறிமினல் சட்டம் பழிக்குப் பழிக்கு என்னும் நியாயப்படி ஏற்பட்டுள்ளது. குற்றவாளிகள் தண்டனை யடைந்தே திருந்தி நல்வழியடைய வேண்டுமென்று சட்டம் கருதுகிறது. ஆகையால், குற்றத்தைத் தடுப்பதொழித்து சட்டம் குற்றவாளிகளை சிருஷ்டிக்கிறதென்று சிலர் கருதுகிறார்கள். மேலும் நீதிபதிகளின் தண்டனையால் நல்வழிப் படுபவர்களைப்பார்க்கிலும், குணம் நாடும் எஜமான்களால் பலர் நல்வழிப்படுகிறார்களென்று அவர்கள் எண்ணுகிறார்கள். ஜனசமூகமெல்லாம் திருந்தல் அசாத்தியமெனக்கருதப்பட்ட குற்றவாளிகள் பக்ஷமுள்ள எஜமான்களிடம் சேவகத்திலமர்ந்து நல்லவர்களாயிருக்கிறார்கள். எஜமான்கள் இவர்களிடம் தயவாயும் பக்ஷமாயுமிருந்தால், எஜமான்களிடம் அதற்கேற்றபடி இவர்களுமிருக்கிறார்கள். எஜமான்கள் நம்பிக்கைவைப்பதால் நம்பிக்கைமோசமென்பதையே இவர்கள் மறந்து விடுகிறார்கள். இவர்கள் மனச்சாக்ஷியே இவர்களைச் சீர்திருத்துகிறது.

சிலர் தங்களுடைய வேலையாட்களிடம் அவநம்பிக்கை காட்டுகிறார்கள். எப்பொழுதும் அவர்களைத்திட்டுவதும் புடைப்பது மாயிருக்கிறார்கள். இவர்களிடமிருப்பவர்களுக்கு சகவாசதோஷத்தால் இவர்களின் துர்க்குணங்களே பிடிபடுகின்றன. நாம் அவநம்பிக்கையுடன் கவனித்து வரும் வேலையாள் மனப்பூர்வமாக வேலை ஒருக்காலும் செய்யவேமாட்டான். நாம் அவனைநம்புவதில்லையாதலால் அவனும் நம்மை நம்பான். ஒருவனை நன்மைப்படுத்துவதோ கெடுப்பதோ நாமே. ஒவ்வொருவரும் குணத்தையே நாடிக் கொள்வது என்றுவிரதங்கொள்வோமானால் உலகத்திலிருக்கும் பாபதோஷங்களெல்லாம் தொலைந்துபோம். இவ்வுலகமே நமக்கு மோட்சமாய் விடும்.

பி. காமாக்ஷி அம்மாள்.

*மனிதன் மனிதனிடம் தன் மனத்தை மறைத்து வாழலாம். கடவுள் முன்னிலையில் அவன் மனம் உள்ளதுள்ளபடியே தோற்றுகிறது:—அன் டானியல்.*

# ஆண்களைவிடப் பெண்களே மேலானவர்கள்.

ஆண்களைப்பார்க்கிலும் பெண்கள் புத்திச்சாதுர்யம், சாமர்த்தியம், இயற்கை அறிவு முதலியவைகளிலெல்லாம் மேம்பட்டிருந்தாலும், சரீரதிட விஷயத்தில்மட்டும் தாழ்மைப் பட்டவரென்றேபொதுஜன அபிப்பிராயமாயிருந்து வருகிறது. இதனுண்மையை விசாரித்தால், இவ்விஷயத்திலும் கூட ஸ்திரீகளே மேலானவர்களென்று ஒத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது.

இந்துக்களாகிய நாம் புனர்ஜன்மங்களில் நம்பிக்கையுள்ளவர்கள். மேலும் ஒவ்வொரு உயிரும் பல ஜன்மங்கள் கர்மானுசாரத்துக்குத்தக்கபடி எடுத்தே தீரவேண்டுமென்றும், நற்கிருத்தியங்களின்பயனாக உயர்ந்த பிறப்புகளை அது அடைகிறதென்றும் நம்புகிறோம். ஒவ்வொரு உயிரும் "புல்லாய்ப் பூடாய்ப்புழுவாய்ப்புள்ளாய்,...." முதலிய பல நிலைகளிலிருந்தே மானிடராகிறதென்பதை மேனாட்டார் அநேககாலமாய் நம்பாமலிருந்தார்களேனும் டார்வின் சாஸ்திரியார் மானிட உற்பத்தியைப்பற்றி ஆராய்ச்சிசெய்துவெளியிட்டகாலமுதல் நம்பியேவருகிறார்கள். பிறப்பின்உயர்வு ஸ்திரீகளாயின் முற்றுப்பெறுகிறதென்றும், புருஷர்கள் அவ்வுயர் பிறப்பை நாடுகிறார்களென்றும் டார்வின் கூறியுள்ளார். இவர் செய்த ஆராய்ச்சிகளைப்பின்தொடர்ந்துபுகழ்பெற்றுள்ளசில சாஸ்திரிகள் ஸ்திரீகள் புருஷர்களுக்குஎவ்விதத்திலும்உயர்ந்தவர்களென்றே சாதிக்கிறார்கள். அவர்கள் சொல்கிறார்கள்:—

புருஷப்பிரஜைகளில் கூன், குருடு, செவிடு, முடம், மூக்கரையன் முதலிய சிஷ்டி விகாரங்கள் காணப்படுவதுபோல ஸ்திரீப் பிரஜைகளில் அவ்வளவதிகமில்லை.

திருஷ்டியிலும் ஸ்திரீகளுக்குப் பலவிதவர்ணங்களின் நுட்ப வித்தியாசங்களைக் கண்டுகொள்ளும் சக்தி புருஷர்களைக் காட்டிலும் அதிகமிருக்கிறது. சாளேஸ்வரம் ஸ்திரீகளுக்கு வெகு அபூர்வமாயே வருகிறது. புருஷர்கள் இளம்பிராயத்திலேயே திருஷ்டிக்குறைவால் மூக்குக் கண்ணாடிகளை உபயோகிக்கவேண்டி வருகிறது. ஸ்திரீகளில் மூக்குக்கண்ணாடி உபயோகிப்பவர்கள் வெகுசிலரே.





சுகக்குறைவில்லாத ஐஸ்வரிய குடும்பங்களில் பெண்பிரஜைகளதிகமாகவும், புருஷப்பிரஜைகள் குறைவாகவுமிருக்கின்றன. ஏழைக்குடும்பங்களிலும் சாப்பாட்டுக்குக் கஷ்டப்படும் குடும்பங்களிலும் புருஷப் பிரஜைகள் அதிகம். யுத்தமும் பஞ்சமும் நேர்ந்தசில வருஷங்களுக்கு புருஷப்பிரஜைகளே அதிகமாய் ஜனிக்கிறார்கள்.

புருஷர்களைப்பிடிக்கும் பலவியாதிகள் ஸ்திரீகளுக்குண்டாவதேயில்லை.

நாகரீகம் பெருகப் பெருக, சுகானுபவ வசதிகள் அதிகரிக்க அதிகரிக்க, ஆடவர்கள் ஸ்திரீகள் போலாகிறார்கள். நாகரீகமலிந்த நாட்டுப் புருஷர்கள் பார்வையில் ஸ்திரீகள் போல் வளர்ந்து வருகிறார்கள்.

ரணகாய பரிசிலனைகளை ஆடவர்களைக்காட்டிலும் ஸ்திரீகள் சகித்தும் பொறுத்தும் கொள்கிறார்களென்பது ரணவைத்தியர்களின் அபிப்பிராயம்.

ஸ்திரீகள் புருஷர்களை விட நீண்டகாலம் ஜீவித்திருக்கிறார்கள்.

நாட்டியத்திலும் தேகப்பயிற்சி விளையாட்டுகளிலும் புருஷர்களைக்காட்டிலும் ஸ்திரீகள் சாமர்த்தியசாலிகளாய் விளங்குகிறார்கள்.

ஆண்களை விட ஸ்திரீகள் எவ்விதத்திலும் மேலானவர்களென்பதற்கு இனி வேறென்ன அத்தாட்சிவேண்டும்?

சு. சின்னம்மாள்.

---

நமது வாழ்க்கை சதுரங்க ஆட்டம் போன்றது. ஒரு ஆட்டத்துக்கும் மற்றொன்றுக்கும் வேறுபாடுகளிருப்பதுபோல நம் கிருத்தியங்களில் வேறுபாடுகளிருந்தே வருகின்றன.—ஈலெக்ஸிஸ்.

* * *

மனிதர் செய்யும் சத்தியத்திலும் ஆணையிலும் நம்பிக்கைவைக்காதே அவர் காரியங்களைக்கண்டு அறிந்து நம்பு:—ஈலெக்ஸிஸ்.

* * *

துக்கமும் துரதிஷ்டமும் சம்பவிக்குங் காலத்தில் நம்மனதை படிப்பதிலோ, ஒரு தொழில் செய்வதிலோ, செலுத்துவது நன்மை. ஏனெனில், [illegible]ப்பொழுதுதான் வாழ்க்கையாகிய கப்பல் மன ஏகாக்கிரமாகிய நங்கூரத்[illegible] புயல் காற்றின்மத்தியில் நிம்மதியாயிருக்கும்.—அன்டிபானிஸ்

## மனைவி கணவனிடம் நடந்துகொள்ள வேண்டிய முறை.

(சில குறிப்புகள்.)

---

உனது கணவனை நேசி.

உனது கணவனின் சுபாவங்களை கவனித்துத்தெரிந்துகொள்.

அவர் யோக்கியரென்றால், அவரிடம் மரியாதையாயிரு.

அவர் தர்மசிந்தை யுடையவரென்றால், அவரிடம் உனக்கு மதிப்பு அதிகரிக்கட்டும்.

அவர் சோகமாயிருந்தால், சோகம்நீங்கத்.தேறுதல் சொல்.

அவர் பிணங்கியிருந்தால், விநோதம் செய்து களிக்கச்செய்.

அவர் சோம்பித்திரிபவராயிருந்தால், தூண்டுகோல் போட்டு ஏவு.

அவர் வாயாடியாயிருந்தால், அவர் சொல்வதற் கெல்லாம் பொறுமையுடன் காதுகொடு.

அவர் நாண்பமுடையவராயிருந்தால், அவரைத் துதித்துப் பேசு.

பிறரிடம் நம்பிக்கை கொள்பவராயிருந்தால், ஆதரவு செய்து தேற்று.

அவர் சண்டையிடும் சுபாவ முடையவராயிருந்தால், அதைக் கவனியாது பொறுத்துக்கொள்.

அவர் இரகசியம் சொல்பவராயிருந்தால், அவரை நம்பு.

அவர் பொறாமையால் பீடிக்கப்பட்டவரானால், அதற்குத் தக்க சாந்திசெய்து பொறாமையைப் போக்கடி.

அவர் இன்பமேநுகரும் இச்சை கொண்டவரா யிருந்தால் இச்சகம் பேசித் திருப்திசெய்.

அவர் சற்சகவாசத்தில் பிரியங்கொண்டவராயிருந்தால், நீயும் அவ்வாறே இரு.

உனக்காக அவர் ஏதாவது செய்தால், அவருக்கு வந்தனம் சொல்லாமலிராதே.





அவசியமும் தகுதியுமானால், அவரை ஆலிங்கனம் செய்தும் முத்தம் கொடுத்தும் களிக்கச்செய்.

அவரைப்பற்றி உனக்கு சகலமும் தெரிந்திருக்கிற தென்பதை அவரறிந்திருப்பதில் தோஷமில்லை.

ஆனாலோ, நீ அவரை அடக்கி ஆள்கிறாயென்பதுமட்டும் அவர் அறிய இடமே கொடுக்காதே.

வி. பாகீரதி அம்மாள்.

---

## கிருககிருத்தியங்கள்.

தற்காலத்தில் பெண்களுக்கு கல்வி கற்பிக்கும் விஷயமாய் கல்வி இலாகாவைச் சேர்ந்த உத்தியோகஸ்தர்களும் அநேக பிரமுகர்களும் பலவழிகளில் முயன்று வருகிறார்களென்பது தெரிந்த விஷயம். படிப்பாகிய வெறும்மனோப்பயிற்சி மட்டும் கவனிக்கப் படுதலில் யாதொரு பிரயோஜனமுமில்லை. மனோப்பயிற்சிக்கேற்ற தேகப்பயிர்ச்சி அவசியமானது. இதையறிந்தோ அறியாமலோ பலர், மனோப்பயிற்சிக்கவசியமான கல்வியைக்கவனித்து தேகவிருத்திக்கு அவசியமானவைகளை கவனியாதிருக்கிறார்கள். கிருககிருத்தியங்கள் தேகப்பயிற்சிக்கு சிறந்த சாதனமென்பதை அறியாமலிருக்கிறார்கள். நம் தாய்மார்கள் கிருககிருத்தியங்களைக் குழந்தைகளுக்குக்கற்றுக்கொடுக்க வேண்டும். வீட்டுக் காரியங்களில் பழக்கப்பட்ட பெண்கள் நல்ல திடகாத்திரர்களாகவும், நோயற்றவர்களாகவும் வாழ்கிறார்கள். மேலும், அவர்கள் நல்ல மனைவிமார்களாகவும், சகோதரிகளாகவும், வேலைக்காரிகளாகவும், தாய்மார்களாகவும், வீட்டெஜமானிகளாகவும் சுகமே வாழ்கிறதை அநுபவத்தில் நாம் காண்கிறோம். கிருக கிருத்தியங்களையே செய்வதொழித்து சுகமேவாழ்கிறோமென்று கருதியிருக்கும் அந்தஸ்துள்ள வீட்டுஸ்திரீகள் சதா நோயாளிகளா யிருக்கிறார்கள். இவர்கள் உண்பதிலும்உறங்குவதிலேயுமே காலத்தைக்கழிக்கிறார்களாதலால், உண்ட உணவு ஜீரணமாகாமல்போக, நோயால் பீடிக்கப்படுகிறார்கள். ஐஸ்வரியகுடும்பங்களில் நோய்குடியிருப்பதற்கும், எளிய குடும்பங்களை நோய்கள் நாடாமலிருப்பதற்கும் காரணங்களை ஆராயப்புகுந்தால் கிருககிருத்தியங்களை முந்திய குடும்பத்தார் செய்யாமலிருப்பதும், பிந்திய குடும்பத்தார் செய்வதும் என்று புலப்படும்.

பாகசாஸ்திர ஞானம் கிருககிருத்தியங்களுள் முக்கியமானது. ஒவ்வொருவருக்கும் இஞ்ஞானம் இன்றியமையாதது. பெண்களைச் சமையல் வேலைகளில் பழக்க நம்மவர்கள் ஏதேனும் விசேஷப்பிரயத்தனங்கள் செய்கிறார்களா? இல்லை, பாருங்கள்.

அமெரிக்கர்களும், மற்ற நாகரீகமடைந்த தேசத்தார்களும் பாக சாஸ்திர அபிவிருத்தியில் நாளுக்கு நாள் கவனம் செலுத்தி, அநேகப்பள்ளிக்கூடங்களைஸ்தாபித்து, பெண்களுக்கு போதித்து வருகிறார்கள். இதற்காகப் பத்திரிகைகளும் நடத்தப்பட்டு வருகின்றன. அநேக ஸ்திரீகள் இதில் பயின்று சம்மானங்களும், பட்டங்களும் பெற்று வருகிறார்கள். இப்படியிருக்க, நம்தேசத்தில் சற்றே கல்விகற்ற பெண்கள் சமையல் வேலை செய்வது கௌரவத்துக்குக்குறைவென்று நினைத்து சும்மா இருக்கிறார்கள். இது சுத்தப் பிசகு என்று சொல்லத் துணிவோம். கல்வி கற்று நாகரீகமடைந்ததாகச் சொல்லும் நம் நாட்டு ஸ்திரீகள் வீட்டு வேலைகளை அசட்டை செய்யலாமா? வீட்டு வேலைகளை செய்யாமலிருக்கிறதின் தீங்குகள் பல.

ஐஸ்வர்யமுள்ள ஒருபெரிய குடும்பத்தில் அதிர்ஷ்டஹீனத்தால் தரித்திரம் வந்துவிட, அவ்வீட்டு ஸ்திரீகள் வேலைக்காரர்களின்றிக் குடும்பவேலைகளைத் தாங்களே செய்யும்படி நேர்ந்தது. அவர்கள் மிகவும் கஷ்டப்பட்டார்களென்றும், இப்படிக் கொஞ்சகாலம் உழைத்ததால் அவர்கள் முன் அடைந்திராத பலத்தையும் தேக சுகத்தையும் பெற்று, சிக்கனத்தையறிந்து, முன்னிருந்த நிலைமைக்கு கிரமேண வந்தார்களென்றும் ஒரு சிறுகதை வழங்குகிறது.

'நல்ல ஊழியனே நல்ல எஜமானன்' என்றபழமொழிப்படி ஒரு கெட்டிக்கார ஸ்திரீயானவள் இன்னின்ன காரியத்திற்கு இவ்வளவு நேரம்பிடிக்குமென்று தெரிந்துகொள்வாள். தன் வேலைக்காரிகளை சோம்பலின்றியும், அவர்களுக்கு யாதொருவிதமான கெடுதியுமின்றியும், சரியாக நடத்தச்சக்தியுடையவளாயிருப்பாள். காரியங்களையும் அரை குறையாய் நடத்தாமல் செவ்வையாய் முடிப்பாள். வேலை ஒன்றும் தெரியாத எஜமனியோ, எப்பொழுதும் வேலைக்காரிகளிடம் குற்றம் குறை சொல்லிக்கொண்டும், தினம் ஒருவேலைக்காரி வேணுமென்று தன் புருஷனைத்தொந்திரவுசெய்துகொண்டுமிருப்பாள்.





செல்வவான்கள் வேலைக்காரிகளில்லாமலே வேலை செய்ய வேணுமென்பது எமது அபிப்பிராயமல்ல. சமைக்கவும் மற்ற வீட்டு வேலைகளைச் செய்யவும் தெரிந்திருந்தால் அவர்கள் பலமும் சுகமும் பெற்று, நல்ல குடும்பிகளாய் குடும்பங்களைத் தக்கபடி நடத்துவார்களென்பதே. அவர்களின் வீடும் வாசலும் நன்றாய் விளங்கும். குடும்பமும் தழைத்துப்பெருகும்.

வி. பாலாம்பாள்.

---

## போதனாமுறையின் நோக்கம்.

கல்வி ஆண்பிள்ளைகளுக்கு எவ்வளவு அவசியமோ, அவ்வளவு பெண்பிள்ளைகளுக்கும் அவசியமென்பது தற்காலத்தில் பெரும்பான்மையோரால் ஒப்புக்கொள்ளப் படுகிறவிஷயம். பெண்கல்வியானது நாடெங்கும் பரவவேண்டுமென்னும் நோக்கத்துடன் பாலிகாபாடசாலைகளைத் துரைத்தனத்தாரும், புண்ணியசீலகனவான்களும், தர்மசிந்தாக் கிறிஸ்தவப்பாதிரிகளும் ஆங்காங்கே ஸ்தாபித்து நடத்தி வருகிறார்கள். இப்பாடசாலைகளால் பெரும் பயன் விளைகின்றது என்பதை எவருமே மறுக்கார். ஆயினும் கிறிஸ்தவப்பாதிரிமார்கள் நடத்திவரும் பள்ளிக்கூடங்களில் கிறிஸ்தவமதபோதம் செய்யப்படுகிறதற்காக ஆக்ஷேபங் கொண்டு சிலர் தங்கள் பெண்களுக்குக் கல்விகற்றுக்கொடுக்காமலிருக்கிறார்கள். இது பெரும் பிசகு. இப்பாடசாலைகளில் மிக்க உபயோகமுள்ள பலவிதமான தொழில்கள் கற்றுக் கொடுக்கப்படுகின்றனவே. சாரமானவைகளை கிரகித்துக் கொண்டு சாரமற்றவைகளை நீக்கிவிடவேண்டும். சாரமற்றவைகளைக் கருதி சாரத்தை நிராகரிப்பது மௌட்டீகமாகுமன்றோ?

இப்பாட சாலைகளில் உபாத்திச்சிமார்களாயிருந்து மேல்பார்வை பார்த்துக் கொள்கிற துரைசாணிமார்கள் மேனாட்டுக் கல்விச்சாலைகளில் கற்றுத் தேர்ச்சி பெற்றவர்களாயிருக்கிறார்கள். மேனாட்டுக்கல்விச் சாலைகளிலெல்லாம் அறிவபிவிருத்திக்கு ஆதாரமான கல்வி கற்றுக்கொடுக்கப் படுவதுடன் ஜீவனார்த்தத்துக்கு உபயோகமான தொழில்களும் கற்றுக் கொடுக்கப்படுகின்றன. ஆகையால், அங்கிருந்து வருபவர்களுக்கெல்லாம் பூவேலை, தையல் வேலை, பிரம்புவேலை, முதலியனவும், ஏதாவதொன்றில் விசேஷ சாமர்த்தியமுமிருக்கிறது. மேனாட்டு போதனாமுறையின் நோக்

கம் அறிவு அபிவிருத்திக்குரிய கல்வியையும் வாழ்க்கைக்கு உபயோகமுள்ள தொழில் கல்வியையும் போதிப்பதாகும். ஆகையால், மேனாட்டுப் பெண்கள் அவகாசமிருக்கும் பொழுதெல்லாம் ஏதாவது தொழில் செய்து லாபமடைகிறார்கள். தையல் வேலை தெரியாத ஆங்கில ஸ்திரீயே யில்லையென்னலாம். தன் குழந்தைகளுக்கும், தனக்கும், கணவனுக்கும் வேண்டியபொழுது வஸ்திரங்கள், ஆடைகள் முதலியவைகளைத் தானே செய்வாள். அவகாசமிருப்பின் மேஜோடு, குல்லாய், கழுத்துப்பட்டி, வஸ்திரம் முதலிய நெய்து, அவைகளை விற்று, குடும்ப சம்ரக்ஷணைக்கு மிக்க உபயோக முள்ளவளாயிருப்பாள். ஒரு ஸ்திரீ நல்ல உழைப்பாளியாய் மட்டு மிருப்பின் தன் சௌகரியத்துக்குவேண்டிய பொருள்களுக்குப் பெற்றோர்களைத் தொந்திரவு செய்வதைக்கேவலமாகக் கருதுவாள். இம்மாதிரியே நம் நாட்டுப்பெண்களும் பழக்கப்படவேண்டுமென்னும் நோக்கத்துடன் பாலிகா பாடசாலைகளில் மேனாட்டு போதனாமுறைகளின்படி கல்வி கற்றுக் கொடுக்கப்பட்டுவருகிறது. இதைச்சரியாய் நம்பெண்கள் அறிந்து கொள்ளாதிருப்பது பேதமை. நம்மவர்களில் பெண்கள் சம்பாதிப்பது என்பது கேவலமெனக் கருதப்படுகிறதுபிசகு. பாடசாலையில் வாசித்துவந்தபெண்கள் பாடசாலைகளுக்குப் போவதை ஒழித்ததும் சகலத்தையும் மறந்து விடுகிறார்கள். அனாவசியமான வம்புவார்த்தைகளை வளர்த்துக்கொண்டு காலங்கழிக்கிறார்கள். காலத்தின் அருமையும் விலையும் இவர்களறியாத தோஷத்தால் இப்படியிருக்கிறார்கள். ஆகையாலேயே பெண்கள்பலரைப்பெற்றவீடு பாழ்வீடாகிறது. ஒருவர் உழைத்துச் சம்பாதிக்க, அதைத்தின்று தீர்க்கப்பலரிருக்கிறார்கள். ஏன் நம் புத்திரிகளை பூவேலை, கழுத்துப்பட்டி, மேஜோடு முதலியன செய்யும்படி சொல்லி குடும்ப ஸம்ரக்ஷணையை இலகுவு படுத்திக்கொள்ளக்கூடாது? நாம் உபயோகிக்கும் ஒவ்வொருபொருளும் மேனாட்டுப்பெண்களால் செய்யப்பட்டுநம்நாட்டில் இறக்குமதியானவைகளே. நமக்கு வேண்டியவைகளைமட்டுமாவது நாம் செய்துகொண்டால் போதும். இப்படிப்பெண்கள் செய்வதால் குடும்பச்செலவில் எவ்வளவோவு குறைவுபடும். சேலைகள் ரவிக்கைகள் முதலியவைகளைத் தைக்கத் தையல்காரரை அழைப்பது வீண்சிலவுக்காஸ்பதந்தானே. நம் சாதாரண வேலைகளை ஏன் நாமே செய்துகொள்ளக்கூடாது? நம்மால் கூடிய வேலையைப் பிறர்செய்யபார்ப்பதை நாம் இழிவென்று கருத





வேண்டும். அவமானமென்று நம்மனதில் அது தைக்கவேண்டும். அப்பொழுதே எல்லாம் சீர்ப்படும்.

நமது பெண்கள்மட்டும் தொழிற்கல்வியின் உபயோகத்தையும், அதன் லாபத்தையும், பாடசாலைகளில் அவைகள் போதிக்கப்படுவதின் நோக்கத்தையும், அறிவார்களாயின், தங்கள் நிலையை உயர்த்திக்கொள்வதுடன் பெற்றோர்களுக்கும் தங்கள் புருஷர்களுக்கும் மிக்க உபகாரமுள்ளவர்களா யிருப்பார்கள். ஏதாவதொருதொழிலை வீட்டிலிருந்தபடியே ஒரு பெண்செய்து வருவாளானால் அவளுடைய சிலவுகளுக்குத்தன்கணவனையாவது பெற்றோரையாவது அவள் கஷ்டப்படுத்த வேண்டியே யிருக்காது. இப்படிப் பெண்களிருப்பார்களாகில் இவர்களைக் கல்யாணம் செய்து கொள்வதற்கு வலுவிலேயே மாப்பிள்ளைகள் வருவார்கள். இதையறியாது நம்மவர்கள் மாப்பிள்ளைகளுக்குப்பணம் கொடுக்க வேண்டியிருக்கும் வழக்கமேற்பட்டதைக் குறித்து வருந்துகிறார்கள். நீங்கள் உங்கள் பெண்களுக்கு நல்லதொழிலைமற்றும் கற்றுக் கொடுத்துவிடுங்கள். நீங்கள் செய்யவேண்டியது வேறு ஒன்றுமில்லை. உங்கள் கடமையை நீங்கள் செய்தவர்களாவீர்கள். அவர்கள் விவாகத்தைப்பற்றி நீங்கள் சற்றும் விசாரப்படவேண்டிய அவசியமேயில்லை.

ஓர் உபாத்தியாயினி.

## நமது புதிய கவர்னர்.

சர் தாமஸ் டேவிட்கிப்ஸன் கார்மைகல் பார்ட், எம். ஏ., எல். டி. கே. ஸி. எம். ஜி., அவர்கள் நமது மாட்சிமை தங்கிய ஜார்ஜ் சக்கரவர்த்தியவர்களின் ஆக்ஞையின் மேல் சென்னைவந்து நமது காருண்யசிந்தா கவர்னராகிய சர் ஆர்தர் லாலி அவர்களிடமிருந்து கவர்னர் ஸ்தானத்தை சார்ஜ் நவம்பர் மாதம் பெற்றுக் கொண்டார். இவர் பரம்பரையாய் பிரபு வம்சத்தைச்சேர்ந்தவர். இவர் 1859-ஆம் வருஷத்தில் பிறந்தார். இவர் கணித சாஸ்திரத்துக்குப் பேர்போன காம்பிரிட்ஜ் கலாசாலையில் வாசித்து எம். ஏ. பட்டம் பெற்றிருக்கிறார். இவர் ஸ்காட்லாந்து காரியதரிசியிடம் அந்தரங்கக் காரியதரிசியாய் சிலகாலமும், பார்லிமெண்ட் மெம்பராகசிலகாலமும், சமீபத்தில் குடியரசு நாடகிய விக்டோரியாவில் கவர்னராக சில காலமுமிருந்து அநுபவமும், உலக ஞானமும் பெற்றிருக்கிறார். இவருக்கு வயது 52 நடக்கிறது. இவருக்கு 1908-ம் வருஷம் கே. ஸி. எம். ஜி., என்ற பட்டம் கவர்ன்மெண்டார் அளித்தார்கள். இவரும் அவர் மனைவியரும் நமக்குவேண்டிய நன்மைகளை நாடிச்செய்வார்களென்றும், எக்காலத்தும் நாம் மனத்திருத்திப் போற்றும்படியாய் நடந்துகொள்வார்களென்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

# கனகாம்புஜம்

## என்னும்

# கற்புக்காதலி.

(3வது சஞ்சிகையின் 14-ம் பக்கத்தின் தொடர்ச்சி.)

வீட்டு ஏவலாளர்கள் இராணியிடம் தங்களுக்கு இயற்கையாயுள்ள பக்தியால் தூண்டப்பட்டும், அவள் புத்திர சோகத்தால் அடைந்துள்ள நிலையைக் கண்டு பரிதாபப்பட்டும், சற்றும் தாமதியாமல் இராணியைத் தூக்கி அந்தப்புரம் சேர்த்தார்கள். தன் தாய்மீது மிக்க வாஞ்சை கொண்ட மல்லிகை தன் விசனத்தை ஒருவாறு அடக்கிக்கொண்டு தன்தாயிக்கு சிசுருஷை செய்து களைப்புத் தீர்ப்பதிலும் அவளது மனதைச் சாந்தப்படுத்துவதிலும் கண்ணாயிருந்தாள். கனகவல்லியும் மல்லிகைக்கு பக்ஷத்திலாவது செய்கையிலாவது சற்றும் பின்னடையாதவளாய், இராணியைத் தாய்போலவேபாவித்துப் பலவகையில் அவளின்சோகத்தைப் போக்கடிக்கமுயன்றாள். இராணியுடையவும் மல்லிகையுடையவும் சோகத்துக்குக் காரணத்தை யறிந்தும், அவர்களுடன் பச்சாதபங்காட்டினாளேனும், அவள் தனக்குச் சற்றுமே சந்தோஷம் கொடுக்கக் கூடாத கல்யாண பந்தத்தினின்று தப்பினது பற்றி உள்ளூர சந்தோஷப்பட்டுக் கொண்டிருந்தாள். மானபங்கன் கனகவல்லியினிடம் மிக்க அன்பாயுமாதரவாயுமாயிருந்து வந்தானெனினும், அவன் இராணியையும் மல்லிகையையும் நடத்திவந்த கடுமைத்தன்மையையறிந்தவளானதால், கனகவல்லி இவன் உறவினின்றும் நீங்க ஒரு சந்தர்ப்பம் உண்டாயிற்றென்பதைக் கருதிக் களித்திருந்தாள். இவள் தன் உட்கருத்தை எவ்விதத்திலும் வெளிக்காட்டாமல் சாதுர்யமாயிருந்தாள்.

மானபங்கன் கிரீடத்தைத் தவிர்த்து யாதொன்றையும் கவனிக்கவேயில்லை. அக்கிரீடம் எங்கிருந்தது, எப்படி அரண்மனைக்கு வந்தது என்ற கேள்விகளுக்குத் தகுந்த பதில்கள் அறிய ஆலோசித்துக் கொண்டிருந்தான். என்ன யோசித்தும் உண்மை தோற்றுவதாயில்லை. கிரீடத்தைக் காணக் கூடியிருந்த பலர், பலவிதமாய் வாய்க்கு வந்த விதமெல்லாம் வார்த்தையாடிக் கொண்டிருந்தார்கள். அக்கணம்வரை கண்டும் கேட்டுமிராத அபூர்வச் செயலைப்பற்றி யாருக்குத்தான் என்ன தெரியும்? இஃதிவ்வாறாக பக்கத்துக் கிராமத்தைச்சேர்ந்த குடியானச் சிறுவன் ஒருவன், மானபங்கன் முன்வந்து நின்று,

“இந்தக் கிரீடத்தை நான் அறிவேன். கிராமதேவதை கோவில் பிராகாரத்திலிருக்கும் அபிராமராஜ சிலையின் தலையிலிருக்கும் கிரீடமிது” என்று பலரும் கேட்கச் சொன்னான்.





இவ்வார்த்தைகள் அவன் வாயினின்றும் வெளிப்பட்டதோ, வெளிப்படவில்லையோ, மானபங்கன் தன்னிடத்தை விட்டுத் தாவிக் குதித்து அச்சிறுவனைப்பற்றிப் பிடித்து,

“துரோகி! என்ன சொன்னாய்? உனக்கு என்ன தைரியமடா? இதற்காகவே உன் கழுத்தை இப்பிடியியே திருகி எறிந்து விடுகிறேன்” என்று ஆவேசங்கொண்டவன் போல் கத்தினான்.

கூடியிருந்த ஜனங்களுக்கு அச்சிறுவனின் வார்த்தைகள் எக்காரணத்தால் மானனுக்கு கோபாவேசத்தையும் ஆக்கிரத்தையும் மூட்டியிருக்க வேண்டுமென்று புலப்படவில்லை. அச்சிறுவனுக்கு மானனின் செய்கை பிரமிக்கத்தக்கதாயிருந்தது. இருப்பினும், மிக்க சமத்காரமாய் சிறுவன் மானன் பிடித்தபிடியினின்றும் தப்பி, சற்றே விலகினின்று மிக்கவினயத்துடனும் பணிவுடனும்,

“ஐயா! நான் என்னபிழை செய்தேன்?” என்று கேட்டான்.

இக்கேள்வியைக் கவனித்தானில்லை மானன். இச்சிறுவன் ‘என்கெட்டிப் பிடியினின்றும் தப்பிவிட்டானே, இவனைச் சிறையிலிட்டுப் பழிவாங்க வேண்டு’மென்று எண்ணி, ஏவலாளர்களுக்கு அப்பையனைச் சிறைசெய்யும்படி கட்டளையிட்டான். ஜனங்களுக்கு மானனின் செயல்கள் ஒன்றுமே விளங்காமலிருந்தன. அச்சிறுவனின்மீது பரிதாபங்கொண்டு அங்கிருந்தவர்களெல்லாம் அவனுக்குத் தீங்கு யாதொன்றுமிழைக்கக் கூடாதென்று மானனை வேண்டிக்கொண்டார்கள்.

கோவிலுக்குச் சென்றிருந்த சிலர் ஓடிவந்து, “மகாராஜா! அபிராம ராஜாவின் சிலையின் முடிகாணோம்” என்றார்கள்.

இம்மொழிகள் எரியும் நெருப்பில் நெய்வார்த்ததுபோல், பொங்கியெரிந்துகொண்டிருந்த மானனின் கோபத்தை மூட்டிவிட்டன. அவனுக்கு இன்னசெய்வதென்று தோற்றிலது. சிறுவனை ஏதாவதொன்று கொண்டு புடைத்து யமனுலகுக்கு அனுப்பிவிட்டால் ஒன்றுமில்லையென்று எண்ணினவன்போல் சுற்றுமுற்றும் பார்த்து ஒன்றும் கிடைக்காமல்போக, அச்சிறுவன்மேல் மற்றுமொரு முறை பாய்ந்து,

“கொலைபாதகா! துரோகி! இராக்ஷசா! சூன்யக்காரா! இதெல்லாம் உன்காரியமடா! என்பிள்ளையைக் கொன்ற கொலைபாதகா!” என்று பலவாறு ஓலமிட்டுக்கதறினான்.

அரசனின் தயவைச் சம்பாதிக்கச் சமயம்பார்த்து, ‘காக்கை வெள்ளையெனின்’, ‘ஆம் கண்டோம்’ என்று கூறும் சுபாவமுடைய சமஸ்தான உத்தியோகஸ்தர்கள் சிலர்,

“ஆம், ஆம், இவன்தான். இவன்தான். அபிராம ராஜாவின் சிலையின் முடியைத் தூக்கிவந்து நம்மிளவரசைக் கொன்ற பாதகன்” என்று ஒத்துப் பாடினார்கள்.

என்ன அறிவீனம்! கல்சிலையல்லவோ அபிராமரது சிலை? இவர்கள் முன்னிருந்தது இரும்புக்கிரீடம். சாதாரண மனிதன் தூக்கசாத்தியமான

தொன்று இது? ஒரு சிறு பையன் இதைத் தூக்கவும் முடியுமோ? இச்சமஸ்தான உத்தியோகஸ்தர்களின் புத்திகோசரத்தை அளவிடலும் சாத்தியமன்று.

மானன், இச்சிறுவனுக்குச் சரியான தண்டனை விதித்து, அவனுக்குப் புத்தி புகட்ட வேண்டுமென்று, ஏவலாளர்களை நோக்கி, "இக்கிரீடத்தைத் தூக்கி இவன் மீது வையுங்கள். இவன் சூனியக்காரன், இவனுக்கு அவசியமானால் குட்டிச் சாத்தான் சாப்பாடும் ஜலமும் கொண்டுவந்து கொடுக்கும்" என்று சொன்னான்.

இத்தகைய தண்டனையை யடைய இச்சிறுவன் செய்த குற்றம்யாது? மானபங்கனுக்குத்தான் இது தெரியும். சிறுவன் மீது பரிதாபங்கொண்ட சிலர், அரசன் மிலேச்சத்தனமாயும் அநியாயமாயும் செய்த தீர்மானத்தை மாற்றப்பலவாறு வற்புறுத்திச் சொன்னார்கள். விஷயங்களின் உண்மையறியாத பாமரஜனங்கள் அரசன் தீர்மானத்தைக் கேட்டு மகிழ்ச்சி கொண்டிருந்தார்கள். ஏனெனில், சூனியக்காரனொருவன் அவன் பிறரைத்தொந்திரவு செய்யும் ஆயுதத்தாலேயே தண்டனையடைகிறானென்பதால். இருந்தாலும் அவர்கள் சூனியக்காரன் இறக்காதபடி அவனுக்குக் குட்டிச்சாத்தான் வேண்டியனவெல்லாம் செய்யும் என்று மௌட்டீகமாய் எண்ணி வாளாவிருந்தார்கள்.

அரசாக்கினை நிறைவேற்றப்பட்டது. பையன் மீது முடிதூக்கிவைக்கப்பட்டது. மானன் அவனுக்கு ஆகாரம் ஒன்றும் சேராமலிருக்க காவலாளரைப் பாராக்கொடுக்க உத்தரவு செய்து விட்டுத் தன் அந்தரங்க அறைக்குச் சென்றான். யாரையும் தன்னறைக்குள் விடக்கூடாது என்று வாயில் காப்போனிடம் சொன்னான்.

இராணி ஹிரண்மயி மூர்ச்சை தெளிந்து எழுந்ததும் தன் பிராணநேசரைப்பற்றி விசாரித்தாள். மல்லிகையைத் தந்தையிருக்குமிடம் சென்று வேண்டிய உபசாரங்கள் செய்யும்படி விடை கொடுத்தனுப்பினாள். தாய் சொல் மிக்க மந்திரமில்லை யெனக்கொண்ட மல்லிகை க்ஷணமேனும் தாமதியாது தந்தையிருக்குமிடம் புறப்பட்டாள். அந்தப்புற அறையை அடைந்து தந்தை யாதொருவரையும் உள்விடக்கூடாதென்று கொடுத்திருக்கும் ஆக்கினையை காவலாள் வாயிலாய்க் கேட்டுத் திகைத்து நின்றாள். தன் சகோதரனின் அகாலமரணம் இதற்குக் காரணமோ என்று நினைத்தாள். தான் அவர் முன்னிலையில் தோற்றுவதால் அவரின் துக்கத்தை அதிகரிப்பதாகுமோ வென்று தயங்கினாள். தந்தை ஆணையை மீறி நடந்தறியாள். தாயாக்கினையை உல்லங்கனம் செய்வதெப்படி? உள்பிரவேசிக்க மனம் செல்லக் கால் பின் வாங்குகிறது; கால் செல்ல மனதிடம் தளர்கிறது.

சற்றே திறந்திருக்கும் கதவின்சந்து வழியாய்த்தந்தையின்மனத்தமோற்றத்தை ஒருவாறு கண்டாள். அவர் பித்தம் தலைக்கேறியவர் போல அறையின் குறுக்கும் நெடுக்குமாய் உலாவிக்கொண்டும் பிதற்றிக்கொண்டு மிருந்த கோலத்தைக் கண்டு பரிதாபங் கொண்டாள். இவரின் நிலை மல்லிகைக்கு பயத்தை உண்டாக்கியது. ஒருவரின் நிழல் தோற்ற மானபங்கன் கதவைத் திடீரெனத் திறந்து மதிமயங்கி தன் புத்திரியென்று கண்டு கொள்ளாமல், "யாரது அங்கே?" என்றான்.

(இன்னும் வரும்)

120 வி. செல்லம்மாள்.

## நமது மாக்ஷிமை தங்கிய ஐந்தாம் ஜியார்ஜ் சக்கிரவர்த்தி மேரி சக்கிரவர்த்தினியா ரவர்களின் மகுடாபிஷேக வைபவ டில்லி தர்பார் மகோற்சவக் கொண்டாட்டம்.

---

ஸ்ரீமதி ம. நாகம்மாள் அவர்கள்.

நேரிசை வெண்பா.

1. பெயர்.

ஏரார் இளங்கிளியே எம்மையிருங் குடைக் கீழ்ச்
சீராக ஆள்வார்பேர் செப்பிடுவாய்—காரையிரு
செங்கரத்தால் வென்ற சிறப்புடைய ஐஞ்ஜியார்ஜ்யென்
றங்க முடன் கூறுவரே ஆங்கு.

2. நாடு.

சொற்கிளியே நம்மைத் துகளறவே பாலிப்பார்
மற் கொள்வள நாடென் வழங்கிடுவாய்—விற்குலவும்
செங்கதிரோன் என்றென்றும் சென்று மறையாத
தங்கவள நாடதுகாண் சூழ்ந்து

3. நகர்.

பச்சைப் பசுங்கிளியே பண்பாகவே நம்மை
நச்சிப்புரப்பாரூர் நல்கிடுவாய்—முச்சகமும்
தன்னேரிலா இலண்டன் தானென்பர் வானோரும்
என்னேரமும் துதிப்பதேய்ந்து.

4. ஆறு.

சொல்வளங் கொள்தூய சுகமே நமைப்புரப்பார்
நல்வளஞ் செய்யாறு நவின்றிடுவாய்—பல்வளனும்
தேங்கவருள் தண்புனலாற் றெண்டிரையி னுப்பகற்றும்
பாங்குடைய கங்கை யெனப்பார்.

5. மலை.

அஞ்சுகமே எம்மைமிக அன்பாக ஆதரிப்பார்
மஞ்சுதவழ்கின்ற வரை யுரையாய்—விஞ்சுகின்ற
நீளுருவிமாரு நெடுஞ் சிகரம் வானுருவும
கோளகல் இமாசலமாம் கொள். 121

6. கரி.

பங்கப்படாக்கிளியே பாரினுயர் பார்த்திபர்தம்
துங்கக்கரியதனைச் சொற்றிடுவாய்—பொங்கமரில்
நீள்கரத்தால் வீசி யெதிர் நேரலரைத் தோள்சாய்க்கும்
கோனுடைய தென்பகுதி.

7. பரி.

ஆய்பசிய மென்சிறகா ரஞ்சுகமே நம்மரசின்
பாய்பரியின் சீரைப் பகர்ந்திடுவாய்—காய்சமரில்
கோளாரும் கூடார்தம் கொற்றம் பறித்தல்லால்
மீளாது காணதனை மிக்கு.

8. படை.

சேந்தவாய்ச் செஞ்சொற்சிறு கிளியே நம்மரசர்
ஏந்தும்வாள் தன்னையியம் பிடுவாய்—போந்த
பகையிருளை நீக்கி யொரு பாற்கரன்போலெங்கும்
நகையொளியைச் செய்திடுமே நன்கு.

9. முரசு.

பற்றலரைச் செற்று நமைப்பாலிக்கும் பார்த்திபர்தம்
வெற்றிமுரசின் சீர்விளம்பிடுவாய்—மற்றதுதான்
வஞ்சமுறு மாற்றார்தம்மாண் பில்லா வன்மைநிகழ்
நெஞ்சதிரத் தானதிரும் நின்று.

10. மாலை.

செம்பவள வாய்க்கிள்ளாய் சீரடுவையமைப்புரப்பார்
வம்பவிழும்மாலை வழுத்திடுவாய்—தும்பை
யம்மாலை தேன்பிலிற்றும் வண்முடியும் மார்பும்
செய்மாலை வாடாதெனி.

11. கொடி.

அஞ்சொல்லருங்கிளியே அன்பாரும் நம்மரசர்
விஞ்சுகொடிதன்னை விளம்பிடுவாய்—நெஞ்சத்துத்
தீரமுறுவெற்றி மலிசிங்கக் கொடிசிறக்கும்
பேருலகமெங்கும் பெயர்ந்து.

12. குடை.

நற்றமார் தத்தாய் நலமா நமைப்பிறப்பார்
கொற்றக்கொடைதன்னைக் கூறிடுவாய்—மற்றதுதான்
ஞாலமதிற்பாதி நறுநீழலினுள்ளாகக்
கோலமதிபோலொளிரும் கொண்டு.





13. செங்கோல்.

மண்ணார்பசுங்கிளியே பண்பார்நம்பார்த்திபர்தம்
எண்ணாரும் செங்கோல் இசைத்திடுவாய்—தண்ணாரும்
வெண்மதியும் செங்கதிருமேவு கதிமாறுகினும்
எண்முனையும் கோடாதேயிங்கு.

மௌலி.

ஆயிரத்துத் தொளாயிரத் தொரு பானொன்று
ஆயஜூன்பான் யீரிரண்டில் மேய பொன்
தூயசந்தியநாள் துலங்க தார்கொள
யீய ஜியார்ஜ் மேரி மௌலி சிறமுற

எல்லாம்வல்ல கடவுளையே நாம்
எல்லோரும் வணங்கித் துதித்திடுவோம்.

எங்கும் என்னாளும் சிங்கக்கொடி ஓங்கியே மங்களவாழிகூற
எங்கள் தேசமெங்கினுமே எல்லாம் ஓர் குடையாயா யாள்
எங்கள் சக்கிரவர்த்தி ஜியார்ஜ் ஐந்தாமெங்கள் சக்கிரவர்த்தினி மேரி
எங்கும் புகழ்பெற திடகாத்திரமாய் இப்புவில் நீடூழிவாழ்ந்தாளுகை
(எல்லாம் வல்ல கடவுளையே—நாம்) [செய

---

## பிரபஞ்ச வர்த்தமானம்.

ஜெர்மனி தேசத்திலுள்ள எக்ஷலாஷபின் (Aix-la-chaple) என்னுமிடத்தில் பத்திரிகா வாசகசாலை ஒன்று ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. ஆஸ்கார் போரன் பேக்என்னும் ஜெர்மனி கனவான், தலை முத்திரைகள், நாணயங்கள் முதலியவைகளைச் சிலர் சேர்ப்பதுபோல, தாம் பத்திரிகைகளைச் சேர்க்கலாமென்ற எண்ணத்துடன் உலகத்திலுள்ள பத்திரிகைகளை யெல்லாம் வரவழைத்துவந்தார். 1885-ம் வருஷம் அவரிடம் 10,000 பத்திரிகைப் பயில்கள் சேர்ந்தன. இதற்குப்பின் பத்திரிகா வாசகசாலையொன்றை ஸ்தாபிக்கத்தமக்கிருக்கும் நோக்கத்தை தெரிவித்து பத்திராதிபர்களுக்கெல்லாம் கடிதங்கள் எழுதினர். அவர்களெல்லாரும் மிக்கப்பரிவுடன் அவருக்கு சகாயம் செய்ய, தற்சமயம் அவரின் வாசகசாலைக்கு லக்ஷம் பத்திரிகைகள் வருகின்றனவாம்.

* * *

ஹைகோர்ட்கேஸில் விசாரணையாகும் செஷன் கேஸ்களுக்கு ஜூரிகளை நியமிக்கிறார்களென்பதும், ஜூரிகளினுடைய அபிப்பிராயத்தைத் தழுவி ஜட்ஜுகள் தீர்மானம் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறார்களென்பதும் தெரிந்த விஷயங்கள். அமெரிக்காவில் ஜூரிகளாக ஸ்திரீகள் தேர்ந்தெடுக்கப் படுகிறார்கள்.

ஜெர்மனிதேசத்து சக்கரவர்த்திக்கு கேய்ஸர் என்று பெயர். இவருக்கு விக்டோரியா லூயி என்னும் ஒரு புத்திரி இருக்கிறாள். இந்த இளவரசிக்கு 18-வயது நிறைந்தது. பிறந்த நாள் கொண்டாட்டகாலத்தில் குடிகள் அனேக விலைபெறுமான பரிசுகளை இராஜகாணிக்கையாக,இவருக்குசமர்ப்பணம் செய்தார்கள். முக்கிய பரிசுகளாகக் கருதப்படுவன அவருக்கு ஒருபிரத்தியேக அரண்மனையும், அவருக்கடங்கியஒரு சைந்நியமுமாம். இச்சைந்நியம் பிறந்தநாள் கொண்டாட்டதினத்தன்று இந்த வரசியைக்கண்டுதெளசர்த்தருக்குச்செய்யும் மரியாதை செய்ததாம். இளவரசி சைந்நியத்தைப்பற்றி மிக்கப் பெருமையா யிருந்து வருகிறார். இவரின் தன்மையைப்பற்றி "இவள் சில சமயங்களில் தன் தந்தை சக்கரவர்த்தி யென்கிற விஷயத்தை மறந்து போகிறாளெனினும் , தான் சக்கரவர்த்தி மகள் என்கிற விஷயத்தை மறப்பதேயில்லை" என்று கெய்ஸர் சக்கரவர்த்தி சொல்லுவாராம். சைந்நியத்தைப்பழக்கி இவரே நடத்திவருகிறார்.

*　　*　　*

ஜெர்மன் தேசத்தின் பிரதான நகராகிய பெர்லினில் 30-பெண்பாலார் போலீஸ் சேவர்களாய் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் வீடுகளினுள்ளே சுயேச்சையாய்த்தங்குதடையில்லாமல் சென்று பார்க்கிறார்களாம்.

*　　*　　*

ருஷியாதேசத்தில் இதுவரை ஸ்திரீகள் உத்தியோகத்திலமர்ந்திருந்து வருகிறார்களெனினும், அவர்களுக்கு உன்னதமானதும்பொறுப்பானதுமான உத்தியோகங்கள் கொடுக்கப்படாமலிருந்தன. சமீபத்தில் கவர்ன்மெண்டார் மிஸ்லிகோஸ்லோவா என்னும் மாதைத் தபால் தந்தி ஆபீஸ் உயர்தர உத்தியோகத்துக்கு நியமித்தார்கள்.

*　　*　　*

மிஸ்டர் ஹென்றி ஒல்லிங் வொர்த் என்பவர் உலகத்தைச் சுற்றி நடந்து வலம் வருகின்றனர். பத்து வருடங்களில் தமது பிரயாணம் முற்றுப் பெறுமென்று கூறுகின்றனர். 1903-வது வருடம் இவர் சான்பிரான்சிஸ்கோவை விட்டு 70,000 மயில் பிரயாணஞ்செய்து சென்றமாதம் 16-ந்தேதி மார்ல் பரோவைக் கடந்து சென்றிருக்கின்றனர்; இவர் ஒவ்வொரு நகரத்திலிருக்கும் அதிகாரிகளிட மிருந்து தாம் சென்றதற்கு அடையாளமாகச் சீல் ஒன்று வாங்கி வைத்திருக்கின்றார்.

*　　*　　*

அயோவா என்கிற இடத்தில் ஒரு புருஷனுக்கும் அவனுடைய பெண்சாதிக்கும் ஒரு ஆண்குழந்தை பிறந்ததாம். அதற்கு பெயரிடுங்காலத்தில் இருவருக்கும், அதற்கு தகப்பன் பெயரை வைப்பதா, அல்லது தாயின் பெயரை வைப்பதா என்கிறதைப்பற்றி தர்க்கம் உண்டாகி விட்டது. இத்தர்க்கத்தில் கணவன் தன் பெண்சாதியைத் துறந்தனன். இருபது வருஷங்களுக்குப் பிறகு பிள்ளைபெரியவனானதும், அவனாலேயே பிரிந்த தலைவனும் தலைவியும் பழையபடி கூடிக்கொண்டார்கள்.



## விசேஷ வர்த்தமானம்.

பர்மாவிலுள்ள டாபின் ஜில்லாவைச் சேர்ந்த எலக்கலை யென்னுமூரில் ஒரு பர்மியஸ்திரீ ஆறுமாதத்திற்கு முன் 5-அங்குல உயரமுள்ள 12-அங்குல அகலமுமுள்ள ஒரு குழந்தையைப் பெற்றாள். அக்குழந்தை உணங்கல் (உலர்ந்த மீன்) போன்றிருக்கின்றதாம்.

*　　*　　*

இப்போது பெர்லின் பட்டணத்தில் காப்பிரி ஸ்திரீ ஒருத்தி தன் கூட்டத்தாருடன் வந்திருக்கிறாளாம். அவள் இயற்கைக்கு மாறுபாடாக வெளுத்த ஸ்வரூபமும் வெண்ணிறக் கூந்தலுமுடையவளா யிருக்கிறாள். ஆனால் அவளைச் சேர்ந்தவர்கள் மட்டும் கருத்த நிறத்தினர்களாம்.

*　　*　　*

தென்னமெரிக்கா கண்டத்தில் பெரு நாடு இருக்கிறது. இங்கே குதிரைகள் விசேஷம். இந்நாட்டின் கரைப்பக்கமாக 100 சதுரமைல் விஸ்தீரணமுள்ள பிராஞ்சியத்தில் மழையே பெய்வதில்லையாம். இருந்தாலும் இங்கே புல்பூண்டுகளில்லாமலில்லை. மூடுபனி புல்பூண்டுகளுக்கு ஆதாரமென்று கருதப்படுகிறது.

*　　*　　*

சிசுக்களைப் பரிபாலிப்பதில் வெவ்வேறு நாட்டாரால் அனுசரிக்கப்பட்டு வரும் வழக்கங்கள்:—ஸ்பெயின் தேசத்திலே சிறு சிசுக்களுக்கு அதிர்ஷ்டம் பெருகும் என்று நினைத்து ஓர்வித மரக்கிளையை யொடித்து அவைகளால் அவைகளின் முகத்தில் தடவுகிறார்களாம். ஐர்லாந்தில் சில பாகங்களில் குழந்தைகளுக்கு ஆபத்துவரா வொட்டாதிருக்க பெண்கள் மயிரை அவைகளைச் சுற்றித் கட்டிவைக்கிறார்களாம். உலாந்து தேசத்தில், புதிதாய்ப் பிறந்த குழந்தை படுத்துறங்கும் தொட்டிலில் வெள்ளுள்ளி, உப்பு, அப்பம் முதலியவற்றை வைத்து வைக்கிறார்களாம். கிரேக்க ஸ்திரீகள் தங்கள் குழந்தைகளைத் தொட்டிலில் வளர்த்தும்போது நெருப்பின் முன்னே மூன்று சுற்றுகிறார்களாம்.

*　　*　　*

மேற்காப்பிரிக்காவிலுள்ள 'கோல்ட் கோஸ்ட்'என்னும் குடியேற்றநாட்டில் பத்திரிகையொன்று கூடக்கிடையாது.

## சாஸ்திரீயக் குறிப்புகள்.

செவ்வாய் நவக்கிரகங்களிலொன்று. இக்கிரக நிலையை யுடையவனுக்கு செவ்வா யென்றுபேர். அவன் சிவந்த மேனியன். அந்நிறம் வேறுபடின் ...ற் கலகம் நோய் முதலிய உற்பாதங்களுண்டாகு மென்பர்.

செவ்வாய் என்னும் கிரகத்தில் நாம் வசிக்கும் பூமண்டலத்திற்போல ஜீவராசிகள் சஞ்சரிக்கின்றனவென்பது அமெரிக்கா வானசாஸ்திரிகளால் நிச்சயம் செய்யப்பட்ட உண்மை. அங்கே பல வெட்டு வாய்க்கால்களுமுளவாம். அவைகளொவ்வொன்றும் ஆயிரம் மைலுக்குக்குறையாத நீளமுடையனவென்றும், அவைமிக்கத் திறமையுடைய இஞ்சினீர் மார்களாலும் தொழிலாளிகளாலும் இயற்றப்பட்டனவென்றும், அச்சாஸ்திரிகள் நிச்சயப்படுத்தி யிருக்கிறார்கள். இக்கிரகத்துக்குப் பூமியிலிருந்து நிருபங்களனுப்பதற்கும் அந்நிருபங்களுக்கு மறுமொழி பெறுதற்கும் நூதனமான இயந்திர மொன்றை மிக்கறிஸ் என்னும் வானசாஸ்திரி செய்ய எத்தனப்படுவதாகச் சில காலத்துக்கு முன் பத்திரிகைகள் கூறின. அவ்வியந்திரம் 20 இலட்சம் பவுனுக்குமேல்செலவிடப்பட்டு அரசினர் உதவியால் இப்பொழுது பூர்த்தியடைந்துவருவதாக அமரிக்காப் பத்திரிகைகள் கூறுகின்றன. இவ்வியந்திரம் முற்றுப் பெற்று சாஸ்திரியாரின் எண்ணம் கைகூடுமானல், எத்தனையோ நூற்றாண்டுகளுக்கு முன் இருஷிகள் கூறிய உண்மைகளுக்கு இதுவுமோர் சான்றாகுமென்பதிற் சந்தேகமில்லை.

* * *

யானைப்பால் பால்களெல்லாவற்றுள்ளும் மேம் பாடுடையதாம். இதிலிருக்கும் நீர் மிக அற்பமாம். வெண்ணெயும் சீனியும் மற்றப்பால்களினும் மிகுதியாகவுடையனவாம். இது நறுமணமும் நற்சுவையு முடையதாம்.

* * *

தேன் கொட்டின விடத்தில் படிகாரத்தை எலுமிச்சம்பழத்தின் ரசம் விட்டு அரைத்துப்போட்டு நெருப்பிற் காய்ச்சினால் தேன் விஷம் நீங்கும்; மயிலிறகின் புகை நன்றாகப் படுமாறு செய்தாலும் ஷை விஷமிறங்கிப் போம்.

* * *

வெள்ளைப்பூண்டை யுரித்து அதனை யரைத்துத், தேன் கொட்டின விடத்தில் போல்டீஸ் மாதிரி 10-அல்லது 20-நிமிஷம் கட்ட நோய் முற்றும் நீங்கும். படிகாரம், எலுமிச்சம் பழம் முதலியன எப்பொழுதுங் கிடைப்பது கஷ்டம். ஆனால், வெள்ளைப்பூண்டு ஒவ்வொருவர் வீட்டிலும் சர்வசாதாரணமாய்க் கிடைக்கக் கூடியது.

* * *

மிருணரென்னு மொரு பிரான்சு தேசத்து சாஸ்திரி பூமியி லெவ்விடத்திற் ஜலமிருக்கிறதோ, அவ்விடத்தைக் கண்டுபிடிப்பதற்கோர் கருவிகண்டுபிடித்திருக்கிறார். அக்கருவியோ அற்பசத்தத்தையும் பெருஞ்சத்தமாகக் காட்டும். மற்றோர் கருவியோடு கூட்டி அதனைப்பூமியிலூன்றி வைத்தால் அதனுள் பூமியின் கீழோடும் ஜலவோசை நன்றாக அறியமுடியுமாம். ஜலமி[illegible] விடத்துச் சிறுவோசையுங்கேட்க முடியதாம்.





ஒவ்வொருநாளும் இரவில் சயனிப்பதற்கு$\frac{1}{2}$-மணி நேரத்திற்கு முன் வெந்நீர் அருந்தினால்முகத்தில் நல்ல பிரகாசமும் தேகத்தில் தேஜஸும் உண்டாகுமென்று ஒருசாஸ்திரியார் கூறுகிறார்.

* * *

வெயிலில் அலைகிறவர்களுக்கு சூரிய ரஸ்மியால் காய்ப்புண்டு மூளை மயங்கியும் சிற்சில சமயங்களில் அவர்களுக்குப் பிராண ஹானியும் சம்பவிக்கக் கூடியதாயிருக்கிறது. நல்ல குதிரைகள் சூரியவெப்பம் தாங்காமல் சுருண்டு விழுந்து மாய்கிறது முண்டு. இதைத் தடுக்கச் சிவப்பு உருமால் கட்டுதலும், சிவப்புத் தொப்பி போடுதலும், நலமென்று ஒரு அறிஞர் கண்டுபிடித்து அநுபவஸித்தமாய் ருசுப்படுத்தி யிருக்கிறார்.

## இராஜ தம்பதிகள் சம்பந்தமான சமாசாரங்கள்.

காலஞ்சென்ற சற்குண விக்டோரியா சக்கரவர்த்தினி யிடமிருந்த, 'மெயிட்ஆப் ஆனர்,' 'லேடி இன்வெயிடிங்' இருசேடிகளைப் போலவே, மேரியும் தமக்கு இருவரை நியமித்துக் கொண்டிருக்கிறார். இவர்களுக்கு வேலை மிகச் சுலபமானது. மெயிட் ஆப் ஆனரை வகித்திருக்கும் மாது இளவரசி மேரியையும் இளவரசுகளையும் காலைவேளைகளில் கவனித்துக் கொள்ளுவதும், மாலையில் தேச்சாப்பிடும் காலத்தில் அவர்களுடன் கூட இருந்து சாப்பிடுவதும் சக்கிரவர்த்தினிக்கு அவசியமானகாலத்தில் கடிதங்களை உரக்கவாசிப்பதும், முதலிய கிருத்தியங்களைச் செய்து வருகிறார். லேடி இன்வெயிடிங் சக்கிரவர்த்தினிக்கு வரும் கடிதங்களுக்குப் பதிலெழுதுவதாகிய காரியத்தில் காலை இரண்டுமணி அவகாசம் கழிக்கிறார். இதரசமயங்களில் இவர்கள் சுயேச்சையாக இருக்கிறார்கள்.

* * *

சக்கரவர்த்தியார் இங்கிலாந்தில் இல்லாமலிருக்கும்போது ராச்சிய சம்பந்தமான விவகாரங்களை அவருக்குப் பதிலாய்க் கவனிக்க ஒரு ஆலோசனைசபை ஏற்படுத்த வேண்டுமென்று பிரதமமந்திரி மிஸ்டர் ஆஸ்க்வித் காமன்ஸ் சபையில் ஒரு பிரேரணை கொண்டுவந்தார். கானாட்டுப் பிரின்ஸ் ஆர்தர், காண்டர்பரி ஆர்ச்பிஷப், லார்டு லோர்போர்ன், லார்டு மார்லி இவர்கள் நால்வர் பெயரும் மிஸ்டர் ஆஸ்க்வித் தாக்கல் செய்த கடிதத்தில் காணப்படுகின்றன.

* * *

நமது மேரி மகாராணியும் அலெக்சாண்டிரா மகாராணியும் வருடவீதந் தமது உடையின் பொருட்டுச் செலவு செய்வது ஆட்களுக்கு இரண்டா[illegible]ம் பவுனும்.

நம் இராஜதம்பதிகள் டெல்லிதர்பாரிற்குச் செல்லுவதற்காகவுள்ள சகல செலவுகளிற்கும் 12 இலட்சம்ரூபா மதிக்கப்பட்டிருக்கின்றது. இதில் சக்கரவர்த்திக்கும், அவர்பரிவாரத்தவர்களுக்கும், உரியபிரயாணச்செலவோடு, அவரவர்க்குரிய சம்பளமும், அவர்களுக்காக அங்கேகடமை பார்க்கு முத்தியோகஸ்தர்களின் சம்பளம் முதலானவைகளுமடங்கும். சக்கரவர்த்திக்கு மாத்திரம் இப்பிரயாணத்தில் நாளாந்தம் 150 ரூபா செலவழியுமாம்.

* * *

மாட்சிமை தங்கிய நம் புது சக்கரவர்த்தி அவர்களது திருமுடிதாரண வைபவ காலத்தில் சக்ரவர்த்தி அவர்களது திருவுருவடங்கிய ஸ்டாம்புகள் விலைக்கு விற்கப்படுமென அறிகிறோம்.

* * *

டில்லி தர்பாருக்குப் புறப்பட்டிருக்கும் மாணிப்பூர் அரசிர்தம்மோடு 6-வயதிலிருந்து 12-வயது வரையிலுள்ள 15 பெண்களை இட்டுக்கொண்டு போயிருக்கிறார். பெண்கள் பரத சாஸ்திரப்படி பழக்கப்பட்டவர். தர்பாரில் அவர்களால் சதிர் நடத்தப்படுமாம்.

* * *

ஜார்ஜ் சக்கிரவர்த்தியவர்களின் இந்தியா விஜயத்தைப்பற்றி 'டைம்ஸ் ஆப் இந்தியா' பத்திரிகையின் சொந்தக்காரர்கள் ஒரு புஸ்தகம் எழுதி வெளியிடப் போகிறார்கள். அது மிஸ்டர் ஸ்டான்லி ரீடினால் எழுதப் பெறும். அப்புஸ்தகத்தை ராஜ தம்பதியவர்கள் தங்களுக்கு உரிமைப்படுத்துவதை அங்கீகரித்து விட்டார்கள்.

* * *

இந்திய ஜனங்கள் எல்லோராலும் மகாராஜ மகாராணி சக்கரவர்த்தியவர்களுக்கு சமர்ப்பிக்கப்படப்போகிற பத்திரிகையானது கல்கத்தா சித்திரகலாசாலையில் வேலைசெய்யப்பட்டுதயாராகிவருகின்றது. இந்த அட்ரஸ் ஒரு நீளமான துண்டாகவும் ஓரத்தில் நல்ல பிரகாசம் பொருந்தியதாகவும் காணப்படும். இதுகர்நாடகஇந்திய வேலையைப்பெரும்பாலும் கொண்டிருக்கும். வர்ணம், நீலமும் பொன்னிறமாயிருக்கும். அட்ரஸோ இந்திய ஸம்பந்தமான பலவிஷயங்களைக் குறிப்பாலுணர்த்துவதோடு இந்திய சித்திரக்கலையில் இது வரையில் காணப்படாதபடி அவ்வளவு நேர்த்தியாயிருக்கும்.

* * *

இந்தியாவில் வசிக்கும் ஒவ்வொருவரும் ராஜதம்பதிகள் டெல்லியில் தர்பார் பிரவேச சமயத்தில் ஐந்து அல்லது பத்து நிமிஷங்கள் வரையிலும் உலகவியாபாரம் செய்வதை நிறுத்தி விட்டு, ராஜதம்பதிகளின் தீர்க்காயுள், தேக ஆரோக்கியம், க்ஷேமம் இவைகளைக்கருதி தங்கள் தங்கள் ஜாதி மதம் வழக்கத்திற்கு ஏற்பட்ட தோத்திரங்களைச் சொல்லிவரவேண்டும்,



# பெண் கல்வி.

சித்திர சகிதமான ஒரு மாதாந்த சஞ்சிகை.

கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்.—திருக்குறள்

தொகுதி 1.] 1912ளு பிப்ரவரிமீ [பகுதி 7.

## கீதம்.

"வாசுதேவனே—வர்தான வேணுமே"-மெட்டு
இராகம்-கம்போதி—தாளம்-ஆதி

1. படித்த பெண்மணி—கொம்பி
அடித்த கண்மணி
பிடித்த கற்பு விரத நாளும்
பேணு மம்மணி!

2. இந்தியா விலே—நம்ம
பந்தி மாதர்கள்
சிந்தியார்களோ எழுத்துச்
சேதிப் பத்திரிகை ?

3. ஓங்கி யுலாவும்—மே
லாங்கிலப் பெண்கள்
பாங்கில் யாமுந் தீங்கில்லாமல்
படிப்போம் பத்திரிகை..

4. உத்தமக்குணம்—பேணும்
பத்தினிப் பெண்கள்
ஒற்றுமைச் சிரத்தை காட்டிப்
பத்திரிகை பெற்றால்;

5. தேசயோகமே—கன
ராஜ ரீகமே—
பேசுமிந்தி—யாசிலாக்யம்
பெறும நேகமே.

6. பெண்கள் கல்வியால்—வெகு
பங்க மூண்டேன்று
சங்கங் கூடிப் பேசிப் பேசி
தடுத்தல் ஞாயமா ?

7. அறிவு வேறுதான்—படிப்
பதுவும் வேறுதான்
நெறி தெரிந்து பேசவேணும்
ஙியாய வான்களே !

8. பாதி பாதியே—நாம்
படைத்த கியாதியே
சேதிநீதி ஆண்கள் மட்டுந்
தேய்வ பக்ஷமா ?

9. மெத்த மேன்மையாய்—பெண்கள்
வித்தை தேறவே
முத்துஸாமி வற்புறுத்தும்
பத்திரிகை யிதே.

உ· அ· முத்துஸாமி கவி·

---

## இந்து ஸ்திரீ ரத்தினங்கள்· தெ. 1.

### ஆர்கல் இராஜ்யத்து இராணி.

---

நாஜர் உடின் டெல்லியில் சக்கரவர்த்தியா யிருந்தகாலத்தில் அவனுக்குச் சிற்றரசர்கள் பலர் கப்பங்கட்டிக் கொண்டுவந்தார்கள். கௌத்தமன் என்ற ஆர்கல் இராஜ்யத்து இரஜபுத்திர அரசன் சிற்றரசர்களிலொருவன். இவன் கப்பஞ் செலுத்தாததினுல் சக்கரவர்த்தி, அயோத்தியை யாண்டு வந்த கவர்னரை இவனுடன் சண்டைக்குச் சென்று கப்பத்தைப் பெற்று வர உத்திரவு செய்தான். ஆனுல் கவர்னர் தோல்வியடைந்தது மல்லாமல், தன் சைந்யத்தில்





10 ஆயிரம் ஜனங்களேயும் இழந்து போகவும் நேரிட்டது. கௌத்த மன் உயர் குலத்துதித்தோன். இவன் வம்சத்தார்கள் அபஜய மென்பதையே அறியாதவர்கள். எதிலும் அவர்கள் ஜயம் தான் அடைந்திருக்கிறுர்கள். கௌத்தமன் ஜயமடைந்ததற் கறிகுறியாக ஒரு பெருவிருந்து செய்வித்தான். இதற்கு சகல ஜனங்களேயும் தாரதம்மியம் பாராமல் அழைத்தான். இந்த இராஜவிருந்து பல நாட்கள் கொண்டாடப்பட்டது. அவனின் உத்தமபத்தினி வந் திருந்த எல்லாருடைய சௌகரியங்களேயும் கவனித்துக் கொண் டிருந்தாள். இவ்விருந்துநாள்களிடையே அமாவசை வந்தது. இந்நாளில் இராணி கங்கையில் ஸ்நானம் செய்வதை வழக்கமாய்ப் பலவருஷங்களாக அனுசரித்து வந்தாள். மதத்திலும், சாஸ்திர புராணங்களிலும், நம்பிக்கையும்பக்தியும்மிக்குடைய மாதுசிரோண் மணி இவள். விருதங்கள், பூஜை புனஸ்காரங்கள் இவைகளொன் றையும் தவருமல் செய்து வருவாள். கங்கை இவர்கள் இராஜ்ய எல்லேக்கப்புறமிருந்தது. அந்த இராஜ்யம் அயோத்தியாட்சிக் குட்பட்டிருந்தது. பட்டாணித்துலுக்கர் சுவாதீனத்திலிருந்தது. இம்மாது என்ன செய்வாள்? புருஷனின் உத்திரவைக்கேட்டால் அச்சமயம் கங்கைக்குச் செல்வது அபாயகரமானதால், உத்திரவு கொடுக்கமாட்டார். கேட்டபின் உத்திரவின்றி கங்கைக்குச்செல் வது சரியன்று; ஆகையால் சில தாதிமார்களுடன் கங்கைக்கு சென்று திரும்புவதென்று தனக்குள் தீர்மானித்துக்கொண்டு கடைசி ஜாமத்திலேயே ஒருவருக்குந்தெரியாமல் அரண்மனையை விட்டு நடந்து, ராணியும் சில தோழிமார்களும் கங்கைக்கரையை விடியற் காலேயில் சேர்ந்தார்கள்.

ஆயிரக்கணக்காய் ஜனங்கள் அங்கு கூடியிருந்தார்கள். சிலர் ஸ்நானம் செய்து வீட்டுக்குத் திரும்பிப்போய்க் கொண்டிருந்தார் கள். சிலர் ஸ்நானத்துக்கு போய்க் கொண்டிருந்தார்கள், சிலர் கங்கையில் சங்கல்பம் செய்து ஸ்நானம் செய்துகொண் டிருந்தார்கள். சிலர் ஸ்நானத்துக்குப்பின் ஜபம் செய்துகொண் டிருந்தார்கள். சிலர் சூரிய நமஸ்காரம் செய்துகொண்டிருந்தார் கள். சிலர் பிராமணர்களுக்கும் சுமங்கிலிகளுக்கும் தானம் செய்து கொண்டிருந்தார்கள். இவைகளே யெல்லாம் பார்த்துக்கொண்டு கரையில் பலர் நின்றிருந்தார்கள். இவர்களில் சில பட்டாணித் துலுக்கர்கள் யௌவனமும் சுந்தரமும் பொருந்தியவனும் இராஜ

குலதிலகமுமான இராணியைக்கண்டு அங்கே கூடாரமடித்திருந்த கவர்னரிடம் இம்மாதைப் பற்றிச் சொன்னார்கள். கவர்னர் தன் பெண்கள் மூலியமாய் அம்மாது ஆர்கல் இராணி என்று அறிந்துகொண்டு, உடனே கௌத்தமனிடம் தனக்குள்ள ஆத்திரத்தையும் கோபத்தையும் தீர்த்துக்கொள்ள நல்ல சமயமென்று சிலவீரர்களுடன் உடனே இராணியைச் சிறைபிடிக்க கங்கைக் கட்டத்துக்கு வந்து சேர்ந்தான். ஸ்நான ஜபதபங்களை முடித்து தன் இராஜ்யத்துக்குப் போகும் உத்தேசத்துடன் கங்கையை விட்ட இராணியையும் தாதிமார்களையும் பட்டாணித்துலுக்கர்கள் சூழ்ந்துகொண்டார்கள். இராஜபுத்திரிகள் இராஜபுத்திரர்களைப் போல பராக்கிரமும் தைரியமும் கௌரவமுமுள்ளவர்கள். இராணி சற்றும் பயப்படவில்லை. தன் இஷ்டதேவதையை மனதில் தியானித்து, ஆபத்துக் காலத்தில் உதவும்படி வேண்டிக்கொண்டு, தன் தோழிமார்கள் சூழ்ந்திருக்கத் தான் நடுவே நின்றுகொண்டு கவர்னரைப்பார்த்து, "அடா கோழையே! மூடா! உன்னுடையபராக்கிரமம் என்கணவராகிய ஆர்கல் அரசருடன் போர்செய்யும் பொழுது எங்குசென்றிருந்தது.? கேவலம் ஸ்திரீ ஜாதியுடன் போரியற்றவா வந்திருக்கிறாய்? நீ புருஷன் தானா? எவ்வளவு ஈன புத்தியுடையவன் நீ? சரிசமானமானவர்களுடனல்லவா போர் புரியவேண்டும்?" என்று சற்றும் பயப்படாதவளாய் மொழிந்தாள்.

இவ்வார்த்தைகள் கவர்னரின்மனதில் அம்புகள்போல் பாய்ந்தன. மிக்கச் சீற்றங்கொண்டு, உடனே 'அவளைப்பிடியுங்கள். சிறை செய்யுங்கள்' என்று தன் வீரர்களுக்கு உத்திரவுசெய்தான். உடனே இராணி, எல்லாரும் கேட்கும்படி, "என் கணவர் கௌத்தமர் இம்மூடனையும் இவன் சைந்நியத்தையும் தோற்கடித்து மானபங்கப்படுத்தினார். அவராவது அவர்குலத்தாராவது பகைவர்களிடம் தோற்றதே கிடையாது. அவரின் மனைவியாகிய நானா இவனுக்குச் சிறைப்படுவேன். இவ்வளவாயிரம் ஜனங்களுள் இராஜபுத்திரியின் மானத்தைக் காப்பாற்ற வல்லமையுள்ள ஒரு இராஜபுத்திரனில்லையா? இருந்தால் எனக்கு உதவிக்குவரும்படி மிகவும் வருந்திக் கேட்டுக்கொள்கிறேன்." என்று கதறினாள்.

இம்மொழிகள் வெளியானதும், உடனே இருவீரர்கள் பட்டாணித்துலுக்கர்களைத் துவம்சம் செய்யத்தொடங்கினார்கள். இச்செய்தியை அரசனுக்குத் தெரிவிக்க ஒரு இராஜபுத்திரன் ஓடினான்.





இவர்கள் பட்டாணிகளைத் துண்டுதுண்டாய் வெட்டி யெறிந்தார்கள். இராணியும் தோழிமார்களும் யாதொரு அபாயமுமில்லாமல் சுகமாயிருந்தார்கள். இதற்குள்ளாக கௌத்தமர் சைந்நியத்துடன் வந்துவிட்டார். பட்டாணிகள் உயிர்பிழைத்தால் போதுமென்று ஓட ஆரம்பித்தார்கள். இராணி சுகமே தன் இராஜ்யம் சேர்ந்தாள். இவ்வரலாற்றால் நாம் அறிவதென்ன? ஆபத்துக்காலத்தில் மனமிழக்காமல் சமயத்துக் கேற்ற யுக்தி புத்தி யுள்ளவர்களா யிருக்க வேண்டும்.

ப-ர்.

---

## பெண் கல்வி.

### கல்வி இருபாலருக்கும் பொது.

பண்டைக் காலத்தில் அதாவது கல்வி யவசியமென்பதாய் நீதிவாக்கியங்கள் ஏற்பட்ட காலங்களில் இருபாலாரும் ஒப்பப் படித்து வந்தார்களன்றி, பெண்களுக்குக்கல்வி அவசியமாவென்கிற ஐயப்பாடு எழுந்ததில்லை.

குஞ்சியழகும் கொடுந்தானைக் கோட்டழகும்
மஞ்சளழகு மழகல்ல—என்ற நாலடியாரிலும்,
"விலங் கொடுமக்கள் அனையர் இலங்கு நூல்
கற்றாரோ டேனையவர்" என்றகுறளிலும்,

இருபாலாரையும் பொதுப்படச் சுட்டிய 'மக்கள்' என்னும் மொழியும், முன்னூல்கள் பலவற்றிலும் கூறியிருக்கும் மகடூஉ முன்னிலையும்பெண்கல்வியை நமக்கு வலியுறுத்துவனவாகும்.

தவிர, நாம் கல்வியையே ஓர் பெண் தெய்வமாக உபசரித்து வருகிறோம். எண்ணிறந்த கல்விமான்களின் நீதிவாக்கியங்கள் உலகிலிருக்கவும், பெண்பாலாகிய ஔவையாரின் நீதிவாக்கியங்களையே சிறுவருக்கு இளமையில் மனப்பாடம் செய்விக்கும் வழக்கம், நாம் மறக்கற்பாலதன்று.

அன்றியும், அக்காலத்திய சான்றோர் பெண்களில் மிகக் கற்றோரை இக்காலத்திய சிலபண்டிதர்களைப்போல பொருமை, அருமை, முதலியனவின்றி ஆண்பாற் கவிவாணரினும் சிறப்பித்து வந்தனரென்பது நன்கு விளங்குகின்றது.

வைதிகப்பிராமணமத பாலஸந்நியாஸியாகிய ஸ்ரீசங்கர பகவத்பாதர் வாதப்போர் செய்து ஜகத்குருவாய் அபிஷேகம் பெற்ற அக்காலத்தில் கல்வியிற் சிறந்த பெண்பாலருக்கு சபா நாயகத்தன்மையளித்து அவர்கள் கீழ் ஆண்பாற்கவிஞர்கள் விஷய விசாரமும் செய்திருக்கின்றனர். இது பௌத்தமதத்தின் இறுதியும், அத்வைதமதத்தின், ஆரம்ப காலமும் ஆகிய சங்கர விஜய காலத்தில் அவருடன் வாதம் செய்ய அக்காலத்திய பண்டிதர்களுள் முதன்மைபெற்ற மண்டன மிசிரர் என்பவர் முன்வந்தபோது இவ்விருவரின் அபரிமிதமான கல்வித்திறமையை நடுநின்று சீர்தூக்கி ஜெயாபஜெயங்களைக் குறிக்கத்தக்க ஒருவர் அங்குகூடி பண்டிதக் கூட்டத்தில் இல்லாமல் மண்டன மிசிரரின் மனைவியாகிய உபயபாரதி யென்னும் பண்டிதையையே யாவரினும் சிறந்தவரெனத்தேர்ந்தெடுக்கப்பட்டு அவரையே சபா நாயகியாக வைத்து 18 தினங்கள் வாதம் செய்து முடிவில் ஸ்ரீமத் சங்கரரே வெற்றி பெற்றதாக சபாநாயகியால் குறிக்கப்பட்ட விவரம் ஸ்ரீமத் சங்கர விஜயத்தில் விஸ்தாரமாய்க் குறிக்கப்பட்டிருக்கிறது. இதனால் ஸ்திரீ அன்னிய புருஷர்களுக்கு மட்டில் தலைமைஸ்தானம் வகித்தனரென்பதல்லாமல் தன் சொந்த கணவருக்கே தலைமைஸ்தானம் வகித்துக் கல்விவிஷயத்தில் முற்படுத்தப்பட்டார்களென்கிற உயர்ந்த கருத்தும் வெளியாகின்றது. அன்றியும், தன் புருஷனென்கிற அபிமானத்தினை நியாயமுறையில் பாராட்டாது வழுவுதலின்றி அன்னிய புருஷனின் வெற்றியை மனச்சாட்சிக் கேற்க வெளியிட்ட உபய பாரதியின் நீதிப்புலனும் மனோதிடனும் எத்தகையதென்பதையும் ஈண்டு நாம் சிந்திக்கத்தக்கதாகும்.

இதுவுமன்றி, அநேக ராஜ ஸ்திரீகளும், பிராமண ஸ்திரீகளும் பிரபல வித்வமணிகளாய் ராஜசபைகளிலும், பிரஸங்கமேடைகளிலும் இருந்து வந்ததாக பலநூல்களிலும் ஆங்காங்கு காணக்கிடைக்கிறது. உலகும் மதிக்கும்காளிதாஸ மகாகவியை ஸமஸ்தான வித்வானாகப் பெற்ற ரஸிகசிகாமணியாகிற போஜராஜனின் ஸபையில் ஆடவருடன் குடும்பதர்மம் புரியும் ஸ்திரீகளும் விதுஷிகளாய் (பண்டிதைகளாய்) விஜயம் செய்து யாவரும் பிரமிக்கும்படி கவிபாடி ஸன்மானம் பெற்றார்களென்று சொல்லப்படுகிறது. மலைநாட்டரசனான தான்மிக ராஜனின் மனைவி வித்துருலதையெனும் பட்டத்தரசி இயல், இசை, நாடகமென்னும் முத்தமிழிலும் தேர்ச்சி





பெற்று பல பண்டிதைகள் இடைவிடாது தன்னைச் சூழ்ந்திருக்க வித்வத் சபை கூட்டிக்காலம் போக்கியதாக ஏற்படுகிறது.

வரகுணபாண்டியரின் மனைவி மதனலீலையாரும் அருங்கவிப் புலமைவாய்ந்து பலநூல்களியற்றிச் சிறப்புற்று வாழ்ந்தனர். இன்னும் ஆராய்ந்து பார்க்குமிடத்து இது போன்றிருந்தவர் பலருண்டு. இது காறும் நாம் கூறிவந்ததெல்லாம் பண்டைக்காலத்தில் கல்விப்பயிற்சி இருபாலாரிலும் பொதுப்பட அபிவிர்த்தி செய்யப்பட்டும் ஆடவரால் கற்புப்பெண்கள் பெரிதும் கவுரவிக்கப்பட்டும் வந்தனரென்பதை எடுத்துக் காட்டுவதற்கேயன்றி வேறில்லை. இனி பெண் கல்வியின் அவசியத்தையும் பற்றிக் கூறுவோம். (இன்னும் வரும்)

அசம்லாம்பிகை.

## யாத்திரையாலுண்டாகும் பிரயோஜனம்.

ஓர் ஸ்தலத்தைவிட்டு மற்றொரு ஸ்தலத்துக்குப் போவது யாத்திரை. ஒவ்வொரு பிரதேசத்திலும் அதனதன் சீதோஷ்ணத்திற்குத் தக்க பிரகாரம் அழகான இயற்கையமைப்புகளும் காட்சிகளுமிருக்கின்றன. நம் குழந்தைகளை நம் வீட்டைவிட்டு வெளியே போகக்கூடாதென்று என்ன நிர்ப்பந்தம் செய்தபோதிலும் அவைகளுக்கு சமயம் கிடைத்தால் பக்கத்து வீட்டுக்குப் போவதைக் காண்கிறோம். இம்மாதிரியே ஒவ்வொருவருடைய சுபாவமும். தம் பிறந்த ஊரிலிருந்து வேற்றூருக்குப்போகவும் அங்குள்ள ஜனங்களைக் காணவும் காட்சிகளைக் கண்ணாரக்கண்டு களிக்கவும் ஆசை ஒருவர் மனத்துள் இயற்கையாகவேயிருக்கிறது. இவ்வாசை அடங்குவதாயில்லை. ஒன்றைப்பார்த்தால் மற்றொன்றைப்பார்க்க வேண்டுமென்றும், பார்க்கப்பார்க்க இப்படியேபலவற்றைக் காணவேண்டுமென்றும் ஆசை ஓங்கிக்கொண்டே போகிறது. கிணற்றுத்தவளைபோல் இடம் பெயராமலிருத்தல் கூடாது என்ற நோக்கத்துடன் போலும் நம் பெரியோர்கள் புண்ணிய க்ஷேத்திரயாத்திரை செய்யவேண்டுமென்று ஏற்படுத்தினார்கள்! இது ஒரு பிரமாதமல்ல. மிருகங்களையும் பக்ஷிகளையும் கவனித்துப்பாருங்கள். அவைகள் உஷ்ணகாலங்களில் சில இடங்களி

லும் குளிர்காலங்களில் சில இடங்களிலும் வசிக்கின்றன. சில பறவைகள் குளிர்காலங்களில் ஆர்டிக் சமுத்திரப் பிராஞ்சியத்தில் தங்காமல் சீதோஷ்ணம் சமரஸமாயிருக்கும் பிராஞ்சியத்துக்கு வந்து தங்கி மறுபடியும் வேனிற்காலத்தில் அங்கு செல்கின்றன. பகுத்தறிவில்லாத அவைகளே இப்படி சஞ்சாரம் செய்யும்பொழுது நாம் செய்வதவசியமென்று கூறுதல் மிகையாகும்.

யாத்திரையால் விளையும் பயன்கள் பலவாம். பல இடங்களில் பலவகையான பொருள்களையும் மனிதர்களையும் பார்ப்பதால் நம் அறிவு விசாலப்படுகிறது. நூதனமான கருவிகளைக் காணுவதால் அவைகளில் ஆசை உண்டாகின்றது. அவைகளைச் செய்யவேண்டுமென்ற விருப்பத்தால் யுக்திகள் தோன்றுகின்றன. புதிது புதிதான கருவிகளும் யந்திரங்களும் கண்டுபிடிக்கப்படுவதற்கு காரணமாயிருந்து வருவது யாத்திரையாம். கண்ணாடிச் சாமான் வளங்கிவருவது யாத்திரையின் பயனும். இம்மாதிரியே ஒவ்வொன்றும். மேலும் பல தோற்றங்கள் நமக்குக் கடவுளின் சிருஷ்டி சக்தியை விளக்கி அவரிடம் பக்திகொள்ளும்படி வற்புறுத்தும். மனதை உற்சாகப்படுத்திப் பெருந்தன்மையாகிய எண்ணங்களை உண்டு பண்ணுவதும் தவிர, நம்முடைய அரைகுறையான அபிப்பிராயங்களையும், தப்பான விருப்புவெறுப்புகளையும், மூடபக்திகளையும் மாற்றத்தக்கதாயிருக்கும். எவ்வாறு கடற்கரையிலுள்ள கரடு முரடான கற்கள் அலைகள்மோதி கறடு முறடு நீங்கி உருண்டை வடிவாக ஆகின்றனவோ, அவ்வாறே நம் வீண்பிரமைகள் தப்பபிப்பிராயங்கள் முதலியன யாத்திரையால் சிதறுண்டு ஒழுங்கு பெருகின்றன.

நாட்டுப்புறத்தில் வசிக்கும் நம் சகோதரிகளுக்கும், முக்கிய பட்டணங்களுக்குச் சென்று வசித்துத் திரும்பியவர்களுக்கும் ஆசாரவிவகார பக்தி விஷயங்களில் எவ்வளவோ வித்தியாசங்கள் காணப்படுகின்றன. அறிவபிவிருத்திக்கு யாத்திரை முக்கிய சாதனம். பலவகையான ஜனங்களைக் காணுவதாலும், அவர்களுடன் கலந்து பேசுவதாலும் நம் மடமை நீங்கும்.

யாத்திரைக்குச் செல்வது முன்காலத்திருந்ததுபோல அசௌகரியமானதல்ல. தற்காலத்தில் அனேகசௌகரிய வசதிகள் ஏற்பட்டுள்ளன. இவைகளை நாம் சரிவர உபயோகப்படுத்தவேண்டும். உபயோகப்படுத்தாவிடில் யார்மீது குறை? ஒவ்வொரு ஸ்தி





ரீயும் சமயம் வாய்க்கும் பொழுது சென்னை, பம்பாய், கல்கத்தா போன்ற பிரதான நகரங்களுக்குச்சென்று சில காலமாவது தங்குவாளானால், அவள் மனம் பயின்று திருந்த நல்லபயனை விளைவிக்கும் என்பதில் சற்றும் ஆக்ஷேபமில்லை. பிரதான நகரங்களில் ஒருவர் அறிந்து கொள்ளக்கூடிய விஷயங்கள் பல விருக்கின்றன. ஜாதிமத ஆசாரக்கோட்பாடுகளில் ஜனசமூகவிருத்திக்கு இடையூறுகளாயிருப்பன பல நகரவாசிகளால் நியாயத்துக்கும் புத்திக்கும் சரியில்லாதனவைகளாயிருப்பின் கைவிடப்படுகின்றன.

புத்திமான்களின் புத்தியும் அறிவும் யாத்திரையால் பாகுபட்டு அவர்கள் கண்டுபிடித்துள்ளயந்திரங்களாகவும், கருவிகளாகவும் இருக்கின்றன என்றால் யாத்திரையின் பிரயோஜனத்தைப்பலவாறு கூறுதலவசியமே.

ச. சின்னம்மாள்.

---

## * பெண்கல்விக்காக உழைக்கும் ஸ்ரீமதிகள்.

---

நம் நாட்டு ஸ்திரீகள் கல்வியிலும் அறிவிலும் நாகரீகத்திலும் உயர்ந்து நல்ல பதவியடையவேண்டுமென்னும் நோக்கத்துடன் சில ஸ்ரீமான்கள் உதவியைக் கொண்டு சில ஸ்ரீமதிகள் ஊக்கத்துடன் உழைத்து வருகிறார்கள். நம்நாட்டில் ஸ்திரீகள் சற்றே சாமான்ய நிலையிலிருப்பது கூட இவர்கள் முயற்சியின் பயனேயாகும். பம்பாய் இராஜதானியில் ஸ்திரீ நிலைமையை உயர்த்த முயன்று வரும் சில ஸ்ரீமதிகளைப்பற்றியே இவ்வியாஸத்தில் பேசுவோம்.

இரசாயன சாஸ்திரத்தில் நிபுணர் என்ற கீர்த்திவாய்ந்துள்ள புரொபசர் கஜ்ஜாரின் சகோதரியாகிய கல்யாண்பாய் கஜ்ஜாரும் இன்னொரு ஸ்ரீமதியும் 1907௵ மே௴த்தில் "அபலா ஆஸ்ரமம்" ஒன்று ஸ்தாபித்தார்கள். இந்த ஆஸ்ரமம் நடைபெறுவதற்கு கல்யாண்பாய் 10,000 ரூக்குத் தம் நகை நட்டுகளையெல்லாம் விக்கிரயம் செய்தார். புரொபசர் கஜ்ஜார் ஆஸ்ரமத்தின் நிதிக்குத் தாம் உதவி செய்வதுமன்றி தம் சிநேகிதர்கள் பலரை வேண்டிப்

* இவர்களுள் சிலரின் படங்கள் நமக்கு தாமதமாகக் கிடைத்ததனால் இவர்களின் படமும் இன்னும் வேறுபடங்களும் அடுத்த சஞ்சிகையில் வரும்.—ப—ர்.

பொருள் சகாயம் செய்துவ வருகிறார். தற்சமயம், அபலாஸ்ரமத்தில் 22 விதவைகளும், கன்னிகைகள் (விவாகமில்லாதவர்கள்) 18 பேரும், 6லிருந்து 18 வயது வரையுள்ள 128 பெண்களும் இருந்து ஆதரிக்கப்பட்டு வருகிறார்கள். இவர்களுக்கெல்லாம், பூவேலை, சித்திரவேலை, தையல்வேலைபோன்ற உபயோகமுள்ள தொழிற்கல்வி கற்பிக்கப்படுகிறது. மேலும் இவர்களெல்லாருடைய மனதிலும் ஜாதிசமூக அபிவிருத்திக்கு உழைக்கவேண்டுமென்னும் பொதுநல நோக்கம் வேரூன்றி வருகிறது. மலபாரி அவர்கள் ஏற்படுத்தியுள்ள "சேவ சாதனம்", 'தாழ்ந்தவகுப்பார் மிஷன்' 'குஜராத்தி இந்து ஸ்திரீ மண்டலி' முதலிய பொதுநல ஸ்தாபனங்களில் ஸ்திரீகள் மனதார உழைத்துப பெருமையும் பேரும் பெற்றுவருகிறார்கள். மிஸ்ஸஸ் லக்ஷ்மிபாய் ரானடே என்னும் ஸ்ரீமதி ஆஸ்பத்திரிகளுக்குச் சென்று நோயாளிகளுக்கு உதவிசெய்வதிலும், சுகாதாரங்குன்றியும் ஜனநெருக்கமுள்ள ஏழைவாசஸ்தானங்களுக்குச் சென்று அவைகளைச்சீர்ப்படுத்த முயலுவதிலும் தம் காலத்தையும் மனத்தையும் செலுத்துகிறார். மேலும், ஜஸ்டிஸ் ரானடேயின் விதவையாகிய மிஸ்ஸஸ் ராமாபாய்ரானடே தம் கிரகத்தை அபலாஸ்ரமமாக்கி அங்குள்ளவர்களுக்கு பகலில் படிப்புக்கற்றுக்கொடுத்துவருகிறார். 'பூனாவிதவா மட'த்துக்கு உயிராயிருந்து வரும் மிஸ்ஸஸ் கார்வி இடைவிடாது ஊக்கத்துடன் உழைத்துவருகிறார். பூனாவுக்குச் சமீபத்தில் பண்டிதை ராமாபாய் ஸ்தாபித்துள்ள கிறிஸ்தவக்கிராமம் இருக்கிறது. இவர், தம்புத்திரி மனோரமா பாயுடன் 2500 பேர்களைப்பார்த்து காத்துவருகிறார். இவர்கள் வாத்திச்சிமார்களாகவும், பைபிள் பிரசங்கிகளாகவும் பழக்கப்படுகிறார்கள் இக்கிராமத்திக்குச் சேர்ந்ததாய் 175 ஏக்ராவிஸ்தீரணமுள்ள தோட்டமுமிருக்கிறது. இதிலும் அநேகர் உழைத்து வருகிறார்கள். மேலும் புஸ்தகம் பயிண்டுசெய்தல், அச்சுக்கோர்த்தல், நெசவு, சாயம்போடுதல் முதலிய தொழில்களும் கற்றுக்கொடுக்கப்படுகின்றன.

பம்பாய் இராஜதானியில் ஸ்திரீகளே இப்படிப்பலவழிகளில் முயன்றுவருகிறார்கள். நம் இராஜாதானியும் பம்பாய்போல பெருமைபாராட்டிக் கொள்ளும் காலம் எக்காலமோ?

கு. பாகீரதி.



## பள்ளிக்கூடக்கல்விக்குத் துணையாக இல்லக் கல்வி அவசியம்.

பெண்கல்வி அவசியமென்பதை எல்லாரும் ஒத்துக்கொள்கிறார்களெனினும், பற்பல காரணங்களால் அவர்கள் தங்கள் பெண்களுக்குக் கல்வி கற்றுக்கொடுக்காமலிருக்கிறார்கள். பெண்கல்வி சர்க்காரால் கட்டாயமாக ஏற்படும் காலம் வரை நல்ல காலம் பிறக்கப்போவதில்லை என்பது திண்ணம்.

தற்காலத்தில் சிலரே பெண் கல்வியின் பிரயோஜனத்தைக் கருதித்தங்கள் பெண்களைப் பள்ளிக்கூடத்துக்கு அனுப்பி வருகிறார்கள். காலதேசவர்த்தமானங்களையும் ஜாதி ஆசாரவிவகாரக்கட்டுப்பாடுகளையும் கருதினவர்களாய் இச்சிலர்கூடப் பெண்களுக்கு எவ்வளவு கல்விகற்றுக் கொடுக்கக் கூடுமோ அவ்வளவு கற்றுக் கொடுக்காமலிருக்கிறார்கள். விவாகம் நிறைவேறும் வரையிலும் அல்லது பெண்கள் ருதுவாகும் வரையிலும் தான் பெற்றோர்கள் பெண்களைப் பள்ளிக்கூடத்துக்கு அனுப்புகிறார்கள். இப்படிச் செய்வதால் அவர்கள் தங்கள் கடமைகளைச் செய்து விட்டதாக நினைத்துக் கொள்கிறார்கள். சாதாரணமாய் நமது பெண்கள் படிப்பு இலக்கியத்தில் இரண்டாவது அல்லது மூன்றாவது பாடப்புத்தகமேயாம். இலக்கணத்தில் போப்பையர் இலக்கணமேயாம். இச்சொல்ப கல்வியால் அவர்கள் என்ன பிரயோஜனத்தைப்பெறுவர்? வீட்டில் நின்றுவிட்டபின் புத்தகங்கள் எத்திசையிலுள்ளனவோ கண்டார் இல்லை. இது காறும் படித்த நூல்களால் தெய்வபக்தி வாய்ந்தனரா? நன்னடக்கை நூல்களைக் கிரகித்தனரா? நாயகனிடமும் பெற்றோரிடமும், சுற்றத்தாரிடமும் நடந்து கொள்ளவேண்டிய ஒழுக்கமுறைகளைக் கற்றுத் தேர்ந்தனரா? பிழை இல்லாமல் கடிதங்கள் எழுதச் சாமர்த்தியம் வாய்ந்தனரா? தெய்வசம்பந்தமான தோத்திரங்களைக்கம்பீரமாகப் படிக்கக்கற்றனரா? இந்து சாஸ்திர சம்பந்தமானவிஷயங்களை இம்மியளவு உணர்ந்தனரா? இல்லை! இல்லை! பாடசாலைகளில் படித்து முடித்துப் பரிசுகள் பெற்று நின்றுவிட்ட பெண்களுள் பலர் வண்ணான் கணக்கையும் பிழையின்றி யெழுதத் தெரியாதிருப்பதையும் காண்கிறோம்.

லண்டனில் ஸ்தாபிக்கப் பட்டிருக்கும் 'நாஷனல் இந்தியன் அஸோஸியேஷன்' என்ற சங்கத்துக்கு நம் சென்னையில் ஒரு கிளைச்சங்கம்இருக்கிறது. இதுஎல்லோருக்கும் தெரிந்திருக்கலாம். இந்தச்சங்கம் செய்யும் வேலைகள் வருஷா வருஷம் விருத்தியடைந்து வருகிறதென்று தெரிகிறது. இதுபோன்ற ஸ்தாபனங்கள் ஏற்படுத்திப்பள்ளியிலிருந்து நின்றுவிட்ட பெண்களுக்கும் மற்றவர்களுக்கும் வாத்திச்சிகளைக் கொண்டு வீடுவிடாய்ப் போய் படிப்புச் சொல்லிக் கொடுக்கும்படி செய்யலாம். தையல் வேலை, சித்திரம் பழகல், பாட்டு முதலியவைகளும் சிறிய கைத்தொழில்களும் கற்றுக் கொடுக்கும்படி செய்யலாம். மேற்போன்ற சங்கத்தை ஒட்டி 'வாசக சாலைகள்' ஏற்படுத்தி, அநேக பத்திரிகைகளையும் புஸ்தகங்களையும் வரவழைத்துப் படிக்கலாம். தந்தையாவது சகோதரராவது பெண்களுக்குகாரியங்களுக்குக் காலவரைஏற்படுத்திக்கொடுத்து அவைகளின்படி தாங்களும்நடந்து அவர்களை பழக்கவேண்டும். அதில் சாப்பிடுங்காலம் படிக்கும் காலம், வீட்டுவேலைசெய்யுங்காலம், சிரமபரிகாரம் செய்து கொள்ளும் காலம், உறங்குங் காலம் முதலியன குறிககப்படுவதால் அவர்களுக்கு நல்ல பயிற்சியுண்டாகும். அவரவர்கள் தங்கள் தங்கள் பெண்களுக்கு தமிழ்ப் பத்திரிகைகளையும் இனிய கதைப் புத்தகங்களையும் வாங்கிகொடுக்கவேண்டும். பத்திரிகையினால் பல தேச அற்புதங்களை யறிந்து உற்சாகம் கொள்வதுடன் சமயோஜிதமான புத்தியுமுண்டாகிக் கல்வியில் விருத்தியடைவார்கள். அன்றியும்தேசசரித்திரம், குடும்பநிர்வாஹசாஸ்திரம், வைத்தியசாஸ்திரம் முதலிய புத்தகங்களையும் மதநூல்களையும் நீதிநூல்களையும் படிக்கும்படிசெய்யவேண்டும். விவாகமானபின்னரும் அப்பெண்களின் நாயகர்கள் கல்வியை எவ்வளவு விருத்திசெய்யவேண்டுமோ அவ்வளவும் செய்து பூரண ஞானத்தை யுண்டாக்கி அவர்களை சால்வதி விக்கிரமாகவாழும்படி முயற்சி செய்யவேண்டும்.

அகிலாண்டநாயகி அம்மாள்.



## குழந்தைகளுக்குப் பாலுணவு.

குழந்தைகள் பிறந்து ஒருவருஷகாலம்வரை அவைகளுக்கு ஆதாரமாயிருந்துவருவது தாயின்பால். இதைப்போல சிரேஷ்டமான உணவுவேறொன்றில்லை. ஏனெனில், குழந்தைகளின் தேகஸ்திதிக்கு அக்காலத்தில்உணவு எப்படி இருக்கவேண்டுமோ அப்படி இருக்கிறது இதிலுள்ள தாதுக்கள். ஆனால் எல்லாக் குழந்தைகளுக்கும் தாயின்பாலை உண்டுவளரும் பாக்கியமிருக்கிறதில்லை. ஏதோ சிலகாரணங்களால் குழந்தைகளுக்கு தாய்ப்பாலுக்குப் பதிலாக மாட்டுப்பாலோ, மெல்லின்ஸ் ஆகாரம் போன்ற செயற்கைப் பாலோ கொடுக்கப்படுகின்றது. இம்மாதிரி சமயங்களில் குழந்தைகளின் பெற்றோர்கள் மிக்க ஜாக்கிரதையுள்ளவர்களாய் தாய்ப்பாலுக்கு சமமான குணமுள்ள செயற்கை உணவுகளை வாங்கி போஷித்து வரவேண்டும். சாதாரணமாய்த் தாய்ப்பாலில்லாது போனால் பசும்பாலை குழந்தைகளுக்குக் கொடுத்து நம்மவர்கள் காப்பாற்றி வருகிறார்கள். தாயப்பால், பசும்பால், மெல்லின்ஸ் ஆகாரம், முதலியவைகளில் என்னென்ன பொருள்களிருக்கின்றன என்ற அறிவு இருந்தால் மட்டுமே குழந்தைகளைச் சரிவரப் போஷித்துக் காப்பாற்றும் சக்தி நம்தாய் மார்களுக்கு உண்டாகும். தாய்மார்களுக்கு தேகதத்துவசாஸ்திரமும் வைத்திய சாஸ்திரமும் நன்றாய் தெரிந்திருக்கவேண்டும். ஏனெனில் அப்படியிருந்தால்தான் அவர்கள் குழந்தைகளின் தேகஸ்திதியை அறிந்து அதற்குத்தக்கபடி நடந்து கொள்ளும் சக்தியுள்ளவர்களாய் இருப்பார்கள்.

தாய்ப்பாலில் கஞ்சிசத்தில்லை. ஆகையால் நாம் அறிந்து கொள்ளவேண்டுவது: கஞ்சிசத்துள்ளஉணவுப்பொருள்கள் குழந்தைகளுக்குக் கொடுக்கப்படக்கூடாது. கஞ்சிசத்தை ஜீரணம் செய்யக்கூடிய சக்தி குழந்தைகளுக்கில்லை. இவ்விஷயமறிந்தோ அறியாமலோ பலர் பலவிதமான உணவுகளைக் குழந்தைகளுக்குக் கொடுக்கிறார்கள், கடையிலகப்படும் பலவிதமான செயற்கை ஆகாரங்களில் குழந்தைகள் ஜீரணம் செய்ய முடியாத பொருள்கள் சேர்ந்திருக்கின்றன. இக்காரணத்தால் குழந்தைகள் பலவித நோய்களுக்குட்பட்டு மரணத்துக்குள்ளாகின்றன. நம் நாட்டில்

குழந்தைகள் மாண்டு போவதற்குக் காரணம் வகை தெரியாது அவைகளுக்குக் கொடுக்கப் படும் ஆகாரங்களே.

பசு அல்லது எருமைப்பாலைக் குழந்தைகளுக்குக் கொடுக்கக் கூடாது. ஏனெனில் இதிலும், தாய்ப்பாலிலுமுள்ள பொருள்கள் வித்தியாசப்படுகின்றன.

| 100 பங்கில் | ஜலம் | அல்புமின் | கொழுப்பு | லக்டோஸ் | உப்பு |
|---|---|---|---|---|---|
| தாய்ப்பால் | 88·9 | 3·4 | 3·3 | 4·5 | ·2 |
| பசும்பால் | 87·5 | 4·2 | 3·8 | 3·6 | ·7 |

தாய்ப்பாலில் லக்டோஸ் பசும்பாலிலிருப்பதைவிட அதிகமாகவிருக்கிறது. ஆனால் பசும்பாலில் தாய்ப்பாலைவிட அதிகமான 'அல்புமின்' இருக்கிறது. ஆகையால் பசும் பாலை உட்கொள்ளும் குழந்தைகள், பாலிலுள்ள அல்புமின் சத்து இரைபையில் தோய்ந்து கட்டியாய் விடுவதாலும், மலக்குழாயில் அடைத்துக்கொள்வதாலும், கஷ்டத்துக்கும் நோயிக்கும் ஆளாகின்றன. காடு மேடுகளில் மேய்ந்துவரும் பசுக்களின் பால் கொட்டடியில் கட்டித்தீனி தின்னும் பசுக்களின் பாலை காட்டிலும் சிரேஷ்டமானது. ஏனெனில் முன்சொல்லிய பால் பிந்தியபாலைப்போல் குழந்தைகளுக்கு அஜீரணத்தை யுண்டாக்குவதில்லை. நாம் வாங்கும் பசும்பாலில் அனேக கோளாறுகளிருக்கின்றன. பால் விற்பவர்கள் காசாசையால் பாலை ஜலம்விட்டுப் பெருக்கிவிடுகிறார்கள். பழம் பால் கெடாமலிருக்கும்படி "போரிக் ஆசிட்" என்ற மருந்தைப் போட்டு வைத்து இரண்டு தினங்களுக்குப்பின் விற்றுவிடுகிறார்கள். எருமைப் பாலைப் பசும்பால் என்று சொல்லி ஏமாற்றிவிடுகிறார்கள். பாலிலிருந்து வெண்ணையைப் பிரித்து எடுத்துக்கொண்டு விற்றும் வருகிறார்கள். இவ்விஷயங்களை யெல்லாம் தாய்மார்கள் அறிந்திருப்பது அவசியம். அனேக குழந்தைகள் வயிற்றில் கட்டி விழ்ந்து இறந்துபோவதற்குக்காரணம் மடமையால் பலவிதமான கெட்ட பாலை வாங்கி அவைகளுக்குக் கொடுப்பதேயாகும்.

அடுத்த சஞ்சிகையில் குழந்தைகளுக்கு ஆரோக்கியத்தைக் கொடுக்க தாய்ப்பாலுக்குப் பதிலாக எதை உபயோகிக்கவேண்டுமென்பதைக் குறித்து எழுதுவோம்.

எம். வி. சுந்தரேசன்.

---



## சிறுவர் சிறுமியர்க்கான நீதிக்கதைகள் நெ. 1.

### பொய் பேசாதே.

---

கங்காதரனைக் கடையிலிருந்து சாமான் வாங்கிவரச்சொல்லி அவனுடைய தாயார் அவனிடம் ஒரு ரூபாய் கொடுத்தாள். அதை அவன் அருகில் வைத்துக்கொண்டு ஏதோ எழுதிக்கொண்டிருந்தான். அப்பொழுது அவனுடைய சகோதரியாகிய கமலம் அவனிடம் வந்துட்கார்ந்து, "ரூபாய் எப்படி செய்கிறது? எங்கிருந்து வருகிறது?" என்று பற்பல கேள்விகளைக் கேட்கலானாள். கங்காதரன் எழுதுவதிலே தன் கவனத்தை செலுத்தியிருந்தபடியால், அவள் சும்மாப்பேசி தொந்தரவு படுத்தாமலிருக்க வேண்டுமென்று 'பணம் மரத்தில் காய்க்கிறது' என்று சொன்னான். கமலம் சிறியவளாயிருந்த படியால், அவள் அது உண்மை என்றெண்ணி, தான் பணம் காய்க்கும் மரத்தைப் பயிர்செய்யவேண்டுமென்று, கங்காதரனருகிலிருந்த ரூபாயை எடுத்துக்கொண்டுபோய் புறக்கடையில் ஒரு இடத்தில் நிலத்தைத் தோண்டி அதைப் புதைத்து வைத்தாள்.

கங்காதரன்எழுதிமுடிந்ததும் தன் அருகிலெல்லாம்ரூபாயைத் தேடிக்களைத்தானேயன்றி, அது கிடைக்கவில்லை. கடைசியில் 'இங்கிருந்த ரூபாயை நீ எடுத்தாயா?' என்று கமலத்தைக்கேட்க, அவள் "ஆம், நான் அதை கொண்டுபோய் புதைத்து வைத்திருக்கிறேன்; இன்னும் கொஞ்ச நாட்களில் பெரிய மரமாய் நிரம்ப ரூபாய்காய்க்கும்" என்றாள். அதைக்கேட்டுக் கங்காதரன் கோபங்கொண்டு 'ரூபாய் எங்கே புதைத்து வைத்திருக்கிறாயோ அவ்விடத்தை எனக்குக் காட்டு' என்றான். கமலம் அவ்விடத்தைக் காண்பிக்க அவ்விடத்தில் தோண்டிப்பார்த்து ரூபாய் காணாததைக்கண்டு, தாயார் தன்னை கோபித்துக்கொள்ளுவாளே, என்கிற பயத்தினால் அழலானான்.

அவனுடைய தகப்பனாராகிய சுந்தரம் ஐயர், தனது அறையிலிருந்து எல்லாவற்றையும் பார்த்துக்கொண்டிருந்து, வெளியில் வந்து "கங்காதரா! கமலம் சிறு குழந்தை, அவளுக்கு ஒன்றும் தெரியாது, நீ யொன்றும் சிறியவனல்ல, நீ பொய்சொல்லி வனை ஏமாற்றிவிட்டால், ஒரு ரூபாய் நஷ்டமாகாமலிருக்கு

மல்லவா? இனி இவ்வாறு பொய் பேசாதே" என்று புத்திமதி கூறி, கமலம் புதைக்கும் பொழுது பார்த்துக்கொண்டிருந்து அவன் போன பிறகு தாம் எடுத்துவைத்திருந்த ரூபாயை அவன் கையில் கொடுத்துக் கடைக்கு அனுப்பினார்.

இதைப்படிக்கும் எனதருமைச் சிறுமிகளே! அந்த ரூபாய் சுந்தரம் ஐயர் எடுத்ததனால் நல்லதாயிற்று, வேறே யாராகிலும் வேலைக்காரர்கள் எடுத்துக்கொண்டிருந்தால் நஷ்டமாயிருக்குமல்லவா? மேலும் சிறு குழந்தைகளிடத்தில் பொய் பேசுவதனால் அவர்களும் பொய் பேசக்கற்றுக் கொள்ளுவார்கள். அதனால் சிற்சில சமயங்களில் தீங்கு விளையுமாதலால் எப்பொழுதும் பொய் பேசாமலிருக்க வேண்டும்.

மங்களாம்பிகாபாய்.

---

## கனகாம்புஜம்
## என்னும்
## கற்புக்காதலி.

(4·5 சஞ்சிகையின் 40-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

---

"நான் தான் மல்லிகை" என்று தீங்குரலாய் மல்லிகை பதிலுரைத்தாள்.

"ஓடிப்போ, நில்லாதே. யார் உன்னை இங்கே வரச்சொன்னது?" என்று சொல்லி முடிக்குமுன் கதவை ஓங்கி அறைந்து சாத்திவிட்டான்.

மல்லிகை நடுநடுங்கி வியர்த்து மயிர்சிலிர்த்து பிரமித்து உணர்ச்சியற்று நின்றாள். அவளுக்குத் தந்தையின் சுபாவங்கள் நன்றாய்த் தெரியும். அவன் தந்தை தன்னிடம் நடந்துகொண்ட விதத்தால் மனம் முறிந்தாளேனும், சற்று நேரத்துக்கெல்லாம் மனத்தைத் தேற்றிக்கொண்டாள். தாரையாய்ப் பெருகியிருந்த கண்ணீரையெல்லாம் முந்தானியால் துடைத்துக் கொண்டாள். இங்குநடந்தேறிய சம்பவங்களைத்தாயிடம் சொல்லி அவள் மனதைப் புண்படுத்தக்கூடாதென்று தீர்மானித்துக்கொண்டு, வந்தவழிநோக்கி மீண்டு சென்றாள். தாயிடம் தந்தை புத்திரசோகத்தை ஆடவருக்குரிய ஆண்மையுடன் பொறுத்து மனத்தைத் தேற்றிக்கொண்டிருக்கிறாரென்று சொல்லி வாயடக்கிவிட்டாள். ஆயினும் இராணி கண்ணில் நீர்ததும்பவும், துக்கம் நெஞ்சிலடைக்கவும், "மல்லிகை! நான் அவரைப்போய்க் காண்கூடாதா? தாயாகிய நான் அடைந்தசோகத்தை தந்தையாகிய அவருடைய





சோகத்துடன் சேர்த்து நான் கண்ணீர் சிந்த அவர் சம்மதிக்கமாட்டாரா? நீ என்னை ஏமாத்துகிறாயோ? அவருக்குச் சுந்தரத்தின் மீது பிராணனாயிற்றே! அவன் இறந்தது ஆற்றொணாத்துயரமன்றோ? அவர் நைந்து உருகி உடல் மெலிந்து முகம்சோர்ந்து இருக்கிறாரா? என்ன? மௌனம்சாதிக்கிறாயே, நான் என் உயிர்த்தோழரைப் பார்க்காமலிரேன். சேடிகாள், என்னை அவரிருக்குமிடம் தூக்கிச்செல்லுங்கள்" என்றாள். படுக்கையினின்றும் எழ முயன்றாள். மல்லிகை கனகவல்லிக்குத்தாயை எழுந்திருக்க விடாமலிருக்கப் பிடித்துக்கொள்ளச் சைகைசெய்தாள். இருவரும்இராணி எழுந்திருப்பதைத் தடுத்தார்கள். மானபங்கனிடமிருந்து ஓர் வேலையாள் ஓடிவந்து, "அம்மா! மகாராஜா கனகவல்லியுடன் சில வார்த்தைகள் பேச வேண்டுமாம். அழைத்து வரச்சொன்னார்கள்." என்று சொன்னான்.

"ஆ! என்னுடனா?" என்று கனகம் திகைத்தாள்.

"அம்மா! நீ சென்று அவரின் துயரை ஆற்றிவா. நாங்கள் இங்கேயே இருக்கிறோம்." என்று இராணி கனகத்துக்குச் சொன்னாள்.

கனகம் உடனே வேலையாள் பந்தம் பிடித்து வழிகாட்டிச் செல்லப் பின்னடந்தாள். அரசனிருக்கும் அறையை அடைந்தார்கள். மல்லிகை சென்ற காலத்தில் அவர் எப்படி சலனமாயிருந்தாரோ அவ்வாறேயிருந்தார். கனகத்தைக் கண்டதும் வேலையாளைப்பார்த்து,

"அந்த விளக்கையெடுத்து நீபோ. இனி நில்லாதே" என்றான். வேலையாள் சென்றுவிட்டான்.

மானன் அறையின் கதவைத் திடீரெனத்தள்ளி ஒருசோபாவில் அமர்ந்து, "கனகம் வா, பக்கத்தில் உட்கார்" என்று கையைப்பிடித்து இழுத்தான். கனகம் உடலெல்லாம் நடுநடுங்கினவளாய் இன்ன செய்வதென்று தோற்றாதவளாய் சோபாவில் உட்கார்ந்தாள்.

"நான் உன்னை வரவழைத்தேன். கண்ணே—" என்று சொல்லி முடிக்க வாய் வராமல் திகைத்து மௌனமாயிருந்தான்.

"ஐயா!"

"ஆம், நான் உன்னை அழைத்துவரச் சொன்னது ஒரு பெரிய காரியத்துக்காக. ஏன் அழுகிறாய்? கண்ணீரைத் துடைத்துக்கொள். கண்மணி உனக்கு நிச்சயம் செய்திருந்த கணவனை இழந்தாய். என்ன செய்கிறது?

"ஊழிற் பெருவலியா துளமற்றொன்று
சூழினுந் தான் முந்துறும்."

ஆனால் ஒரு விஷயம். உனக்குச் சௌந்தரியத்தில் சமானமானவனல்ல சுந்தரன்."

"அதெப்படி ஐயா? நான் எவ்வளவு துக்கத்திலாழ்ந்திருக்க வேண்டுமோ அவ்வளவு துக்கத்திலாழ்ந்திருக்காமலிருக்கிறேனென்று தாங்கள் சந்தேகப்படுகிறீர்களோ? எனக்கு சந்தோஷம் துக்கம் எல்லாம் ஒன்று போன்றதே. என்கடமையும், பிரியமும் மாறாத்தன்மையன"

"சரி-இனி அத்துர்ப்பாக்கியனைப்பற்றி என்ன பேச்சு வேண்டியிருக்கிறது? அவன் பிறந்தநாள் முதல் இறந்தநாள் வரையில் சௌக்கியமாயிருந்த நாளே கிடையாது. இத்தகைய அசமஞ்சன் வசம் இராஜ்யபாரத்தைச் சுமத்தல் கூடாது என்பது கருதிப்போலும் கடவுள் அவனை இப்புவியினின்றும் வரவழைத்துக்கொண்டது! மானபங்களின் சந்ததி அழியாமலிருக்க அனேகரிருக்கிறார்கள். நான்மதியீனத்தால் அவன்மீது வைத்திருந்த புத்திரவாஞ்சையால் என்புத்தி மங்கிக்கிடந்தது? எல்லாம் நல்ல காரியத்துக்கே. சிலவருஷங்களுக்குள் சுந்தரன் இறந்தொழிந்ததற்காக நாம் சந்தோஷப் படப்போகிறோம்."

இம்மொழிகளைக்கேட்ட கனகத்தின் மனத்தில் பலவகையான எண்ணங்கள் தோன்றித்தோன்றி மறைந்தன. அவளுக்குண்டான ஆச்சரியத்தையும், அச்சத்தையும், தர்மசங்கடத்தையும் இங்கே எழுதல் அசாத்தியம். முதலில் புத்திரசோகம் மானனின் மூளையைக் கெடுத்து விட்டதோ என்று சந்தேகங் கொண்டாள். பிறகு இம்மொழிகள் தன்னை அவன் வலையில் சிக்கவைக்கக்கருதினவையோஎன்று ஏங்கினாள். மறுபடியும் தனக்குச் சுந்தரனிடத்தில் காதலில்லை என்பதை மானன் அறிந்து கொண்டானோ என்றுதிகைத்தாள். ஆயினும் மனத்தைஒருவாறு தேற்றிக்கொண்டு,

"சற்குணமுள்ள ஐயா. என்தலைவிதியைத்தடுக்க என்னால் சாத்தியமோ? இனித்தங்களையும் ராணி ஹிரண்மயியையும் என்பிதா மாதாவாகக்கருதி என்காலத்தைக் கழிப்பேன்." என்று கனகம் சொன்னாள்.

மான:—"ஹிரண்மயி நாசமாய் ஒழிந்து போகட்டும். இக்கணம்முதல் நான் அவளை மறந்து விட்டேன். அப்படியே நீயும் அவளை மறந்து விடவேண்டும். சுருங்கச் சொல்லுகிறேன். பிரியை, உனக்குச்சற்றும் தகுதியில்லாதவனாகிய சுந்தரன் இறந்தொழிந்தது நல்லதே. உன் சௌந்தரியங்களை நுகர்பவன் ஒருவனிருக்கிறான். சதாநோயாழிப் பயலுக்குப் பதிலாக யவனராஜசிகாமணியை உன் கணவனாகப்பெறுவாய். இவன் உன் ரூபலாவண்யத்தையும் குணங்களையும் நன்கறிந்தவன். அவன் மேலும் சந்ததிவிருத்தியைப் பரிபாலிப்பவன்."

கன:—"அந்தோ, ஐயா, அவர் எதிர்பாராத வண்ணமாய் இறந்துபோனதால்நமக்கெல்லாருக்கும் உண்டாயிருக்கும் துக்ககாலத்தில் வேறொருஎண்ணமும் என் மனத்தில் உதிக்கமாட்டேனென்கிறது. எல்லாக் காரியத்திற்கும் என்பிதா உத்திரவை அபேக்ஷித்து காத்துக்கொண்டிருக்கிறேன். அம்மாள் மல்லிகை இவர்களின் துக்கத்தைச் சாந்தப்படுத்த முயலுவேன்."

மான:—"மறுபடியும் அவளைப்பற்றி என்னபேச்சு? எனக்கும் ஹிரண்மயிக்கும் இந்த நிமிஷமுதல் யாதொரு சம்பந்தமுமில்லை. ஆகையால் உனக்கும் அவளுக்கும் யாதொரு சம்பந்தமுமில்லை. நான் சொல்வதைக் கேள். உனக்குக்கணவனாக என் மகனைக்கொடுக்கமுடியாது போனதால் நானே உன் கணவனாக இருக்கத் தீர்மானித்திருக்கிறேன்."





கன.—"ஐயோ, தெய்வமே! இதென்ன? நான் எங்கிருக்கிறேன்? யாருடன் பேசுகிறேன். நான் கேட்டது சரியான மொழிகளோ? தாங்கள் என்பிதா; பிதாவுக்குச் சமானமானவர்! என் காதலரென நிச்சயத்திருந்தவரின் பிதா; பதிவிரதாமணியாகிய ஹிரண்மயியின் காதலர்"

மான.—"என்ன? ஹிரண்மயி என் மனைவியுமல்ல, நான் அவள் கணவனுமல்ல. அவளைத் திரஸ்கரித்துவிட்டேன். இவள் மலடியாயிருந்து என்னை விசாரத்தில் மூழ்கச் செய்திருந்தாள். இனி விசாரம் ஒழிந்தது."

இவ்வார்த்தைகள் சொல்லிமுடித்து கனகவல்லியின் கரத்தைப்பற்றினான். அவள் கரம் பனிபோன்றிருந்தது. அவள் சற்றே கிலிலால் பயந்து செயலற்று பிரமித்து நின்றாள். பிடித்த பிடியைப் பிடுங்கிக்கொண்டு ஒரே ஓட்டம் பிடித்தாள்.

(தொடரும்)

வி. செல்லம்மாள்.

---

## போபால் பீகம் மகாராணியும் நம் ஸ்திரிகளும்

---

சில தினங்களுக்கு முன் ஸ்திரீகளின் கல்வியாபிவிர்த்தி விஷயமாய் போபால் என்னுமிடத்திலுள்ள ஸ்திரீ சமாஜத்தில் ஸ்திரீகள் கூட்டங்கூடிப் பேசியபோது போபால் பீகம் மகாராணியும் வந்திருந்தார். அன்று அவர் பேசிய விஷயம் "பயோனீர்" என்ற பத்திரிகையில் விஸ்தாரமாகக் கூறப்பட்டிருக்கின்றது. அவற்றை இங்கு சுருக்கிக் கூறுகிறோம்:

"நான் சென்ற வருஷத்தில் ஐரோப்பிய தேசங்களைச் சுற்றிப் பார்ப்பதற்காகப் போயிருந்தபோது அவ்விடங்களில் நான் கண்ட அனுபவங்களை இப்போது எடுத்துக்கூறி முடிக்கமுடியாது. நாளடைவில் தெரிவிக்கிறேன். துருக்கி சுல்தானவர்களைக் கண்டபோது அவர் எனக்கு விலை மதிக்கமுடியாத சன்மானம் ஒன்று அளித்தார். அதாவது தீர்க்கதரிசியாகிய முகம்மது நபியவர்களின் தாடியிலுள்ள ஒரு ரோமம். இதுபோல் எத்தனையோ அதிசயங்களைப் பார்த்தும் கேட்டுமிருக்கும் விஷயங்களை இப்போது எடுத்துரைக்க அவகாசமில்லை. முக்கியமான விஷயம் ஒன்றை எடுத்துக் கூறுகிறேன்.

"மேல் நாட்டார் குணானுபவங்களிலும், ஐஸ்வர்யாபிவிர்த்தியிலும், வாழ்நாளுக்குரிய யாவத்து முயற்சிகளிலும் மேன்மேலும் பெருகி வருவதற்கு அத்தேசங்களில் ஸ்திரீகள் வாசித்து தங்கள் பிள்ளைகளுக்குப் புத்தி புகட்டி சிறுவயது முதல் தேர்ச்சி செய்து வருவது தான் முக்கிய காரணமாக ஏற்பட்டிருக்கின்றது. மகத்தான ராஜாக்கள், பிரபுக்கள் அரண்மனை முதற்கொண்டு கேவலம் கஷ்டப்பட்டு கூலிவேலை செய்யும் குடிசைகளில் வரை இருக்கும் பிள்ளைகள் தங்கள் தாயாரது அடிபணிந்து பயிற்சி அடைந்து வரக்காண்கிறோம். மேலும் அத்தேசங்களில் ஸ்திரீகள் சுகாதார முறைகளை யனுசரித்து பரிசுத்தமாக இருக்கவேண்டிய வழிகளையும் நன்கு அறிந்தவர்களாக இருக்கிறார்கள். ஆகையால் தினந்தோறும் உத்தம ஆசாரங்களை யனுசரித்து வருகிறார்கள். ஆகவே அவர்கள் பிள்ளைகளும் சுகபோஷக்கதில் இருந்து வருவதால் பலவித அனுகூலங்கள் பிள்ளைகளுக்கு ஏற்பட்டு வருகின்றன. எப்படியென்றால் சிறு வயதிலிருந்தே தங்களைப்போன்றவர்களிடம் பச்சாதாபம் காட்டி வரவும் தேசாபிமானம் கொண்டிருக்கவும் ஒவ்வொருவரிடமும் அன்பைக்காட்டவும், மூத்தவர்களை மரியாதைசெய்யவும், பெருத்த ஆலோசனை உயர்ந்த அந்தஸ்துடைய கருத்துண்டாகவும், தங்களரசனைநேசிக்கவும் தயார் படுத்தப்பட்டு வருகிறார்கள். 9 அல்லது 10 வயதாகுமுன்பு பிள்ளைகள் அப்பியசித்து வரும் மேற்சொன்ன பழக்கங்களால் "தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும்" என்பதுபோல அந்த நல்பழக்கமே ஏற்பட்டுவிடுகிறது, பிரபஞ்சத்தில் ஐரோப்பாவானது அவ்வளவு அபிவிர்த்தி யடைவதற்கு வாசிப்புதான் காரணம். அதிலும் ஐரோப்பாவென்னும் பெண்ணிற்கு இங்கிலாந்தானது சோதியான திலகமாய் விளங்குகிறது. இங்கிலாந்தின் தீவர்த்தி சோதியின் கீழ் மற்ற தேசங்கள் சிறு தீபங்களாக பிரகாசம் குன்றியிருக்கின்றன என் சகோதரிகளே! நீங்கள் தைரியத்தைவிடக்கூடாது. அப்பேர்ப்பட்ட ஐரோப்பாக் கண்டமானது சுமார் இருநூறு முன்னூறு வருஷங்களுக்குமுன்னதாகவெகு நாகரீகமற்ற ஸ்திதியில் மற்றெல்லாநாடுகளைப் பார்க்கிலும் கேவலமாயிருந்ததுதான் ஸ்திரீகளுக்கு வாசிப்பு என்னும் வாசனையே கிடையாமலிருந்தது. ஆனால் புருஷர்கள் முன்னுக்கு வரும்போது ஸ்திரீகளும் வாசிக்கவேண்டியது. அத்தியாவசியமென்று தெரிந்தவர்களாய் இதன்





விஷயமாக செய்யவேண்டிய பிரயத்தனங்களை உடனே செய்து முடித்தார்கள். சிறுமிகளும் புருஷர்கள் கருத்துக்கிசைந்தவர்களாய் பாடுபட்டு வாசித்துக்கொண்டார்கள். ஏழைகளாக இருப்பவர்களுக்கு தனவந்தர்கள் சகாயஞ்செய்து தாரதம்மியமின்றி யாவரும்வாசிப்பில் தேர்ந்தவர்களாய் இப்போது முதல்தரசர்வஞ்ஞராக ஏர்ப்பட்டுவிட்டார்கள். ஆகவே இக்கிளப்புக்கு மெம்பராக இருக்கிற நீங்கள் உங்களைப்போன்ற ஸ்திரீவகுப்பினர் வித்தியாபிவிர்த்தியடையும்படி பார்ப்பதுதான் உங்கள் முக்கியகருத்தாக இருக்கவேண்டும். ஏழைகளும் முன்னுக்கு வரும்படி நீங்கள் சகாயம்செய்யவேண்டும், ஸ்திரீகள் வாசிப்பிலும் நல்லொழுக்கத்திலும் பயிற்சியடையும்படி செய்யவேண்டும். அனேக சடங்குகளிலும் சுபதினங்களிலும் பணவிரயம் செய்யாமல் பெண்பாடசாலைகளுக்கும், ஸ்திரீகள் கூடும் கிளப்புகளுக்கும் இந்திய பெண்டுகளுக்காக உழைத்துவரும் பத்திரிகைகளுக்கும் சஞ்சிகைகளுக்கும் உங்கள் உங்கள் பணங்களைச் செலவிடவேண்டும். இந்த விஷயங்களையே நீங்கள் முக்கியமாக கவனிக்கவேண்டும். ஏனெனில் தேசம் க்ஷேமப் படுவதற்கும் அபிவிர்த்தியடைவதற்கும் பெண்கள் கல்விதான் காரணம்."

சுதேச பரிபாலனி.

## பொதுவர்த்தமானம்.

வட அமெரிக்காவிலுள்ள காலிபோர்னியகவர்ன்மெண்டார், எந்த உத்தியோகத்திற்கும் மாதர்லாயக்காவார்களென்றும் எவ்விதத்திலும்புருஷர்களைப்போல்அவர்களுக்கு ஸ்வதந்த்ர முண்டென்றும் உத்திரவுசெய்திருக்கிறார்கள்.

* * * *

நகத்திலெழுதிய சித்திரத்திற்கு ஜர்மன் சக்ரவர்த்தியின் பந்துக்களிலொரு ஸ்திரீயானவள் தன்னுடைய பிரிய நாயகனின் உருவப்படத்தைத் தன் நகத்தின்மீது 180 ரூபாய் கொடுத்து ஓவியக்காரனைக் கொண்டெழுதிக்கொண்டாள். இதைக்கண்டு சில ஸ்திரீ புருஷர்கள் தங்கள் தங்கள் நாயகி நாயகர்களின் போட்டோவை நகத்தின்மீது எழுதுக்கொள்கின்றார்களாம்.

பெல்ஜியம் தேசத்திலுள்ள ஒரு ரெயில்வே ஸ்டேஷனில் 1881-ம் வருஷம் ஒரு கடியாரம் வைக்கப்பட்டது. அதற்கு 5 வருஷத்திற்கொரு முறை சாவி கொடுக்கிறார்களாம். இன்னும் சரியாகவே ஓடிக்கொண்டிருக்கிறதாம்.

* * * *

அமெரிக்காவிலுள்ள அமெஜான் நதிக்கரையில் உள்ள ஓர் மரத்தின் இலையொன்று 50 அடி நீளமும் 12 அடி அகலமுமுள்ளதாயிருக்கின்றது. இதைவிடப் பெரிய இலை உலகத்தில் கிடையாது

* * * *

அமெரிக்கா யுனைடட் ஸ்டேட்ஸிலுள்ள சிகாகோ பட்டணத்தில்தான் உலகத்திலுள்ள தெருக்களிலெல்லாம் நீளமான தெரு இருக்கிறது. லண்டனிலுள்ள மான்ஷியன் அவுஸ் தெருவுதான் உலகத்திலுள்ள தெருக்களிலெல்லாம் சிறியது. இத்தெருவில் ஒரே ஒரு இன்ஷ்யூரன்ஸ் கம்பனியிருக்கிறது. இத்தெருவில் கும்பிருப்பதுபோல வேறெத் தெருவிலுமில்லை.

* * * *

பிரம்மச்சாரிகளைவிட கிரகஸ்தர்கள் நீண்ட ஆயுளுடையவர்களாயிருக்கிறார்கள். குற்றவாளிகளில் நூற்றுக்கு பிரம்மச்சாரிகள் 38 பேரும் கிரகஸ்தர்கள் 18 பேரும் தான் இருக்கிறார்கள். இக்காரணங்களால் ஜனசமூகநன்மையைக் கருதுகையில் கிரகஸ்தாஸ்ரமமே விரும்பத்தக்கது என்று ஒரு ஜெர்மன் சாஸ்திரியார் அபிப்பிராயப்படுகிறார்.

* * * *

குழந்தைகளை தூங்கச்செய்யும் விதம்:—குழந்தைகளைத் தாயின் பக்கத்திலேயே தூங்க விடுவதால் குழந்தைக்குத் தாயின் சூடு பட்டு நல்ல நித்திரை செய்யுமென்பது சிலரின் அபிப்பிராயம். ஆனால் இதற்கு மாறாக குழந்தை பெரியவர்களின் பக்கத்தில் படுத்து அவர்கள் வெளியிடும் கெட்ட ஆகாயத்தைச் சுவாசிப்பதாம். அதற்குச் சுகவீனம் நேரிடுமென்றும். தாய்மாரின் கைமுதலிய உறுப்புகள் குழந்தைகளின் மேல் படுவதால் அவர்கள் நித்திரைக்குப் பங்கமுண்டாகலாமென்றும், சில தாய்மார் படுத்துக்கொண்டு குழந்தைக்குப் பால்கொடுக்க, குழந்தை தூங்கும்முன் தாம் தூங்கி விடுவதால் குழந்தை அளவுக்குமிஞ்சிப்பால் குடித்து அஜீரணத்திற்கிடமாகலாமென்றும், சில குழந்தைகள் பால் குடித்துக்கொண்டே தூங்கி விடுவதால் பால் நாசியிலேறுவதினால், அல்லது குழந்தை தாயின் துணிகளினால் தன் வாயையும் நாசியையும் மூடிக்கொண்டு மூச்சுவிடக்கஷ்டப்படுவதினால் ஒரு ஸமயம் உயிர்ச்சேதமுண்டாகலாமென்றும் சிலர் அபிப்பிராயப்படுகிறார்கள். இது வாஸ்தவமே. ஆகையால் இவ்வித விபத்துகளுக்கு இடமுண்டாகாதபடி குழந்தைகளைத் தனிமையாகத் தாயின் படுக்கை ஓரத்தில் வேறு படுக்கையிற்போட்டு நித்திரைசெய்ய விடவேண்டும். படுக்கை சூடாயிருக்கும்





பொருட்டுக் கம்பளித் துணியை விரித்து அதின்மேல் மெல்லிய போர்வையை விரித்துக்குழந்தையைப் படுக்கவைக்கவேண்டும். நித்திரை செய்யும்போது தலைக்குல்லா முதலானவைகள் போட்டு முகத்தை மூடாமல் காற்று நன்றாய்ப்படும்படி முகத்தைத்திறந்துவைக்கவேண்டும். கொசு, மூட்டை, எறும்பு முதலியவை படுக்கைக்குச் செல்லாமல், கட்டிலின் கால்களில் கெரோஸின் எண்ணெயில் அல்லது கற்பூரத்திராவகத்தில் நனைத்த துணிகளைக்கட்டிவைக்கலாம். கொசு அதிகமாயிருந்தால் கொசு வலையால் கட்டிலை மூடலாம், அடிக்கடி குழந்தையின் படுக்கை முதலியவைகளை வெயிலில் காயப்போட்டெடுத்து உபயோகிக்கவேண்டும்:—பிழைக்கும் வழி.

## சுதேச வர்த்தமானம்.

நமது கவர்னராகிய லார்ட் கார்மைக்கேல் கல்கத்தாவுக்கு கவர்னராக சக்கரவர்த்தி அவர்களின் ஆக்கினையால் நியமனம் பெற்றிருக்கிறார். இவருக்குப்பதிலாக லார்ட் பெண்ட்லண்ட் நியமிக்கப் பட்டிருக்கிறார். இவரும் ஸ்காத்லாந்து காரியதரிசியாகவும் பார்லிமெண்ட் மெம்பராகவுமிருந்து நிர்வாக அனுபோகம் பெற்றவர். இவருக்கு தற்காலம் 52 வயது நடக்கிறது.

* * * *

மிஸ் கா. டெனண்ட் என்னும் ஆங்கிலேய ஸ்திரீ இந்துவிவாக சீர்திருத்த விஷயமாக நாடெங்கும் சபைகள் ஸ்தாபிக்கும் நோக்கத்துடன் மதுரை, தஞ்சை, திருச்சி முதலிய தென்ஜில்லாக்களில் சுற்றுப் பிரயாணம் செய்து பிரசங்கம் செய்ததுபோல் வடஜில்லாக்களிலும் சென்று பிரசங்கப் பிரயாணம் செய்துவருகிறார். பல ஜில்லாக்களில் சபைகள் ஸ்தாபிக்கப் பட்டிருக்கின்றன.

* * * *

சக்கரவர்த்தி அவர்களின் இந்திய விஜய ஞாபகார்த்தமாக ஸ்திரீகளுக்குப் பிரத்தியேகமான வைத்தியக்கலாசாலை ஒன்றை ஸ்தாபிக்கவேண்டுமென்று பம்பாய்ப் பத்திரிகைகளுக்கு மிஸ்ஸஸ் ராமாபாய் ரானடே எழுதியிருக்கிறார்.

* * * *

அகலபாத் சிவில் ஸ்டேஷன் வார்ட் முனிசிபல் கமிஷனர் வேலைக்கு மெம்பர்களாகநின்றவர்களுள் ஒரு ஸ்ரீமதியுமொருவராம். இந்த ஸ்ரீமதி ஹைகோர்ட் வக்கீல் பண்டிட் மோஹன்லால் நேருவின் சம்சாரமும் கனம் பண்டிட் மோதிலால் நேருவின் மருமகளுமாம்.

* * * *

எம். வி. ஜோஷியின் புத்திரியாரான மிஸ்-ஜோஷி லண்டனில் எல். ஆர் சி. பி., எம். ஆர். சி. எஸ். என்னும் பட்டத்தைப் பெற்றனர். லண்டனில்

பட்டம் பெற்ற ஸ்திரீகளுள் இவர்தா முதன்மையானவர். இம்மாது சிரோமணி பம்பாய்ச் சர்வகலாசாலையில் L. M. S. பட்டம் பெற்றிருக்கின்றனர். இம் மாதுசிரோமணியார் பிரான்சு ஜர்மனிகளிலுள்ள முக்கியமான ஆஸ்பத்திரிகளைப் பார்வையிட்டு, இந்தியாவிற்குத் திரும்பிவிட்டனர்.

---

## வித்யாவிஷய வர்த்தமானங்கள்.

H. E. லேடி கார்மிகேல் பெண்கள் கல்வியிலும், மாதர்களின் முன்னேற்றத்திலும் ஆழ்ந்த சிரத்தைகாட்டி வருகிறார். லேடி கார்மிகேல் விக்டோரியாவை விட்டு வருவதற்கு முந்தி, அக்குடியேற்ற நாட்டிலுள்ள உயர்வு தாழ்வு அந்தஸ்துள்ள பல மாதர்களும், கண்ணில்லாச் சிலமாதர்களும் சேர்ந்து மொத்தத்தில் 7000 பேர் கையொப்பமிட்டு, லேடி கார்மிகேல் காலத்தில் தங்களுக்குக் கிடைத்த நன்மைகளைப் பற்றிப் புகழ்ந்து ஓர் அட்ரெஸ் வாசித்தார்கள். லேடி கார்மிகேலும், ஆனரெபிள் மிஸ் கார்மிகேலும், சரிகைத் தையல் வேலையில் கைதேர்ந்தவர்கள். உயர்தரமான சரிகைத் தையல் வேலைமாதிரிகள் பல, லேடி கார்மிகேல் தம் வசம்வைத்திருக்கின்றனர். லேடி கார்மிகேல் சென்னையிலுள்ளமாதர்களின் படிப்பு விஷயமாயும், அவர்களின் முன்னேற்ற விஷயமாயும் அதிக சிரத்தை யெடுத்துக்கொண்டிருக்கிறார். லேடிகார்மிகேல் சென்னைக்கு விஜயஞ்செய்த கொஞ்சம் நாட்களுக்குள், இந்திய மாதர்களுடன் அறிமுகஞ்செய்து கொள்வதற்கு நான்குமுறை, மைலாப்பூரிலுள்ள வில்வன் லாட்ஜைப்போய்ப்பார்வையிட்டனர். சரிகைத் தையல் வேலையை அங்குள்ளசிறுமிகளுக்கும் உபாத்தினிகளுக்கும் கற்றுக்கொடுத்தனர். லேடி கார்மிகேலுக்கும் மைலாப்பூர் வில்வன் லாட்ஜ் மாதுகள், சிறுமிகள், உபாத்தினிகள் இவர்களுக்கும் நேசம் அதிகரித்தது. லேடி கார்மிகேல் பங்காளத்திற்குப் போயவிடுவதாகக் கேட்ட சிறுமிகள். போன மாதம் 23-ந்தேதி லேடி கார்மிகேல் வில்வன் லாட்ஜிக்குவராவே, சென்னையிலேயே அவரைத்தாமதிக்கும்படி கேட்டுக்கொண்டனர்கள். தவிர மிஸ்ஸஸ் ரவணம்பா, லேடி கார்மிகேலின் குணாதிசயங்களைப்பற்றிப் புகழ்ந்து பேசினர்.

* * * *

பங்காளத்தில் பெண்கல்வி அபிவிருத்தியடைந்து வருகிறது. சென்ற வருஷம் படித்துக்கொண்டிருந்த பெண்கள் 167, 514. இவ்வருஷம் 173, 2[illegible]4. ஹைஸ்கூல் வகுப்புகளில் அதிகமாகப்பெண்கள் சேர்ந்து வாசித்து வருகிறார்கள். சம்பள விகிதங்கள் சற்றே உயர்த்தப்பட்டிருந்தாலும் அவைகளைப் பிரமாதமாய்க் கருதுவதாகத் தோற்றவில்லை. வீட்டிற்குச்சென்று படிப்புச்சொல்லிக்கொடுத்து பரிக்ஷை நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பது மிக்க சாதகமுள்ளதாக விருக்கிறது. அநேக ஸ்திரீகள் கல்விகற்றுப் பரிக்ஷைகளில் தேறிவருகிறார்கள்.

152

# பெண் கல்வி.

சித்திர சகிதமான ஒரு மாதாந்த சஞ்சிகை.

கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்.—திருக்குறள்

தொகுதி I.] 1912ஹு ஜூன்மீ [பகுதி 9

## சங்கீத சாகரமாகிய ஸ்ரீமதி சத்தியபால தேவி.

எந்நாட்டுக்கும் ஒரு விஷயம் பொது. யோகிகள், வீரர்கள், மகாத்மாக்கள், அதிவிவேகிகள், அவதார புருஷர்கள் முதலியோர்களின் சாமர்த்தியங்களும் மகிமைகளும் அவர்கள் ஜன்ம தேசத்தாரால் கண்டு கொள்ளப்படாமல் அனேக காலங்கள் விரயமாகின்றன. இவர்களின் சாமர்த்தியங்களை அயல் நாட்டார் கண்டு, மரியாதைகள் செய்வதைக் கேட்கும் பொழுது, அவைகளை ஜன்மதேசத்தார் தாங்களே அறிந்து கொள்ளமுடியாமல் போயிற்றே என்று மனம் ஏங்குவார்கள். நமது மதாச்சாரியர்களைப் பற்றியும் அவர்கள் ஸ்தாபித்த மதக் கோட்பாடுகளைப்பற்றியும் நம்பூர்வீக சாஸ்திரங்களின் நூலாசரியர்கள் முதலியவர்களைப் பற்றியும் நமக்கு இப்பொழுது தெரிந்திருக்கும் விஷயங்கள் நாமே அறிந்து கொண்டவைகளல்ல. மேனாட்டாரின் ஆராய்ச்சியின் பயனாலே நம்புராதன மகிமைகள் நமக்குத் தெரிய வந்திருக்கின்றன.

வங்காளத்தில் கீர்த்திபெற்ற ஓர் பிரம்மகுலத்திற்றோன்றி ஹிந்து சங்கீத சாகரமாகிய ஸ்ரீமதி சத்தியபால தேவி என்னும் நம் நாட்டு ஒரு ஸ்திரீ ரத்னம் அமெரிக்கா நாட்டுக்குச் சென்று ஐக்கிய நாட்டின் தலை நகரமாகிய நியூயார்க்பட்டணத்தில் "ஹிந்து சங்கீத"த்தைப்பற்றி அநேக அருமையான பிரசங்கங்கள் செய்தும் உலகத்திலுள்ள எல்லா சங்கீதத்துக்கும் பொதுப்பட விருக்கும் பான்மையை அறிய ஆவல்கொண்டு, செலவு சிரமம் ஒன்றையும் பாராட்டாமல் உலகயாத்திரை செய்தும் வருகிறார். இம்மாது யார்? இம்மாது தாம் முன் சென்றிராத பல்லாயிர மைல்களுக்கப்பாலுள்ள நாட்டுக்கு ஏன் சென்றார்? அவருக்கு அங்கிருக்கும் கௌரவத்துக்கும் கீர்த்திக்கும் காரணம் என்ன? இவைபோன்ற கேள்விகளின்விடைகளையறியவும்

153

அவரைநேரில் காணவும், அவரின் சங்கீத சாகரத்தின் ஒரு திவலையின் ருசியை அநுபவிக்கவும், எவருமே ஆவல் கொள்ளாமலிரார். இவர் சங்கீத சாகரமென்பதை நமக்கு அமெரிக்கர்களல்லவா காட்டிக்கொடுத்தார்கள்?

ஸ்ரீமதி சத்திய பாலதேவி வங்காளத்திலுள்ள ஜமீன்தாராகிய காமகளுத் சட்டர்ஜியின் பேத்தி. கல்கத்தாவிலுள்ள பெஹூர் என்ற ஸ்தலத்தில் புத்திரபாக்கிய மில்லாமல் பலவருஷங்கள் மனம் வருந்தியிருந்த சாரதாசந்திர சட்டர்ஜிக்கு சீமந்தபுத்திரியாய் இவர் 1891 வருஷத்தில் ஜனித்தார். சட்டர்ஜிக்குவேறு குழந்தைகளில்லாத காரணத்தால் சத்யபாலாவுக்கு சங்கீதம் கல்வி இவைகளைக்கற்பிப்பதில் அவர்மிகவும் கவனம் செலுத்திவந்தார். சட்டர்ஜி இவரை முக்கிய யாத்திரா ஸ்தலங்களுக்கெல்லாம் 6-வது வயதிலே அழைத்துச்சென்றார். இவர் கல்கத்தா பெத்தூன் காலேஜில் கற்ற ஆங்கிலக் கல்வி 14-வது வயதில் முடிவு பெற்றது. மதசாஸ்திரத்திலும் சங்கீத சாஸ்திரத்திலும் இவருக்கு விசேஷப்பிரியமுண்டாயிற்று. கீர்த்திவாய்ந்த சங்கீத வித்வான்கள் மகாராஜா சௌரீந்த்ர மோஹன் டாகூர், ஜோதீந்திர மோஹன் டாகூர் இவர்கள் எழுதிய சங்கீத நூல்களை நிபுணர்களின் கீழ் படித்துவந்தார். இவர் சங்கீதரத்னாகரம், சங்கீத பாரிஜாதம் முதலிய சம்ஸ்கிருத கிரந்தங்களை மகாராஷ்டிர சங்கீத வித்வான்களிடமும், சாமவேதத்தை காசிவாசி தர்க்க சங்கர சாஸ்திரியாரிடமும் பாடங் கேட்டார். இவர் வீணை வாசிப்பதில் இணையற்றவராய் சாமர்த்தியம் வாய்ந்திருக்கிறார்.

இவருக்குத்தமிழ், தெலுங்கு, சம்ஸ்கிருதம், குஜராத்தி, மராத்தி, இந்துஸ்தானி, பஞ்சாபி, ஹிந்தி, பர்ஷியன், இங்கிலீஷ் முதலியபல பாஷைகள் தெரியும். தமக்குத் தெரிந்த ஒவ்வொரு பாஷையிலும் 3000, கீர்த்தனைகள் தெரியும். குளிர்ந்த சாரீரமுடையவர். ஒவ்வொரு கீர்த்தனைகளையும் பல ராகங்களில் ஆலாவர்ணனை செய்து யாதொரு கஷ்டமில்லாமல் பாடுவராம். இவர் சங்கீதத்தில் நிபுணியாயிருப்பதுடன் அவைகளைப்பற்றிப் பலரறியும்படி பிரசங்கம் செய்யவும் அபார சக்தி பெற்றிருக்கிறார்.

நியூயார்க்கிலுள்ள 'கார்னிகி' மண்டபத்தில் 1911ஞ பிப்ரவரி மாதம் 15 தேதியில் 'ஹிந்து சங்கீதம்' என்ற விஷயத்தைக் குறித்து ஓர் உபந்நியாசம் செய்தார். அப்போது ஹிந்துசங்கீதத்துக்கும் ஐரோப்பியசங்கீதத்துக்குமுள்ள வித்தியாசத்தை எடுத்துச் சொல்லுகிறார்: "ஐரோப்பியர்களாகட்டும் அமெரிக்கர்களாகட்டும் ஒவ்வொரு நாளும் புதிது புதிதாக சங்கீதவேண்டுமென்கிறார்கள். அவர்கள் உண்பதிலும், உறங்குவதிலும், குடிப்பதிலும் காற்றை சுவாசிப்பதிலும், வாழ்நாள் முழுவதும் யாதொரு மாறுதலில்லாமல் அநுசரித்து வருகிறார்கள். சங்கீதம் மட்டும் மாறவேண்டுமாம். எங்களுடைய சங்கீதம் உலகத்தில் தோன்றினகாலமுதல் தோன்றினபடியாகவேயிருக்கிறது. ஏனென்றால், நாங்கள் ஆத்மா நித்தியமென்று உணர்ந்து நம்புகிறோம். எங்களுடைய சங்கீதமும் தெய்வீகத் தன்மையுடையது. ஆகையால் எங்கள் சங்கீதம் நித்தியம். கேவலம் இந்திரியங்களுக்காக ஏற்பட்ட





சங்கீதமானது எப்பொழுதும் மாறுதலடையத்தான்வேண்டும். ஏனென்றால், இந்திரியங்கள் அநித்யம். அழியக்கூடியவை. உங்களுடைய சங்கீதம் தினேதினே மாறிக்கொண்டே தான் வரும். கடவுள் சங்கீதத்தை ரட்சிக்கட்டும். அமெரிக்காவிலும், ஐரோப்பாவிலும் நல்ல சங்கீதவித்வான்கள் இருந்த இடம் தெரியாமல் போய் விட்டார்கள். இப்பேர்ப்பட்ட நாகரீகமடைந்த தேசங்களில் ஒருவித்வான் தன்னைப்பற்றி பிரமாதமாக விளம்பரப்படுத்திக் கொள்ளாவிடில் உலகத்தில் கியாதிபெற்று தன் சக்தியை தெரியப்படுத்துகிறதற்கு ஹேதுவில்லாமல் போய்விடுகிறது".

பின்னும் ஹிந்து சங்கீதத்தின் அருமை பெருமைகளைப் பற்றியும் தெய்வீகத்தன்மையைப் பற்றியும் சொல்லுகிறார்." "இன்று உங்கள் மத்தியில் கானம் செய்வதற்குச் சாதகமாயிருக்கிற இந்த வீணையாகிய சங்கீதக் கருவி இந்தியர்களால் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே கையாளப்பட்டு வந்திருக்கிறது. 'வீணா' என்ற வடமொழிப் பதத்துக்குச் 'சப்த கருவி' என்று பொருள். மனிதர்கள் பேசுவதுபோலவே தொனிகள் உண்டாகும்படியாய் வீணை அமைக்கப்பட்டிருக்கின்றது.

நான் இப்பொழுது பாடி முடித்த 'ராகினி தீபகாவை' நெடு நேரம் பல ஸ்வரங்களுடன் பாடலாம். எத்தனை முறை திருப்பித்திருப்பிப்பாடினும், அவ்வளவுக் கவ்வளவு நூதனமாயும், ஒன்றுக்கொன்று வித்தியாசத்தையடைந்ததாயும் இருக்கும். ஹிந்து சங்கீதத்தின் சிறப்பு இதுதான். இப்படியிருக்கிறதினால் தேவர்களின் அருளால் சங்கீதம் இந்துக்களுக்குக் கிடைத்திருக்கிறது ஆச்சரியம் ஒன்றுமில்லை. வீணையானது மகா தேவனுக்குப் பிரியகரமான வாத்தியம். இந்துக்களின் தேவதைகள் வசிக்கும் சுவர்க்கத்தில் சரஸ்வதிதேவி சதாகாலமும் வீணாகானஞ் செய்து வருகிறார். பூமியில்புராண சம்பந்தப்பட்ட பரதன், ஹநுமான், நாரதாதி பரிசுத்தர்கள் இவர்களால் இந்த வீணைகையாளப்பட்டு வந்ததாகத் தெரியவருகிறது. இந்துஸ்தானத்தில் வழங்கிவரும் ராகங்கள், ராகினிகளை, உன்னத ஸ்வரத்திலும் தாழ்ந்த ஸ்வரத்திலும் நாளத்திற்கிசைந்தும் வீணையில் பாடுவது மிக்க பிரயாசம் வீணையின் அமைப்புக்கும் உங்கள் வாத்தியத்தின் அமைப்புக்கும் மிக்க வித்தியாசமுண்டு. நான் கையில் ஏந்தியிருக்கும் வீணை, மனிதர்கள் பேசுவதைப்போல் தானும் பாடுகிறபடியால், அது உயிர் உடையது; உங்களுடைய வாத்தியத்திற்கு அந்தச் சக்தி யில்லாததினால் அதற்கு உயிர் இல்லாதது.

வீணை வித்தை மிகக் கடினமானது. நல்லதும் உத்தமுமான ஒவ்வொரு விஷயமும் யாருக்குமே சுலபத்தில் கிட்டாது. பூர்வகாலத்தில் கிரேக்கு, இட்டலி முதலிய தேசங்களில் சங்கீத சாஸ்திரம் மிக்கப்பிரபலமடைந்து, கேட்கிறவர்களுக்குக் கர்ணானந்தத்தை உண்டு பண்ணினதாகச் சொல்லப்பட்டிருந்தாலும், ஹிந்து சங்கீதத்திற்கு அது ஒரு பொழுது

ஈடாகாது. வரவர சங்கீத சாஸ்திரத்தில் ஐரோப்பியர்களுக்குப் பிரியம் குறைந்துக்கொண்டு வந்ததினால், அந்த சாஸ்திரம் அவர்களுள் விருத்தியடையாமல் நசித்துப்போயிற்று. தயாளத்துவம், பக்ஷம், அன்பு, நேசம் முதலியவைகள் எந்த ஜாதியாருக்கு இல்லையோ, அந்த ஜாதியாருள் இந்த தெய்வீகமான சங்கீத சாஸ்திரம் ஒரு பொழுதும் விருத்தியடையாது. அந்த ஜாதியாருள் சங்கீதம் இயல்புகுன்றவே அதற்குப்பதிலாக ஆத்மாவுக்குச் சந்தோஷத்தை யுண்டுபண்ணாமல் புலன்களுக்கு மட்டும் சந்தோஷத்தை யுண்டு பண்ணும் சப்தத்தை அவர்கள் கையாடி வருபவர்கள். தெய்வீகத்தன்மையை வகித்த இந்திய சங்கீத வித்வான்கள் புலன்களைச் சந்தோஷப்படுத்தாமல் ஆத்மாவைச் சந்தோஷப்படும்படியாய் பாடியிருக்கிறார்கள். மொகலாய சக்கரவர்த்தியான அக்பர்காலத்தில் இருந்த பெயர்பெற்ற **மியன்தான்ஸேன்** என்ற பாடகன் இரவில் பாடவேண்டிய ராகங்களில் ஒன்றை நடுப்பகலில் பாடினான். அந்த ராகத்தின் சக்தியானது உடனே பகலை இராவாக மாற்றி விட்டது என்று சொல்லக் கேள்வி. அக்பர் சக்கரவர்த்தியின் அரண்மனையில் அந்தப்பாடகன் தொனி எதுவரையிலும் வியாபித்ததோ அந்தபாகம் முழுவதும் இருண்டிருந்தது. மழையை வருஷிக்கச் செய்யும் சக்தி ராகினி மேக மாலா என்ற ராகத்திற்கு உண்டாம். பூர்வத்தில் என் வங்காள சகோதரி ஒருத்தி வங்காளத்தில் மழை மாரி இல்லாமல் பயிர்கள் வாடிப்போகக் கிடந்த சந்தர்ப்பத்தில், இந்த ராகத்தைபாடிச் சரியானமழை வருஷிக்கச் செய்திருக்கிறாராம். மிக்க நாகரீகம் அடைந்த இந்த இருபதாவது நூற்றாண்டில் வீணைக்கு ஒப்புயுயர்வாக வேறெந்தவாத்தியத்தையும் சொல்லமுடியாது. பூர்வத்தில் இந்தியாவில், கடவுளைத்துதிப்பதிலும் வியாதியைச் சௌக்கியப்படுத்துவதிலும் சங்கீதம் உபயோகிக்கப்பட்டு வந்தது. சாமவேத கானத்தை நான் இப்பொழுது என் வீணையில் வாசித்துக் காட்டுகிறேன்."

அன்று சபாநாயகரான டாக்டர் வீலர், "இந்தியா மிக்க அற்புதமான தேசமென்று பாதிரிமார்களால் நான் கேள்விப்பட்ட நாள் முதல், அப்பேர்க்கொத்த புண்ணிய ஸ்தலத்தில் நான் ஜெனிக்கக் கொடுத்து வைக்கவில்லையே என்று பல முறையும் விசனித்ததுண்டு. 19 வயதுள்ள இந்தப் பிராமணச் சிறுமி மானிட சிருஷ்டியாக இருக்கக்கூடுமா? இவ்வளவு பிரயாசமான சங்கீதவித்தையில் அடங்கிய எண்ணிறந்த பாடல்களை எப்படித்தான் ஞாபகத்தில் வைத்துக்கொண்டிருக்கிறாரோ? ஆச்சரியத்திலும் ஆச்சரியம்! நம்முடைய சிறந்த வித்வான்களெல்லாம் இவ்வளவையும் ஞாபகத்தில் வைத்துச்சொல்ல அசக்தர்களாயிருக்கிறார்கள். சங்கீதத்தினால் தலைவலி முதலிய பலநோய்கள் குணமாகும் என்பதை என்னிடம்வரும் நோயாளிகளுக்கு போதித்து வருகிறேன். நம்முடைய யுனிவர்சிடிகளில் சங்கீதத்தில் பயிற்சி பெற்றவர்களுக்கு கௌரவப்பட்டமும் டிப்ளோமாவும் கொடுக்கிறார்கள். ஆனால் நம்முடைய சங்கீதகலாசாலைப்புரொபசர்கள் நம்முடைய பழைய சங்கீதத்தைப்பற்றியே ஒன்றும் அறியாமலிருக்கிறார்கள். இந்தமாதின் சங்கீ-





தத்திலுள்ள அபார ஞானத்தை இந்தியர்கள் மெச்சுவார்களென்பதில் ஆக்ஷேபனையில்லை. ஆனால் இந்தியர்கள் இம்மாதின் அபாரஞானத்தை அறியாதவர்கள் போலும். இல்லையேல் இந்தஸ்திரீ ரத்னத்தை இங்கு விட்டு வைக்க மாட்டார்கள். இம்மாது எடுத்துக்கொண்டிருக்கிற காரியம் சாமான்யமானதல்ல. இவ்வுத்தம காரியத்தில் ஜெயமும் கியாதியும் பெறவாளென்று கடவுளை மனப்பூர்வமாய் பிரார்த்திக்கிறோம்".— என்று பிரசங்கமுடிவில் பேசினார்.

இம்மாதுஸ்ரீ மகாகீர்த்திவாய்ந்த சங்கீதசாஸ்திர பூர்வீகமகான்களின் கீதங்கள் என்றும் அழியாமலிருக்க அவைகளைப்பாடி கிராமபோன் பிளேட்டில் பிடித்திருக்கிறார். அவரால் தயார் செய்யப்பட்டுள்ள பாட்டு * பிளேட்டுகள் சில விலைக்குத் தயராயிருக்கின்றன. அவர் பிதுர்ராஜ்யசொத்தெல்லாவற்றையும் உலகப் பிரயோஜனமான காரியத்தில் செலவு செய்து விட்டதாயும் தம் நோக்கம் நன்கு முடிய நம்மவர்கள் தப்பிளேட்டுகளை வாங்கி உபகாரம் செய்யும்படியாயும் பிரார்த்திக்கிறார் இவருக்கு பூர்ணயுளையும் திடசரீரத்தையும் ஈசன் அளிப்பாராக!

---

## பெண்கல்வி

(8-வது சஞ்சிகையின் 5-வது பக்கத்தின் தொடர்ச்சி)

---

ஒருகைக்குக் குளிர் பனி முதலியவை தாக்காமல் உறையணிந்து மறுகரத்தினைத் திறந்து வைத்தல் எம்மட்டில் அலங்காரமும் நாகரீகமுமாமோ, அம்மட்டில் ஆடவர்படித்து மகளிர் அஃதில்லாதிருத்தலுமாம். இந்திய ஸ்திரீகள் மேல்நாட்டுப் பெண்களைப்போல் பொருள் தேடும் சாதனங்களைப் பயிலக் கூடியவர்களாயிராமல் குடும்பப் பாதுகாப்பு, பாலரை நல்வழியில் பயிற்றி வளர்த்தல், பந்துக்களையும் நட்பினரையும் எளியவர்களையும் துறந்தவர்களையும் அவரவர்க்கு ஏற்றமுறையாய் உபசரித்தல், கடினம், அற்பம் என்று மதிக்கத்தக்க மனைக்குரிய வேலைகளில் பயிற்சி பெற்றிருத்தல், கணவன் பதவியினால்தான் அகங்கரியாமலும் சோம்பலுறாமலும் அவர்க்குக்கீழ்ப்படிந்து அன்-

* ஸ்ரீமதிசத்தியபால தேவியின் கிராமபோன் பிளேட்டுகள் எல்லாம் இந்த விலாசத்துக்கு எழுதி தருவித்துக்கொள்ளலாம்.

**THE ALL INDIA ACADEMY OF MUSIC,**
***No. 18, Block, B. Sitaram Building,***
***(Near Crawford Market), BOMBAY.***

பாய் நடத்தல், கற்பிற் கலங்காது இருகுலத்திற்கும் தனக்கும் கீர்த்தியையுண்டுபண்ணல், பழமையான குல தர்மங்களையும் விரதாநுஷ்டானங்களையும் கைவிடாது ஆசரித்தல், சீலம் தெய்வ பக்தி இவைகளைக் கைவிடாதிருத்தல்—ஆகிய இத்தகைய கடமைகள் பலவற்றையும் ஆசரித்துக் குடும்பத்திற்கு க்ஷேமத்தையும், புகழையும், உண்டுபண்ணவேண்டியவர்களாகின்றனர். இவைகளில் ஒவ்வொரு கடமையும் எளிதல்ல. இவையனைத்தினுடைய நிர்வாகத்திற்கும் எஜமானிகளாக வேண்டிய மாதர்கட்கு விரிந்த பலவகைக் கல்வி பயிற்றப்படல் அவசியமென்றென அறையலாகுமோ? கல்விப்பயிற்சியின்றியும் பல மாதர்கள் இந்தியாவில் நன்னடத்தையோடு நற்குணவதிகளாய் இல்லறம் நடத்திவருகிறார்கள். ஆனால் அத்தகையார் புரியும் இல்லறத்தில் வழுவுதல் இன்றிமட்டில் இருக்கலாமன்றி புருஷனுக்குச் சந்தோஷத்தை அதிகரிக்கச் செய்யும்படியாக தங்கள் புத்தி விசேஷத்தினால் ஒரு வித நன்மையையும் செய்யக் கூடியவர்களாயிருக்கமாட்டார்களென்பது கல்லின்மேலெழுத்தாம். மேலே கூறிய கல்லாமாதர்களின் நன்னடையும், நிர்வாக சக்தியும் நாளடைவில், பழக்கத்தினால் சாதகப்படுவதன்றி வேறில்லை. அதை உற்றுநோக்குமிடத்து சிறுவர்கள் எழுத்தின் பெயரை உபாத்தியாயரால் உணர்த்தப் பெறாமல் அவ்வெழுத்துக்களின் வரிவடிவங்களை வரிசைக்கிரமமாக எழுதப்பயில்வதற்கே இணைகூறலாகும். இவற்றிற்குள்ள தாரதம்மியத்தை நன்கு யோசியுங்கள்.

நிலம் சிறந்தவளப்பமுடையதாயினும் அதற்கு குளிர்ந்த புனலும், சிறந்த எருவும் இடுதலே அதிகவிளைவையுண்டுபண்ணல் போல, இயல்பாகவே இந்திய மாதர்கள் உத்தமகுணங்கள் அமைந்தவர்களாயினும் கல்வியறிவும், கேள்வி நலமும், அடைவார்களாயின் அவர்களால் ஆடவர்கள் அடையும் பெரும் சுகமும், லாபமும் ஆறுதலும், செல்வமும், இவ்வளவென்று மதிக்க எவரால் முடியும்? கண்களானது தனக்குள் படரும் செவ்வரிகளைத் தாமறியாதவாறுபோல குடும்பத்தலைவன் நெருங்கிப் பழகு முறையினால் தனக்கு வாய்த்த மனைவியின் கல்வி கேள்வியின்மையினால் உண்டாகும் திறமைக்குறைவுகளைத்தான் காணமுடியாமல் ஏமாற்றமடைவதோ, அல்லது அதுவே போதுமெனத்திருப்தியடைவதோ, வேறுவிதியின்மையால் உலகில் எங்கும் இயல்பே





ஆதலின், இவைகளை ஓர் சமாதானமாகக் கொள்ளாமல் மாதர்களைக் கல்வியறிவில் முற்படுத்தி அவர்களால் பெரும் லாபங்களைப் பெறல் இன்றியமையாக்கடமை யென்றெவரும் ஒரு மனதாய் எண்ணித் துணியவேண்டும்.

அசலாம்பிகை.

---

## பார்யா லக்ஷணம்.

---

இங்கில வுலகின்கண் வசியா நின்ற மானிடர்க்கு பிரமசரியம், கிரகஸ்தம், வானப்பிரஸ்தம், சன்யாசம் என்ற நான்கு ஆச்சிரமங்க ளேற்பட்டிருக்கின்றன. அவற்றில் சாலச்சிறந்தது கிரகஸ்தம் என்ற இல்லற ஆசிரமமேயாகும். ஏனென்றால், ஒருவன் பதினாறு வயதின்மேல் ஒரு கன்னிகையை வேத விதிப்படி மணந்து இருவருங்காலமறிந்து கூடி அறமுறையால் பொருளீட்டி பிரமசாரி, வானப்பிரஸ்தன், சன்யாசி யென்ற மூவாச்சிரமத்தாருக்கும் பசிநோய்முதலிய இடையூறுகளுறாதபடி தகுந்த முயற்சி செய்தும், அநாதிகளையாதரித்தும், ஆதுலர்க்குதவியும் தன்னிடத்திறந்தோர்க்கு ஈமக்கடன் முதலிய செய்தும், தேவாலயப்பணிவிடை, திருவிழா, நித்யபூஜை முதலியவற்றை நடத்தியும் பிதிர்தேவதைகளுக்கு நீர்க்கடன் முதலியவற்றால் திருப்தி செய்தும், விருந்தோம்பி வரும் விருந்து பார்த்திருந்தும், உறவினர்க்கு வேண்டிய கொடுத்தும், தன் மனைவியோடொருப்பட்டு நடுவு நிலைமையை யனுசரித்தும், அன்புடைமை, அடக்கமுடைமை, ஒழுக்கமுடைமை, பொறையுடைமை முதலியவற்றைப்பூண்டும், பிறர்பொருள் கவர்தல், புறங்கூறல், பயனில்லாவற்றைப் பாராட்டல் முதலியவற்றைத் தவிர்த்தும், உலகநடையறிந்துதவி பொருளுடையராகவும், எவரிடத்தும் அன்பினராகவும், இனியவசனத்தராகவுமிருந்து புத்திரபாக்கிய முதலியவற்றைப்பெற்று இம்மை அடைந்து இன்பத்தை சுகித்திருப்பதே இவ்வாச்சிரம விதியாதலால் இல்லற ஆசிரமமே உலகத்திற்குப் பிரதான அங்கமாயிருக்கின்றது. அதனாலேதான் 'இல்லறமல்லது நல்லறமன்று' என்ற ஓர் நீதி வாக்கியமும் வழங்கி வரு

கின்றது. இவ்வாச்சிரமத்தை வகித்து நடாத்தும் ஆடவனுக்குத் துணை நின்றுதவும் ஸ்திரீயே பார்யை யெனப்படுவாள். பார்யை யென்பவள் ஒருவன் வேதவிதிப்படி விவாகஞ்செய்து கொண்ட மனைவியேயாம். இவ்விதசதிபதிகளாகிய இருவரும் ஒற்றுமையாய் சத்திய நெறிபிறழாது நடப்பதே இல்லற தருமத்திற்குச் சிறந்த ஒழுக்கமாகும்: இவ்விஷயமே.

மன்னிய தங்கடங்க ணிலையினை மறத்தலின்றி
யின்னண மாணும் பெண்ணு மிருப்பரே யிதற்குமேலா
உன்னலாம் பரவியுண்டோ வுரைப்பீர் செந்தமிழ்வல்லீர்கா
ளென்னதான் முயன்றீர் நீவி ரெடுத்துவேறியம் பொணாதே,

என்று பிள்ளையார் புராணத்திற் கூறப்பட்டிருக்கின்றது ஆகையால்,

பத்தாவுக்கேற்ற பதிவிரதை யுண்டானால்
எத்தாலுங்கூடி யிருக்கலாம்—சற்றேனும்
ஏறுமாறாக இருப்பாளே யாமாகிற்
கூறாமற் சன்யாசங் கொள்.

என்ற ஞாயப்பிரகாரர், கணவனுடைய மனதிற்கிசைந்து நடக்கத் தகுந்த பதிவிரதா சிரோமணியான பெண் மனைவியாக அமைவாளானால் ஒற்றுமையாய் இல்லற தருமம் நடத்துதற்குச் சாதகமாயிருக்கும். அப்படிக்கின்றிக் கணவன் மனம் நோகும்படியாக எதிர் மொழி கூறிப் போராடிப்புறங் கூறித்திரியும் படியான மனைவியமைவாளானால் அவ்வில்லறதருமம் பிரயோஜனப்படாது; சன்யாசங்கொள்வதேமேலாகும். ஆதலால்

மனைமாட்சி யில்லாள்க ணில்லாயின் வாழ்க்கை
எனைமாட்சித் தாயினு மில்.—குறள்.

அதாவது, இல்லறத்திற் குரிய விருந்தாகவந்தவரை ஆதரித்தல், ஏழைகளிடத்தில் இரக்கம், முதலிய நற்குணங்களும், வாழ்க்கைக்கு வேண்டியபொருள்களை அறிந்து அவைகளைச்சம்பாதித்தல், சமையல் தொழிலில் தேர்ச்சி, முதலிய நற்செய்கைகளும் மனைவியிடத்தில் இல்லையானால் அவ்வில்வாழ்க்கை செல்வத்தால் எவ்வளவு மாட்சிமையுடையதாயிருந்தாலும் பிரயோஜன மில்லை.

இல்லதெனில்லவன் மாண்பானா லுள்ளதெ
னில்லவன் மாணாக் கடை.—குறள்.





மனைவிநற்குண நற்செய்கையுடையவளாயிருந்தால் இல்லாதது என்ன? அவள் நற்குண நற்செய்கைகளுடையவளாகாமலிருந்தால் இருப்பது எது? எல்லாமிருந்தும் மனைவிக்கு நற்குண நற்செய்கைகளில்லாவிட்டால் பிரயோஜனமில்லை யென்று நாயனார் திருவாக்கு பிரமாணப் படுத்துவதால் மனைவிக்கு நற்குண நற்செய்கைகள் அவசியம் இருக்க வேண்டுவதே இல்லறவாழ்க்கைக்கு ஏற்ற ஒழுக்கமாகும். ஆனால்,

நற்புவியோர் கொண்டாட நாதனுடனே கூடிப்
பொற்புடனே வாழ்ந்து புகழ்படைக்கும்—நற்புவிலே
மாதருக்கு நாண மடமச்ச மும்பயிர்ப்புஞ்
சாதகமா யுள்ளகுணந் தான்.

என்ற சுருதிப் பிரமாணப்படி, கற்புலக்ஷணத்திற்குப் பொருத்தமாயுள்ள நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு என்ற மகடூக்குணங்கள் நான்கையுமே அனுசரித்து வரவேண்டுவது மாதராகப்பிறந்த ஒவ்வொருவருக்கும் இன்றியமையாத அத்தியாவசியமான கடமையாகும். அவற்றில் நாணம் என்பது ஆடவரைக்கண்டவுடன் வெட்கப்படுதலும், மடம் என்பது தனக்குச் சகலஞாயங்களும் தெரிந்திருந்தாலும் 'பேதமை பெண்பது மாதர்க்கணிகலம்' என்பதுபோல ஒன்றுந் தெரியாதவள் போலிருத்தலும், அச்சம் என்பது அன்னியபுருஷர்களைத்தனியிடங்களில் அகஸ்மாத்தாகச் சந்திக்க நேருங்காலத்தில் தன் கற்புக்கு ஏதேனும் விக்கினம் நேருமோ வென்று அஞ்சுதலும், பயிர்ப்பு என்பது இதரபுருஷர்களுடைய சரீரம் தன்சரீரத்தில் அகஸ்மாத்தாக ஸ்பரிசித்தாலும் உடனே மனதில் ஒருவித மான விகற்பமும் அருவருப்புந் தோன்றி மயிர்க்கூச்சமெடுக்கப் பெறுதலுமாம். இவ்வித சுகுணங்களை இயற்கையாய்க் கைக்கொண்ட மனைவியே இல்லிடத்திருந்து நல்லறம் நடத்தத்தகுந்த பதிவிரதா சிரோரத்தினமாவாள். அவளுக்கே கணவன் மீது அநட்புமிகவும் பெருகும். அப்பேர்ப்பட்ட பெண்மணிக்குச் சர்க்கரைப்பந்தலில் தேன்மாரி பொழிந்தது என்பதுபோல நற்குண நற்செய்கைகளமையுமானால் அதுவே கணவனுக்குத் தேடக்கிடைக்காத சிறந்தபாக்கிய மாகும். அவளுக்கே இகத்தில் இன்பமும், பரத்தில் மோக்ஷமுங் கிடைக்கும். ஆகையால் நற்குண நற்செய்கைகளமைந்த மகடூக்குணங்களை

யும் ஆபரணமாகப் பூண்டொழுக வேண்டிய மனைவியானவள் குடும்பத்தை வகித்து நடத்தவேண்டி. பார்யாலக்ஷணம் என்ற விதிகளில் அத்யாவசியமாகப் பெண்கள் கவனித்துப் பின்பற்றியொழுகவேண்டிய முக்கியமான விஷயங்களைப்பற்றி அடுத்த பத்திரிகையிலெழுதுவோம்.

வே. முத்தனுசாரி.

---

## செடி.

---

செடியாவது என்ன? சதாகாலமும் நீங்களெல்லோரும் செடிகளையோ, மரங்களையோ, புல் பயிருகளையோ பார்த்துக்கொண்டுதானிருக்கிறீர்கள். ஆகையால் இதுஒரு பிரமாதமான கேள்வியா? யாருக்குத்தான் தெரியாதென்று நீங்கள் நினைப்பீர்கள். ஆனால் இதைவிடக் கடினமானகேள்வி கிடையாதென்று நான் உறுதியாய் சொல்லுவேன். நீங்கள் செடிபோன்ற இயற்கைப்பொருள்களை எவ்வாறு தெரிந்துகொள்ளவேண்டுமோ அவ்வாறு தெரிந்துகொள்ளப் பழக்கப்படாமலிருக்கிறீர்களென்று நான் நினைக்கக் காரணமிருக்கிறது. உங்களுக்கு ஒரு பொருளைக் கண்டால் அதைப்பற்றி பல விஷயங்களறிந்துகொள்ள ஆசை தானுகவே உதிக்கவேண்டும். இது நல்ல உபாத்தியாயர்களிடம் பயிற்சி பெறுவதாலேயே சாத்தியமாகும்.

நான் பல வருஷங்கள் உபாத்தியாயினியாயிருந்தேன். சிறுவர் சிறுமிகளுக்கு ஒரு பொருளைப் பார்க்கும்பொழுது அவர்களுக்கு அதைப்பற்றிப் பல விஷயங்கள் அறியவேண்டியிருக்கிறதென்பது தெரியாமல் சகலமும் தெரிந்துவிட்டது என்ற எண்ணம் மேலிட்டிருக்கிறதென்பது என் அனுபவம். நான் ஒருசமயம் என் சினேகிதி தலைமை உபாத்தியாயினியாயிருக்கும் பள்ளிக்கூடத்துக்குச் சென்றிருந்தபோது நாலாவதுவகுப்புப்பெண்களை செடியாவது என்ன? என்ற கேள்வியைக்கேட்டேன். ஒரு பெண் எழுந்திருந்து 'செடியாவது உயிருள்ளபொருள்' என்றாள்.

"ஆனால் பூனை உயிருள்ளதல்லவா? அது செடியாகமாட்டாதே. நீ சொல்வது மிருகங்களுக்கும் மூலவர்க்கங்களுக்கும் பொதுவானதால் அது சம்பூர்ணமான விடையன்று" என்றேன்.





மற்றொருபெண் எழுந்திருந்து, "செடியானது ஒரே இடத்தில் நிலையாயிருந்து வளரும் உயிருள்ளவஸ்து" என்றாள். சில ஜெந்துக்கள் அசைவற்றனவாகவும், சில மூலவர்க்கங்கள் அசைவுள்ளனவாகவும் இருத்தலால் இவ்விடையும் சம்பூர்ணமான மறுமொழியல்லவென்றேன். பிறகு வேறொருபெண் எழுந்திருந்து செடி என்பது.

"(1) ஓர் விருக்ஷம் (2) ஓர் வகைக்கீரை (3) ஓர் வகைப்புல் (4) வேறுள்ளபூண்டு (5) கிளைகளும் இலைகளுமுள்ளது" என்றாள். இம்மாதிரி சிறுபெண்கள் யோஜிக்காமல் விடைகள் சொல்லுகிறார்கள் இவைகள் ஒன்றுவது சரியானவிடையல்ல. இவர்கள் செடி இன்னதெனத் தெளிவாகச் சொல்லாமல் மூலவர்க்கங்கள் உயிருள்ளன என்பதற்குத்திருஷ்டாந்தங்களையெடுத்துரைத்தார்கள். ஆனால் விடையானது மூலவர்க்கங்களுக்குரியவற்றை மாத்திரமே தெரிவிப்பதுமல்லாமல் பலவகைச் செடி கொடிவர்க்கங்களுக்கும் பொருத்தமாயிருக்கவேண்டும். ஓங்கியுயரும் சண்பகமரம், அடர்ந்துபடரும் செடிகள், வேரூன்றிவளரும் கிழங்குவகைகள், நீரில் தழைக்கும் செடிகொடிகள் எல்லாம் இவ்விடைக்குள் அடங்கியிருக்கவேண்டும். மூன்று பெண்களின் விடைகளும் சம்பூர்ணமானவையல்லவென்று விளங்குகிறதல்லவா? செடி உயிருள்ள வஸ்துவாயினும் மிருகங்களைப்போல் உணர்ச்சியின்றியும், இடம் பெயருந் தன்மையின்றியும் ஒரே இடத்தில் வேரூன்றிவளரும் தன்மையுடையது. செடியைக்குறித்த விஷயங்களைப் பிள்ளைகள் மனதில் பதியும்படி உபாத்தியாயர்கள் அவர்களைப் பலகேள்விகள் கேட்டு விடைகளின் குறைகளை அவர்களுக்கு எடுத்துக்காட்டித் திருத்தமும் சம்பூர்ணமுமான விடையை அவர்கள் வாய்கொண்டே வரவழைக்கவேண்டும். பெண்களுக்குச் செடிகளைப்பற்றிப் பாடம் சொல்லும் பொழுது செடியை நேரில்வைத்து காட்டவேண்டும்.

ஜீவராசிகளுக்கு அங்கங்களிருப்பதுபோலவே செடிகளுக்கு அங்கங்களிருக்கின்றன. வேர், நடுத்தண்டு, கிளைகள், முதலியன செடியின் முக்கிய அங்கங்களாகும். இலை, பூ, காய், பழம், வித்து இவைகள் செடியின் பலன்களாகும். ஒரு தோட்டத்திலாவது பாதையிலாவது செல்லும் பொழுது நானுவிதமான செடிகள் நமது கண்களுக்குப் புலப்படுகின்றன வல்லவா? செடிகள்

ஒன்றுக்கொன்று வித்தியாசப்படுகின்றன. அதாவது பெரிய மரமும் சிறியகுறுத்தும் அடியில் வித்தியாசப்படுவதையும், படர்கின்ற பற்பலகொடியும் இலைகள் நிறைந்த கீரைச் செடியும் மெல்லியபுல்லும் ஆகிய இவை முதலானவை ஒன்றுக் கொன்று வித்தியாசப்படுவதையும் நாம் நன்றாய்ப் பார்க்கிறோம். இப்படிச் செடிகள் ஒன்றுக்கொன்று பலவிதமாக வேறுபட்டிருந்தபோதிலும் அவைகளுக்கு வேர், நடுத்தண்டு, கிளைகள், ஆகிய இம் மூன்று அங்கங்களும் பொது. செடிகள் வளர்வதற்கு வேண்டிய அங்கங்கள் இவைகளே. மேலும் ஒவ்வொருபாகமும் செடிகளின் வளர்ச்சிக்கு முக்கிய ஆதாரமாயிருக்கின்றது. நம்மைப்போலவே செடிகளும் உயிருள்ள வஸ்துக்கள். நமது தேகம் சுகமாகவும் பலமாகவும் வளர்வதற்கு நமது இருதயம், சுவாசாசயம், குடல் ஆகிய இவைகளெல்லாம் எப்படி முக்கியமோ, அப்படியே செடிகள் வளர்வதற்கும் அவைகளினுடைய வேர், நடுத்தண்டு, கிளைகள் இன்றியமையாதன. அவைகள் தாம் செடியினுடைய அங்கங்கள். அங்கங்கள் என்றால் உறுப்புகள். செடியினுடைய அங்கங்கள் தங்கள் வேலைகளைச் சரியாய்ச்செய்து கொண்டிருக்கும் பொழுது செடி பசுமையாகவும் சுகமாகவும் இருக்கின்றது. அந்த அங்கங்களின் வேலைகள் கொஞ்சம் தடைப்பட்டால் செடியானது உலர்ந்து பட்டுப்போய் விடுகிறது. அநேகமாய் பூமிக்குள்ளிருக்கப் பட்ட செடியின்பாகமே வேர்என்று சொல்லப்படுவது. அதுகீழ் முகமாக வளர்ந்து பூமி மட்டத்தின் கீழேபரவி பூமியிலிருந்து சாரத்தையிழுக்கிறது. அநேகமாகச் செடிகளை ஒரே இடத்தில் நிலை நிறுத்த அது உபயோகமுள்ளதா யிருக்கிறது. வேரிலிருந்து மேலே வளருகிற நடுபாகம் தண்டு; அது சிறிதுகாலம் பசுமையுள்ளதாகவும், மிருதுவாகவும் ரசத் தோடுகூடினதாகவுமிருந்த பின்பு கடினமாகவும் ஒரு விதமான நீல நிறத்தையுடையதாக மாறி விடுகிறது. மரத்தினது தண்டை அடிமரம் என்றும் சொல்வார்கள். தண்டிலிருந்து எல்லாப்பக்கத்திலும் கிளைகள் பிரிவதுண்டு. இந்த அடிமரங்களின் மூலமாய் வேரிலிருந்து சாரங்கள் மேல் பாகத்திற்குச் செல்கின்றன. இலைகள் அடிமரத்திலும் அதின் கிளைகளிலும் துளிர்க்கின்றன. அவைகள் நாலாவிதமாகப் பசுமையான துளிர்களாயிருக்கும். அவைகள் உருவத்தில் ஒன்றுக்கொன்று எவ்வளவு வித்தியாசப்பட்டபோதிலும், அவைகள்





ஜீவிப்பது மாத்திரம் ஒரேவிதம் தான். அதாவது செடி உட்கொள்ளும் வாயுவினது சிறிது பாகத்தை நுட்பமான சிறு துவாரத்தின் மூலமாய் உட்கொண்டு வளர்வதாம்.

இவ்வாறு மரம்செடிகள் வளருவதற்கு வேர், அடிமரம், கிளைகள் ஆகிய இம்மூன்றும் வேண்டியவையாயிருக்கின்றன செடிகள் சிறிது வளர்ந்தபிறகு புஷ்பிக்க ஆரம்பிக்கின்றன. செடிகளுக்குத் தகுந்தாப்போல உருவத்திலும் அளவிலும், நிறத்திலும் வித்தியாசங்களுண்டு. அவைகள் நிரம்ப அழகாயிருப்பதனால் புஷ்பங்களுக்காகவே நாம்அநேகமாய் தெருத்திண்ணைக்குறடுகளிலும், பங்களாவிலும் செடிகளை நட்டு வளர்க்கிறோம். பழத்திற்காகவும், வித்துக்காகவும் கூட நாம் பலசெடிகளை நட்டுப்பயிராக்குவதுண்டு. நாம் இலந்தை, மா முதலாகிய இனிமையான கனிகளை மாத்திரமே பழமாக நினைக்கிறோம். ஆயினும் பயிறு, நெல், உளுந்து ஆகிய தானியங்களும் பழங்கள் தான். பழத்திலுள்ள வித்தானது புதிய செடியாக மாறும் சக்தியையுடையது. இதுதான் செடிகளினது வளர்ச்சிக்குரிய விநோதமான பாகம். செடிகள் வித்துக்களை கொடுக்கின்றன. அவ்வித்துக்கள் மறுபடி அதேவிதமான பல செடிகளை உண்டாக்குகின்றன.

செடிகள் வித்துக்களை அடக்கிக் கொண்டிருக்கின்றன; வித்துக்களிலிருந்து உற்பத்தியாகின்றன. விதைகள் ஜீவனற்றவை போல் காணப்படுகின்றன, சாரமில்லாதவை போல் விதைக்கப்படுகின்றன; பின்பு முளைக்கின்றன. விதைகள் பூமியில் வேரூன்றுகின்றன. நடுத்தண்டைமேலே அனுப்புகின்றன. செடிகளாகவளருகின்றன, சில சமயத்தில் நிரம்பநாள்வரையிலும், சில வருஷங்கள் வரையிலும் கூட இதேஸ்திதியிலிருக்கும். அப்பொழுது அதன் உயிருள்ள பாகமானது தன்னை இதரமான தீங்குகளினின்றும் காப்பாற்றுகிற மேல் ஓட்டுக்குள் அடைப்பட்டிருக்கிறது. அது பூமிக்குள் நடப்படுகிறவரையிலும் இதே நிலைமையில் பத்திரமாக இருக்கிறது.

வித்தானது எப்படி வளரும்? அதைக் கொஞ்சம் உஷ்ணமான பூமியில் விதைத்தால் அந்த பூமியிலிருக்கிற ஈரமானது அதற்குள் ஊறி அதைப்பெருக்கச் செய்து அதன்மேல் பாகத்தைப் பிளக்கச் செய்கிறது. பிறகு அது முளைக்க ஆரம்பிக்கிறது

இப்படி முளைக்கும் பொழுது ஒரு சிறுவேர் பூமிக்குள்ளேயும் ஒரு சிறு தண்டானது பூமிக்கு வெளியேயும் பிரிந்து எழுகின்றன அந்தவேரைக் கீழே இறங்கும் படியாகவும், தண்டைமேலே கிளம்பும்படியாகவும் செய்கிறது எது? இதை ஒருவரும் இது வரையிலும் கண்டுபிடிக்கவில்லை. ஒரு செடி வளரும் வழி மாத்திரம் இது தானென்று நமக்குத்தெரியும். வித்திலிருந்து பூமிக்குள்போவதை வேரென்றும், ஆகாயத்தை நோக்கி மேல்முகமாய் வளருவதைத் தண்டு என்றும் சொல்லுகிறோம். அதிலிருந்து ஒரு செடி உண்டாகிறது. அவ்வித்துக்கள் நன்றாக வேரூன்றி பிறகு கொழுந்து விட்டுச் சிறிது சிறிதாய் வளர்ந்து பெரிய மரங்களாகி விடுகின்றன இவ்வாறு பிரம்மாண்டமான அடிமரமும் விசாலமாகப் பரவிய கிளைகளும், பசுமையான இலைகளும், புஷ்பங்களும், வித்துக்களும் இந்த ஓர்வித்திலிருந்து உண்டாகின்றன. நாம் தானியங்களை விதைக்கிறோம். உடனே பசுமையான பயிர்கள் காணப்படுகின்றன. பின்பு சிறிய தாள்களின் மீது தானியக்கதிர்கள் உண்டாகின்றன. இக்கதிர்களிலிருக்கும் தானியங்களே நாம் விதைத்த வித்தைப் போன்றவையாம். இவ்வித்துக்களும் ஒரு காலத்தில் செடிகளின விதைகளாக இருந்தவையே. செடிகள் முதலில் வித்துக்களின் மூலமாக முளைத்து, வளர்ந்து அவ்வித்துக்களை கொடுத்து அழிந்து போகின்றன. செடியின் ஓர் கிளையை இலைகளோடு துண்டித்து அதின் அடிபாகத்தை பூமியில் நட்டால் பூமிக்கு கீழுள்ளபாகம் வேராகமாறி மேற்பாகம் செடியாக வளரும். இவ்விதமாக அநேக செடிகள் நட்டுப்பயிராக்கப்படுகின்றன.

அநேகம் செடிகள் தரையோடு தரையாக இருப்பதால் அவைகளின் இலைகள் நிலத்தில் புதைந்து வேரூன்றிப் புதியமரங்களாய் வளர்ந்து விடுகின்றன. இதைப்பல தோட்டங்களிலும் பார்க்கலாம். மழைகாலத்திலாவது அல்லது வசந்தகாலத்திலாவது ஒரு செடியை அல்லது ஒரு மரத்தை பார்ப்பீர்களேயானால் இலைகளே இல்லாமல் காணப்படும். உஷ்ணகாலம் வரும் பொழுது கொஞ்சம் கொஞ்சமாய் அடித்தண்டிலும் கிளைகளிலும் துளிர்கள் காணப்படும். இவ்வுலகில் இதைவிட ஆச்சரியம் வேறு என்ன இருக்கிறது? ஆயினும் நம்மைச்சுற்றிக்காடுகளிலும், வயல்களிலும், தோட்டங்களிலும் கோடானு கோடியாய் முளைத்திருந்தபோதிலும் அவைகள் எப்படி உண்டாகின்றன என்பதைப்பற்றி இதில் நாம்





கவனம் செலுத்துவது கிடையாது. இயற்கை வஸ்துக்களில் கொஞ்சம் கவனம் செலுத்துவதினால் எவ்வளவு ஆச்சர்யமும், பயனும் உண்டாகும் என்பது நாம் எளிதில் தெரிந்து கொள்ளலாம்.

ஒரு உபாத்தியாயினி.

---

## ஸ்திரீ சிங்காரம்.

---

இவ்வுலகிலுள்ள ஜீவராசிகளிலும் வேறேயுள்ள சிருஷ்டிகளிலும்கடவுளின் மகிமையையும்ஆழ்ந்த அறிவையும் விளக்கச்சான்றாக நிற்பது மானிட சிருஷ்டியாம். "இயற்கை அழகே அழகு" "அழகுக்கு அழகு செய்வாரார்?" என்னும் ஆன்றோர் மொழிகள் நாம் மேற் கூறினதை உறுதிப்படுத்துகின்றன. என்ன தான் மனிதன் தன் புத்தி நுட்பத்தால் பூமலர் போன்று எழுதினாலும் செய்தாலும் இது இயற்கை நறுமணமலருக்குச் சமமாகிறதில்லை. என்ன வர்ணங்களைப் பலவகைப் பொருள்களைக்கூட்டிச் சிருஷ்டித்தாலும் இவைகளுக்கு வானவில்லில் நாம் காணும் பல வகை வர்ணங்களினுடைய சுத்தமும் கலப்பின்மையும் ஏற்படுகிறதில்லை. இவ்விஷயங்களை நாம் உற்று நோக்கி ஆழ்ந்து யோசிக்குமிடத்தில் நம் அறிவின் குறுகிய தன்மை வெளியாகிறது. இருந்தாலும் மனிதன் தனக்குள்ள அறிவை விருத்தி செய்து செயற்கைப் பொருள்களை இயற்கைப் பொருள்களைப் போலச் செய்ய முயன்று வருகிறான். இரண்டும் தாரதம்மியத்தில் ஒன்றைவிட மற்றொன்று சிறந்ததேயன்றி ஒவ்வொன்றுக்குமுள்ள அழகும், அந்தமும் பொருந்தியேயிருக்கிறது. இயற்கைப் பொருள்களையும் செயற்கைப் பொருள்களையும் அவைகளைச் சேர்க்கும் தன்மையறிந்து சேர்ப்போமானால் சேர்ந்த பொருள் மிக்க ரமணீயமாய் விளங்கும்.

நாகரீகம் மலியமலிய இயற்கைசெயற்கைப் பொருள்களைக் கூட்டி வைத்து ஆனந்தமடையும் சுபாவும் அதிகரிக்கிறது. மகா சிலாக்கியம் படைத்த சிருஷ்டியாகிய மனிதன் தன் அழகை விருத்தி செய்து கொள்ள சில செயற்கைப்பொருள்களை அணிந்து கொள்கிறான். சிலர் துணிகளாலும் நகைநட்டுகளாலும் அலங்க

ரித்துக் கொள்கிறார்கள். மனிதரிலும் அலங்கார விஷயத்தில் ஸ்திரீகள் அதிக கவனம் செலுத்துகிறவர்களாயிருக்கிறார்கள். பல தேசங்களில் பரவியிருக்கும் சிங்காரங்கள் பலவகையாயிருக்கின்றன.

சையாம் இராஜ்யத்தில் ஸ்திரீகள் பட்டுக்கச்சையை பூணூல் தரித்துக்கொள்ளும் மாதிரியாய்த்தரித்துக் கொள்கிறார்கள். ஸ்திரீகள் ஆடவர்கள் போல சராய் போட்டுக்கொள்கிறார்கள். பலவித மான வர்ண உடைகளில் தான் இவர்களுக்குப் பிரியமிருக்கிறது.

ஜப்பான் தேச ஸ்திரீகள் பட்டுக்கச்சையை இடுப்பில் கட்டிக் கொள்கிறார்கள்.

ஸ்பேயின் தேச ஸ்திரீகள் தலைப்பாகும் கையில் விசிறியும் தரிப்பது சிங்காரமென்று கருதியிருக்கிறார்கள்.

இத்தலி தேச ஸ்திரீகளில் இராணி முதல் பிச்சைக்காரி வரையில் பவழமாலை அணிந்து கொள்ளாதவர்களில்லை. இம்மாலை திருஷ்டி தோஷவிமோசனம் செய்யுமென்று நம்பப்படுகிறது.

பிரான்ஸ் தேசத்தின் ஒரு பாகமாகிய நார்மண்டியில் ஸ்திரீகள் சரிகைத் தொப்பி போட்டுக் கொள்கிறார்கள். அந்தஸ்துக் குத்தக்கபடி தொப்பிகளின் விலை உயர்ந்திருக்கிறது.

ரோமேனியா நாட்டு ஸ்திரீகள் தங்கள் தலைமயிரை நாலாய் பிரித்து ஜடைபோட்டுக் கொள்கிறார்கள். அவர்களின் ஆடைகள் வெள்ளி தங்கச் சரிகைகள் போட்டவை; பலவர்ண மானவை.

டர்க்கி தேசத்து ஸ்திரீகள் அந்தப்புரத்தில் பட்டுசராய் ஜிப்பா, சூல்லாய் முதலியவைகளைப் போட்டுக் கொண்டும் பல வித நகைகளை அணிந்து கொண்டுமிருக்கிறார்கள்.

ஆங்கில ஸ்திரீகள் காது குத்திக் கொண்டு குழைகள் போட்டுக் கொண்டாலும் மூக்கைக் குத்திக்கொள்வதுமில்லை. ஒன்றையும் அணிந்து கொள்வதுமில்லை. ஆனால் பெருவியா நாட்டு ஸ்திரீகள் எவ்வளவுக் கெவ்வளவு பெரியதும் கனமானது மான அணிகளைப் பூண்கிறார்களோ அவ்வளவுக் கவ்வளவு அலங்கார மென நினைக்கிறார்கள். இவ்விஷயத்தில் இவர்கள் இந்துக்கள் போன்றிருக்கிறார்கள்,





மேயோரி ஜாதியார் தங்கள் தேகமெல்லாம் பச்சைக் குத்திக்கொள்வது அழகானது என்று கருதுகிறார்கள்.

உலகத்திலுள்ள ஸ்திரீகள் அழகு செய்து கொள்வதில் பல்லை அவமதிக்கவில்லை. அராபி ஸ்திரீகள் பல்லுக்கு நீலவர்ணமும் சைன ஸ்திரீகள் கருப்பு வர்ணமும், ஜப்பானியப் பெண்கள் கல்யாணம் ஆகும் வரை மஞ்சள்வர்ணமும் பூசிக்கொள்கிறார்கள். ஜப்பானிய ஸ்திரீகள் கல்யாணம் முடிந்த பின் பல்லுக்குக்கருப்பு பூசிக்கொள்கிறார்கள். ஏனெனில் இப்படி அவலக்ஷணம் செய்து கொள்ளாவிட்டால் புருஷர்கள் பொறாமை கொள்வார்களாம். என்ன நோக்கம்!

மலே ஆர்ச்சிபிலகோவில் ஸ்திரீகள் பல்லை கூர்மை யாகும்படி ரம்பத்தால் ராவித்துளைபோட்டு தங்க வெள்ளிச் சுரைகள் போட்டுக் கொள்கிறார்கள்.

ஆப்பிரிக்காவில் ஸ்திரீகள் நகங்களுக்கு மஞ்சள், சிவப்பு வர்ணங்கள் கட்டிக்கொள்கிறார்கள் இந்திய ஸ்திரீகள் சிவப்பு வர்ணம் பூசிக்கொள்கிறார்கள்.

உலகம் பலவிதம் என்பதற்கு திருஷ்டாந்தம் வேறென்ன வேண்டும்?

கே. ராஜாம்பாள்.

## பெண்மதி போத வினாவிடை.

### முதலாவது அதிகாரம்.

வினா. 1. பெண்மதி போதமென்றால் என்ன?

விடை:—பெண்களின் அறிவு விளக்கத்தையும் அவர்களுக்குரிய கடமைகளையும் போதிக்கும் நூலாம்.

வினா. 2. பெண்களுக்குரிய கடமைகள் எவை?

விடை:—பெண்கள் வாலிபத்தில் தம் பெற்றோர் வீட்டிலும், கல்யாணமானபிறகு புருஷனிடத்திலும், புருஷனுக்குப் பிறகு சகோதரர்களிடத்திலும், நடந்துகொள்ள வேண்டியகாரியங்களே பெண்களுக்குரிய கடமைகளாம்.

வினா. 3. பெண்கள் படிக்க வேண்டுவது அவசியமா?

விடை:—ஆம். அவசியமே.

வினா. 4. பெண்கள் படிக்க வேண்டுவது அவசியமில்லை யென்று அநேகர் சொல்லுகிறார்களே. ஏன்?

விடை:—அறியாமையால் சொல்லுகிறார்கள். அவர்கள் ஆலோசித்துப் பார்த்தால் சொல்ல மாட்டார்கள்.

வினா. 5. ஆனால் பெண்கள் படிக்க வேண்டுவது அவசியம் என்பதற்கு காரணங்கள் எவை?

விடை:—அவர்களுக்கு புருஷர்களைப் போல் புத்தி நுட்பமும் விவேகமும், நினைத்தது முடிக்கும் திறமையும் கடவுளால் கொடுக்கப் பட்டிருப்பதால் அவர்களும் படித்து அறிவுடையோராக வேண்டுவது கடவுளுடைய சம்மத மென்றே நினைக்க வேண்டும்.

வினா. 6. நமது தேசத்தில் ஆங்கிலேயர் வந்த பிறகு தானே பெண்களும் படிக்கவேண்டு மென்று சொல்லுகிறார்கள். அதற்கு முன் பெண்களில் படித்தவர்கள் உண்டோ அதை தெரிவிக்க வேண்டும்.

விடை:—இல்லை. இல்லை. நமது பாதகண்டத்தில் படிப் பென்பது பெண்களின் குலதன மாகவே யிருந்தது. படிப்புக்கு அதிஷ்டான தேவதையே வாக்தேவி என்கிற சாரதாம் பாள். அவளைக் கலைமகள் என்றும் சரஸ்வதி தேவி யென்றும் நூல்கள் சொல்லுகின்றன.

வினா. 7. தேவதா ஸ்வரூபமான கலை மகள் படிப்புக்கு தேவதையானாலும், நம்து முன்னோர்களில் பெண்பாலர் படித்ததாக வேதங்களிலும், சாஸ்திர புராணங்களிலும், வழக்கத்திலும் ஆதாரங்கள் உண்டா? இருந்தால் அவை எவை?

விடை:—ஆம், உண்டு. பெண் பாலருக்கு வேதமோதும் அதிகாரமும் இருந்ததாக ஏற்படுகிறது. இருக்குவேதம் முதல் புஸ்தகம் வாக்கியம் ரோமாஷா வென்னும் மாதினால் வெளிவந்ததாக ஏற்படுகிறது. அதே முதலாவது புஸ்தகம் நூற்று எழுபத்து ஒன்பதாவது வாக்கியம் லோபா முத்திரை என்று ஸ்திரீ





யினால் எழுதப்பட்டது. அதிதி எனபவள் இந்திரனுக்குபிர்ம்ம ஞானத்தை உபதேசித்ததாகத்தெரிந்து கொள்ளலாம். மேலும் ரிஷிபத்தினிகள் பிரும்ம நிஷ்டர்களாக வனவாசம் செய்து கொண்டு வேத சாஸ்திர ஆராய்ச்சி யுள்ளவர்களாகவிருந்தார்கள்.

வினா. 8. அப்படி பிர்ம்ம நிஷ்டர்களாக விருந்த ரிஷிபத்தினிகள் யார்? தெரிய விளக்கவேண்டும்.

விடை:—விசுவ வரா—சாசுவதி—கார்கி—மைத்திரேயி—அபலா—கோஷா முதலான பிர்ம்ம வாதினிகளே. இவர்கள் உலக நடையிலிருந்து இல்லறதருமங்களை அனுஷ்டித்துக் காட்டியவர்களாயிருந்து கொண்டு தாமரை இலையில் தண்ணீர் ஒட்டாதது போல் இவர்கள் மனம் சிற்றின்பத்தை யொரு பொருளாக மதிக்காமல் பேரின்பத்தையே நாடியிருந்ததாகத் தெரியவருகிறது. வேதசிரசாகிய உபநிஷதங்களைப் பார்க்கும் போது கார்கி, மைத்திரேயி என்னும் பிர்ம்ம வாதினிகள் வேதக் களஞ்சியமாகிய யக்ஞவல்கிய மஹாமுனியுடன் தத்துவ விசாரணையின் பொருட்டு அநேக ஸம்வாதங்கள் செய்ததாக ஏற்படுகிறது.

வினா. 9. ஆதிகாலத்தில் ரிஷிபத்தினிமார்கள் படித்ததாகச் சொல்வதை ஒப்புக் கொண்டாலும் அவர்கள் காலத்துக்குப் பிறகு யாராவது பெண் மணிகள் படித்து ஞானிகளானதாக ஏற்படுகிறதா?

விடை:—ஆம். படித்து ஞானிகளானதாக ஏற்படுகிறது. துஷ்யந்தமகா ராஜாவின் பத்தினி ஸாகுந்தலை, ஸ்ரீராமசந்திர மூர்த்தியின் பாரியை சீதாதேவி, நளமஹாராஜாவின் பத்தினி தமயந்தி, பஞ்சபாண்டவர்கள் மனைவி துரோபதை, அப்போதப்போது நமது பாதகண்டத்தை அரசாண்ட மன்னரின் பாரியைகளும், பிர்ம்ம க்ஷத்திரிய வைசிய சூத்திரவம்சத்துப் பெண்களும் படித்து வந்ததாக பூர்வ சரித்திரங்களால் ஏற்படுகிறது. மேலும் நமது தேசத்தில் மேதாசாரியரென்று கீர்த்திபெற்ற ஆதி ஸ்ரீசங்கர பகவத்பாதாசாரியார் அவர்களும் மண்டன மிசரர் என்ற வித்வானும் சாஸ்திரவாதம் செய்தபோது, மண்டனமிச்ரரின் பாரியாளான உபயபாரதி

தேவி என்பவள் மத்தியவிருத்தியாக இருந்தன ளென்று சங்கரவிஜய மென்னும் கிரந்தத்தினால் விளங்குகின்றது.

**விஞ.** 10. நமது தமிழ் நாட்டில் பெண்கள் படித்ததாக ஆதாரம் ஏற்படுகிறதா?

**விடை:**—ஆம் ஏற்படுகிறது. நமது பாட்டியாரும் தவப்பெண்ணு மாகிய ஔவையார் தமிழ் உலகுக்கு ஓர் ஞான சூரியனல்லவா? அவர் நமது குலதெய்வமல்லவா? அவர் நீதி மொழிகளை நினைக்காத நாட்களுண்டா?

கே. விசாலாக்ஷி.

காட்டர் ஹவுஸ்,
எழும்பூர். (இன்னும் வரும்)

---

## குழந்தைகளுக்குப் பாலுணவு.

### செயற்கை ஆகாரங்கள்.

---

இரண்டு மாதங்களுக்கு முன் இப்பத்திரிகையில் "குழந்தைகளுக்குப் பாலுணவு" என்ற விஷயமாய் ஒரு வியாஸமிருந்ததைப் பத்திரிகாபிமானிகள் படித்திருப்பார்கள். அதில் குழந்தைகளுக்கு மகா உத்தமமான உணவு தாய்ப்பாலென்றும் அதற்குச் சமானமாக எதையும் சொல்ல இயலாதென்றும், ஆயினும் அதற்கு குணத்தில் சமமாக இருக்கும்படி செயற்கை உணவுகள் செய்யப்பட்டு வருகின்றன வென்றும் சொல்லியிருந்தது. கடைகளில் விற்பனைக்குப் பல கம்பனிக்காரர்களால் அனேக செயற்கை ஆகாரங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. சில விலைசாசமாயும் சில விலையுயர்ந்துமிருக்கின்றன. விலையைக்கருதாமல் அதனதன் குணதோஷங்களைக் கவனித்து செயற்கை ஆகாரங்களை வாங்கி நாம் குழந்தைகளுக்குக் கொடுக்க வேண்டும். இதில் கவனக்குறைவு குழந்தைகளின் உயிருக்கு யமனாய் முடியும்.

குழந்தைகள், வாயிலூறும் உமிழ் ஜலத்தில் [Saliva] கஞ்சியை மால்டோ சாகச்செய்யும் சக்திவாய்ந்த பொருள் கிடையாது. ஆகையால் கஞ்சி சத்து மிகுதியுமுள்ள ஆகாரம் குழந்தைகளுக்குச் சற்றும் பொருந்தியதன்று. இவைகளை உட்கொள்ளும் குழந்தைகளுக்கு அதை ஜீரணிக்க சக்தியில்லாத காரணத்தால் ஜீரணப்பை வேலை கெட்டு தேக அசௌக்கியத்தைக்கொண்டு வந்து விடும்.

கடையிலகப்படும் கட்டிப்பாலும் (condensed milk) குழந்தைகளுக்கு உபயோகமானதல்ல. ஏனெனில்,





(1) பாலிலுள்ள ஆடையானது எடுத்துக் கொள்ளப்பட்ட பின் பாக்கியுள்ளதைக் கட்டிப் பாலாக்கி விலைக்கு அனுப்பி விடுகிறார்கள். ஆடை பாலுக்குள்ள சத்தாகையால் அது நீக்கப்பட்ட கட்டிப்பால் குழந்தைகளுக்குச் சற்றும் பயனிலது.

(2) இது ருசியாயிருக்கும் படி சர்க்கரை வெகு வாய்ச்சேர்க்கப்படுகிறது. சர்க்கரை குழந்தைகளுக்குக் கெடுதல்களை விளைக்கிறது.

கட்டிப்பால் பழையதுபடப்பட அதிலுள்ள 'கேசின்' என்னும்பொருள் ஜீரணிக்க முடியாத தன்மை யடைகிறதால் இப்பால் கொடுக்கப்படும் குழந்தைகள் அசௌக்கியப்பட்டு நோய்களுக்கிரையாய் மரண மடைகின்றன.

ஆனால் மெல்லின்ஸ், நெஸ்ஸில்ஸ், ஆலன் பரி, ஹார்லிக்ஸ் மால்டட் மில்க் இன்னும் சில செயற்கை ஆகாரங்களும் குழந்தைகளின் ஜீரணசக்தியைக் கவனித்து தாவரப் பொருள்கள் சேர்க்கப்பட்டு செய்யப்படுகின்றன. இவைகளிலெல்லாம் கோதுமை, பார்லி இவைகளின் சத்துக்களும் (extract) கரையும் தன்மை வாய்ந்த பாஸ்பேடிக்பொட்டேஷிக் உப்புகளும் இருக்கின்றன. இவைகளில் கஞ்சி கரும்புச்சர்க்கரை ஆகிய இரண்டுமில்லை. மேற்குறித்த பொருள்கள் பசும்பாலோடுசேரும்பொழுது குழந்தைகள் வெகு சுலபமாய் ஜீரணிக்கத்தக்க சிரேஷ்டமான ஆகாரமாகிறது. குணத்தில் இப்படி பல பொருள்கள் சேர்ந்த செயற்கை ஆகாரம் முலைப்பாலுக்கு ஏறக்குறைய சமானமானதாய் விடுகிறது. இவ்வாகாரங்கள் சுலபமாய் ஜீரணமாவதாலும், இதில் தேக போஷணைக்கும் வளர்ச்சிக்கும் அவசியமான வஸ்துக்களிருக்கிற படியாலும், இவைகளைக் கொடுக்கப்படும் குழந்தைகள் ஆரோக்கியமாய் வளர்கின்றன.

மெல்லின்ஸ் ஆகாரத்திலுள்ள பொருள்களையெல்லாம் பிரித்துபபார்த்தால் அவைகளின் அளவும் நிறையும் அடியில் கண்டவாறிருக்கிறது: 100 அவுன்ஸ் அல்லது 100 கிரயின்ஸ் ஆகாரத்தில்,

| | |
|---|---|
| ஜலம் ... ... ... | 85. 34 |
| கார்போஹைட்ரேட் ... ... | 6. 95 |
| கொழுப்பு ... ... ... | 2. 54 |
| ஆல்புமினேஸ் ... ... ... | 4. 45 |
| உப்புக்கள் ... ... ... | 6. 72 |

இருக்கின்றன.

செயற்கை ஆகாரங்கள் எல்லாம் மேற்குறித்த அளவு நிறைப்படி பொருள்கள் சேர்க்கப்பட்டாலும் சிலவற்றின் குணங்கள் மற்றவற்றை விட சிரேஷ்டமாயிருக்கின்றன. சில, சில குழந்தைகளுக்கு ஒத்துக்கொள்வது போல மற்றவை சிலகுழந்தைகளுக்கு ஒத்துக்கொள்வதில்லை. சில ஆகாரங்களைக்கொடுத்து குழந்தைகளின் தேகாரோக்கியத்தைக் கவனித்து சிரேஷ்டமானதைக்கண்டு அதை வாங்கி உபயோகிக்க வேண்டும். தற்காலம் ஹார்லிக்ஸ் மால்டட் மில்க் என்னும் செயற்கை ஆகாரம் பெரும்பாலும் எல்லோராலேயும் சிலாக்யமானதென்று மதிக்கப்பட்டிருக்கிறது.

R. கிருஷ்ணமூர்த்தி L.M. S.

# பொது வர்த்தமானம்.

சென்ற மே மாதத்தில் புரசைவாக்கத்திலும் எழும்பூரிலுமுள்ள ஜட்ஜ் ஸர். சங்கரன் நாயர் போன்ற பிரபுக்களுடைய உதவியினால் இந்த சம்ஸ்கிருத பெண்பாடசாலையொன்று புரசைவாக்கம் வெள்ளாளத் தெருவில் ஸ்தாபிக்கப்பட்டது. இப்பாடசாலையில் சுமார் 60 பெண்கள் வரையில் வாசிக்கின்றனர். இவர்களுள் ருதுவான பெண்களும் இருக்கிறார்கள் ஸ்ரீமதி கமலாம்பாள் என்னும் ஸ்திரீ ரத்னம் தலைமை உபாத்தியாயினியாய் அமர்ந்துள்ளார். இம்மாது திரிகண்ட சித்தாந்தத்தை ஸ்தாபித்த ஸ்ரீமான் வெங்கடேஸ்வர தீக்ஷதருடைய குமாரத்தியும் சாமவேத ஹார்மோனியம் ஸ்ரீமான் லக்ஷ்மண சிரௌதிகளுடைய பார்யையுமாவார். இந்தஅம்மாள் சாமவேதம், பகவத் கீதை, ஸ்மிருதி, இதிஹாசமுதலியவைகளில் பயிற்சியுடையவர். இவர் பிரதி வெள்ளிக்கிழமை சாயந்திரம் தம் கீழ் படிக்கும் எல்லாப் பெண்களையும் கங்காதீஸ்வரர் அம்பிகை சந்நிதானத்துக்கு அழைத்துப்போய் தோத்திரங்கள் பாடச் செய்கிறது மிகவும் சிலாக்கியமானதே. ஒவ்வொரு பெண்ணுக்கும் சப்தம், சியாமளா தண்டகம் முதலியதுகள் நன்றாய் தெரியும். ஸ்ரீமான் சிரௌதிகள் தம் பார்யைக்குக் கொடுத்த படிப்பினாலல்லவோ இந்த அம்மாள் ரத்னம் போல் விளங்கவும் அவரின் கீழ் இவ்வளவு பெண்கள் வாசிக்கவும் ஹேது உண்டாயிற்று. இம்மாது போல் எவ்வளவு பேர் முன் வந்தாலும், இப்பள்ளிக்கூடம் போல் எவ்வளவு ஸ்தாபிக்கப்பட்டாலும் அவ்வளவும் அவசியம் என்று சொல்வது வெறும் பேச்சன்று. இப்பள்ளிக்கூடத்தை ஸ்தாபிக்க உதவி செய்ய முன் வந்தவர்களுக்கு பகவான் தீர்க்காயுளையும் ஐஸ்வர்யத்தையும் அருள் புரிவாராக !

* * * *

நமது ராஜதானியின் கவர்னராய் வரப்போகும் பெண்ட்லாண்டு அவர்களது மனைவியார் மிகவும் தாராளசிந்தையும் சத்குணமும் நிறைந்த புண்யவதியாம். இவர் கலியாணம் செய்து கொள்ளாத கன்னிப்பருவ காலத்தில் "சிசு ரஞ்சனி" என்னும் பொருளுள்ள "சில்ட்ரன்ஸ் மகாஸைன்" என்னும் பத்திரிகையின் பத்திராசிரியராய் விளங்கினாராம். இவர் நமது ராஜதானிக்கு வருவது நமது பெண்பாலர்களின் பாக்கியமன்றோ ?

* * * *

பெண்களுக்குப் போதிக்க ஸ்திரீகளே உபாத்தினிகளாக நியமிக்கப் படவேண்டுமென்றும் பெண் கல்விக்காகக் கவர்ன்மெண்டாரால் கொடுக்கப்பட்டிருக்கும் தொகையைவிட இன்னும் ஜாஸ்தி வேண்டுமென்றும் 'இந்தியன் மிற்றர்' பத்திரிகைகூறுகிறது.-

* * * *

புண்ணிய க்ஷேத்திரமாகிய ஸ்ரீ காசியில் ஷேக் நிஹார்ஹுசேயின் என்ற ஒரு மகம்மதியஜமீன்தார் 11 வயதுள்ள தம் பௌத்திரி கண் வியாதி





யால் வருந்துகிறாளென்று வீகரா கோஷா மிஷன் ஆஸ்பத்திரிக்கு அக்குழந்தையின் தாயாராகிய தம் மகளுடன் சிகிச்சைக்காக அனுப்பினார். சில நாட்களுக்கெல்லாம் மகளிடமிருந்து ஒரு கடிதம் வந்தது. அதில் "மிஷன் ஆஸ்பத்திரி மிஸ்கிரே என்பவளும், மற்றஸ்திரிகளும் பெண்ணை கிரிஸ்தவமார்க்கத்தில் இழுத்துவிட முயன்றிருக்கிறார்கள்" என்றிருந்தது. இச்சமாசாரம் கேட்டவுடன் ஜமீன்தார் ஆஸ்பத்திரியினின்றும் பெண்ணையும் பௌத்திரியையும் கூட்டிக்கொண்டு போகவந்தார். அப்பெண் தாயாருடன் வெளியே வந்தவுடன் மிஸ் கிரேயும் மற்றுமுள்ள ஸ்திரீகளும் பெண்ணின் தாயாரின் மேல் விழுந்து பெண்ணை உள்ளே இழுத்துக்கொண்டு தாயாரை தூத்திவிட்டார்களாம். இவ்விஷயமாய் பிரியாது செய்தார்கள். காசி ஜில்லா மாஜிஸ்டரேட் சரியானபடி விசாரணைக்கு ஏற்பாடுகள் செய்யாமல் மிஸ் கிரேயுடன் கடிதப்போக்கு வரத்துசெய்துகொண்டு வருவதாகவும் விசாரணையை காலதாமதப் படுத்துவதாகவும் ஜமீன்தார் இவரிடத்தில் நியாயம் கிடைப்பது துர்லபமென்று கேஸை அக்கோர்ட்டிலிருந்து மாற்றவேண்டுமென்றும் அலகாபாத் ஹைகோர்ட்டில் மனுசெய்துகொண்டிருக்கிறார்.

* * * *

பெங்களூரில் ப்ரொபசர் பரசுராமராவ் அவர்களின் சர்க்கஸ் கம்பெனியில் ஒரு இந்தியமாது புரொபசர் இராம மூர்த்திநாயடுவைப் போன்று ஓர் யானையைத் தமதுமார்ப்பின்மீது நடக்கச்செய்கின்றராம்.

* * * *

குண்டூர் டிஸ்டிரிக்ட் கோர்ட்வக்கீல் மிஸ்டர் கோண்டா வெங்கடப்பய்யா பந்துலு அவர்கள் வேட்டபாலத்தில் ஒரு ஸ்திரீசங்கம் அல்லது 'சாரதாநிகேதனம்' ஸ்தாபித்து அதற்கு வசதிகட்டு கிறதற்கு சில ஏகரா காலி நிலங்களை கொடுத்து உதவிசெய்திருக்கிறார் இந்த ஸ்திரீ சங்கத்துக்கு முன காலஜமீன் ராவ் பஹதூர் ஸ்ரீநாயனி வெங்கட ரங்கராவ் அவர்கள் ஸ்திரீகள் முன்னேற்றத்தில் மிக அனுதாபம் காட்டி ரூ. 5000 கொடுத்து உதவி செய்வதாக வாக்களித்திருக்கிறார். நம் சென்னையில் சில ஸ்திரீசங்கங்கள் ஸ்திரீகள் மானேஜ் மெண்டுக் குட்பட்டுமிக உபயோககரமான வேலைகள் செய்து வருகின்றன. இவைகள் போதிய பண்டில்லாமல் தவிக்கின்றன. தாராள சிந்தையுடைய பிரபுக்களும் ஜமீன்தார்களும் தவிக்கிறஸ்திரீ சங்கங்களுக்கு உதவி புரிய முன் வந்தால்பெரும் புண்ணியத்தைக் கட்டிக் கொள்வார்கள்.

* * * *

நமது காருண்ய கவர்ன்மெண்டார் படிப்பினாலன்றி மற்ற எவ்வழியினாலும் இந்தியாசீக்கிரம் முன்னுக்கு வராதென்பதை உணர்ந்து புதிதாக 108 கீழ்த்தரஸ்கூல்களை காலதாமதமின்றி இவ்வருஷத்திலேயே ஸ்தாபிக்கும்படி

41 முனிசிபாலிடிகளுக்கு உத்தரவு செய்திருக்கிறார்கள். இவ்வளவுக்கும் மொத்தத்தில் ரூ. 29,962 கொடுக்கப்படுமென்றும் தெரிவித்திருக்கிறார்கள். இவ்வருஷத்திலே அந்தந்த முனிசிபாலிடிகளில் ஸ்கூல்கள் ஸ்தாபிக்குப்படுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

* * * *

பட்டியாலா மகாராஜாஅவர்கள்பிரிட்டிஷ் துரைத்தனத்தார் போலவே செங்கோல் செலுத்தி வருகின்றனர். இவர் பாலிய விவாகத்தில் மிக்க வெறுப்புற்றவர். மேனாட்டாரைப்போல் ஸ்திரீகளுக்கு ஸ்வதந்தரம் கொடுக்கப்பிரியப்படுகிறவராம். ஸ்திரீகளுக்கிணங்கி அவரது கணவர்கள் நடக்காவிட்டால் வேறு புருஷரை மணந்து கொள்ளும்படி ஸ்திரீகளுக்கு ஸ்வதந்திரம்கொடுக்கப் பிரியப்படுகிறாராம்.

* * * *

திருநெல்வேலி ஜில்லா சால்ட் இன்ஸ்பெக்டர் மிஸ்டர் மாதவ அய்யாவின் குமாரத்தியான சௌபாக்கியவதி விசாலாக்ஷிக்கும், மிஸ்டர் ஜஸ்டிஸ் டி. சதாசிவ அய்யரின் குமாரரான மிஸ்டர் டி. எஸ். விஸ்வநாதனுக்கும், மேமாதம் 10-ந் தேதி திருநெல்வேலியில் விவாகம் நடந்தது. இவர்களுள் மிஸ்டர் மாதவய்யர் வடம வகுப்பைச் சேர்ந்தவர் மிஸ்டர் ஜஸ்டிஸ் சதாசிவ அய்யரோ ப்ரஹசரண வகுப்பைச் சேர்ந்தவர். இப்படி விவாகம் நடப்பது பிராமணர்களுள் புதிது. இது சாஸ்திர விரோதமல்ல. ஆகையால், ஜஸ்டிஸ் சதாசிவ அய்யர் செய்த இந்த விவாகத்தில் பிராமண புரோகிதர்களுக்கு ஆட்சேபம் ஒன்று மில்லாமலிருந்ததாம்.

* * * *

மிஸ்டர் இராமையா என்பவர் மறுமணஞ் செய்து கொண்ட ஒரு விதவைக்குக் குமுதமென்றொரு பெண்பிறந்தது. அது வளர்ந்து, எட்டாவது வகுப்பில் படிக்கிறதாம். இப்பெண்ணுக்கும் எப். ஏ. பரீக்ஷையிற்றேறிய மிஸ்டர் சென்னப்ப என்பவருக்கும் ராஜமகேந்திரபுரத்தில் கல்யாணம் நிறைவேறியது.

* * * *

இந்தியாவைச் சார்ந்த டார்ஜிலிங் முனிசிபாலிடியில் கமிஷனராக ஓர் பெண்பாலிருக்கின்றனர். அவர் பண்டித விவாத சாஸ்திரியின் குமாரத்தியும் ஹெம்லால சர்க்காரின் மனைவியுமாவார். அவர் உத்தியோகத்தில் அமர்ந்தது முதல் அந்தமுனிசிபாலிட்டியின் திருத்தமும் விருத்தியும் ஜாஸ்தியாய். பெண் கல்வியல்லவோ இவ்வளவ உயர்ந்த பதவியடையச் செய்தது?



# பெண் கல்வி.

சித்திர சகிதமான ஒரு மாதாந்த சஞ்சிகை.

கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்.—திருக்குறள்

தொகுதி 1.] 1912ஹு ஜூலைமீ [பகுதி 10

## இந்து ஸ்திரீரத்தினங்கள் நெ. 2.

### ராணி சம்யுக்தா.

இந்தியாவில் பலநூற்றாண்டுகளுக்கு முன் இரஜபுத்ர அரசர்கள் பல இராஜ்யங்களை ஆண்டுவந்தார்கள். அக்காலத்தில் டெல்லியில் அனங்கபால் என்ற அரசன் நீதிசெலுத்திவந்தான். அனங்கபால் தன் புத்திரிகளிலிருவரை ஆஜ்மீர் கானோஜ் இந்த இராஜ்யங்களில் ஆண்டுவந்த அரசர்களுக்குவிவாகம் செய்துகொடுத்திருந்தான். இவன் இப்படிச் செய்தது பகைவர்கள் தன்னுடை வந்து தாக்காமலிருக்கும் படியும், அப்படித்தாக்கினால்தனக்குத் துணையாயிரு அரசர்களிருக்கும் படியுமே. அனங்கபாலுக்கு ஒரே ஒரு புத்திரனிருந்தான். இவன் இறந்து போனபடியால் தனக்குப்பிறகு தன் சிம்மாசனத்துக்கு யாரை நியமிப்பதென்று அனங்கபால் யோஜித்தான். தன் பெண்வயிற்றுப் பேரன்மார்கள் ஜயசிந்து, பிரித்விராய் என்றிருவர்களிருந்தார்கள். பிரித்விராய் கானோஜ் அரசன் மகன். இவன் பேரில் தான் அனங்கபாலுக்குப் பிரியம். ஆகையால் அவனை தனக்குப்பின் பட்டத்துக்குவர ஏற்பாடு செய்தான். ஆகவே பிரித்விராய் கானோஜ், டெல்லி இருநகரங்களுக்கும் அரசனானான். இதைக்கண்டு ஜயசிந்து மிக்கப்பொறாமை கொண்டான். இத்துடனில்லாமல் தன் இராஜ்யத்திலும் டெல்லி முதலிய நகரங்களிலும் தான் தான் அரசனென்றும், பிரித்விராய் அரசனல்லவென்றும் பகிரங்கப் பிரசுரம் செய்வித்தான். மேலும் அஸ்வமேதயாகம் தான் செய்வதாகவும் அதற்கு விஜய

செய்யும்படி அரசர்களுக்கெல்லாம் பத்திரிகை விடுத்தனன். பிரித்விராயுக்கு எழுதின பத்திரிகையில் அவனை உடனே புறப்பட்டு வரும்படியாகவும், அவன் வாயில் காப்போனாயிருக்கும் படியும் எழுதினான். மேலும் அதேபத்திரிகையில் தன் புத்திரி சம்யுக்தைக்கு சுயம் வரம் நடக்கப்போகிறதென்றும் பிரசுரம் செய்தான். அனேகஅரசர்கள் சம்யுக்தையைக்காதலியாகக்கைப்பற்ற ஆசைகொண்டு குறித்தசுபதினத்தில் வந்து கூடினார்கள். பிரித்விராயிக்கு சம்யுக்தையின் சுந்தரத்தைப்பற்றி சமஸ்தான வித்வான் சந்து என்பவர் விரிவாய்ச் சொல்லியிருந்தார். பிரித்விராயுக்கு சம்யுக்தா மேல் காதலுதித்து விட்டது. எப்பொழுது அவளை மனைவியாகப் பெற பாக்கியமோ என்று ஏங்கிக்கொண்டிருந்தான்.

பிரித்விராய்சம்யுக்தாவைப்பற்றிச்சிந்தித்துச்சிந்தித்து கனவு கண்டு கொண்டிருக்கையில், அம்மாதிரியே சம்யுக்தாவும் பிரித்விராயின் வல்லமையையும் சௌந்தரியத்தையும் பலர்வாய் கேட்டு இவன் நினைவாகவே கால்நாழிகையை பல்நாழிகையாக மனவருத்தத்துடன் கழித்து வந்தாள். பிரித்விராயை குழந்தை முதல் எடுத்து வளர்த்து வந்த ஒருதாதிக் கிழவியொருவளிருந்தாள். இவளிடம் பிரித்விராய் தன் இஷ்டத்தைத் தெரிவிக்காமலிரான். தனக்கு சம்யுக்தா மேல் உண்டாயிருக்கும் காதலைத் தெரிவித்து அவளை அடைய மார்க்கத்தைக் கேட்டான். இவள் பிரித்விராயை தைரியப்படுத்திவிட்டு ஆஜ்மீருக்குச் சென்று அந்தப்புரத்தில் தாதியாக அமர்ந்து மெல்ல மெல்ல சம்யுக்தாவை யடைந்து அவளுக்கு பிரித்விராயின் படத்தைக்காட்டி காதலை மூட்டிவிட்டாள். இவள் சம்யுக்தாவுக்கு பிரித்விராய் மகம்த் கோரியையும் துலுக்கர்களையும் யுத்தத்தில் கொன்றதையும் ஜயபேரிகையடித்ததையும் அவன் செய்திருக்கிறவேறு தீரச்செயல்களையும் சொன்னாள். சம்யுக்தை இவனையன்றிநான் வேறொருவனை மணக்கமாட்டேனென்று சபதம் செய்தாள். எப்படியாவது தனக்கு அவனை மணம் செய்விக்கும்படி கிழவியை மிகவும் வருந்திக் கேட்டுக் கொண்டாள். தான் என்ன வேண்டுமென்றாலும் கொடுப்பதாகவும் சொன்னாள். கிழவி உத்திரவு பெற்றுக் கொண்டு டெல்லிக்குத்திரும்பினாள். அச்சமயம் பிரித்விராய் ஜயசந்திடமிருந்து வந்த பத்திரிகையைப் பார்த்துக் கொண்டிருந்தான். உண்மையான இராஜபுத்திர வீரனாகையால் இக்கடிதத்





தைக்கண்டதும் கண்களிலிருந்து இரத்தம் தெறித்தது. நெருப்பும் பொறி பறந்தது. தனக்கு ஜயசிந்து எவ்விதத்தில் மேலானவன்? அவன் எப்படி வாயல் காப்பவனாகவரும் படி எழுதலாம்? வாயல் காப்பவன் தாழ்ந்த குலத்தவனல்லவோ? இதைவிட மானபங்கம் என்ன வேண்டும்?- என்று நினைத்து மனதில் வருந்திக்கொண்டு மகா ஆக்கிரகத்துடனிருந்தான்.

அஸ்வமேதயாகம் நடந்தது. சுயம் வரத்துக்காக பலதேயத்தரசர்கள் வந்து கூடியிருந்தார்கள். ஒவ்வொரு வரும் சம்யுக்தை தனக்கு மாலையிடுவாளென்று நினைத்து மனதில் சந்தோஷப்பட்டுக் கொண்டிருந்தார்கள். அவரவர்களுக்கென்று நிருமித்தஸ்தானத்திலமர்ந்து சம்யுக்தையின் வரவை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். பிரித்விராய் மட்டும் வரவில்லை. ஜயசிந்து பொற்பதுமை யொன்று செய்வித்து அதை வாயலில் நிறுத்தி பிரித்விராய் என்றழைத்தான். வந்திருந்த அரசர்கள் ஜயசிந்தின் செய்கை நியாயமானதல்ல வென்றும், இத்தகைய செய்கை தண்டிக்கப்படாமல் போகாதென்றும் நினைத்தார்கள். அனேக அரசர்கள் சபையை அலங்கரித்திருந்தார்கள். சம்யுக்தை மலர்மாலையைக் கையிலேந்தி தாதிகளுடன் சுயம்வர மண்டபத்துக்கு வந்தாள். அவள் பிரவேசித்ததும் அரசர்கள் கண்கள் எல்லாம் அவள் பால் சென்றன. ஒவ்வொரு அரசனும் சம்யுக்தைதன்னை வரிப்பாளென்று நினைத்துத்திருப்தியுடனிருந்தான். சம்யுக்தை அரசர்களை யெல்லாம் குறிப்பாய்ப் பார்த்தாள் பிரித்விராஜனைக் காணோம். தன் தந்தை துவேஷகாரணமாக பிரித்விராஜன் போல் ஒருருவம் செய்து வாயலில் நிறுத்தி வைத்திருக்கும் விஷயம் அவள் அறிந்திருந்தாள். அவள் அரசர்களுக்கு மாலை சூட்டாது வாயல் நோக்கிச்சென்று பூமாலையை பிரித்விராஜனின் சிலைக்குச் சூட்டினாள். இவ்விஷயம் தெரிந்ததும் ராஜசபையில் ஒரு பெரிய குழப்பமுண்டாயிற்று. ஜயசந்து இந்தஅவமானத்தைப் பொறுக்கமுடியாதவனாய் துஷ்டையாகிய சம்யுக்தையைச் சிறையிலிடும்படிஉத்திரவு செய்தான். அரசர்கள் தங்கள் மனோராஜ்யமாகத்தங்கள் இராஜ்யம் திரும்பிச் சென்றார்கள். இதுவே இங்கே நடந்த கடைசிச்சுயம்வரம். நடந்த விருத்தாந்தங்களை கேள்விப்பட்ட பிரித்விராஜ் ஆனந்தமடைந்தான். பிரித்விராஜ் தன் மீது காதல் கொண்டுள்ள சம்யுக்தைக்கு நேர்ந்த கஷ்டத்தையும் ஜய

சந்து தனக்குச் செய்த அவமானத்தையும் கருதி, ஜயசந்து மீது படையெடுத்து வந்து பழிதீர்ப்பதென்று தீர்மானித்தான். சைந்நியத்துடன் கானோஜ் பட்டணத்தருகில் வந்து முகாம் போட்டான். ஓர் நாளிரவு பிரித்விராஜ் சம்யுக்தையை இரகசியமாய்ச் சந்தித்துகாந்தர்வவிவாகம்செய்து கொண்டான். இவ்விவாகவிஷயம் இரண்டொரு தாதிகளைத்தவிர்த்து இதரர்களுக்குத் தெரியாது. பிரித்வி படையெடுத்து வந்துள்ள செய்தியறிந்து ஜயசந்திரன் 3000 சேனையை அவர்களைமுறியடிக்க அனுப்புவித்தான் பிரித்விராஜ் சண்டை போட சித்தமாயிருந்தான். இருசேனைகளுக்கும் போர் நடந்தது. சிலருக்கு துவந்த யுத்தமும் நடந்தது இருவரும் சிங்கநாதம் செய்து கடும்போர்புரிந்தார்கள். குதிரைப்படைகளும் யானைப்படைகளும் மாண்டு போர்க்களத்தில் இரத்த வெள்ளம் ஓடிக்கொண்டிருந்தது. ககாகண்டீரன் ஜயசந்தின் சேனைத்தலைவன். இவன் பிரித்விராஜனின் சைந்நியத்தலைவன் அந்தாயின் தலைதுமித்து பிரித்விராஜாவின் தலையையும் துமிக்க முயல்கையில் அகஸ்மாத்தாய் ஒரு சௌரியவான் தோன்றிபிரித்விராஜன் மீது விழவிருக்கும் கட்கத்தைச் சிதறடித்து அவனைக்காப்பாற்றினான். இந்த வீரன் யாரென்று படிப்போர் ஐயமுறவேண்டாம். இப்படி தன்னுடைய தந்திரத்தால் பிரித்வி ராஜனைக்காப்பாற்றியது அவன்பத்னியும், ஜயசந்திரன் குமாரத்தியுமாகிய சம்புக்தையே.

(தொடரும்.)

---

## பார்யாலக்ஷணம்.

---

(9-வது சஞ்சிகையின் 10 வதுபக்கத்தின் தொடர்ச்சி)

விருத்தம்.

கல்லெனினுங் கணவனென்றும் புல்லெனினும்
புருடனென்றுங் கழறும் நீதிச்
சொல்வதுபோற் கொழுநனுந்தன்மனதினுக்
கொவ்வாதவனுய்த் தோன்றினும்





அல்லல்வினைக் காதுமகா வல்லகுல தெய்வமென்றே
யவனைப்போற்றி
யில்லறம் நடாத்துவதே மணங்கொண்ட மனையாளி
னியல்பாமம்மா.

என்று கூறப்பட்ட நியாயப்படி மனைவியானவள் அக்கினி முதலிய தேவதைகள் சாக்ஷியாக மணங்கொண்ட கணவன் மூடனாக இருந்தாலும், குரூபியாக இருந்தாலும், தரித்திரனாக இருந்தாலும், பாவியாக இருந்தாலும், பிணியாளனாக இருந்தாலும், விருத்தனாக இருந்தாலும், நல்லொழுக்கம் இல்லாதவனாக இருந்தாலும், நற்குணமில்லாதவனாக இருந்தாலும், இன்னும் அவன் எப்பேர்ப்பட்ட தாழ்மையுடையவனாக இருந்தாலும் அக்குறைகளை மதித்துத்தன்புறத்தாது கல்லென்றாலுங்கணவன் புல்லென்றாலும் புருடன் என்பது போல அவனையே குலதெய்வமாகப் பாவித்து எப்பொழுதும் பக்திபூர்வமாகப் பூஜித்து வரவேண்டும். ஏனென்றால் குல மகட்குத் தெய்வம் கொழுநனே யென்பது போல மனைவிக்குப் பர்த்தாவைத் தவிர வேறு தெய்வங்கிடையாதென்று பிரகத்பராசரஸ்மிருதி பிரமாணப்படுத்துகிறது.

தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யு மழை—குறள்

என்று நாயனார்திருவாக்கு ஏற்பட்டிருக்கின்றது. ஆதலால் தெய்வந்தொழுவதற்கு மனந்தெளிவது அவசியம். அப்படி மனந்தெளிவதானது காலையில் நித்திரை விட்டெழுந்திருக்கும் சமயத்தில் உண்டாகும். அப்படி மனந்தெளிந்த காலத்தில் வேறொரு தெய்வத்தையுந் தொழாமல் தன் தெய்வமாகிய பர்த்தாவையே தொழுதுகொண்டு நித்திரையிலிருந்து எழுந்திருப்பவள் பெய் என்று சொன்னால் பத்தினிவாக்குப் பலிக்காமற் போகாது என்பது போல மழை உடனே பெய்யுமேயன்றி வீண்போகாது. ஆகையால் கணவன் மீது உள்ளன்புள்ள உத்தமபத்தினிகளாகிய மனைவிகள் கணவனைத் தெய்வமாகப் பாவித்துப் பூஜித்து வரும் விரதத்தையே பிரதமத்தில் அனுஷ்டித்து வர வேண்டியது கடமையாகும். இந்த விரதத்தை யொருபோதுங் கைவிடலாகாது. அப்படி விடுவார்களானால் மற்ற பக்தியெல்லாம் வியர்த்தமாகப் போய்விடும்.

கார்யேஷு தாஸி—கரணேஷு மந்திரி
ரூபேஷு லக்ஷ்மி—க்ஷமயா தரித்ரி,
ஸ்நேஹேசமாதா—சயனேஷு ரம்பா
ஷட்கர்மயுக்தா—குலதர்மபத்நி.

அதாவது, மனைவியானவள் வீட்டுவேலையில் பணிப்பெண் போலவும், கார்யாலோசனையில் மந்திரியைப்போலவும், ரூபலாவண்யத்தில் மகாலக்ஷ்மியைப் போலவும், சிநேகத்தில் மாதாவைப் போலவும் சயனத்தில் வேசியைப் போலவும் கணவனுக்கு நடந்து கொள்பவளே குலஸ்திரீ யென்று நீதிசாஸ்திரம் பிரமாணப்படுத்துகின்றது. இன்னும்

பொற்பினிலே லக்ஷ்மிபோலிவ்வுலக முதலெங்கும்
புகழ்பேற் கொண்ட
கற்பினிலே யருந்ததிபோ லரியதிரு மணங்கொண்ட
கணவன் சொல்லுஞ்
சொற்படியே நடப்பதிலே வாசுகிபோற் செயலிந்து
துணைவன் சொல்லா
மற்பரிவாய் நடப்பதிற்சாவித்திரிபோ லொப்பாவாள்
மனைவிதானே.

அதாவது, இல்லறத்திற்கு அமைந்த மனைவியானவள் அழகில் இலக்ஷ்மிதேவியைப் போலவும், கற்பினில் வசிஷ்டமகரிஷியின் பத்தினியாகிய அருந்ததியைப் போலவும், கணவன் சொற்படி நடந்து கொள்வதில் திருவள்ளுவநாயனாருடைய மனைவியாகிய வாசுகியைப் போலவும், கணவனுக்கு நேரப்போகும் ஆபத்துக்களை ஏற்கனவே தெரிந்து அவன் கண்டு சொல்வதற்கு முன்னமேயே தான் ஜாக்கிரதையாயிருந்து விபத்துக்களை நீக்கமுயல்வதிற் சத்தியவான் பெண்ஜாதியாகிய சாவித்திரியைப்போலவும் இருக்கவேண்டுமென்ற ஞாயமிருப்பதாலும் கணவன் பிழைத்திருக்கும் பொழுதும் அவன் இறந்த பின்பும் அவனே தெய்வமென்று பத்தியுடன் பூஜிக்கும் உத்தமஸ்திரீகள் இன்னும் நடந்து கொள்ள வேண்டிய மற்று விதிகளாவன.

செல்வாக்குக் குடும்பமதிற் பிறந்தோமென் றுள்ளமதிற்
செருக்குக் கொண்டு
வல்வாக்காய்க் கணவனுடன் வாதாடி மாச்சரிய
வகைதேடாமற்





சொல்வாக்கு மதுரமுற இதம்பேசியவன் மகிழுஞ்
சூழ்ச்சி செய்து
நல்வாக்குப் பெறுபவளே யில்லறத்திற்
கிசைந்தொழுகும் நாரியாமே.

அதாவது, முனிக்குக் கேடு கோபம், ஸ்திரீக்குக் கேடுகர்வம் என்ற பழமொழிப்படி, மனைவியானவள் குபேரசம்பத்துடைய வீட்டில் பிறந்தவளானாலும் அதை யெண்ணிக்கர்வங்கொண்டு கணவனை மதியாமல் அலக்ஷியஞ் செய்து மனம் நோகும்படியான வார்த்தைப் பிரயோகங்களால் வாதாடி மனம் வெறுக்கச் செய்யாமல் இதமான வார்த்தைகளாலேயே அவனைச்சந்தோஷப்படுத்தி அவன் தன்னை நன்கு மதித்துப் பிரியங்கொள்ளும்படியாய்ச் செய்துகொள்ளவேண்டும். அன்றியும் இந்திரனுக்கு ஒப்பான போக பாக்கியங்களைப்படைத்த கணவனுக்கு வாழ்க்கைப்பட்டிருந்தாலும் ஒவ்வொரு காரியங்களையுஞ் செய்ய வேலைக்காரர்கள் இருக்கின்றார்களென்று கர்வித்துக்காரியம் பாராமற் சோம்பித்திரியாமல் தன் குடும்பகாரியத்தை வெகு ஜாக்கிரதையாகத்தானே பார்த்துக் கொள்ளக்கடமைப்பட்டவளாக இருப்பதால் மனைவியானவள் கணவனுக்கு முன் நித்திரை விட்டு எழுந்திருந்து தேகசுத்திசெய்து படுக்கை முதலியவைகளை யெடுத்துவைத்து விட்டு வீடு, கூடம், தேவாராதனையிடம் முதலியவைகளை நன்றாய்ப் பெருக்கிப் பசுஞ்சாணத்தால் மெழுகி மனதுக்கு ரம்மியமுண்டாகும்படியான பலவித கோலங்கள் தீட்டி நல்லகாற்றுக்காகவும், அழகுக்காகவும் புஷ்பங்களால் அலங்கரிக்க வேண்டும். சுத்தமுள்ள வீட்டில் துணையிருப்பாள் சீதேவியென்பது போல எந்த வீடானது மங்களகரமாய்ப் பெருக்கி மெழுகிக் கோலமிட்டு எப்பொழுதும் சுத்தமாகவும் அழகாகவும் இருக்கின்றதோ அந்த வீட்டில் இலக்ஷ்மிதேவியானவள் பூர்ணகளையோடு வாசஞ்செய்வாளென்று வியாசவசனம் பிரமாணபடுத்துவதால் ஸ்திரீகளுக்கு முக்கியமான சிந்தை வீட்டைப்பற்றியே யிருக்க வேண்டும். கர்வங்கொண்டு ஒழுங்கீனமாக நடப்பவள் சீக்கிரங்கெடுவாள் என்பதற்குத் தடையில்லை.

இவையன்றி ஜீவகாருண்யமானது மிகவும் விசேஷமானதால் ஒவ்வொருதினமும் அன்னம், தானியமுதலானவைகளை எல்லாப்பிராணிகளுக்கும் பகுத்துக் கொடுக்க வேண்டும். காலையிற்

கிளிமுதலானவைகட்குத் தானியம் போடுதல், மத்தியானத்திற் காக்கை முதலானவை கட்கு அன்னமிடுதல், இராத்திரியில் நாய் முதலானவை கட்கு அன்னம் போடுதல் முதலான பலியீதலினால் சிறந்த புண்யங்கிடைக்கும். அன்றியும் தேவார்ச்சனை செய்ய ஸ்திரீகளுக்கு அதிகாரமில்லாததினால் அவர்கள் தெய்வம் இருக்கும் அறையைப் பூஜிக்கவாவது அல்லது அந்த அறையில் சாயங்கால வேளையில் தீபமேற்றி நமஸ்கரிக்கவாவது வேண்டும்.

இஃதன்றிக் காலையில் வீடு சுத்தஞ்செய்து முடிந்தவுடன் ஏற்கனவே சமைத்த பாத்திரங்களை முற்றத்திற்கொண்டுவந்து பற்றுகள் நீங்க நன்றாய்த்தேய்த்து சுத்த ஜலத்தினாற் கழுவிச்சமையல் அறையில்வைக்கவேண்டும். மண்ணினால் அடுப்புகளை மெழுக வேண்டும். சமையல் அறைமுதலானவைகள் பார்வைக்கு ரமணீயமாயிருக்கும் படி வேண்டிய சுத்தஞ் செய்து கொள்ள வேண்டும் போஜனத்திற்கு வேண்டிய சகலபதார்த்தங்களையும் தயாரித்து அவைகளையும் சமையல் அறையில் எந்தெந்த இடத்தில் வைத்துக்கொள்ள வேண்டுமோ அந்தப்படி தயாராக வைத்துக்கொள்ள வேண்டும். அப்படிச்செய்து கொள்வது தான் கிரகஸ்தர்களுக்குச் சௌகரியமாகவும் மனோகரமாகவும் இருக்கும்.

வே. முத்தனாசாரி.
பழனிஸ்தலம்.

---

## பெண்மதி போத வினா விடை.

---

(9-வது சஞ்சிகையின் 20-வது பக்கத்தின் தொடர்ச்சி)

வினா. 11. ஆனால் படிப்பென்பது பெண்களுடைய சொத்தோ அல்லது புருஷர்களின் சொத்தோ?

விடை:—தீர்க்கமாய் ஆலோசிக்கும்போது பெண்களின்சொத்தென்றே நிச்சயமாய் சொல்லவேண்டும்.

வினா. 12. புருஷர்களுக்குள்ள சுவதந்திரம் பெண்களுக்கு இப்பரதகண்டத்தில் இருந்ததுண்டா?

விடை:—பெண்கள் புருஷர் நடத்தும் சர்வவித தேவகாரியங்களிலும், பிதுர்காரியங்களிலும், யோகக்ஷேமகாரியங்களிலும்





புருஷரைப்போல சுவதந்திரம் வகித்து அவர்களுடன் கலந்து அநேக காரியங்கள் செய்து வந்தார்கள்.

வினா:—13. இவ்வளவு சுவதந்திரம் பரதநாட்டுப்பெண்களுக்கு ஏற்பட்டிருக்க இக்காலத்து அநேகர் பெண்கள் படிப்பது அனாவசியமென்றும், அவர்களுக்கு யாதொரு சுவதந்திரம் கிடையாதென்றும், கொடுமைபாராட்டி, மிருகங்களைப்போல் நினைப்பதும், துர்ப்பாஷையாய்ப் பேசுவதும், அடிப்பதுமாக விருக்கிறார்களே! அதற்கு என்னகாரணம்? விளங்கச்சொல்ல வேண்டும்.

விடை:—ஆதிகாலத்தில் பரதகண்டம் ஆரியவம்சத்தவர்களாகிய நமது முன்னோர்களால் ஆளப்பட்டபோது பெண்களுக்கு அநேகசுவதந்திரங்களிருந்ததாகவும், பின்னிட்டு பரதகண்டத்தில்அரசுபுரிந்த டார்டார், மகம்மதியர் காலங்களில் அடிக்கடி கலகங்களும் பெண்களைச்சிறைகொள்ளுவதுமான கொடுமைகள் நடந்து வந்தமையால் பெண்கள் சுவதந்திரமாய் வெளியில் நடமாடுவதும், படிப்பு முதலிய புத்தித் தேர்ச்சிக்குரிய சாதகங்களைத் தேடிக்கொள்வதும் குறைந்துபோய் வீட்டிற்குள் புருஷர் காவலுக்கடங்கி பதுங்கியிருக்கும்படி நேரிட்டுவிட்டது. அப்போது நமது பூர்வ அனுஷ்டானங்கள் சோர்ந்துபோய், காலத்திற்கு தக்கவிதமாக அநேக துராசாரங்கள் விருத்தியடைந்து விட்டன.

வினா. 14. இப்போது ஆங்கிலேய துரைத்தனத்தில் நமக்கு யாதொரு பயமுமில்லாதபோது ஏன் நமது பூர்வாசாரங்களைத் திரும்பவும் நாம் அனுஷ்டிக்கக்கூடாது?

விடை:—திவ்யமாய் அனுஷ்டிக்கலாம். ஸ்திரீகளின் வித்தியாபிவிருத்தியின் பொருட்டு இராஜாங்கத்தில் விசேஷப்பொருள் செலவிட்டு வருகிறார்கள் பெண்கள் படித்து வித்தையில் தேறி உபாத்திமார்களாகலாம். பாடசாலைகளில் கீழ்ப்படிப்புக்குச் சம்பளம் குறைவாக வைத்திருப்பதுடன் ஏழைப் பெண்களைச் சம்பளமில்லாமல் சேர்த்துக்கொள்ளுகிறார்கள். மேலும், மேல் படிப்புக்குச் சம்பளமில்லாமல் சொல்லி வைப்பதுடன் படிப்பில் தேர்ச்சியும் அக்கரையும் கவனிப்பும் உள்ள பெண்களுக்கு உபகாரச் சம்பளம் கொடுக்கிறார்கள்.

கைம்பெண்களுக்கும் அவர்களுக்கு துணையாக விருந்துசமையல் முதலிய காரியங்களை கவனிப்பவர்களுக்கும் தகுந்த பொருளுதவி செய்து வருகிறார்கள். இந்த விஷயத்தை முக்கியமாய் கவனிக்க வேண்டியது.

வினா. 15. ஸ்திரீகள் புருஷர்களைப்போல வெளியில் சஞ்சரித்து காரியங்களைக் கவனிக்கவும், அதிகமாய் சரீர கஷ்டப்பட்டு வேலைகளைச் செய்யவும் யோக்கியர்களா, அல்லது வீட்டிலேயே இருந்து கொண்டு வீட்டுக்குரிய காரியங்களை கவனிக்கக் கூடியவர்களா?

விடை:—ஸ்திரீகள் பெரும்பான்மையும் முறட்டுத்தனமான வேலைகளுக்கு உபயோகப்பட்டவர்களல்ல. எப்போதும் புருஷர்களுடைய ஆதரவில் இருந்துகொண்டு வீட்டு வேலைகளைக் கவனிக்கத்தகுந்தவர்கள். மேலும் மக்களைப் பெற்று அவர்களைப் பாதுகாத்து விருத்திக்குக் கொண்டு வரக்கூடிய பொறுப்பு அவர்களிடத்தில் கடவுள் அமைத்திருக்கிறபடியால், புருஷர்கள் ஸ்திரீகளை இது விஷயத்தில் மிகுந்த கருணையுடனும் விசுவாசத்துடனும் நடத்த கடமைப்பட்டவர்களாயிருக்கிறார்கள். தாய்க்குரிய எவ்வித மரியாதைகளுக்கும் சிறப்புக்களுக்கும் பெண்களாகப் பிறந்தவர்கள் பாத்தியஸ்தர்கள் தாயானவள் உலகத்தில் பிரத்தியக்ஷ தெய்வமாகிறாள்.. வீட்டுக்குரிய எவ்விதகாரியங்களையும் கவனிக்கக் கூடியவர்கள் ஸ்திரீகளே. வீட்டு வேலைகளே அவர்கள் நிலைமைக்கு யுரித்தானவை. புருஷர்களுக்கு வெளிவேலை எப்படி முக்கியமோ அப்படி ஸ்திரீகளுக்கு வீட்டு வேலை முக்கியமானது.

காட்டேஜ்ஹவுஸ், எழும்பூர். ப. விசாலாக்ஷி.

---

## அன்பு.

அன்பென்பது ஒருபொருள் காரணமாகப் பிரிதொன்றற்கு உளதாமுள்ள நிகழ்ச்சி அதாவது அருளுக்கு முதலாகி மனத்தில் நிகழும் நேயம். இல்லறமினிது நடத்தலும் பிறஉயிர்களின்மேல் அருள் பிறத்தலும் அன்பின் பயனும். அன்புடையவர்களுக்குப் பிறர் துன்பத்தால் வருந்தும் பொழுது கண்ணீர் நிகழுமாகையால் அவ்வருளாலே அன்பு விளங்கும். அன்பி





லாதவர் பிறர்க்குப் பயன்படார். மனதிலன்பில்லாதவர் இல்லறத்தில் வாழ்தல் கடினநிலத்திலே உலர்ந்த மரமானது தளிர்த்தல் போலும் என்றனர் தெய்வப்புலமை திருவள்ளுவநாயனார். அன்புடையார் தமது எலும்பையும் பிறர்க்குக் கொடுக்க உரிமையாவர். எங்ஙனமெனின்? சிபிச்சக்கிரவர்த்தி யானவர், புறவடிவெடுத்து வந்து தன்னிடம் அடைக்கலம் புகுந்த அக்கினியினிமித்தம், அப்புறாவினைத்துரத்தி வந்தவேடவடிவங்கொண்டுள்ள இந்திரனுக்குத்தனது மாமிசத்தை யறுத்துக் கொடுக்கத் துணிந்ததும், ததீசிமுனிவர் தமது முதுகெலும்பினை விருத்திராசுரனைக் கொல்லும் பொருட்டு இந்திரனுக்குக் கொடுத்ததும், கர்ணன் தனது மரணத்தைக் கருதாது தன்னுடன் பிறந்துள்ள கவசகுண்டலத்தினை அந்தணவடிவங் கொண்டுவந்து யாசித்த வாசவனுக்கீந்ததும் ஆகிய சரித்திரங்களால் காண்க. அன்றியும் அன்பில்லையாயின் துறவறமும் இல்லறமும், கீர்த்தியும், பரிசுத்தமும், கல்வியும், சத்துக்களுறவும் யாகங்களும், ஈகையும், தவமும், விரதமும், பூசையும் ஞானமுமில்லை. மேலும் தேகவருத்தமும், பொருள் நஷ்டமுமுண்டாம் என்றார் பிரபுலிங்க லீலையாசிரியர்.

அன்பானது இம்மைக்குரியதும், மறுமைக்குரியதும், இம்மை மறுமைகளுக்குரியதும் என மூன்று வகையாம். இம்மைக்குரிய அன்பாவது பிறப்புரிமையால் சுற்றத்தாரிடத்து இயல்பாகவே ஆசை யுடையவராய் அவருக்கு வேண்டுவன தேடியளித்து வேறு சிந்தையின்றி வாழ்பவர். மறுமைஅன்பாவது இவ்வுலகம் நிலையின்றி அழியுந்தன்மையுடையதாதலினால் அதில் ஆசைவைத்தல் பயனுடையதன்று என அடியோடு வெறுத்து நிலைபெற்ற இறைவன்பால் ஏகமனதாய்ச் சிந்தைவைப்பது. இம்மை மறுமை அன்பாவது இவ்வுலகத்தும் அவ்வுலகத்தும் அவாவுடையராயிருத்தல். அன்றியும் இம்மைப்பொது அன்பு, இம்மைச்சிறப்பு அன்பு, மறுமைச் பொது அன்பு, மறுமைச் சிறப்பன்பு என நான்கு வகையாம் இம்மைபொது அன்பாவது உற்றாரிடத்தும் உறவினரிடத்தும் பிறரிடத்தும் ஒரு தன்மையாக விருப்பது இம்மைச் சிறப்பு அன்பாவது தனது உயிர்உடல் சுற்றத்தார் இடத்தில் மாத்திரம் அவாவைப்பது. மறுமைப் பொதுஅன்பாவது எங்கும் பிரகாசமாயுள்ள கடவுளொருவர் உண்டென்று மாத்திரமுணர்ந்து வாழ்வது. மறுமைச்சிறப்புஅன்பாவது பழம்பொருளாயுள்ள

முதல்வனை வேதாகமங்களில் விரித்த வண்ணம் வடிவு குணம் பெயர் முதலிய சுட்டிப் போற்றி வாழ்வது. இச்சிறப்பன்றே பல சமயங்கட்கு இடங்கொடுத்தது இச்சமயங்கள் அவரவர்கள் கருமத்திற்குத் தக்கபடி அவர்களிடம் அமைந்திருந்தலின் இது உயர்ந்த சமயம் இது தாழ்ந்த சமயம் எனச் சொல்லுதற்கிடமில்லை. ஆதலின் அன்புடன் பொருந்திய உடலே உயிருள்ள உடலாகும். அவ்வன்பில்லா உடலே உயிரற்ற உடலாகும். தபர்.

தி. அகிலாண்ட நாயகி.

---

## கரப்பான்.

கரப்பான் என்பது ஒரு சருமரோகம். இதையே ஆங்கில வைத்தியர்கள் "எக்ஜீமா" (Eczema) என்று சொல்வர். இந்நோய்க்குக் காரணம் இன்னதென்று நன்கு புலப்படவில்லை. ஆனால் இந்நோய் பச்சோந்தியைப்போல் ஒருவேளை இருந்தபடி மற்றொருவேளை இருப்பதில்லை. முதலில் சிறு சிறு வட்டங்களாய் சருமத்தின்மேல் கண்டு காலக்கிரமேண சிறு சிறு தடிப்புகளாகவும், நீர்க் கொப்புளங்களாகவும், சீக் கொப்புளங்களாகவும், பாளம்பாளமாய் வெடித்த இரணங்களாகவும் மாறும். ஒருவருக்கு இருந்ததுபோல் மற்றொருவருக்கு இராமல் வேறுபடுகின்றமையால் இந்நோயிக்கு ஆங்கிலவைத்தியர்கள் அதன்மாறுபாட்டிற்கிணங்க பல பெயர்களிட்டிருக்கின்றனர். இதையனுசரித்தது போல தமிழ் வைத்திய நூல்களில், வாத பித்த சிலேஷ்ம கரப்பான், செங்கரப்பான், கருங்கரப்பான், மண்டைக்கரப்பான், அரிகரப்பான், சொறிகரப்பான், கிரந்தி, சூலைகரப்பான், ஊதுகரப்பான், அரிசெவ்வாப்பு, வெள்ளி கரப்பான், கண்டியொடு வீங்கு கரப்பான், உதிர்கரப்பான், சட்டை தடி வெடி கரப்பான், சிங்கமுக கிரிகரப்பான் எனப்பலவகைகள் சொல்லப்பட்டிருக்கின்றன. மேற்சொல்லிய ஒவ்வொன்றையும் அநுபோகத்தில் காண்பதரிது. ஆங்கில நூல்களில், இந்நோய் விருத்தர்களுக்கும், குழந்தைகளுக்கும் வருகிறதென்றும், தமிழ் நூல்களில் குழந்தைகளுக்கு மட்டுமே வருகிறதென்றும் கூறப்பட்டிருக்கின்றது. சருமத்தில் எல்லாவிடங்களிலும் வரக்கூடிய நோய்களில் இதுவும் ஒன்று. ஆனால்





வெகுவாய்த் தலையிலும், காதுகளின் பின்புறங்களிலும், மூட்டுகளின் பொருத்துக்களிலும், (Flexures of Joints) கைகளிலும், விரல்களிலும், கால்களிலும், பாதங்களிலும் உண்டாகும். கைக் குழந்தையையுடைய ஸ்திரீகள், அடுப்பில் எரிந்து கொண்டிருக்கும் கட்டையைத் தொடுவதாலும், குழந்தைகளை கொள்ளிக் கட்டைகளைத் தொடுதலாலும் இந்நோய் உண்டாகுமென்பர். இது எவ்வாறு உண்மையோ? இந்நோய் பல மாறுபாடுகளடைந்து அநேக பெயர்களடைந்த போதிலும், நோயுண்டான விடத்திலிருந்து சிலநீர் வடிவனவாகவும் (Weeping Eczema) பொருக்குகள் கட்டி உதிர்வனவாகவும் (Scaly or dry Eczema) பிரிக்கலாம். சிலநீர் வடியும் இனத்தகளை, சிதைந்த தேன் கூட்டை ஒத்திருக்கும். மற்ற பிரிவைச் சேர்ந்தவைகளை அவைகளின் பொருக்கினாலேயே அறியலாம். இந்நோயில், எரிச்சல், தடைச்சல், குத்தல், தினவு முதலான விருக்கும். பலஹீனர்களுக்கும், கர்ப்பிணிகளுக்கும் மிக்க உபத்திரவத்தை இந்நோய் விளைவிக்கும்.

### சிகிச்சை.

இந்நோய் சருமத்திலுள்ள அழுக்குகளால் உண்டாகின்றமையால் நாள்தோறும் தவறாமல், சரும முழுதும் நன்றாய்க் கழுவி ஸ்நானம் செய்து சுத்த வஸ்திரங்களைத் தரித்துக் கொள்வதினால் வெகுவாய் வாராமல் தடுக்கலாம். நோய்வந்த பிறகு, நோயுண்டாகிய பாகங்களை நன்றாய்ச் சுத்தப் படுத்திக் கீழ்க்கண்ட மருந்துகளில் எதையாகிலும் உபயோகிக்கலாம்.

| | | | |
|---|---|---|---|
| 1 | இக்தியால் (Ichthyol) | 10 | கிரெயின்ஸ் |
| | ஆஸிட் சாலிஸிலிகம் (Acid Salicylicum) | 5 | ,, |
| | ரிசார்ஸின் (Resorcin) | 3 | ,, |
| | ஜிங் ஆக்ஸைட் (Zinc Oxide) | 120 | ,, |
| | வேப்பெண்ணெய் (Neem Oil) | 6 | டிராம்ஸ். |

இவைகளை நன்றாய்க் குழைத்து சிலநீர் வடியும் கரப்பான் மேல் பூச குணப்படும்.

| | | | |
|---|---|---|---|
| 2. | போரிக் ஆஸிட் (Boric Acid) | 5 | கிரெயின்ஸ் |
| | ஜிங் ஆக்ஸைட் (Zinc Oxide) | 5 | ,, |
| | அரிஸ்டால் (Aristol) | 5 | ,, |
| | வாசலைன் (Vaseline) | 1 | அவுன்ஸ். |

இவைகளை நன்றாய்க் குழைத்துப் பொருக்குப் பொருக்காய் உதிரும் சாப்பான்மேல் போட குணப்படும்.

3\. ஹைட்ரார்ஜரி அமோனியேடா (White Precipitate of Mercury) } 1 டிராம்.
வாசலைன் (Vaseline) 9 ,,

இதை நன்றாய்க் குழைத்து பாளம்பாளமாய் வெடித்து இரணமாகும் காப்பானுக்கு தடவ குணப்படும்.

4\. லிக்கர் ப்ளம்பை ஸப்அசிடேடிஸ் டில் (Liquor Plumbi subacetatis dil) } 2 டிராம்.
க்ளிஸரீன் (Glycerine) 1 ,,
ஜிங் ஆக்ஸைட் (Zinc Oxide) 20 கிரெயின்ஸ்
சுத்தநீர் (Distilled Water) 2

இந்தத் திராவகத்தில் ஒரு துணியை நனைத்து சாப்பான்மேல் போட்டுவர குணப்படும்.

5\. ஜிங் ஆக்ஸைட் (Zinc Oxide) 1 டிராம், கலமினாபிரிபரேடா (Calamina preparata) 1 டிராம், இந்த இரண்டையும் கலந்து சாப்பான்மேல் தூவக்குணப்படும். தமிழ் வைத்தியர்கள் சாப்பான் எண்ணெய் என்று பலவிதமாய்ச் செய்து வைத்துக் கொண்டு உள்ளுக்கும் கொடுத்து மேலேயும் பூசுகிறார்கள்.

வீட்டு வைத்தியம் :—1. கருஞ்சீரகத்தைக் கருக்கி அரைத்துப் பூசுதல். 2. பன்னி நெய் தடவல். 3 வேப்பெண்ணெ தடவல். 4. அமுக்குராக் கிழங்கை நீரில் உரைத்துப் போடல். 5. பாசக்காயை நெய்யில் உரைத்துப்போடல். 6. மிருதார்சிங்கை நெய்யில் உரைத்துப்போடல்.—ச. வி.

---

## நன்மொழிகள்.

---

1\. சௌந்தரியத்தினால் திருஷ்டி மோகிக்கும். ஆனால் சற்குணத்தினால் உள்ளம் மோகிக்கின்றது.

2\. நாம் வீணுக்கழிக்கும் பொழுதை நல்ல விஷயத்தில் உபயோகிப்போமானால் நம் ஆயுள் நீடித்தது போலாகும்.

3\. இவ்வுலகை நந்தவனமாகச் செய்கிற சாமர்த்தியம் அன்பினிடத்திலிருக்கின்றது.





4\. பரிசுத்தமான மனதையுடையவர்கள் பிறர் நிந்திப்பதை பொருள் செய்யமாட்டார்கள்.

5\. பக்தி, ஞானம், என்னும் இவ்விரு இறக்கைகளால் பறந்து நாம் கடவுளிடத்தில் போகிறோம்.

6\. ஆனந்தமாயிருப்பது நமது கடமையாயிருக்கிறது. ஆனந்த விருத்தியுள்ளவர்கள் எப்பொழுதும் உலகத்திற்கு உபகாரம் செய்து கொண்டிருக்கிறார்கள்.

7\. வாங்குவதை விட கொடுப்பதில் சௌக்கியமதிகம்.

8\. ஸத்தியத்திற்கு தான் ஜயமுண்டாகு மென்கிற திடவிசுவாசத்துடன் உத்தியோகம் செய்யத்தலைப்படவேண்டும்.

9\. கேவலம் ஜனங்கள் புகழவேண்டுமென்கிற உத்தேசத்துடன் நீங்கள் பற்பல உத்தியோகம் செய்வீர்களானால் உங்களுடைய ஆயுள் வீண்போகிறதற்கு ஸம்பவமுண்டு. சுயநலத்திற்கு மாத்திரம் கடமைப்பட்டிருப்பதாக நினைத்திருப்பீர்களாகில் வாஸ்தவத்தில் உங்களுடைய ஆயுள் வீண்போய்க்கொண்டிருக்கிறது ஆனால் பரோபகாரார்த்தமாய் ஜீவிக்க வேண்டு மென்கிற உத்தேசம் உங்களுக்கிருந்தால் உங்கள் ஆயுளின் ஒவ்வொரு க்ஷணமும் பயனுடையதாயிருக்கின்றதென்று உறுதியாய் நம்புங்கள்.

10\. நமது நிஜமான கடமை எதுஎன்றறிவதன் பெயர் புத்திசாலித்தனம். அக்கடமையைநிஷ்காம்ய புத்தியுடன் பிரதிபலனைக் கோராது செய்வதன் பெயர் சற்குணம்.

மங்களாம்பிகா பாய்.

---

## சிறுவர் சிறுமியர்க்கான கதைகள்.

### கபடமற்ற கோவிந்தன்,

---

வெகுகாலத்திற்குமுன் சென்னையில் திருவட்டீசுவரன் பேட்டையில் கிருஷ்ணசுவாமிஐயரென்றொருவர் தந்திரத்தில் நிபுணராயிருந்தார். அவர் தம் வீட்டு வேலைக்காக ஒரு வாலிபனை வைத்திருந்தார். அவ்வாலிபன் கபடமற்றவனாயிருந்தானென்று அவனை எல்லோரும் கபடமற்ற கோவிந்தன் என்பார்கள். ஒரு

நாள் கிருஷ்ணசுவாமிஐயர் கோவிந்தனை தன்னுடன் கடைக்கு அழைத்துச்சென்று இரண்டு வஸ்துக்களை வாங்கி வீட்டில் கொண்டுபோய்கொடுக்கும்படி சொல்லி அவைகளை அவன் கையில் கொடுத்தார். ஒன்று காகிதத்தில் சுற்றப்பட்டிருந்தது. அதைக் கொடுக்கும் பொழுது, "இந்தப்பொட்டலத்தை அவிழ்க்காதே, இதில்தேள் இருக்கிறது. அவிழ்த்தால் அது உன்னைக்கடிக்கும்" என்றும் சீசாவிலிருந்த இரண்டாவது வஸ்துவைக்கொடுக்கும்பொழுது "இதில்விஷம்" என்றும் சொல்லி கோவிந்தனை வீட்டிற்கு அனுப்பி விட்டு கிருஷ்ணசுவாமிஐயர் வேறிடம் சென்றார்.

கோவிந்தன் வீட்டை நோக்கி செல்லலானான். ஆனால் அந்த சாமான் என்னவென்று அறியவேண்டுமென்கிற ஆவலுதித்த படியால் பாதிவழி வந்தபிறகு பொட்டலத்தை அவிழ்த்துப்பார்க்க அதில் மைசூர்ப்பாகு இருக்கவும் அதைத்திருப்தியாய்த்தின்றான். சீசாவிலும் இப்படித்தான் ஏதாவது இருக்குமென்று அதன் மூடியை எடுத்து கொஞ்சம் நக்கிப்பார்த்து அது தேனென்று அறியவே, அப்படியே அவ்வளவு தேனையும் குடித்துவிட்டு சீசாவைக் காலிசெய்து தூர வீசியெறிந்து விட்டு வெறுங்கையுடன் வீடு போய்ச்சேர்ந்தான்.

கிருஷ்ணசாமிஐயர் வீட்டிற்கு வந்து கடையிலிருந்து கொண்டு வந்த சாமான் எங்கே என்று கோவிந்தனைக் கூப்பிட்டுக் கேட்டார். அதற்குக் கோவிந்தன் சிரிக்காமல் விநோதமாயும் கம்பீரமான குரலுடனும் விடையளித்தான். "அது தேள் பொட்டலமல்லவா? தேள் எப்படி பொட்டலத்திலிருக்கும்? நான் வீட்டிற்கு வந்துக் கொண்டிருக்கும் பொழுது அந்தத் தேள் குடுகுடு வென்று ஓடிப்போய்விட்டது. நான் என்ன செய்யட்டும்? நானதை பிடிக்கப்போயிருந்தால் அது என்னைக் கொட்டியிருக்கும். கிருஷ்ணசாமிஐயர்கோபாவேசத்துடன் "சீசாவிலிருந்த விஷம்" எங்கே? என்று கேட்க, கோவிந்தன் தேனை விட்டுவிட்டேனென்று நீங்கள் கோபித்துக்கொள்வீர்களேயென்று சீசாவிலிருந்த விஷத்தையெல்லாம் நான்குடித்துவிட்டேன்" என்றான். கிருஷ்ணசுவாமிஐயர் அவமானமடைந்து பேசாமலிருந்தார்.

சிறிய பாலர்களைச் சகஜமாய் ஏமாற்றும்பொழுது பலதடவைகளில் பெரியோர்கள் தாமே ஏமாந்து போய் நகைப்புக்குப் பாத்திரமாகிறார்கள்.

மங்களாம்பிகா.



# * ஸ்திரீகளின் சாம்ராஜ்ஜியம்.

அநேக உலகங்களை சிருஷ்டித்துள்ள சர்வ வல்லமையுள்ள கடவுளானவர் உலகங்களுக்காக கோடானு கோடி ஜீவராசிகளை சிருஷ்டித்திருக்கிறார். ஜீவராசிகளென்றால் சாதாரணமாய் உயிருள்ள ஜந்துக்களென்றே எல்லாரும் எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். கடவுள் சிருஷ்டிகளெவையாயினும் அவைகளனைத்தும் ஜீவராசிகளே. பாருங்கள்! மலைகள் வளருகின்றன. நவரத்தினங்களில் சில சுத்தமாயும் ஒழுங்காயுமிருக்கின்றன. சிலவற்றில் தோஷங்களிருக்கின்றன. இவைகள் ரத்னங்களின் உயர்வையும் மதிப்பையும் கெடுத்து விடுகின்றன. இஃதிருக்கட்டும். புல் பூண்டு வர்க்கங்களைப் பாருங்கள். மனிதன் இரத்தத்தில் விஷம் சேர்ந்தால் என்ன பாடு படுவானோ அவ்வாறே செடிகளின் வேர் மூலமாய் விஷத்தைச் செலுத்தினால் அவை உலர்ந்து பட்டுப் போகின்றன. இவ்விஷயத்தால் சிருஷ்டிப் பொருள்களுக் கெல்லாம் ஜீவனிருக்கிற தென்றே நாம் அறிய வேண்டியிருக்கிறது. ஜீவராசிகளின்நிலை படிப்படியாய் உயர்ந்தோ தாழ்ந்தோ வருகின்றது. இதனையே நம்நூலில் "புல்லாகிப் பூடாகிப் புழுவாகிப் பறவையாகி" என்று ஜீவராசிகளின் உயர்வு நிலையைக்கூறியிருக்கிறது. இவ்வருமையான உண்மையைத் தான் ஹக்ஸ்லி என்னும் மேனாட்டுப் புலவர்சிகாமணியானவர் வர்க்கத்துக்கடுத்தப் பதவி மனிதவர்க்கமென்றும் தற்காலம் மனிதராயிருக்கிறவர்கள் வானரர்களின் சந்ததிகளென்றும் இப்படியே வானரர்களுக்கு முன் பல பதவிகள் அடைந்திருக்க வேண்டுமென்றும் அனுமானித்து இவ்விஷயங்களை பரிணாம விவகாரம் (Evolution Theory) எனப் பெயரிட்டு உபயோகித்தார். அவர் காலத்தில் எவரும் அவர் சொன்னதை ஒத்துக் கொள்ளவில்லை. தற்காலத்தில் இதன் உண்மையில் அவநம்பிக்கை கொள்வார்களேயில்லை. பிரத்தியக்ஷப் பிரமாணத்தால் நாம் அனுபவிக்கும் எல்லாப் பொருள்களிலும் எல்லா உயிர்களிலும் மானிடப் பிறப்பு சிறந்ததாக விளங்குகிறது நிராக்ஷேபமல்லவா? இத்தகைய மனுஷ ஜென்மத்தை நாமடைந்தது மிகவும் பாக்கியம் பெற்றவர்களென்றே சொல்லவேண்டும். இவ்வுண்மையை உறுதிப்படுத்துவதற்காக "அரிது அரிது மானிடராய்ப்பிறப்பதரிது" என்று நம்மூதாட்டியார் ஔவை கூறியிருக்கிறார். கடவுள் சர்வஞ்ஞர். பாரபக்ஷமற்றவர். ஒவ்வொரு வர்க்கத்துக்கும் குறிப்பிட்ட உணர்ச்சிகளையும் அறிவுகளையும் இயற்கையிலேயே அளித்திருக்கிறார். ஒவ்வொரு ஜீவராசியும் மேலான பதவியை யடைய வேண்டுமென்பதே கடவுளின் சித்தம். மனிதவர்க்கத்தில் உள்ள ஸ்திரீ புருஷர்களாகிய இருபாலர்க்கும்

*நாகப்பட்டிணம் கல்விச் சங்கத்து ஆதரவின் கீழ் பத்திராதிபர் சகோதரி தயாரம்மாஅவர்களால் செய்யப்பட்ட பிரசங்கம் விவரித்தும் தொகுத்தும் ஈண்டு போடப்பட்டிருக்கிறது.

உணர்ச்சி அறிவு இவைகள் தார தம்மிய மில்லாமல் பொதுவானவையாயும் சமானமானவையாயு மிருந்தபோதிலும் ஒருவகுப்பினர் மற்றொரு வகுப்பினரின் அபிவிருத்தியில் நோக்க மற்றவர்களா யிருக்கின்றனர். கடவுள் எப்படி நமக்கு அன்புடன் அறிவும், புத்தி நுட்பமும், நினைத்தது முடிக்கும் திறமையும் புருஷர்களைப் போல் அளித்திருக்கிறாரோ, எப்படி அவைகளை விருத்திசெய்ய வேண்டு மென்பது அவரின் நோக்கமோ, அவ்வாறே அவர் கருத்துக் கிசைந்து நம் வாழ்நாளை கழிக்க வேண்டுவதே நமது சாம்பிராஜ்ஜிய மாகும். எவ்விதத்திலும் நாம் முன்னேறி அபிவிருத்தியடைய வழி தேட வேண்டுமே யல்லாது பின்னேறி க்ஷீணதசை யடையக் கூடாது. நாம் என்னத்திற்காக இவ்வுலகில் வந்துள்ளோம், என்ன செய்யப் போகிறோம் என்பன விஷயங்களை ஆராய்வன போன்ற நோக்கங்கள் நமக்கு இருக்க வேண்டும். வாழ்க்கையில்நோக்க மில்லாததாயின் பண்பும் பயனும் மற்ற தாகும். ஆகையால் நமக்கு லக்ஷ்யம் ஏதாவது இருத்தலவசியம். நமது லக்ஷ்யம் நம் சாம்பிராஜ்ஜியமே. இந்த சாம்பிராஜ்ஜியத்தை யடைவதற்கு நம்மை கார் கால மேகம்போல் சூழ்ந்திருக்கும் மடமை நீங்குதலவசியம். மடமைக்கு மருந்து கல்வியேயாம்.

இரு பாலருக்கும் தங்களது சுதந்தரத்தை விருத்தி செய்து கொள்வதற்கு வேண்டிய எவ்வகைச் சாதனப் பொருள்களுள்ளும் குறைவற உலகமெல்லாம் தனதாக்கிக் கொள்ளுவதற்கு இன்றியமையாச்சாதனம் கல்வியேயன்றி வேறில்லை யென்பது எமது அபிமதம். எமது முன்னோர்களின் துணிபு மிதுவே? ஆண் பெண் இருபாலருக்கும் பாஷா ஞானமும் பாஷைக் காதாரமான அகராக்கரங்களாதி சப்தங்களும் இயல்பாக வுண்டென்பதும் ஒப்புக் கொள்ளக் கூடிய விஷயமாகும். இரு பாலார்க்கும் எப்படி பாஷா ஞானம் சுதந்தரமோ அப்படியே கல்வியும் சுதந்தரமுடைய தாகும். இப்படியிருக்க கல்வியை ஒருபாலார்க்குரிய தென்றும் மற்றொரு பாலார்க்குரியதகா தென்றும் சொல்வது நியாயமாகுமா? கல்வியினால் புத்தி விசாலிக்கின்றது. இறந்த கால நடையுடை கொள்கைகள் அறியப்படுகின்றன. எதிர்கால நிகழ்ச்சியின்னதாகு மென ஊகிக்கப் படுகின்றது. இன்னும் புதிது புதிதாக விஷயங்கள் கண்டு பிடிக்கப்பட்டு ஆராய்ச்சி செய்யப்படுகின்றன. கல்வியினால் பலன் அபரிமிதம்.

சகோதரிகளே! இதுவரையிலும் கடவுள் சிருஷ்டி எவையாயினும் அவைகளனைத்தும் உயிருள்ளவைகளென்றும் மானிடப்பிறப்பு எல்லா சிருஷ்டிப்பொருள்களிலும் சிறந்த தென்றும் கடவுளின் நோக்கம் இப்படியென்றும் ஸ்திரீகளின் சாம்பிராஜ்ஜியம் இது வென்றும் சொன்னேன். மேலும் சாம்பிராஜ்யத்தை யடைய கல்வி முக்கிய சாதன மென்றும் இருபாலார்க்கும் கல்வி பொது வென்றும் கல்வியினால் நாம் அடையும் பிரயோஜனங்கள் சிலவற்றை சொல்லி விட்டு நிறுத்தினேன். இப்போது முற்கால ஸ்திரீகள் சாம்பிராஜ்யத்தை அடைந்திருந்தார்களாவென்று ஆராய்வோம்.





இந்துதேசம் மிக்க உன்னதநிலையிலிருந்த காலத்தில் நமது இந்து ஸ்திரீகள் எவ்வித சிலாக்கிய முற்றிருந்தார்களென்பதை சரித்திர மூலமாக அறியும்பொழுது நமக்கு மிகுந்த சந்தோஷத்தையும் ஆச்சர்யத்தையும் கொடுக்கின்றது. அக்காலத்து ஸ்திரீகள் கல்விகேள்விகளில் மிக்கதிறமை வாய்ந்தவர்கள் தர்ம சிந்தையுடையவர்களாயும் தேசாபிமான முடையவர்களாயுமிருந்தார்கள். பொது நலத்துக்கு தன்னலம் பாராது உழைத்து வந்தார்கள். மைத்திரா, லோபமுத்திரா, ரோமேஷா, கார்க்கி, அபலா, அதிதிமுதலிய ரிஷிபத்தினிகள் வேதங்களின் உண்மைக்கருத்துக்களை அறிந்து இல்லற தர்மங்களைநடத்திக்காட்டி கேவலம் சிற்றின்பத்தை ஒரு பொருளாக மதிக்காமல் பேரின்பத்தையே நாடியிருந்தார்கள். கார்கி, மைத்திரேயி என்னும் பிர்ம்மவாதினிகள் யஞ்ஞவல்கிய முனியுடன் தத்துவத்தைப்பற்றி அநேக சம்வாதங்கள் செய்ததாகத் தெரிகிறது. இவர்கள் காலத்துக்குப் பிறகு சீதை, திரௌபதி சாகுந்தலை, சாவித்திரி முதலியவர்கள் கல்வியில் விற்பன்னர்களாக இருந்தார்கள். மேலும் நமது தேசத்தில் மதாசாரியரென்று கீர்த்திவாய்ந்த ஆதி சங்கராசாரியரும் மண்டன மிச்ராரும் சாஸ்திரவாதம் செய்தபோது மண்டன மிச்ரரின் பாரியாளான உபயபாரதி தேவி என்பவர் மத்திய விருத்தியாக யிருந்தன ரென்று சங்கரவிஜய மென்னும் கிரந்தத்தினால் தெரியவருகிறது நமது இந்தியாவை அரசாண்ட மன்னர்களின் பாரியைகளும் பிரம்ம க்ஷத்திரிய வைசய சூத்ரவம்சத்துப்பெண்களும் கல்வியில் தேர்ந்து புருஷர்களுடன் சரிசமானமான சுதந்தரம் வகித்து இல்லறதர்மங்களை நடத்தி வந்தார்களென்று நமது புராணங்கள் முறையிடுகின்றன. சரமா என்னும் பெண்மணி தனது நாயகனின் உத்திரவுப்படி தன்தேசத்தில் திருடர்கள் இம்சை சகியாது அவர்கள் இருப்பிடம் சென்று அவர்களைநாட்டை விட்டோட்டியது மன்றி மேன்மேலும் தனது தேசத்துக்கு க்ஷேமத்தை விளைவித்தனளன்றோ?

மாளவ தேசத்து அரசி யாகிய அகல்யாபாய் இருபது வருஷ காலம் இந்துக்களையும், மகமதியர்களையும் தனது இரு கண்கள்போல் பாவித்து அரசாண்டு வந்தாள். டெல்லியில் அரசாண்ட பிரித்வி ராஜன் பார்யையான ராணி சம்யுக்தா மகமத் கோரி தன் தேசத்தில் படை யெடுத்து வந்து ஸ்திரீகளையும், குழந்தைகளையும் சிறை கொண்டோடினதை கேள்விப்பட்டு ஆறாத துக்கத்தில் மூழ்ந்து மகா பராக்கிரமத்துடன் தன் புருஷன் பக்கத்தில் நின்று யுத்தம் புரிந்து துலுக்க சைந்யங்களை முற்றிலும் தோற்கடித்து தன் தேசத்து ஜனங்களைக்காப்பாற்றினாள். இவர்களைப் போல் எத்தனை மக்களோ கல்வியில் தேர்ந்து ஜனங்களுக்கு நீதி புகட்டிவந்தார்கள். இல்லற மென்னும் வண்டியை இழுத்துச் செல்ல இருவாகனங்கள் கணவன் மனைவி இருவரு மென்றும் ஒருவரைவிட்டு ஒருவர் தனித்திருத்தல் கூடா தென்றும் வாழ்க்கையில் நேரும் சுகதுக்கங்களை இருவரும் பகிர்ந்து இல்லற தர்மத்தை நடத்த வேண்டுமென்றும் இவைகளை யறிந்து நம் ஆரிய ஸ்திரீ

புருஷர்கள் கல்வி கற்று சமானமானவர்களாய் சாம்பிராஜ்ஜிய பதவிகளை யடைந்திருந்தார்கள்.

தற்காலத்தில் நமது இந்தியா இவ்வளவு க்ஷீண தசையடைந்திருக்கிறதற்குக் காரணம் ஸ்திரீகளுக்கு கல்வி யின்மை ஒன்றுகும். ஒருதேசத்தின் உயர்வுக்கும், தாழ்வுக்கும் அந்தேசத்துப் பெண்கள் முக்கிய காரண மென்பது எல்லாருக்கும் ஒத்த சம்மதமாகும். எவ்வளவுக் கெவ்வளவு பெண்கள் நாகரீக முள்ளவர்களாயும் படித்தவர்களாயு மிருக்கிறார்களோ அவ்வளவுக் கவ்வளவு அத்தேசம் நாகரீகத்திலும், கல்வியிலும் விருத்தியா யிருக்கிறதென்று தெரியவரும். எந்த தேசத்துப் பெண்கள் தேச பக்தர்களாயும், தர்ம சிந்தையுள்ளவர்களாயும் இருக்கிறார்களோ, அத்தேச ஜனங்கள் தேசாபிமானம் கொண்டவர்களா யிருக்கிறார்கள். பெண்களுடைய மடியானது தேசத்துத் தொட்டிலுக்குச் சமானம். "தாயைப் போல பிள்ளை நூலைப்போல் சேலை" பிள்ளைகளையோ பெண்களையோ நல்லவர்களாக்குவதும் கெட்டவர்களாக்குவதும் தாயே. சில பெண்கள் கண்ட புஸ்தகங்களைப்படித்தும் தாய்மார்களின் கவனக் குறைவாலும் தீயவழிகளில் சென்று கெட்டுப் போகிறார்கள். நல்ல புஸ்தகங்களை பொறுக்கி கொடுத்தலும், நல்ல சகவாசத்தில் கொண்டு சேர்த்தலும் ஆகிய இவைகள் பெற்றோர்களின் கடமையாகும் நாம் நம் சகோதரிகளுக் கெல்லாம் கல்வி கற்றுக் கொடுத்து ஞான ஒளியை தூண்டி விடவேண்டும். இதுதான் நாம் செய்ய வேண்டிய முதற் காரியம். கல்வி கற்றுக்கொடுக்கப்படுவதுடன் நின்று விடக்கூடாது. இதில்பயனில்லை. நமக்கு தெரிந்த விஷயங்களைப் பள்ளிக்கூடத்தில் 40,50, 100 பிள்ளைகளுக்குத்தான் ஒரே சமயத்தில் போதிக்க இயலும். இதைவிட சிலாக்கியமானதொன்பதை கவனிக்க வேண்டும். அது பத்திரிகையே. நமக்கு தெரிந்தவைகளைப் பத்திரிகைகளில் வெளியிடுவதால் நாம் ஒரே காலத்தில் அப்பத்திரிகை படிப்போருக்கெல்லாம் கற்பித்ததாகும். ஆகையால் பத்திரிகை சர்வசிலாக்கியமானது.

பத்திரிகையால் ஞான வொளி பரவுவதைப் பற்றி நான அதிகமாய் கூற வேண்டுவதில்லை. பத்திரிகையானது நம்லக்ஷ்யமாகிய சாம்பிராஜ்ஜியத்தை யடைவதற்குச் சிறந்த சாதனங்களில் முக்கியமான தென்பதை ஒத்துக் கொள்வீர்கள். நான் மிக்கப் படித்தவளல்ல. புத்தி மிகுதியுள்ளவளுமல்ல. என்னைப் பார்க்கிலும் விசேஷப் படிப்பும், தீவிர புத்தியும் வாய்ந்தவர்க ளிருக்கிறார்கள். நமது சாம்பிராஜ்ஜியம் ஒருவரால் சித்திபெறுவ தன்று. ஒவ்வொருவரும் தத்தம்மா லியன்ற உதவியைச் செய்யக் கடமைப் பட்டவர்கள். சீதைப் பிராட்டியைக் கவர்ந்து சிறை யெடுத்துச் சென்ற இராவணனின்று மீட்டுக் கொள்வது ஸ்ரீ ராமபிரான் காரியமே ஆனால் இலங்கையை அடைய சேதுவைக் கட்ட வேண்டியிருந்தது. சேதுவைக் கட்டபலவானரர்களும், கிங்கரர்களும் அநேக ஜனங்களும் ஜாதி வித்தியாசம் பாராமல் உதவி செய்தார்கள். தர்மகைங்கர்யத்தில் ஒரு சிறு அணி





லும் ஒரு கல்லெடுத்துச் சென்று தவியதாம். இப்படி பலர் கைங்கரியத்தால் சேதுகட்டப்பட்டது. ஸ்ரீராமர் இலங்கையை யடைந்து சீதையைமீட்டு வந்தார். இவ்வாறே நம்சாம்பிராஜ்ஜியத்தை அடைவதற்குச் செய்யப்பட்டு வரும் பல அபாரமான முயற்சிகளுள் அடியாள் சுமார் ஒருவருஷமாக நடத்திவரும் பத்திரிகை முயற்சி அணில் கைங்கரியத்துச் சமானமானது. இம்முயற்சியில் குறைகளும், குணதோஷங்களும் சகஜம். அடியாளை குறைகளுக்காகவும் தோஷங்களுக்காகவும் க்ஷமித்து நல்லவழிகளை எடுத்துக்காட்டியும் எழுதியும் உதவிபுரியும்படி மிகவும் கேட்டுக்கொள்ளுகிறேன் கடவுளருளால் சகோதரிகள் செய்த விஷயதானங்களாலும் ஊட்டி வந்த ஊக்கத்தாலும் பத்திரிகையை நடத்திவரல்சாத்திய மாயிருக்கிறது. நம் சந்தா சகோதரிகள் அனேகர் பத்திரிகை சகலருக்கும் தெரிவதற்கு வழியில்லாமலிருக்கிறதென்றும் நான் பிரசங்க யாத்திரை செய்துவந்தால் அனுதாபம், பரஸ்பர சிநேகம், விஸ்வாசம் ஏற்படுமென்றும் பத்திரிகை பரவுவதற்குச் சாதகமாகுமென்றும் சொல்லியும் எழுதியுமுள்ளார்கள் சகோதரிகளைச்சந்தித்து அவர்களுடன் கலந்து பசும் பாக்கியமிருப்பதால் நான் இங்கு வர நேர்ந்தது வாயிற்று. உங்களுடைய அபிமான மிருந்தால் பல சந்தர்ப்பங்கள் நாம் சந்திக்க நேரிடு மென்பதில் சந்தேகமில்லை. சந்தாதார் களாகச் சேர்ந்திருப்பவர்கள் தங்கள் சிநேகிதிகளுக்கு சிபார்ஸ்செய்யுமபடி வேண்டிக் கொள்ளுகிறேன். எனக்கு இதுபோன்ற பொதுக்காரியங்களில் உழைக்க ஈசன் தைரியத்தையும் மன உறுதியையும் அளிக்கப்பிரார்த்திக்கிறேன். சுபம்.

---

## வைத்திய விஷயக்குறிப்புகள்.

---

சொத்தை நகம் ஒரு நோய். சர்வசாதாரணமாய் சமையல் வேலை செய்யும் ஸ்திரீகளுக்கும் புருஷர்களுக்கும் இது வருகிறதுண்டு. புளி முதலிய அமிலபதார்த்தங்களைக்கையாளுவதினாலேயே வருகிறது. சொத்தைவிழுந்து நகம் ரணமாயிருக்கும்போது டிங்சர் அயோடின் தடவினாலும், சதுரக்கள்ளியின் பாலைத்தடவினாலும் குணப்படும்.

* * * *

நல்லெண்ணெய், விளக்கெண்ணெய், தேங்காயெண்ணெய், இலுப்பெண்ணெய், கடலையெண்ணெய் முதலிய எத்தனையோ எண்ணெய்களிருந்தாலும், "நல்ல" என்ற பேர் எள்ளிலிருந்து எடுக்கும் தைலத்துக்கேகொடுக்கப்பட்டுப் பிரவித்தமாய் நல்லெண்ணெய் என்று விளங்குகிறது. இந்த நல்லெண்ணெய்யின் குணம் மஹாவிசேஷமானது, பதார்த்தகுண சிந்தமணிக்காரர் இதைப்பற்றி கூறியிருக்கும் செய்யுள்:—

"புத்திநயனங் குளிர்ச்சி பூரிப்பு மெய்ப்புளகம்
சத்துவம்சாந்தி தனியிளமை— மெத்தவுண்டாம்
கண்ணோய் செவிநோய் கபாலவழல் காசமிவை
புண்ணோய்போம் எண்ணெய்யாற் போற்று"

ஆகையால் இந்த எண்ணெயைத் தேய்த்து தலைமுழுகிவந்தால் மேல் கூறிய லாபகத்தை யடையலாம். இந்தக் காரணத்தைக் கொண்டே "வைத்தியனுக்குக் கொடுக்கும் காசை வாணியனுக்குக் கொடு" என்று நம்முடைய முன்னோர்கள் கூறுகின்றார்கள். ஆகையால் நல்லெண்ணெயை நமதுதேசத்திலுள்ள எல்லோரும் வாரம் இருமுறை முழுகிவந்தால் எந்த வியாதிக்கும் பயப்படவேண்டியதில்லை. 'சனிநீராடு, சனி புதன் நீராடு' என்ற பழமொழிகளும் இதற்காகத்தான் கூறப்பட்டிருக்கின்றன. பம்பாயில் ப்ளேக் வியாதி வந்த காலத்தில் நல்லெண்ணெயைக் கையாண்டு கொண்டிருந்த வாணியத் தெருவில் அந்த நோய் பரவவில்லை என்று ஓர் இங்கிலீஷ் டாக்டர் வெகு உறுதியாய்ச் சொன்னதாக நாம் கேள்விப்பட்டிருக்கிறோம். பி.வ.

* * * *

பித்த வெடிப்புச் சாதாரணமாய் புருஷர்களுக்கு வரும் வியாதி. இப்போது ஸ்திரீகளுக்கும் முக்கியமாய் கிராமத்து ஸ்திரீகளுக்கும் வந்து கொண்டிருக்கிறது. புருஷர்கள் பாதரக்ஷை அணிவதனாலே அநேகமாய்த் தடுத்துவிடலாம். இந்நோய் வந்த ஸ்திரீகள் பாதங்களைக் கொஞ்சகாலம் நீரில் ஊறவைத்து நன்றாய்த் தேய்த்து அலம்பி ஈரமில்லாமல் நன்றாய்த் துடைத்துப் பின் சொல்லும் மருந்துகளில் எதையாவது உபயோகிக்கலாம்.

1. அரசம்பாலைத் தடவலாம்.
2. செம்முள்ளியின் இரசத்தைப் பிழிந்து தடவலாம்.
3. மூந்திரி எண்ணெ தடவலாம்.
4. விளாம்பட்டைத் தைலம் பூசலாம்.

* * * *

நமது சகோதரர்களும் சகோதரிகளும் காதிலிருக்கிற மெழுகை நீக்க ஈருக்குச்சியால் அடிக்கடி காதைக்குத்தி புண்படுத்தி வருகிறார்கள். அதனால் பெரும் ஆபத்தாய் முடிகிறது. காதில் குரும்பை அடைந்திருந்தால் நமது கண்ணுக்கே புலப்படும். ராத்திரிப்படுத்துக்கொள்ளும் பொழுது இரண்டு சொட்டு கிளிசிரினைக்காதில் விட்டுக் கொண்டு காலையில் எழுந்திருந்து பீச்சாங்குழாலால் வெந்நீர் எந்தி பீச்சினால் காதிலிருக்கிற அசுத்தம் வந்துவிடும். பிறகு இரண்டு சொட்டு கிளிசிரினைக் காதில் விட்டு குளிர்காற்று உள்ளே போகாமலிருக்கும்படிக்கு பஞ்சுவைத்து அடைத்துக்கொள்ளவும். இப்படி இரண்டொள் செய்ய முழுகுணமாய்விடும். நமது வீட்டில்காதுக்குரும்பையை எடுக்கவாவது காது வலியை நீக்கவாவது எண்ணெய் காய்ச்சி வார்ப்பது வழக்கம் அது பிசகு காது செவிடாய் விடும்.





அமெரிக்கா கண்டவாசியான கிலர்க்கு என்னும் ஒரு பேர் போன வைத்தியர் மனிதருக்கு மரணத்தையுண்டுபண்ணுகிற சிறு பூச்சி ஒன்று உண்டென்று கண்டு பிடித்திருக்கிறார். அந்த மரணப் பூச்சி உருண்டையும் கண்ணுக்குத் தெரியாததும் ஒரு அங்குலத்திலே அரை லட்சத்துக்கதிகமாக இருக்கிறதாம். நல்ல சுகமுள்ள தாய் தந்தையாரின் குழந்தைகளில் இந்தப் பூச்சிக் காணப்படவில்லையாம். இந்தப் பூச்சியைக் கொன்று விட்டால் மரணம் மனிதருக்குளெளிதில் நேரிடாதாம். இப்பூச்சியைப் போக்கடிக்கிறதற்கு மேற்படி வைத்தியர் பரிசீலனைகள் செய்து வருகிறார்.

---

## பலவகைக் குறிப்புகள்.

---

பரமபதம் சென்ற விஜயநகரம் மகாராஜா ஸர். ஜி. என். கஜபதிராவின் மனைவியரான லேடி கஜபதிராவ் அவர்கள் இம்மாதம் 26-தேதி வெள்ளிக்கிழமை தினம் இறந்து போயினரெனக் கேட்டு மிக்க விசனிக்கிறோம். இவர் பெண்கல்வி அபிவிருத்தியில் மிகவும் அனுதாபம் பாராட்டி வந்தவர். இவர் வேறு தர்மங்களும் செய்திருக்கிறார்.

* * * *

சுகாதார விருத்திக்காகச் செலவு செய்யும்படி. டிஸ்டிரிக்டு போர்டுகளுக்கும் முனிஸிபாலிட்டிகளுக்கும் சென்னைக் கவர்ன்மெண்டார் 1912-13 ஆம் வருஷத்துக்கு சுமார் 22-லட்சம் ரூபா சாங்கிஷன் செய்திருக்கிறார்கள்.

* * * *

பரோடா ராஜ்யத்தில் பரோடா புரஷ் பாக்டரி என்பதாக ஒரு கம்பெனி ஏற்பட்டு புரஷ்கள் செய்யப்பட்டு வருகின்றன. இதை வீட்டுத் தொழிலாக நடத்திவருகிறார்கள். புரஷுக்கு பின்மரத்தையும் நார்களையும் மயிர்களையும் பெண்டுகளிடத்தில் கொடுத்துவிடுகிறார்கள். அவைகளைப் பெண்டுகள் தங்கள் தங்கள் வீடுகளுக்குக் கொண்டு போய் புரஷுகளாகச் செய்து திரும்பிக் கொண்டு வந்துகொடுக்கிறார்களாம்.

* * * *

டாக்டர் மிஸ். காகுபாய் ஜோஷி அவர்கள் தான் முதன் முதல் லண்டன் சர்வகலாசாலை எல். ஆர். ஸி. பி. அண்டு. எம். ஆர். ஸி. எஸ். பட்டம் பெற்ற தக்ஷிண இந்திய மாதாகும். இம்மாதாளி 1908-ம் வருஷம் பம்பாய் சர்வ கலாசாலை எல். எம். எஸ். பரீக்ஷையில் தேறி இங்கிலாந்துக்குச் சென்றார். இவர் பிரான்ஸ், ஜெர்மனி முதலிய இடங்களிலுள்ள பற்பல ஆசுபத்திரிகளையும் அங்கே சிகிச்சை செய்யும் நூதன முறைகளையும் செவ்வனே பார்த்திருக்கிறார். இவர் பம்பாய்க்குக்கூடிய சீக்கிரம் திரும்பி வருகிறார்.

மிஸ். ஹமாபாய் பிராம்ஜிபதித் என்ற மாதும் மிஸஸ் ரத்னுபாய் என்பவரும் ஜுவிஸ்மீட்டிங்கில் ஆகாய விமானமேறி 1800 அடி உயரம் பறந்து காண்பித்தார்கள். இவர்களே முதல் முதல் ஆகாயத்திற் பறந்து சென்ற ஸ்திரீகளாம்.

*  *  *  *

பம்பாய்ச்சட்ட நிரூபண சபையில் கவர்னர் ஸர் ஜார்ஜ் கிளார்க் பம்பாயில் ஸ்திரீகள் தற்காலத்தில் அறிவை விருத்தி செய்வதற்குத் தீவிரமாய் முற்பட்டிருப்பதாகவும் அவர்களுக்கென்று பிரத்தியேகமாய் ஓர் கலாசாலை அவசியமென்றும், அதனை ஸ்தாபிக்க முயல வேண்டுமென்றும் பேசினர்.

*  *  *  *

பாரிஸ் நகரத்தில் ஒரு மின்சார சக்தியமைக்கப்பட்ட ஒரு தொட்டில் ஒன்று செய்திருக்கிறார்களாம். அத்தொட்டிலில் படுக்கவைக்கப்படும் குழந்தை அழுதால் உடனே மின்சார யந்திரங்கள் வேலை செய்யத்தொடங்கி தொட்டிலை அசக்கி ஆட்டிக்கொண்டிருக்குமாம். அப்போது அதில் ஏற்படுத்தப்பட்டுள்ள கிராமபோன் வாத்தியம் தாயார் பாடுவது போல பாடும் குழந்தை தூங்குகிறவரையில் தொட்டிலும் ஆடிக்கொண்டிருக்குமாம்.

*  *  *  *

நார்வே, ஸ்வீடன், அயர்லாந்து முதலியதேசங்களிலுள்ளகுருடர்களுள் பெண்களின் தொகையேமிகுதியாம். ஆனால், ஐரோப்பாவின் ஏனைய தேசங்களிலும் அமெரிக்காவின் ஐக்கியமாகாணங்களிலும் உள்ள குருடர்களுள் புருஷர்களின் தொகையே மிகுதியாம்.

*  *  *  *

பாரிஸ் நகரத்துக்கு 67 மைல் தூரத்திலுள்ள எவரே பட்டணத்தில் கௌரேயர் என்னும் ஸ்திரீ தன் இரண்டு வயதுள்ள பெண் குழந்தையை ஒரு கம்பத்தில் கட்டிவைத்து அக்குழந்தை இடுப்பில் தரித்திருந்த துணியில் நெருப்பு கொளுத்திவிட்டு கஷ்டப்பட்டுச்சாகும்பரியந்தம் பார்த்துக்கொண்டிருந்தாளாம். போன வருஷம் இவளுடைய மற்ற இரண்டு குழந்தைகளையு இப்படியே சாகஅடித்தாளாம். இவள் 10-வருஷங்கடுங்காவல் தண்டனை அடைந்திருக்கிறாள்.

*  *  *  *

லண்டனில் ஆங்கில ஸ்திரீகள் வோட்கொடுக்கும் சுதந்திரம் தங்களுக்கு வேண்டுமென்று மன்றாடி வருகிறது சகோதரிகளுக்கு தெரிந்திருக்கலாம் சென்றமாதத்தில் அதைப்பற்றிய ஒரு மசோதா கொண்டு வந்தனர். ஸர் எட்வர்டு கிரே, லாயிட் ஜார்ஜ் முதலியோர் கண்டனம் செய்து இதைப்பற்றி ஒரு மீட்டிங்கில் பேசினார்கள். அப்போது இவர்கள் பேரில் ஸ்திரீகள் கல்லையும் மண்ணையும் விட்டெறிந்தார்கள். போலீஸ்பந்தோபஸ்து இருந்து என்ன பண்ணுகிறது அவர்கள் பிழைத்தது புனர் ஜன்மமாய் விட்டது.



# பெண் கல்வி.

சித்திர சகிதமான் ஒரு மாதாந்த சஞ்சிகை.

கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்.—திருக்குறள்

தொகுதி I.] 1912௵ ஆகஸ்டு௴ [பகுதி 11

## இந்து ஸ்திரீ ரத்தினங்கள் நெ. 2.

### ராணி சம்யுக்தா.

(10-வது சஞ்சிகையின் 4-ம் பக்கம் தொடர்ச்சி).

சம்யுக்தை தன் பர்த்தாவை அடைய வேண்டுமென்ற விசாரம் மேலிட்டவளாய் சிறையிலிருந்து வெகுப்பிரயாசையுடன் தருந்த சமயத்தில் யுத்தகளத்தை நோக்கிவந்தாள். யுத்தம் எப்படியிருக்குமென்று அறியாத பெண்மணி தன்னுடைய புத்தியை சமயோசித மாகவும், சாவதானமாகவும் உபயோகித்து தன் நாயகனின் பிராணனை அபாரமான ஆபத்திலிருந்து காப்பாற்றினாள். நம் உத்தம தைரிய கதா நாயகி யுத்தகளத்துக்கு வந்தபின் தன் புத்திக் கூர்மையால் சைன்யத்தில் சில திருத்தங்கள் செய்து ஒருங்கு கூட்டி ஜயசந்திரனுடைய சேனைகளைச் சிதறடித்துத் துரத்தினாள். பிரித்விராஜன் சம்யுக்தையுடன் ஜயபேரிகை முடித்துக்கொண்டு டில்லி நகரம் சேர்ந்தான். சம்யுக்தை நல்லகுணவதி. மிகதாராள சிந்தையுடையவள். பிரஜைகளுடைய அன்பும் ஆதரவும் பெற்றவள். ஜனங்கள் தங்களுடைய குறைகளை முறையிட்டுக்கொண்டால் எந்தக்காரியம் எப்படியிருந்தாலும் அவைகளை முன் விசாரிக்கும்படி தன் பர்த்தாவை வேண்டிக்கொள்வாள். க்ஷத்திரிய தர்மங்களைக்கூர்மையாய்ப் படித்துப் பதியுடன் கலந்து ராஜாங்கத்தைச் செவ்வையாய் நடத்த முயற்சிசெய்து கொண்டிருப்பாள். ஆழ்ந்த பதிபக்தியுடையவள். யுத்தமுறைகளை சரியாய்க்கற்றவள். தைரியலட்சுமியே அவதாரம். இவள் குணங்களை வர்ணிக்க விரி

யும். இப்படி, இராஜ தம்பதிகளிருவரும் சிலகாலம் பாலும் தண்ணும்போல் பிரியாதவர்களாய் சுகமாகவாழ்ந்துப் பிரஜைகளைப் பிள்ளைகள் போல் பாவித்து அஷ்டைஸ்வர்யம் பொங்கப் பரிபாலித்து வந்தார்கள். நிற்க, ஜயசந்திரன் தோல்வியடைந்தது மல்லாமல் அவனுடைய குமாரத்தியும் அபகரிக்கப்பட்டதனால் ஆக்ரோஷம் அதிகரித்து பிரித்விராஜனை சம்ஹரிக்க சமயம் பார்த்துக்கொண்டிருந்தான். இந்த சமயத்தில் அதாவது உள் நாட்டரசர்கள் பரஸ்பரம் துவேஷம் கொண்டவர்களாயிருக்கிறதைக் கண்டு மகமத் கோரி யென்னும் ஒரு மகமதியன் சிலபேர்களை இட்டிக்கொண்டு இந்தியாவின் மீது படையெடுத்து வந்தான். வரும்போது அநேக நாடு நகர்களையும் தேவாலயங்களையும் இடித்தும் அழித்தும் தரையோடு தரைசெய்தும் குழந்தைகள் முதற்கொண்டு துண்டு துண்டாகவெட்டியும் தேசமுழுமையும் இரத்த வெள்ளமாக்கியும் இந்து ஸ்திரீகளின் பாதிவ்ரத்யத்தைக் கெடுத்தும், சிலரைச்சிறைசெய்தும் வந்தான். ஜனங்களை அடிமைகளாக்கி தன்னுடைய மூர்க்கத்தனத்தை கங்கு கரையில்லாமல் காட்டினான். சுருக்கிச் சொல்லின் கால்வைத்த இடமெல்லாம் கரியாகச் செய்தான். இத்தீச்செயல்களைப்பொறுக்க வொண்ணாதவும் மனுப்படி தவறாதவும் தன் பிரஜைகளை ஆண்டு வந்த பிரித்வி மகமத் கோரியைச் சிட்சிக்க முயன்றான். மற்ற சிற்றரசர்கள் எல்லோரும் ஜயசந்திரனைத்தவிர, பிரித்விராஜனுக்கு உதவிசெய்ய வாக்களித்தார்கள். ஜயசந்திரன் பிரித்விக்கு உதவிசெய்யாமற் போனாலும் மகமத் கோரி பக்கமும் சேரவில்லை. இது பிரஜைகள் செய்த பெரும் பாக்கியம் தானே யொழிய வேறில்லை.

பிரித்விராஜன் கோரிசைன்யத்தைத்திலாவடிஎன்னுமிடத்தில் முறியடிக்ககோரி புறங்காட்டிஓடிவிட்டான். பிரித்விராஜன்ஜயபேரி முழங்க ஜயக்கோலமாய் டில்லியில் பிரவேசித்தான். ஜயசந்திரன் பிரித்விராஜனின் ஜயத்தைக்கேள்விப்பட்டதும் மிகப்பொறாமை கொண்டு அவன் கர்வத்தைக்கேவலம்ஒருநீச்சஉபாயத்தினாலாவது அடக்கவேண்டுமென்றுதீர்மானித்து அதற்குபாயமாகச்சியாலோசனைகளைச்செய்துவந்தான். கோரி டில்லியின் மீது படையெடுத்து வந்தால் அதற்குத் தானும் வேறு அரசர்களும் சகாயம் செய்வதாக ஒரு தூதனிடம் கோரிக்குச் செய்தி அனுப்பிவித்தான். ஜயசந்திரன் ஆதரவை உத்தேசித்து கோரி தைரியமாய் டில்லியின்





மீது படையெடுத்து வந்தான் பிரித்விக்கு அபஜயம் நிச்சயமென்று ஜயசந்திரன் குதூகலித்து இருந்தான். துஷ்டர்கள் தம் செய்கைகளால் நாட்டுக்குக் கேடுவருமென்று தெரிந்தாலும் செய்யப் பின்வாங்கார்கள். காளந்தி நதிக்கரையில் ஜயசந்திரன் முகாம் அடித்து சந்தோஷித்திருந்தான். தற்சமயம் அவன் சேவகன் பகைவரிடமிருந்து ஒரு ராய பாரி வந்திருக்கிற செய்தியைத் தெரிவிக்க, ராய பாரியை மட்டும் உள்ளேவிடும்படி சொல்லிவிட்டுக் கத்தியைக்கைக்கொண்டு தயாராயிருந்தான். ராயபாரி ஜயசந்திரன் இருக்குமிடம் வந்து சாஷ்டாங்கமாக நமஸ்கரித்தான். ராயபாரி நம் கதாநாயகியாகிய சம்யுக்தை. இவளைத்தன் குமாரத்தி என்று அறிந்துகொண்டு ஜயசந்திரன் "உன் கோரிக்கை என்ன?" என்று கேட்டான்.

"பிதாவே! நான் தங்களுடைய உத்திரவைப் பெற்று நம் நாட்டுக்குப் பகைவனாகிய கோரியைக்கொல்ல வந்திருக்கிறேன். இச்சமயத்தில் தங்களுடைய ஆசீர்வாதமிருந்தால் ஜயம் உண்மை" என்று சம்யுக்தை மறுமொழி சொன்னாள். ஜயசந்திரன் தன் மகள் சொன்ன பதிலைக்கேட்டு, "அடி, அபேச்சைக்காரி! இனி உண்டாகும் பிரஜா க்ஷேமத்துக்கு எல்லாம் மூலகாரணமாயிருப்பவள் நீதானா? நீ இங்குதோன்றியதால் என் கோபத்தையும் ஆக்கிரகத்தையும் மூட்டி விட்டதன்றிவேறொன்று மில்லை" என்று சொன்னான். "பிதாவே, ஜன்ம பூமிமீது சற்றுகடைக் கண்ணால்பாரும் அனாதரவான ஸ்திரீகளின் மானத்தைக் காப்பாற்றும். நாமெல்லாம் வணங்கும் விக்கிரகங்களுக் கெல்லாம் நாசமுண்டாகும்படி சகாயம் செய்யவேண்டாம். நம் சுதந்திரத்தை இழந்துவிட்டால் பிறகு நாம் மிகவும் துக்கப்படவேண்டும்" என்று கேட்டுக்கொண்டாள்.

இதைக்கேட்டு மிக்கக் கோபமுண்டு ஜயசந்திரன், "நீ வாய் மூடிக்கொண்டு போ. துஷ்டையுடன் நான் பேசமாட்டேன்" என்று சொன்னான்.

"ஆனால் என் பிரார்த்தனையெல்லாம் வீணாய் போயிற்றா?" என்றாள். அவள் ருத்திர ரூபியாய் தந்தையைப்பார்த்து மேலும் சொன்னாள்:

"முன்னோர்கள் சம்பாதித்து வைத்துள்ள கீர்த்தியைப் பாழாக்கி உன் அபகீர்த்தியைப் பிரபல்யப்படுத்துவதற்குமுன் உன் புத்

திரியாகிய நான் அந்த அபகீர்த்தியைக் கேட்பதற்குமுன் ஏன் கொன்றுவிடவில்லை? சுதேசத்துரோகிக்குப் புத்திரி என்ற பெயர் எனக்கிருப்பதைக் காட்டிலும் நான் இறப்பதே மேல் என்று தோற்றுகிறது. தாங்கள் என் பிதாவாயிருப்பதால் இவ்வளவு தூரம் சொன்னேன்."

பெண்சிங்கம்போல் எதிர்க்கும் புத்திரிக்குச் சரியான பதில் கூறத் தெரியாமல் இடம் விட்டு எழுந்து குதிரையேறி துருக்கர் சைந்நியம் தங்கியிருக்கும் இடத்துக்குச் சென்றான். சம்யுக்தை தந்தை திரும்பிவருவார் என்று நினைத்துச் சற்றேதாமதித்திருந்து, அவர் வருவதைக்காணாது மறுபடியும் தன் நாயகனிடம் சென்றாள். எதிரிகளின் சைந்நியபலத்துக்குத் தன்சைந்நியம் மிக்கக்குறைந்திருப்பதைக் கருதி தனக்கு அபஜயமுண்டாகுமென்று சம்யுக்தையுடன் பிரித்விசொன்னான். தம்பதிகள் சற்றும் மனக்கிலேச மடையாமல் ஒருவருக்கொருவர் நீதிகளையும் க்ஷத்திரிய தர்மங்களையும் சொல்லிக்கொண்டிருந்தார்கள்.

சம்யுக்தை பிரித்விக்கு நமஸ்காரம் செய்து வணக்கமாக ஒரு வார்த்தை சொல்லுகிறாள்:

"தாங்கள்க்ஷத்திரியராதலால் யுத்தத்துக்குத்தயாராயிருங்கள். க்ஷத்திரியர்கள் தங்கள் தேசத்துக்காக உயிரிழப்பது உத்கிஷ்டமானது. தர்மயுத்தம் செய்து சற்கீர்த்தியையடைவது தான் ஜன்மசாபல்யம். தங்களுக்கு ஜயமடைந்தால் இருவரும் க்ஷேமப்படுவோம். சுகமாயிருப்போம். இல்லாவிட்டால் தங்களுடன்சுவர்க்கத்துக்குச் சீக்கிரமே வந்து விடுவேன்".

இதைக்கேட்ட பிரித்வி, "சகிமேணி, என்தேகத்தில் உயிருக்கிறவரை சத்துருவுக்கு முதுகு காட்டமாட்டேனென்பதைத் திடமாய் நம்பு. என் சைந்நியத்திலுள்ளவர்களும் கீர்த்திபெற எண்ணமுடையவர்களாதலால் அவர்களும் முதுகு காட்டமாட்டார்களென்றே நம்புகிறேன்." என்றான்.

"தேவரீர், டில்லியிலுள்ள ஸ்திரீகள் தங்கள் மானத்தைக் காப்பாற்றிக்கொள்ள சக்தியில்லாதவர்களாதலால், நான் அங்கே சென்று அவர்களுக்கெல்லாம் தைரிய மூட்டுகிறேன். நான் இங்கேயேயிருந்தால் அவர்கள் என்ன செய்வதென்றறியாமல் பிரமித்திருப்பார்கள். எது எப்படியிருந்தாலும் அவன் தங்களை





ஜயித்து டில்லிக்கு வந்தால் ஒரு ரஜபுத்ர ஸ்திரீயும் அவனுக்கு அகப்படாள்" என்று சொல்லி விடை பெற்றுக்கொண்டு டில்லிக்குப்போனாள். பரமேஸ்வரனைத்தன் புருஷனுக்கு ஜயமுண்டாகும்படி அனுக்கிரகம்செய்ய மிகவும் பிரார்த்தித்துக்கொண்டாள். இம்மாதிரியே டில்லிப் பெண்களெல்லோரும் பரமேஸ்வரனை வேண்டிக்கொண்டார்கள். கடைசியில் ஓர் நாள் இருசேனைகளுக்கும் பிரமாதமான போர் தொடங்கிற்று. தும்புகள் மேகம்போல் மேலெழும்பி சூரியனை மறைத்தன. சற்றுநேரத்துக் கெல்லாம் யுத்தகளத்தில் இரத்தவெள்ளப் பெருக்கெடுத்தது. பிணங்கள் குவியல் குவியலாகச் சேர்ந்தன. பிரித்விராஜனுக்கு அபஜயமுண்டாயிற்று. ஆனாலும் யுத்தத்தில் சரணமடைந்தவனாவது, முதுகு காட்டி ஓடினவனாவது ஒருவனுமில்லை. பிரித்விராஜனும் அமர்க்களத்தில் மடிந்தான் என்று சொல்லிக்கொள்ளப்படுகிறது. கோரி ஜயமடைந்து பிரித்வியைச் சிறைபிடித்து கண்ணைத்துளைத்து காராக்கிரகத்தில் அடைத்து விட்டானென்றும் ஒரு விருத்தாந்தம் உண்டு. பலர் பலவிதமாகச் சொல்லுகிறார்கள். இவைகளில் எது உண்மையோ தெரியவில்லை. சம்யுக்தை கோரி ஜயமடைந்ததைக் கேட்டும், தன் பர்த்தாவும் மற்றசைந்யங்களும் யுத்தகளத்திலே முதுகு காட்டி ஓடாமல் சண்டைபோட்டு இறந்தார்களென்பதைக் கேட்டும் டில்லியில் பெரிய அக்னி குண்டம் வளர்த்துத் தானும் டில்லியிலுள்ள ஸ்திரீகளும் மிகச்சந்தோஷமாக அக்னிப்பிரவேசம் செய்து சுவர்க்க லோகம் அடைந்தார்கள். கோரி டில்லியில் வந்து பார்க்க எல்லாம் சாம்பல் மலையாகக் காணப்பட்டது. வெட்கி கோரி திரும்பிச் சென்றான்.

---

## பார்யா லக்ஷணம்.

---

(10-வது சஞ்சிகையின் 8-வது பக்கத்தின் தொடர்ச்சி).

மனைவியானவள் சரீரத்தின் அவயவங்களை நன்றாய்த் தேய்த்து ஸ்நானஞ் செய்யாமை, மலினமானவஸ்திரந்தரித்தல், நெற்றியில் திலகமில்லாமை, கண்ணுக்கு மையிடாதிருத்தல், சந்தனம் புஷ்ப முதலியவற்றைத் தவிர்த்தல், நகங்களைச் செம்மை பண்ணிக்கொள்ளாமை, மயிரைவாரிக்கொள்ளாதிருத்தல், பற்களை நன்

றாய்த்தேயாயிருத்தல், முதலியனயாவும் பர்த்தாவுக்கு வருத்தத்தைக்கொடுக்கக் கூடியன. ஆதலால் மனைவியானவள் வீட்டுக்காரியங்களைச்செய்து முடித்தபின் (வேர்வை, ஊத்தை, துர்கந்தம்) முதலியவைகள் போகும்படி சுத்தமான ஜலத்தில் மஞ்சள் பூசி ஸ்நானஞ்செய்து இரமணீயமாகத்தன்னை வஸ்திர ஆபரணாதிகளால் அலங்கரித்துக் கொள்ளவேண்டுமென்று பத்மபுராணம் பிரமாணப்படுத்துகின்றது.

அப்படி யலங்காரஞ்செய்து கொள்ளாத மனைவியைப்பார்த்த பர்த்தாவுக்கு அவளிடத்திற் பிரியமும் களிப்பும் உண்டாகாது. அவையுண்டாகாவிடில் கர்ப்பாதானமும் உண்டாகாது. ஸ்திரீயானவள் அலங்காரத்தினால் தன்னை யழகு படுத்திக் கணவனுக்குப் பிரியத்தையுண்டாக்குவதினால் அக்குலம் விளங்கும்படியான ஏதுக்கள் உண்டாகின்றது. குலம் விளங்குவதற்காகவே கிரஹாச்சிரமம் ஏற்பட்டிருப்பதால், மனைவியானவள் அலங்காரம் செய்து கொள்ளாத பக்ஷத்தில் கணவனிடத்தில் பிரியங்கெட்டுச் சேர்க்கையற்றுக்குல உற்பவமும் கெட்டு விடுகின்றதென்று மனுஸ்மிருதி பிரமாணப்படுத்துகின்றது. ஆகலால், குலமாதர்கள் பளபளப்பான அநேக ஆபரணங்களை அணிவதும், நல்ல உடை தரிப்பதுமாகிய அலங்காரங்களின் பலன் அவர்களுடைய பர்த்தாபார்த்துக் களிப்பதற்கேயன்றி மற்றோர் கண்டு ஆசைப்படுவதற்கு அல்ல. இதையே குமாரசம்பவம் பிரமாணப்படுத்துகின்றது. ஆகையால் ஊரார் பார்ப்பதற்காகவும், தற்பெருமைக்காகவும், அலங்கரித்துக் கொள்வது அறிவீனர்களின் தொழிலென்பதையும், குலஸ்திரீகளுக்குத் தக்கதல்ல என்பதையும் குலமாதர்கள் உய்த்துணர வேண்டுவதுடன் கணவன் வெளியூருக்குப் போயிருக்கும் சமயத்தில் மனைவி தன்னை அலங்கரித்துக் கொள்ளகூடாது என்ற விஷ்ணுஸ்மிருதியின் பிரமாணப்படி மங்களார்த்தமான சில ஆபரணங்களைத்தவிர வேறு ஆபரணங்களை அணிந்து கொள்ளக் கூடாதென்று அக்கிரிதி பிரமாணப்படுத்துவதையும் கவனிக்க வேண்டும். மங்களார்த்தமான ஆபரணங்கள் யாதென்றால் கணவன் ஜீவித்திருப்பதாகக் குறிப்பிக்கக்கூடியதான கழுத்தில் தரிக்கும் மாங்கல்ய சூத்திரம், நெற்றியிலிடும் குங்குமம், ஸ்நானஞ்செய்யும் காலத்தில் பூசும் மஞ்சள், பளபளப்பில்லாத வஸ்திரம் முதலியனவாம்.





மனைவியானவள் கௌசலம், உஜ்வலதை, பாகம், மானம், உபசாரம் ஆகிய இவைகளால் தனக்குச்சமானரான பெண்களைக் காட்டிலும் அதிக மேன்மையை அடையலாமென்று வாத்ஸ்யாயந சூத்திரம் பிரமாணப்படுத்துவதால் கௌசலம், என்பது நியமித்த காரியத்தை நன்றாய்ச்செய்யும் திறமை, வரவைக்காட்டிலும் சொற்பமாகச் செலவு செய்தல் முதலியவாம். உஜ்வலதையென்பது முகம் முதலிய அவயவங்களிலிருக்கும் மங்களகரமான பிரகாசமாம். இதை இலக்ஷ்மீகரமான சோபையென்றும், களையென்றும் சொல்வார்கள். ஒரு பெண் எந்த நிறமாயிருந்தாலும் மேற்கூறிய காந்தியை யுடையவளாயிருந்தால் அவளை ரூபவதியென்று சொல்லப்படுவாள். ஆகையால் கறுப்பு நிறம் அழகு அல்ல என்றும், மஞ்சள் நிறம் அழகு என்றும் சொல்வது ஞாயவிரோதம். ஆதலால் ஒரு பெண் எந்த நிறமாக இருந்தாலும் அவளிடத்தில் மேற்கூறியசோபை யிருக்குமேயானால் அவளை மனைக்கு மகாலக்ஷ்மியென்று சொல்லலாம். பாகம் என்பது சமையல் சுத்தமாகவும் நாவிற்கு ரஸமாகவும் இருக்கவேண்டும் என்பதேயாம். அதாவது நன்றாய்ச் சமைக்கப்பட்டதாயும், எண்ணெய் நெய்களையுடையதாயும், ரஸமானதாயும், ரம்மியமானதாயும் இருக்கின்ற பாகம் எவளுடைய கையிலிருந்து உண்டாகின்றதோ, அவளை பதிவிரதையென்று சொல்லப்படுவாள். மானம் என்பது சஞ்சலமில்லாத மனமுடையவளாயிருக்கும் தன்மையாம். அதாவது, குடும்பத்தில் வரும் கஷ்டங்களில் மனந்தளராமை, லோக அபவாதத்திற்குப் பயந்து தரித்திரமான காலத்திலும் கெட்ட காரியங்களைச் செய்யாமை, ஆபத்தான காலத்திலும் துன்மார்க்கத்தில் பிரவேசியாமல் தைரியமாக இருத்தல், கணவன் செய்யும் நிர்பந்தங்களைப் பொறுத்துக்கொண்டிருக்கும் உறுதி, தன்பெருமையைக் காப்பாற்றுதல் முதலியனவாம். உபசாரம் என்பது அன்போடும், மனமலர்ச்சியோடும் பர்த்தாவுக்குச் செய்யும் பணிவிடையாம். இந்தக்காரணத்தினாலேதான் குலமகட்கழகு தன் கொழுநனைப்பேணுதல் என்றும், பதிவிரதை பர்த்தாவுக்குப் பணிவிடைத் தெய்வம் என்னும் நீதிவாக்கியங்களும், பர்த்தாவுக்குச் செய்யும் பணிவிடையின் சிரமத்தை அன்பு இலேசாக்குகின்றது என்ற பதிவிரதைகளின் வாக்கியமும் ஏற்பட்டிருக்கின்றன. இக்கருத்தைக்கொண்டு தான் ஸ்திரீகளுக்

குப் பதிசுச்ரூஷையைத்தவிர வேறு விரதமில்லையென்று இராமாயணத்தில் கூறப்பட்டிருக்கின்றது.

ஆகையால், மனைவியானவள் ஸ்நானாதி நியமத்துடன் சமையலறைக்குப்போய்ப் போஜன பதார்த்தங்களைச் சுசிகரமாகவும், ருஜிகரமாகவும் சமைத்துக் காலந்தவறாமல் கணவனுக்குப் படைத்து அவன் உண்டு திருப்தியடைந்த பின்பேதான் புசிக்கவேண்டும். சமைப்பதற்கு முன் முக்கியமாகக் கவனிக்கவேண்டிய விஷயம் ஒன்று இருக்கின்றது. அதாவது, இந்தப் பதார்த்தம் கணவனுக்குப் பிரியமானதா அல்லவா என்பதை முதலில் ஆலோசித்துத் தீர்மானப்படுத்திக்கொண்டு, பின்பு தீர்மானித்துக் கொண்ட பதார்த்தம் கணவனுடைய சரீரத்துக்குச் சுகத்தைக் கொடுப்பதா அல்லது தீங்கையுண்டாக்குவதா, என்று கவனித்துப் பிரியமில்லாததும், தீங்கையுண்டாக்குவதுமான வஸ்துக்களை நீக்கிவிட்டு, பிரியமானதாயும், நன்மையுண்டாக்குவதுமுள்ளதென்று தெரிந்துகொண்ட பதார்த்தங்களையே சேர்த்துக்கொண்டு வருவது மனைவியின் அத்தியாவசியமான கடமையாம். ஏனென்றால் தாய்க்குப்பின் தாரம் என்பதுபோல தாயானவள் இளமைப்பருவத்திலிருக்கும் தன்மகனுடைய சரீரநிலைமை முதலியவைகளைத் தெரிந்து இனிய பத்தியமான உணவுகளால் போஷித்ததற்குப் பின் அவனுடைய மனைவி அவன் தாய்போலவே போஷித்துக் கண்ணை இமைகாப்பதுபோல பாதுகாத்து வரவேண்டும். அவ்விதம் போஷிப்பதானது தன்னிடத்தில் பர்த்தாவின் பிரீதியை விருத்தி செய்துகொள்வதற்கு ஓர் சிறந்த உபாயமாகவும் இருக்கும். மனைவியானவள் பர்த்தாவுக்கு அனுகூலமாயிருப்பதே சுவர்க்கமென்பதற்கும் பிரதிகூலமாயிருப்பதே நரகமென்பதற்கும் சந்தேகமேயில்லையென்று தக்ஷஸ்மிருதி பிரமாணப்படுத்துகின்றது. ஆதலால் மனைவியானவள் தன் கணவனிடத்தில் அந்தரங்க விஸ்வாச பக்திவைத்து அவனைத் தன் உயிராகப் பாவித்து அவன் இஷ்டப்படி நடந்துகொள்ள வேண்டும். ஒரு சமயம் வெளியே போயிருக்கும் கணவன் வீட்டை நோக்கி வரக்கண்டமனைவியானவள் என்ன சுச்ரூஷை பண்ணவேண்டும் என்று எதிர் நோக்கினவளாகவும், அதைச்செய்ய ஆயத்தமானவளாகவும், கூடத்தில் வந்து நின்று அவ்வேலைகளைச் செய்ய வேலைக்காரர்கள் இருந்தாலும் அவர்களைச் செய்யவொட்டாமல்





தடுத்துத்தானே வேண்டிய உபசாரங்களைச் செய்வதே அன்புக்கழகு ஆதரவு என்பது போல அன்பின் அழகைத் தெரிவிக்கும்படியான ஆதரவு ஆகும். ஆதரவு இருந்தால் மட்டுந்தான் அன்பு பிரகாசமாகத் தோன்றும். கணவன் வெளியிலிருந்து வீட்டிற்கு வரும்போது எதிர்கொள்ளல், அவனோடு பேசும் பொழுது அடங்கிப்பேசுதல், அவன் பாதத்திலேயே பார்வையைச் செலுத்தல், ஆசனங்கொடுத்தல், அவனுக்குத்தானே பணிவிடை செய்தல், அவன் தூங்கின பிறகு தான் சயனித்தல், அவன் எழுந்திருப்பதற்கு முன் தான் படுக்கையை விட்டு எழுந்திருத்தல்—ஆகிய இவைகள் குலஸ்திரீகளது ஒழுக்கங்கள் என்று வாத்ஸ்யாயன சூத்திரமும், எவள் கணவனுக்குப் பின் தூங்கி அவன் எழுந்திருப்பதற்கு முன் எழுந்திருக்கின்றாளோ, எவள் பர்த்தாவைத்தவிர வேறு ஒருவரைத்தன் மனதில் விரும்பாமல் இருக்கின்றாளோ, அவளே பதிவிரதை யென்று பதுமபுராணமும் பிரமாணப்படுத்துகின்றது. ஆகையால் மனைவிக்குக் கணவன் மீது அந்தரங்க பக்திவிஸ்வாசம் இருக்கவேண்டியது அவசியமாகும். வேசிக்கு அந்தரங்க விஸ்வாசம் இல்லாததினால், மனைவிக்கும் அந்தரங்க விஸ்வாசம் இல்லாவிடில் அவளும் வேசியேயன்றிக் குலஸ்திரீயாகமாட்டாள்.

வே. முத்தனாசாரி,
பழனிஸ்தலம்.

---

## பிரசங்கிகளுக்கு நன்மதிகள்.

---

தற்காலம் நமது இந்தியாவில் படித்த புருஷர்களில் அநேகர் இதரதேசங்களைப்போல் நமது தேசமும் முன்னுக்கு வரவேண்டுமென்று நானாவழிகளில் முயற்சி செய்துவருகிறார்கள்.

இவர்களில் சிலர் வியாபாரம் செய்து சுதேசத்தொழிலை அபிவிருத்தி செய்கிறார்கள். சிலர் பள்ளிக்கூடங்கள் ஸ்தாபித்து படிப்பை விருத்திசெய்து வருகிறார்கள். சிலர் தேச முன்னேற்றத்துக்கு மதம் அவசியமென்று சங்கங்கள் ஏற்படுத்தி ஜனங்களுக்கு உபதேசம் செய்துவருகிறார்கள். சிலர் பத்திரிகைகளைப் பிரசுரப்படுத்தி ஒவ்வொரு தேசத்து சமாசாரங்களையும் வெளியிட்டு நாம் அறிந்து நடந்துகொள்ள வேண்டிய பல அருமை பெருமை பொருந்

திய விஷயங்களைத் தெள்ளிய நடையில் எழுதிவிடுத்து உபகாரம் செய்து வருகிறார்கள். இன்னும் சிலர் ஊர் ஊராய்ப்போய் பிரசங்க மூலமாக சத்விஷயங்களைப் போதித்து வருகிறார்கள். ஆக எல்லோருக்கும் நோக்கம் ஒன்றுதான். சிலகாலமாக நமது சகோதரிகளும் தங்கள் நிலையை அறிந்து சகோதரர்களைப்போல் கல்வியின்மை என்கிற இருளிலிருந்து நீங்க மேற்போன்ற அநேக துறைகளில் வேலை செய்யத்தலைப்பட்டிருக்கிறார்கள். இவர்களில் பெரும்பான்மையோர் மற்றெத் துறைகளைக் காட்டிலும் பிரசங்கங்கள் தங்கள் நோக்கத்திற்கு முக்கிய சாதனமென்றும் மேலும் சீக்கிரத்தில் கைகண்டப் பிரயோஜனத்தைத்தருமென்றும் கருதி மத விஷயமாகவும் ஆசார சீர்திருத்த விஷயமாகவும், கல்வி விஷயமாகவும் பிரசங்கம் செய்துவருகிறார்கள். இப்படி இவர்கள் செய்து வருகிறது நமக்கு ஆனந்தத்தைக் கொடுக்கிறது.

பிரசங்கிகள் உபந்நியாசம் செய்யத்தலைப்படுமுன் கவனிக்க வேண்டிய சில அம்சங்களிருக்கின்றன. முக்கியமாய் நம் சகோதரிப் பிரசங்கிகள் கவனிக்கவேண்டிய விஷயமென்று கருதி இங்கு இண்டர்நாஷனல் பப்ளிக் ஸ்பீகிங் நிகழ்ச்சிச் சங்கத்தின் ஸ்தாபகராகிய மிஸ்டர் கிரன் வில்லி கிளீசர் என்பவர் பிரசங்கிகள் அறிய வேண்டுமென்று வெளியிட்டிருக்கிற சில அம்சங்களை மொழி பெயர்த்துக் கீழ் வரைந்திருக்கிறோம்.

1. பிரசங்கத்துக்குத் தயாராயிரு. 2. அக்ராசனாதிபதி பேசக் கூப்பிட்டவுடன் சடுதியில் எழுந்து நில். 3. மெதுவாக ஆரம்பம் செய். 4. கேட்போர்க்கு மனதில் நன்றாகப்புரியும்படி பேசு. 5. சபையோர்களெல்லோருக்கும் கேட்கும்படி உரக்கப் பேசு. 6. மரியாதையாய்ப் பேசு. 7. வாக்கியங்கள் சிறியதாயும் அழகாயுமிருக்கட்டும். 8. உதாரணங்களை எடுத்துக்கையாள். 9 பிரசங்கம்செய்யும் உன் வழியைத்தெரிவிக்காதே. 10. உன்னைப்பற்றி நீ நிச்சயமாயிரு. 11. மனங் கலங்கும்படி வைத்துக்கொள்ளாதே. 12. சபையோரைப்பார் 13. அங்குமிங்கும் சாயாமலும் கைவிஷமம் செய்யாமலும் நிமிர்ந்து நில். 14. தொண்டையைச் சுத்தப்படுத்திக்கொள். 15. கம்பீரமாகப் பேசு. 16. ஜனங்களைப்பார்த்துப் பயந்துவிடாதே. 17. ஜனங்கள் மனதை உன் விஷயத்துக்குக் காந்தம்போல்இழு. 18. நிறுத்த வேண்டிய இடத்தில் நிறுத்திப்பேசு. 19. வணக்கமும் ஒடுக்கமும்



தேவை. 20. ஜன அபிப்பிராயத்துக்கு விரோதமாகப் பேசாதே. 21. ஜனங்களை விட்டுப்பிடித்து உன் வசமாக்கிக் கொள். 22. பிரசங்கம் ஜனங்கள் வழங்கும் நடையில் இருக்கட்டும். 23. உன் விரோதிகளைச் சமாதானம் செய்து கொள். 24. பிரசங்கம் தொடர்ச்சியாக இருக்கட்டும் 25. வாயைத்திறந்து பேசு. 26. படபடப்புஇல்லாமல் கம்பீரத்தொனியுடன் பேசு. 27. ஊக்கம், ஏகாக்ர சித்தம், மனநேர்மை, சாதுர்யம் இவைகளை விருத்திசெய். 28. ஜனங்களுடன் சந்தோஷமாய்க் கூடியிரு. 29. கர்வம் கொள்ளாதே. 30. பிரசங்கத்தை சீக்கிரம் முடி.

எப்போதும் பிரசங்கம் செய்யப்பழகுவோர் இந்த நன்மதிகளை ஒரு அட்டையில் ஒட்டி தங்கள் பார்வைமுன் வைத்துக் கொள்வது மிகுந்த பலனைத்தரும்.

பார்வதி அம்மாள்.

---

## கிரஹமும் கிரஹிணியும்.

ஸ்திரீகள் தம் ஆயுள் முழுவதும் வெகுவாய் வீட்டிலேயே கழிக்கவேண்டுமென்று நம்மவர்களுள் வழங்கிவரும் வழக்கமானது மிகவும் கெடுதலாயிருக்கின்றது. வீட்டிலேயே யிருப்பதனாலும், சொற்ப ஜனங்களுடன் மாத்திரமே பழகுவதனாலும் ஸ்திரீகளுடைய மனம் பக்குவமற்றதாயும், உதாரகுணமற்றதாயுமிருக்கின்றது. சுத்தமான காற்று தேகாரோக்கியத்திற்கு எப்படி அவசியமாயிருக்கின்றதோ, அப்படியே பற்பல சுபாவங்களையுடைய மனிதர்களின் சகவாசம் மனம் விகாஸமடைய ஆவசியமாயிருக்கின்றது. ஸகவாசத்தினால் மனிதர்களின் அறிவு ஞானம் வளருகின்றது. அவர்களுடைய (ஹ்ருதயம்) விகாசமடைகிறது:

கிணற்றுத்தவளையின் நிலைமை விசித்திரமாயிருக்கின்றது. அதற்குத் தன்னுடைய அவகுணங்கள் இன்னதென்று விளங்குவதில்லை. அது கர்வம், சுயநலம், பொறாமை முதலியனவுடையதாயிருக்கின்றது. மனிதர்கள் துராக்கிரஹமும், பொறுமையின்மையும் பொறாமையுமுடையவர்களாயிருக்கிறார்கள். ஜனங்களுடன் பழகும்படியான சந்தர்ப்பங்கள் யாருக்கு அதிகமாய் நேரிடுகின்றதோ, அவர்களுக்குத் தங்களது நிலைமை இன்னதென்று தெரிய அவர்களுடைய கர்வம் குலைந்து போகின்றது.

புருஷர்கள் வேலைவெட்டி நிமித்தமாய் தங்கள் விவகாரங்களையெல்லாம் வெகுவாய் வீட்டிற்கு வெளியில் வைத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. ஸ்திரீகளுடைய வேலையோ பெரும்பாலும் வீட்டில் தானிருக்கிறபடியால் வெளியில் போகும்படியான ஸந்தர்ப்பங்கள் நேரிடுவது அவர்களுக்கு சொற்பம் தான். இத்தகைய தனிமையான வாழ்க்கையினால் நமது ஸ்திரீகளுள் சில இழிவான எண்ணங்களும், துராக்கிரஹமும் காணப்படுகிறது.

சுவாமி தரிசனத்தின் நிமித்தம் அல்லது கதை புராணம் கேட்கும் நிமித்தம் பழையகாலத்து ஸ்திரீகள் வெளியில் போயிக் கொண்டிருந்தார்கள். தற்காலத்துப் புதிய ஸ்திரீகளுக்கு சுவாமி தரிசனமும் வேண்டாம். கதை புராணமும் வேண்டாம். அதற்குப் பதிலாக சபை முதலியனவும் வெகுவாய் பிரசாரத்திற்கு வரவில்லை. யாரையாவது பார்க்கப்போக வேண்டுமென்றாலும் காரணமின்றி அடிக்கடி பிறர் வீட்டிற்குப் போவது உசிதமன்று. கிணற்றுத்தவளையைப்போல் வீட்டில் அடைப்பட்டுக் கிடப்பது அதிகரித்துக் கொண்டிருக்கிறது. இந்நிலைமை நல்லதன்று. சிரத்தையிருக்கப்பட்டவர்கள் சுவாமி தரிசனத்துக்கும், கதை புராணங்களுக்கும் போகவேண்டும். உலாத்தப்போக வேண்டும். சதாகாலமும் வீட்டில் அடைபட்டுக்கிடப்பது நலமன்று.

ஸ்திரீகள் அந்நியர் வீட்டிற்குப் போகும் வழக்கமானது பாம்பைத் தலையில் வைத்துக்கொள்வது போலாகுமென்று சிலர் சொல்லுவார்கள் இத்தகைய எண்ணம் இப்பொழுது ஒருவருக்கும் பிடிக்கிறதில்லை. இத்தகைய துர்எண்ணங்களையெல்லாம் தூர விலக்கி விடவேண்டும். தேகப்பயிற்சி சுத்தமான காற்று, இதற்காக ஸ்திரீகள் வெளியில் போவது ஆவசியமாயிருப்பதுமல்லாமல், ஸ்திரீகள் வெளியில் போவதற்கு வேறொரு காரணமுமுண்டு. பல ஜனங்களுடன் பழகினால் மனம் எல்லாவிதத்திலும் விகாசமடைந்து தேகத்தில் ஒருவிதமான, ஜாக்கிரதை, கேள்வி, பொருஷ தன்மை முதலியன அமைகின்றன. வெளியில் போகாதவர்கள் பத்துப் பெயர்களைக்கண்டால் பயந்து நடுங்குகின்றார்கள். எந்த சமயத்தில் எப்படிப் பேசவேண்டும், என்ன செய்யவேண்டும் என்று அவர்களுக்குத் தெரிவதில்லை.

கோஷா ஸ்திரீகளையும் நம் ஸ்திரீகளையும் பரிசீலித்துப் பார்த்தால் மேற்சொன்ன குணங்களின் தாரதம்மியம் நன்றாக





விளங்கும். எப்பொழுதும் படுதாவினுள்ளிருப்பதனால் அந்த ஸ்திரீகளினிடத்தில் அநேக நற்குணங்களின் குறைவுக்காணப் படுகிறது. இல்லாளானவள் சதாகாலமும் வீட்டில் அடைப்பட்டுக் கிடக்காமல் வீட்டிற்கு வெளியிலுள்ள உலகத்துடன் அதிக விவகாரம் வைக்கவேண்டும். நாளுக்கு நாள் இந்நாகரீகமான நிலைமைக்குக்கொண்டு வருவது நன்மையுண்டென்பதை அறிந்து அப்பிரகாரம் நடக்கவேண்டும்.

எஸ். எம். பாய்.

## தலைவலி.

மானிடசரீரமானது பலவகை நுட்பமான வேலைகளையியற்றும் பல கருவிகளிசைக்கப்பட்டமையப் பெற்றுள்ள ஓர் யந்திரம். மணியைக்காட்டும் கடிகார யந்திரத்தில் அது வேலை செய்ய எவ்வளவு சிறிய கருவிகளும் சக்கரங்களுமிருக்கின்றன பாருங்கள். ஏதாவதொன்றுக்கு பிசகு நேரிட்டுவிட்டால் கடிகாரம் வேலை செய்யாமலிருக்கிறது, அல்லது மணியைச் சரியாய்க்காட்டுவதில்லை. இதற்குக் காரணத்தை ஆராய்ந்தறிந்து அக்கருவியைச் செம்மைப் படுத்துவோமானால் அது தன் தொழிலை சரிவரச் செய்கிறது. கடிகாரம் கேவலம் மனிதனால் செய்யப்பெற்றது. மனிதனுடைய புத்திகோசரம் சாதாரணமானது. சர்வஞ்ஞரால் நிர்மாணிக்கப்பட்ட மானிட சரீர அமைப்பில் உபயோகமாயிருக்கும் புத்திகோசரம் அபாரமானது. புத்திச்சாதுர்யத்துக்கேற்ப வேலைத்திறனுமிருக்குமன்றோ? மானிடசரீரம் எவ்வளவுகாலம் ஜாக்கிரதையுடன் போற்றப்பட்டுக் காப்பாற்றப்படுகிறதோ அவ்வளவு காலம் வாழ்ந்திருக்கும். கடிகாரம் சிலர் கவனமிகுதியாலும் சிரத்தையாலும் அநேக வருஷங்கள் ரிப்பேர் ஒன்றுமேயில்லாமலிருப்பது போலாம். கடிகாரத்திலுண்டாகும் கோளாறுகளுக்குக் கடிகாரச் சொந்தக்காரர் உத்தரவாதி. அது போலவே மானிடசரீரத்துக் கேற்படும் கோளாறுகளுக்கு அவன்தான் ஜவாப்தாரி. கடிகாரத்தை உபயோகிப்பவனுக்கு அதன் கடிகார அமைப்பும் வேலையும் தெரிந்திருந்தால் பிசகுகள் நேரிடாதபடி அவன் கடிகாரத்தைப்பார்த்துக் கொள்ள சாத்தியமாதல் போல, சரீர அமைப்பைபற்றிய ஞானமுள்ள ஒருவன் அதிக

காலம் நோயற்றவாழ்வு வாழக்கூடும். மானிடராயுள்ளோர் அனைவருக்கும் தேகதத்துவ சாஸ்திரஞானம் அத்தியாவசியமானது. இந்த ஞானக்குறைவாலேயே மானிடர் பலவித நோய்க்குள்ளாய் வாழ்க்கையை மிக வருத்தத்துடன் கழிக்கிறார்கள்.

தலைவலி, தலைஇடி, தலைக்குத்தல் முதலியன மானிடருக்குண்டாவது சகஜம். இது இனி உண்டாகவிருக்கும் ஒரு நோயிக்கு மழைக்கு இடி உற்பாதமாயிருப்பது போல உற்பாதமாயுமிருக்கும். தலைவலிகள் பலவிதம். அவற்றுள் அஜீரணத் தலைவலிதான் மிகவும் சகஜம். சிலருக்கு நரம்புத்தலைவலி உபத்திரவமுண்டு. வாழ்க்கைக்கு வருங்கேடெல்லாம் வாயாலே தான். அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் விஷமாகும். இதையறிந்தும் பலர் வயிறு புடைக்கத்தின்று விட்டுப் பிறகு கஷ்டப்படுகிறார்கள். சரீரத்திலுள்ள கருவிகளுக்கெல்லாம் கிரமமான வேலை நியமமாய்க்கொடுத்தால் மட்டுமே, அவைகள் சரிவரச்செய்து முடிக்கும். செய்ய இயலாதளவு கொடுத்தால் அக்கருவியின் வேலை கெடுவதுடன் அதைச் சார்ந்திருக்கும் மற்றக் கருவிகளுடைய வேலைகளும் கெட்டுப்போகும். உணவு ஜீரணிக்கும் விஷயத்தில் இரப்பையுங் குடலும் மிகுதியும்வேலை செய்கின்றன. இவைகள் தங்களால் கூடியளவு செய்துவிடுகின்றன. அதிக உணவுட்கொள்ளுவதால் ஜீரணமானது போக மிகுதியுள்ளது அழுகிக் கெட்டுப்போவதால் பலவித கோளாறுகளுண்டாகின்றன. கோளாறுகளுள் தலைவலியொன்று. தலையில் எரிச்சலையும் சகிக்கமுடியாத முட்டாள் வலியை உண்டுபண்ணும் வாந்தி, மயக்கம் ஜாஸ்தியாயிருக்கும். இதற்குத்தக்க சிகிச்சை ஒருமுறைபேதிக்கு வாங்கிக்கொள்வதே மேலானது. பேதிக்குக் கண்ட மாத்திரைகள் சாப்பிடுவதைக்காட்டிலும் விளக்கெண்ணை சாப்பிடுவது உத்தமம்.

நரம்புத்தலைவலி அல்லது ஒருத்தலைவலி சர்வசாதாரணமாய் இளைத்துவிட்டோடுஉட்கார்ந்து ஒரு வேலையும் செய்யாமல்பொழுதுபோக்குகிறவர்களுக்கும் பலஹீனமான ஸ்திரீகளுக்குபகிஷ்டை காலத்திலும் வருவதுண்டு. இதால்அடிக்கடி பிடிக்கப்பட்டிருக்கிறவர்கள் வெளுத்தும்,தேகம் குன்றியும், பலஹீனமாயும்,மூளை கலங்கியுமிருப்பார்கள். இது தலையின் ஒரு பக்கத்தில் தான் வாசம் செய்யும். சில சமயத்தில் பரவியுமிருக்கும். வலிவருவதற்கு முன்னடி





யாவது வலிபோடாவது பார்வைகொஞ்சம் மங்கலாகவும் கண்முன் பூச்சி பறக்கிறது போலும் தோன்றும். ஸ்திரீகளுக்குப் பகிஷ்டை காலத்தில் வரும் ஒருத்தலைவலிக்கு 'மெகிரிமஸ்' என்று சொல்லுவார்கள். கர்ப்பவாயுவுள்ள பெண்களுக்கு அடிக்கடி இவ்வலிவரும். வந்தால் ஒரு பக்கமாக இடிக்கிற இடி சகிக்க வொண்ணாது. ஊசிபோட்டுக்குத்துகிறது போல வலிக்கும். சொத்தைப்பல்லினாலும் உண்டாகும். காலையில் படுக்கையை விட்டு எழுந்திருந்து அரைமணி வரையில் வலி இருக்கும். சூரிய உஷ்ணம் அதிகமாக வலி நின்றுவிடும். சாதம் வேண்டியிராது. தலைவலியினால் முகம் வெளுத்து பாபா பாதாளம் போயிருக்கும். தலை எப்போதும் சுடும்.

இதால் வருந்தும் ஜனங்களுக்கு தனியாயிருக்க மனம் தோன்றும். ஒருத்தலைவலி இரப்பை குடல் இவைகளில் மாறுதல் இல்லாமலிருந்தாலும் கூட உண்டாகும். அகாலத்தில் போஜனம் செய்வதாலும் வீட்டோடு சோம்பி வேலையில்லாமல் உட்கார்ந்திருப்பதாலும் தேகப்பயிற்சி இல்லாதிருப்பதாலும் உண்டாகிறது. ஒருத்தலைவலியிலிருந்து தப்பிக்கொள்கிறதற்குச் செய்து வரும் பழக்கத்தை மாற்ற வேண்டுமேயல்லாது வேறு எவ்விதத்தினாலுமாகாது. சதாசர்வகாலம் காபி, டீ முதலிய பானங்களில் மூழ்கியிருப்பவர்கள் பாலையாவது அல்லது சோடாவையாவது சாப்பிடுதல் நலம்.

மனக்கவலை பிடித்துத்திரிகிறவர்கள் அனாவசியமான கவலையை ஒழிக்க வேண்டும். இன்பத்தில் குடிகொண்டிருப்பவர்கள் அதை விட்டு விலகியிருக்க வேண்டும். சோம்பித்திரிகிறவர்களும் உட்கார்ந்தே இருக்கிறவர்களும் வேலையில் கவனம் செலுத்தி வர வேண்டும். சுருட்டுப்பிடிக்கிறவர் சுருட்டுப்பழக்கத்தை விட்டுத் தொலைக்கவேண்டும்; அல்லது ஜாஸ்தி உபயோகிப்பதைமட்டுப் படுத்தவேண்டும். புலால்உண்ணலை மறுத்துக்காய் கறிசாப்பாடு செய்ய வேண்டும். வெற்றிலையையே போடுகிறவர்கள், அதை நிறுத்த வேண்டும்.

பகிஷ்டை சமயத்தில் இத்தலைவலியால் வருந்தும் ஸ்திரீகள் பொடாசியம் ப்ரோமைட் சாப்பிடுவது நலம்.

## மீராபாயின் கிருஷ்ணபக்தி

இமயமலைக்குத் தெற்கு, விந்தியமலைக்கு வடக்கு, கங்கையாற்றுக்கு மேற்கு, சிந்து நதிக்குக் கிழக்கு, இந்நான்கெல்லைக்குட்பட்ட பிரதேசத்தில் மீராபாயம்மையினது மதுரகீதங்களைப் பாடாதவரேயில்லை. இவ்வம்மை மார்வாடா தேசத்தில் மேரதநிவாசிகளாகிய ராடோர் ராஜவம்சத்தில் ஜயமல்லர் என்ற சர்தாரது புத்திரி. இவர் விக்கிரமசகம் 1475-ம் வருஷம் பிறந்தவர். பிதா பரமபாகவதசிரோமணியானது பற்றி, மீராபாய்க்கு சிறுவயதிலேயே, பாகவதம், விஷ்ணுபுராணம், முதலிய பக்திகிரந்தங்களையெல்லாம் அவர் கற்பித்தார். அம்மையார், கிருஷ்ணபக்தியில் முதிர்ந்து ஹரிகீர்த்தனங்கள் பாடுவதில் தேர்ந்திருந்தனர். வித்தியாவதியான இவ்வம்மைக்குத் தக்கவயதுவரவே, பிதா உதயபுரியரசனாகிய கும்பராணாவுக்கு இவரை மணஞ்செய்வித்தனர். கும்பராணாவும் பெரிய வித்துவானாகையால் இருவரும் பூவும் மணமும் போலச்சிறந்து விளங்கினர். கும்பராணா இகசம்பந்தமாய்ப் பூர்வார்த்தம் பாடும் போதெல்லாம் மீராபாயம்மை யதனைப் பரசம்பந்தமாய் அபரார்த்தம் பாடி முடிப்பார். கும்பராணாவினது பிதா காலஞ்சென்றபின் அவர் பட்டத்துக்கு வரவே நம்மம்மைக்குச் சௌக்கியமதிகமாயிற்று. எனினும், ஐகிகசுகத்திலிச்சை வையாமல், கிருஷ்ணபக்தியிலேயே சிந்தைவைத்து, சிரவணமனன நிதித்தியாசனத்திலேயே இருவரும் காலங்கழித்தனர்

சில காலத்துக்குப்பின், மீராபாயம்மை அரண்மனைக்கருகில் ஒருகிருஷ்ணாலயந் தாபித்தார். அவ்விடத்துப் பூஜையும் கீர்த்தனங்களும் செய்யலாயினர். அக்பர்பாதுஷா இவரது பக்தியைக்கேட்டு வியந்து இவரைக்காணவிரும்பி, ராஜபுத்திரஸ்திரீகள் அருக்கரைப் பார்க்கவுடன் படாரென்று, தாமும் தம் சங்கீத வித்துவானாகிய தானசேனனுமாக வைராகிவேடம்பூண்டு அவ்வாலயத்துக்கு வந்து அம்மையினது அமுத கீர்த்தனங்களிலானந்தபரவசராய் இவ்வம்மையின் காலில் விழுந்து நமஸ்கரித்துத் தங்களுக்குப் பரசாதனங் காட்டியருளும்படி வேண்டினார். அம்மையார் தன்னை வணங்குவதில் பயனில்லையென்றும், ஹரிபஜனையே பரசாதனமென்றும் கூறி விடுத்தார். அக்பர்பாதுஷா தம்மிடத்திருந்த அரதனமாலையைக் கொடுக்க அதை இவரேற்றுக் கொள்ளவில்லை. பின்னரங்கிருந்த கிருஷ்ண





விக்கிரகத்தின்மேல் வைத்துப்போட்டுச் சென்றனர். சின்னாட்குப் பின்னர் வந்தது டில்லி சக்கரவர்த்தியென்றும், அவர் அம்மையினது காலைத் தொட்டு நமஸ்காரஞ்செய்து பேசிக் கொண்டிருந்து போனாரென்றும், அதற்குச் சாட்சியமாக அவரது அரதன மாலை கிருஷ்ண விக்கிரகத்தின்மேற் கிடக்கிறதென்றுங் கும்பராணா கேள்வியுற்று ஆலயத்துக்கு வந்து உண்மை தெரிந்து முனிந்து அநாதரண புத்தியினால் அவ்வம்மைக்குத் தோஷாரோபணத்தை யெண்ணித் தற்கொலைசெய்துகொண்டு பிராணனை விடும்படி ஒரு சீட்டெழுதி மந்திரிகையிற் கொடுத்தனுப்பினான். மந்திரியச்சீட்டை யளிக்கவே யிவ்வம்மை யரசனைக்காண முடியுமாவென்று வினவினார். கும்பராணா இவ்வம்மையினது முகத்திலும் விழிப்பதில்லையெனக் கோரவிரதங் கொண்டிருப்பதை மந்திரிவாயிலாக அறிந்து,

'தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற சொற்காத்துச் சோர்விலாள் பெண்' என்னும் ஆன்றோர் மொழியைத் [illegible] கூறியதாப்படியே செய்து கொள்ளுந்தாக விடையீந்தனுப்பினர்.

பின்பு அன்றிரவு மீராபாயம்மை கங்கையடுத்துப் பக்கத்திலிருந்த ஆற்றில் விழுந்தார். விழுந்தும் மரணம் நேராதிருந்தது அதற்காகவருந்தினர். அப்போது 'கவலையுற்றாக்! உனக்கு ஆயுளின்னும் முடியவில்லை. உன்னால் பரோபகார மின்னமாக வேண்டியன பலவுள்ளன. நீ நாளையுதயத்துக்குள் கரைசேர்ந்து பிருந்தாவனம் போவாய்' என்று அசரீரி கேட்டது. அவ்வகையே மறுநாள் காலையில் கரையேறி அங்கிருந்த இடைச்சிறுவர்களைப் பிருந்தாவனத்துக்கு வழிகேட்கலாயினர். அச்சிறுவர்களிவரது களைப்பையறிந்து பால் கறந்தளித்துக் கூடவும் வழிகாட்டிக்கொண்டு இவருடன் செல்லலாயினர். இவரது கீர்த்தனங்களை வழியிற் கேட்ட பலரும் உடன் சென்றனர். நெறியிடையில் 'ஜீவகோசாயி' என்னும் ஒருஸாது மாதர்கள் தீயவரென்றும் அவர்களைப் பார்ப்பதுங் கூடத் தீமைக்கு ஏதுவென்றும் உபதேசித்துப் பெண்முகத்தில் விழிப்பதில்லையென விரதங் கொண்டிருப்பதாகக் கேள்வியுற்று, 'பரமாத்மாவான ஈசனொருவனே புருஷன். அவனைப் பக்தி பண்ணும் மக்கள் ஆண்பாலார் பெண்பாலாராயினும் நாயகன் ஸ்திரீகளே. தம்மைப் புருஷனென்று மதித்த [illegible]

விருப்பின் பக்தியுள்ள ஒரு மாதினைப் பார்க்கப்பின் வாங்காத், என்று ஒரு சீட்டு அனுப்பி யவரைத்தம்மைப் பார்க்கும்படி செய்வித்தார் இவர். பின்னர்த்தாமே ஜீவகோசாயியினது சீடரென்று சொல்லிக்கொள்ளினும், ஜனங்கள் வேறுவகையே மதித்தார்கள்.

பிறகு பலருஞ்சேர்ந்து பிருந்தாவனத்துக்குச் சென்று கிருஷ்ணஸ்துதி செய்யலாயினர். அங்கும் இவரது கீர்த்தனங்கள் ஆழ்ந்த கருத்துக்களை எளிய நடையிலடக்கிப் பக்தியொழுகும் வசனங்களாயிருப்பதைக் கேட்டுப் பலருமிவரது கீர்த்தனங்களைப் பாடலாயினர். இவரது கீர்த்தி கும்பராணுவினது செவிக்கெட்டியது. கும்பராணு தம் தவறையுணர்ந்து மாறு வேடங்கொண்டு இவ்வம்மையினிடத்து வந்து ஒரு விண்ணப்பஞ்செய்து கொள்ள விரும்பினர். அதற்கு அம்மையார் பரமாத்மாவொருவர் தவிர வேறொருவரும் மனிதரது குறைப்பாடுகளைத் தீர்க்கத்தகுந்தவரல்லரென்று விடையீந்தார். கும்பராணு மறுபடியும் அவர் பாதத்தில் பணிந்து, தம் நிசரூபத்தைக் காட்டித் தம் குற்றத்தை மன்னிக்க மன்றாடினர். அதற்கு அம்மையார் திருவருளிருந்தபடியை யுணர்த்தியுடன்சென்று உறையலாயினர். எனினும்பிருந்தாவனத்து ஒரு சிறந்த கிருஷ்ணாலயஞ் சமைப்பித்து ஆலயத்து ஆறு மாதமும் அரண்மனையிலாறு மாதமுமாக விருந்து காலங்கழித்தார்.

சிவத்தியாகநாதன்.

---

## சரஸ்வதி தோத்திரம்.

கல்வி தருவாய் கருது முயர்ஞானச்
செல்வியென வாழுஞ் சிறப்பருள்வாய்—மெல்லிதழ்கள்
நன்றாக வேவிளங்கு நான்மறையில் வீற்றிருக்கும்
என்றாய் கலைவாணி யே!

ஆடவரைப் போல வருங்கல்வி யிற்பழகிப்
பாடப் படிக்கப் பயன்றருவாய்—நாடி
விழையுநரம்பொலிசேர் வீணையினை யேந்தும்
எழில்சேர் கலைவாணி யே!

கற்றகல்விக் கேற்பக் கவிஞரெலா மேவியக்க
நற்றமிழிற் புத்தகங்க ளயந்தெழுதும்—பெற்றியருய்யு





வண்ண நிறத்தால் வயங்கும்வெண் மேனிவாயர்
என்னுங் கலைவாணி யே! ௩

உத்தியோ கந்தந்தா லுஞ்செய்து பார்த்திடற்குச்
சத்தியிலை யீவாய் சதுராக—நித்தம்
செருக்ககன்ற விற்பனர்கள் சேர்சபையி லுளும்
இருக்குங் கலைவாணி யே! ௪

பெண்மணிக ளேயெழுதும் பெண்கல்விப் பத்திரிகை
ஒண்மகியி லேயுலவி யோங்கிடவே—கண்பாராய்
மாற்றரிய முத்தமிழும் வாக்கதனி லீந்திருதற்
தேற்ற கலைவாணி யே! ௫

தி. அகிலாண்ட நாயகி.

---

## தீயார் கொடுமை.

கொம்புளதற் கைந்து குதிரைக்குப் பத்துமுழம்
வெம்புகரிக் காயிரந்தான் வேண்டுமே—வம்பு
செறி தீங்கினர்தம் கண்ணில் தெரியாதது
ரத்து நீங்குவதே நல்ல நெறி.

நீதிவெண்பா.

கொம்புள்ள மிருகங்களுக்கு ஐந்து முழம் நீங்கவேண்டும்; குதிரைக்கு பத்துமுழம் நீங்கவேண்டும்; கோபமுடையயானைக்கு ஆயிரம் முழம் நீங்கவேண்டும்; வம்பர்களுக்கோ என்றால், அவர்கள் கண்பார்வைக் கெட்டாத தூரத்தில் நீங்கி நிற்கவேண்டும். இன்றேல் திட்டமாய் தீமையே உண்டாகும். ஆகவே வம்பர் மக்களினத்தைச் சேர்ந்தவரே யெனினும் தீக்குணமுடைமைபற்றி மிருகங்களினும் கொடியாராகின்றார். உண்மை நோக்கில் ஒரு சமுதாயத்துக்கேனும் வம்புசெறின் மக்களினும் வலிய பகைவர் வேறொருவருமிலர். வாந்திபேதி, அம்மைநோய், பிளேக் முதலிய பெரும் பிணிகள் வாய்ப்பட்டு மீளினும் மீளலாம். பொறாமை, புறங்கூறல் முதலிய துற்குணங்கள் நிறைந்த கொடியார் கைப்பட்டு மீளுதல் அருமையினும் அருமை.

அமிர்த வசனி.

---

## விநாயக சதுர்த்தி.

இவ்வருஷத்தில் நாளை செப்டம்பர் 14-ந்தேதி சனிக்கிழமை தினம் விநாயக சதுர்த்தி வருகின்றது. சிம்மசதுர்த்தியை யவலம்பிப்போரும் சதுர்த்தி விரதம் எடுத்திருப்போரும் அன்றுதான் கணநாதனைப் பூஜித்துத் தம் இஷ்டகாமியங்களைத் தரும்படி வேண்டிக்கொள்ளுவார்கள். இந்து ஸமூகத்தவருக்கு இத்தினம் மிகவும் ஸுதினமென்பது கொள்கை.

விநாயகருக்கு கணபதி, யானைமுகத்தோன், விக்நேசன், முதலிய பல நாமங்களுள, அந்த நாமங்களெல்லாம் காரணப் பெயர்களேயன்றி, இடுகுறியன்று. இந்தியாவிலுள்ள, பிரம, க்ஷத்திரிய வைசிய சூத்திரர்கள், எக்காரியம் செய்யத் துவக்கினும், அக்காரியம் நிர்விக்கினமாய் முடியவேண்டி, விக்நேசுவரனைப் பூஜித்தும், தோத்திரஞ் செய்தும் வந்திருக்கிறதைப் பல நூல்கள் வழியாலும், அனுபவத்தாலும் காணலாம். புராணங்களில் வாசித்துப் பார்த்தால், கிருத, திரேத, த்வாபர, கலி, ஆகிய இவ்யுகங்களில், தேவரிஷி முதலியவர்களும், அவதார புருஷர்களும், திரிமூர்த்திகளும் கணேசனைப் பூஜித்து தங்கள் மனோபீஷ்டங்களைப் பூர்த்தி செய்துகொண்டிருக்கின்றனர் என்பதாக அறிகிறோம். இவ்வளவு சக்தியைப்பெற்ற விநாயகர் இன்னவர் என்பதையும், எக்காலத்தில் ஜனித்தார் என்பதையும் விசாரிப்போம்.

ஒரு காலத்தில் பார்வதியானவள், தான் நீராடவேண்டிய காலத்தில் தன் தேகத்திலுள்ள அழுக்கால் ஓர் ஆகிருதியை யுண்டாக்கி, அதற்கு ஜீவனைக் கொடுத்து அந்தப்புரத்தின் துவாரத்தில் இருத்தி யாரையும் உள்ளே விடவேண்டாமென்று உத்தரவு அளித்ததாகவும், அப்பொழுது ஸ்ரீ பரமசிவன் வர, அவரையும் விடேன் என்று மறுக்க, அவர் கோபங்கொண்டு தம்மை உள்ளே விடேன் என்றவனை சிரச்சேதஞ்செய்துவிட்டு, உள்ளே போனதாகவும், தம் பத்தினியான பார்வதியால் உற்பத்தியாக்கப்பட்ட குமாரனுடைய சிரசைத் தாம் சினத்தால் தரித்துவிட்டதைக் கண்டு பச்சாதாபப்பட்டு தூரத்தில் கிடந்ததோர் கஜத்தின் சிரசைக் கொணர்ந்து முண்டத்துடன் சேர்த்து உயிர்ப்பிச்சையும் கொடுத்ததாகவும், அப்பொழுது தான் கஜானனன் என்ற நாமத்துடன்





விளங்கி வந்தனரென்று புராணங்களிற் கூறப்பட்டுள. இன்னும் சில புராணங்களில் கஜானன் உற்பத்தி வேறுவிதமாகவும் கூறியுள. இவர் பிறந்த காலம் இந்த யுகம் என்றும், இத்தனை வருஷங்கள் ஆயின என்றும் கூறுவதற்கு யாதொரு ஆதாரமும் காணோம். இவர் பார்வதி பரமேசுவரர்களுக்குப் புத்திரரென்றும், அநேக வேதாந்த சாஸ்திரங்களைக் கற்ற நிபுணரென்றும், சகல விக்கினத்தையும் போக்கடிக்கும் சக்தியை யுடையவரென்றும், சகல ஜீவகோடிகளாலும், திரிமூர்த்திகளாலும் பூஜிக்கப்பட்டு வருபவரென்றும், மாதா பிதாக்களிடம் சம்பூர்ணபக்தியை வைத்தவரென்றும், ஸ்ரீ பகவான் வியாசர், ஸ்ரீ மகாபாரதத்தை சுலோக ரூபமாகச் சொல்ல அவைகளின் கருத்தை யறிந்து, மகாபாரதம்முழுவதையும், தம் முகத்திலுள்ள கொம்பாகிய தந்தத்தை எழுத்தாணியாகக்கொண்டு வெகு விரைவாகத்தானே எழுதி முடித்தாரென்றும், அநேக கல்யாண குணங்களையுடையவரென்றும் பல சந்தர்ப்பங்களில் வீர சூர பராக்கிரமம் காட்டி தேவகாரியங்களை நிர்விக்கினமாய் முடியும்படி செய்திருக்கின்றாரென்றும் கூறுவர். இவ்விதமான ஸ்தூலார்த்தங்களை எடுத்துக்கொள்ளாமல் சூக்ஷ்மார்த்தமாகிய வேதாந்த தத்துவார்த்தத்தை நோக்கின், இவர் ஸாக்ஷாத் பரப்பிரம்மமேயென வெளியாகும். அது எப்படியெனில், தர்மத்தை ஸ்தாபனஞ் செய்யும்பொருட்டு, பரப்பிரம்மமே ஸ்ரீ கிருஷ்ணனாக வந்து, லோகோத்தாரமாகப் பார்த்தனுக்கு உபதேசஞ்செய்த ஸ்ரீபகவத்கீதையில் "விருக்ஷங்களில்" தான் "அஸ்வத்த" விருக்ஷமென்றும், மந்திரங்களில் தான் "ஓம்" என்றும், மாதங்களில்தான் "மார்கசிரஷ" மாதமென்றும், சேனவீரர்களில் தான் "ஸ்கந்தன்" என்றும் இன்னும் பலவிதமாய் உலகத்திலுள்ள சராசரங்களிலும் தான் உள்ளும் புறமும் "நிறைந்து ஞானகனே இருக்கிறதாகவும்" கூறியிருக்கிறபடியால், உலகத்திலுள்ள சகல விக்கினங்களையும் போக்கடிப்பதில் அந்த பரப்பிரம்மமே விக்கினேசுவரனாக வந்திருக்கிறார் என்பதுசொல்லாமலே விளங்கும். அந்த பரப்பிரம்ம ஸ்வரூபியாகிய ஸ்ரீ கணநாதனை இக்கலியுகத்தில் எப்பொழுது பிறந்தார் என்று காலநிர்ணயஞ் செய்ய சாத்தியப்படும்? அனாதியாயிருக்கும் பரப்பிரம்மத்திற்கு எப்படி காலம் இல்லையோ, அப்படியே இந்த விநாயக மூர்த்திக்கும் ஜனன காலத்தை நிர்ணயஞ்செய்யமுடியாது.

ஆனால் ஜனங்கள், சகுணோபாசனஞ் செய்து இருதார்த்தராகும்படியாய் பரமகருணாநிதியான ஸ்ரீ வியாசபகவான் தாம் இயற்றிய புராணங்களில் பிரதிவருஷமும், பாத்திரபத சுக்ல சதுர்த்தி தினம் பரதகண்டத்திலுள்ள சகலரும் மங்கள ஸ்நானஞ்செய்து அவரவர்களுடையயோக்கிய தானுசாரமாய்,சுவர்ணத்திலோ, வெள்ளியிலோ, பஞ்சலோகங்களிலோ, அல்லது மண்ணினாலோ ஓர் விநாயகரூபம் இயற்றி பிராணப் பிரதிஷ்டை செய்து பக்தி சிரத்தையுடன் குடும்பத்திலுள்ள சகலரும் சேர்ந்து, பில்வம், பல ஜாதிப் புஷ்பங்கள், அருகம்புல் முதலியவைகளைக்கொண்டு அர்ச்சித்து தூப தீப நைவேத்தியங்களுடன் பூஜைகளை முடித்து பந்து மித்திரர்களுடன் போஜனஞ் செய்து, அன்று முதல் மூன்று நாளோ, ஐந்து நாளோ, ஏழு நாளோ, ஒரு பக்ஷமோ, அல்லது கடைசியாக ஒரு மண்டலம் வரையிலுமோ அவரவர்களுக்கு அநுகூலத்தின்படி தினமும் கணேசனைப் பூஜை செய்து பஜனை செய்து வரவேண்டும் என்ற விதியும் ஏற்படுத்தியிருக்கிறார். இதை இந்தியாவிலுள்ள சகலரும் நெடுநாளாக அனுசரித்துக் கொண்டாடியும் வருகின்றனர். காருண்யமுள்ள கவர்மெண்டாரும் இந்த விசேஷநாளில் ஹிந்துக்கள் தங்கள் கடவுளை வணங்கி சுகமடையும்படியாகவே பிரிட்டிஷ் இந்தியா முழுவதிலும் உள்ள ஆபீஸ்களுக்கு விடுமுறை கொடுத்திருக்கிறார்கள். இந்த நாள் இவ்வளவு விசேஷமானதால் ஜனங்கள் இந்த விஷயத்தை வாசித்து ஆனந்தடையும்படியாக எழுதிவிடுத்தனம். மைசூர் பல்லாரி முதலிய விடங்களிலுள்ளவர்களும் திருச்சியிலுள்ளவர்களும், அன்று முதல் ஒருமண்டலம் வரையிலும் இந்த வைபவத்தைக் கொண்டாடுகிறார்கள். திருச்சியிலுள்ள உச்சிப்பிள்ளையார் கோவிலை அன்று மாலை 2-மணி முதல் இரவு 10-மணி வரையிலும் ஆயிரக்கணக்கான ஜனங்கள் பக்தியுடன் சென்று தரிசனஞ் செய்துவருகிறதைக் காணலாம்.

ல. அனந்த அய்யர்.

---



## சுதேச வர்த்தமானங்கள்.

---

இப்போது இந்தியாவில் 1 வயது முதல் 15 வயது பரியந்தமுள்ள பெண்களுள் 90 லட்சம் பேர் விதவைகளாக விருக்கின்றனர்.

*　*　*　*

பிரிட்டிஷ் ராஜ்ஜியத்தின் விஸ்தீரணம் 11, 13 406, 000 சதுரமைல் அதில் 416, 318, 000 ஜனத்தொகையிருக்கின்றதாம். இந்த ஜனத்தொகையில் இந்தியாவில் மாத்திரம் 315, 000, 000, ஜனங்களிருக்கின்றனர்.

*　*　*　*

சமீபத்தில் குச்சு பீகார் மகாராஜா பரமபதமடைந்தார். அப்போது மகாராணியார் தமது பர்த்தாவின் சமாதியண்டை உட்கார்ந்து தவம்செய்துகொண்டிருக்கிறாராம்.

*　*　*　*

குன்னூரில் இம்மாதம் 18-தேதி ஐரோப்பாவிலுள்ள ஸ்வீடனைச் சேர்ந்த சகோதரி அவபயய்யா என்பவர் வேதாந்த சங்கம் அவசியம் என்பதைப்பற்றிச் சிறந்த உபந்நியாசம் செய்தார். இம்மாது ஸ்ரீமான் விவேகாநந்தரின் உபந்நியாசங்களைப்படித்தும் கேட்டும் இந்துமதத்தைத் தழுவியவர். இவர் இந்துமதத்தின் அருமை பெருமைகளை இன்னும் படித்து ஆராய்ந்து வருகிறார்.

*　*　*　*

ஏப்ரல், மே, ஜூன், இம்மூன்று மாதங்களில் பங்களாம், பம்பாய், சென்னை, பர்மா இந்நான்கு தேசங்களிலும் உபயோகப்படுத்தப்பட்டிருக்கிற உப்பு 12577 மணங்குகள். போன வருஷத்தைக்காட்டிலும் இவ்வருஷம் 476 மணங்கு அதிகமாம்.

---

## ஸதிரீ சமாஜம்.

---

சென்னை சூளை சாமிப்பிள்ளைத்தெருவு 21-வது நெம்பர் வீட்டில் (7-9-12) சனிக்கிழமை மாலை 3-30 மணிக்கு மாதர்கள் சபை கூடினார்கள். அப்போது சுமார் 50 பெருமாட்டிகளும் பாடசாலையில் படிக்கும் 20 சிறுமிகளும் மற்ற மாதர்களுமாக ஓர் சிறு கூட்டமாகவந்து சேர்ந்தனர்கள். பெங்களூர் பிரம்மசமாஜத்தைச் சார்ந்த மிஸ்டர் பாலசுந்தர முதலியார் அவர்கள் மனைவி ஸ்ரீமதி பாச்சம்மாளவர்கள் வந்தவர்களையெல்லாம் உள்ளன்போடு உபசரித்து வர வேற்றார்கள்.

முதலில் பிராஹ்மோபாஸநா பத்ததியிலுள்ள பிராஹ்மகீதங்களிலேயிருந்து பிராஹ்மோஸ்தோத்திரமாக ஓர் கீர்த்தனை ஸ்ரீமதி பாச்சம்மாள்

விஜயம்மாள், சாராம்மாள் அவர்களால் பாடப்பட்டு அதை அனுசரித்து ஹார்மோனிய வாத்தியமும் வாசிக்கப்பட்டது.

அதன் பின்னர் ஸ்ரீமதி கா. அலர்மேலுமங்கை யம்மை அவர்களால் "வைத்தியப் பயிற்சி பெற்ற பெண்மணிகளின் வரலாறு" என்னும் விஷயம் பிரசங்கிக்கப்பட்டது. இந்த வைத்தியத்தின் மேன்மை, அது பூர்வத்திலிருந்த கன்னிகை பெண்களும் பாரும் வைத்தியம் கற்கவேண்டிய அவசியம், ஸ்திரீகளுக்கு ஸ்திரீகளே வைத்தியஞ் செய்யும் சிரேஷ்டத்துவம், மேற்றிசையிலும் நம் நாட்டிலும் வைத்திய விஷயமாய்க் காகமுள்ள பெண்மணிகளின் நன்முயற்சிகள், இத்யாதிகளைச் சரித்திரதிருஷ்டாந்தங்களோடு சாங்கோபாங்கமாய் ஆங்காங்கொடுத்துரைத்து பெண்களுக்குக் கல்வியிலும் நன்முயற்சியிலும் ஓர் விசுன்னக்கிளர்ச்சி உண்டாகுமாறு கொஞ்சங்குறைய இரண்டு மணி நேரம் ஸ்ரீமதி பிரசங்கித்தார்.

இறுதியில் ஸ்ரீமதி R.S. சுப்புலக்ஷ்மி அம்மாள் B. A. அவர்கள் பிரசங்கஞ்செய்த அம்மை அவர்களின் விஷயப் பிரஸ்தாபமாகிய வைத்தியத் தொழிலை மாதர்கள் கற்கவேண்டியது அவசியமென ஆதரித்துப் பேசி வந்தனஞ்சொல்ல, வந்திருந்த மாதர்களுக்கு ஸ்ரீமதி கா. காமாக்ஷியம்மாள் அவர்கள் பிரியோபசாரமொழிகள் கூற புஷ்ப தாம்பூலங் கொடுக்கப்பட சபை கலைந்தது.

மிஸ்ஸஸ். தியாகராய முதலியார்.

## வித்யா விஷயக்குறிப்புகள்.

சென்னை ரேஞ்சு பெண்பள்ளிக்கூடம் அஸிஸ்டண்டு இன்ஸ்பெக்ட்ரஸ் மிஸ். எம். எங்களர் எம். ஏ. எல். டி. என்பவர் ஹைதராபாத்துக்கு மாற்றப்பட்டிருக்கிறார். அங்கு அவர் இரண்டு வருஷம் வேலை பார்ப்பாரெனத்தெரிகிறது.

* * * *

ஜார்ஜ்டவுன் ஸ்ரீராமகிருஷ்ண நாஷனல் பெண்பள்ளிக்கூடத்திற்கு மிஸ்டர் ஜெக்ஞர் விச்வநாதன் செட்டியார் அவர்கள் ரூ. 50 நன்கொடை அளித்திருக்கின்றார்.

* * * *

புதுக்கோட்டை சமஸ்தானத்து வருஷாந்தர ரிபோர்ட்டில் வித்யா விஷயாலத்தை நாக்கும்போது மிகவும் திருப்திகரமாகவேயிருக்கிறது. மிஸ்டர் கோகலே கீழ்த்தரப்படிப்பு மசோதாவின் கருத்துக்களையும் அவசியங்களையும் அறிந்து தர்பார் அதிகாரிகள் புதுக்கோட்டை டவுனைச் சுற்றுமுற்ற இடங்களில் எலிமெண்டரி படிப்பை இலவசமாகச் செய்திருக்கிறார்கள். இதனால் எலிமெண்டரி பள்ளிக்கூடங்கள் ஜாஸ்தியாக ஏற்பட்டிருக்கின்றன. போன வருஷத்தைக் காட்டிலும் இவ்வருஷம் ரிபோர்ட்டிலுள்ளபடி ஜாஸ்தியாக 1518 பிள்ளைகள் படிக்கிறார்கள். தர்பார் அதிகாரிகள் கல்வி விஷயத்தில் அபிவிருத்தி செய்வார்களென்றே நம்புகிறோம்.

224

# பெண் கல்வி.

சித்திர சகிதமான ஒரு மாதாந்த பத்திரிகை.

கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்.—திருக்குறள்.

161976
600 008

தொகுதி 1.] 1912ஆம் செப்டம்பர்மீ [பகுதி 12.

## இந்து ஸ்திரீ ரத்தினங்கள் நெ. 3.

### ராணி பவானி.

* "குணப்பூஜாஸ் தானம்குணிஷு
நசலிங்கம் நசவய:"

பூர்வம் வடஇந்துஸ்தானத்தில் ஆண்டராணிகளில் ராணி பவானி மிகக் கீர்த்தி பெற்றவர் என்று சொல்லத்துணிகிறதற்குச் சந்தேகமில்லை. வங்காளத்திலுள்ள ராஜசாஹிமாகாணத்தைச் சேர்ந்தச் சாத்தி என்னும் கிராமத்தில் ஆத்மாராம் சௌத்திரி என்னும் கிரகஸ்தருக்குச் செல்வகுமாரியாய் பிறந்தார். இவர் பிதா அதிக தனவந்தரல்ல. ஆயினும் இவரின் சமானமற்ற சவுந்தர்யத்தையும் உபமானமற்ற சிறந்த சத்குணங்களையும் கண்டு வியந்து நாட்டோர் சமஸ்தானத்து ராஜாவாகிய ராஜாராம் ஜீவன் என்பவர் இவரை தன் புத்திரனுக்கு மணம் செய்வித்துக்கொண்டார்.

நமது கதாநாயகி சிறு வயதிலிருந்தே கல்வி கற்றிருந்தார் என்று சிலர் எழுதிவைத்திருக்கிறார்கள். இருந்தும் இவர் எந்த வித்தை எவ்வளவுவரை கற்றார் என்று தெரியாது. பின்பு இவர் காட்டின புத்திகுசலத்தால் சிறுபொழுதிலிருந்தே நன்றாய் நிரம்

* பூஜிக்கத்தக்கவைகள் குணங்களே தவிர லிங்கமும் (ஆணாவது பெண்ணாவது) வயதுமல்ல.

225

பப்படித்திருந்தாரெனத்தெரிகிறது. தெய்வபக்தி, தர்மசிந்தை
கார்யநிர்வாகத்துவம் என்னும் இக்குணத்ரயங்கள் இவரிடம் குழந்
தையிலிருந்தே குடிகொண்டிருந்தன. பதியோடு ராஜ்யபாரம்
நடத்தினபோதும், அவரின் மரணாந்தரமும், தமக்கு சர்வாதி
காரம் சம்பிராப்தமானபோதும் இவர் தம் சுகுணங்களால்ப்
பிரஜைகளை ரஞ்சிக்கச்செய்து வந்தார். ஆகையால் தான் இவர்
பரமபதமடைந்தும் கீர்த்தியானது நிரந்தரமாக விருக்கிறது.
இவ்வாண்ட நாட்டோர் சமஸ்தானத்தைச் சம்பாதிக்க இவர்
பூர்வீகர்கள் காட்டிய தைரியசாதுர்யங்கள் மிகவும் வர்ணிக்கத்தக்
கவை. ஆகையால் ராணிபவானி பெற்ற அமிதகீர்த்திக்கு மூலமா
கிய ஐச்வர்யப்பிராப்தியைப் பற்றி இங்கு சுருக்கமாக எழுது
கிறோம்.

காமதேவன் என்னும் பிராமணருக்கு இரகுநந்தன், இராம
ஜீவன் என இருபுத்திரர்களிருந்தனர். இவர்கள் தர்ப்ப நாரா
யணன் என்னும் ஒரு சிறு ஜமீன்தாரிடம் உத்தியோகம் செய்துகொ
ண்டிருந்தனர். மூத்தகுமாரனான இரகுநந்தன் வெகு சூக்ஷ்மபுத்தி
யுள்ளவன். ஜமீன்தார் இரகுநந்தன் புத்திகோசரத்தை நன்குசிலா
கித்து மூர்ஷிடாபாத்நவாபின் தர்பாரில் இரகுநந்தனை தமது பிரதி
நிதியாகநியமித்தார். இரகுநந்தன் தர்பாரில் நன்கு மதிப்பைப்பெற்
றிருந்தார். இப்படியிருக்கும் சமயத்தில் மூர்ஷிடாபாத் நவாப் தன்
பொக்கிஷத்திலுள்ளச் சர்க்கார்ப்பணத்தை அநேகமாகச்செலவழி
த்துவிட்டார். இதற்கு டில்லிராஜனாகிய பாதுஷா தன்னை ராஜ்யப்பிர
ஷ்டனாகச் செய்வானென்ற பயம் உள்ளத்தில் உதித்தது. தனத்
தைத்தேடிச் செலவிட்ட பணத்திற்குப் பொக்கிஷத்தை நிரப்பச்
சக்தியற்றவனாய்ப்பொய்க்கணக்குகள் தயார்செய்ய நிச்சயித்தான்.

இவ்வரீதியான பிரயத்தனங்கள் சரியல்லவென்று பொய்க்
கணக்குகளில்லாமையே டில்லீச்வரனை தான் சமாதானப்படுத்து
கிறதாக இரகுநந்தன் நவாபிடம் ஒப்புக்கொண்டார். நவாப்
மிகவும் சந்தோஷமடைந்து இரகுநந்தனை டில்லிக்கு அனுப்பினர்.
இவர் டில்லியடைந்து தன் வாக்சாதுர்யத்தால் டில்லீச்
வரனைச் சமாதானப்படுத்திவிட்டு மூர்ஷிடாபாத் வந்தார். இரகு
நந்தனின் அமிதசாமர்த்தியத்தையும் புத்திசாலித்தனத்தையும்
மெச்சி உயர்ந்த உத்தியோகங்கள் கொடுத்து கடைசியில் திவான்
உத்தியோகமும் கொடுத்தார். 'ராயர்' என்ற பட்டமும் அளித்தார்





இவ்வளவேயல்ல; பேருக்குமாத்திரம் தான் நவாப்பேயொழிய
ராஜ்யத்திலுள்ள ஸர்வாதிகாரமும் சம்பிராப்தமாயிருந்தது. இரகு
நந்தன் இப்படி பூர்ணாதிகாரம் வகித்திருந்த சமயத்தில் இவர் தம்பி
யாகிய இராம்ஜீவனுக்கு ஏறக்குறைய இரண்டு கோடி ஜமீன்களை
நவாபினால் கொடுக்கும்படிச் செய்தார். பின்பு 'இராஜா' என்றபட்
டமும் நவாபிடம் இராமஜீவனுக்கு பிராப்தமாயிற்று. நாளது
வரையும் இப்பட்டத்தை இவர் வம்சத்தார் அனுபவித்துவருகிறார்
கள். இராம்ஜீவனுக்கு இரண்டு புத்திரர்கள் ஜனித்தார்கள். அவர்
களுக்குள் மூத்தவன் பால்யத்திலேயே மரணமடைந்தான். இரண்
டாவனுடைய பெயர் ராமகாந்தன். இராமஜீவனுக்குப் பிறகு ராம
காந்தன் தன் பிதாவுக்குக் கிடைத்த ஜமீன்களுக்கு அதிபதியாகி
'ராஜா' என்ற பட்டத்தையும் அனுபவித்துவந்தான். இவ்விராம
காந்தனின் பார்யைதான் நமது சரித்திர கதாநாயகி ராணிபவானி
இவ்விருவர்களுக்கு விவாககாலத்தில் வரனுக்கும் 18-வயதும்
வதுக்கு 15-வயதுமாம். இத்தம்பதிகள் இல்லறதர்மத்தினின்று
வழுவாமல்ச் செவ்வையாய் நடத்திவந்தாலும் வளர்பிறை சந்திரன்
போல் ஒருவர்க்கொருவருடைய பிரேமை அதிகரித்துவந்தாலும்
கல்யாணமான அடியோடு ராஜ்ய நிர்வாகத்தில் சில கஷ்டங்கள் சம்ப
வித்தன. இவர் பிதா ராஜ்யபாரம் நடத்திவந்த காலத்தில் தயாரா
மன் என்றவர் மந்திரியாயிருந்தார். ராம்ஜீவன் இவரை தன்குழந்தை
போல் பாவித்து வந்தார். இராம காந்தன் தயாராமன் இவ்
விருவர்கள் இணைபிரியாமல் வளர்ந்து வந்தார்கள். இராமகாந்
தன் தயாராமனை அண்ணா என்று கூப்பிடுவது வழக்கம். இராம
ஜீவன் தன் மரணாந்தர சமயத்தில் இராமகாந்தனாகிய தன் பிள்ளை
யை அழைத்து அண்ணா தயாராமன் உத்தரவன்னியில் நீ நடக்கக்
கூடாதென்றும் பிரதிகாரியத்திற்கும் அண்ணா யோசனை மிகவும்
நன்மையைத் தருமென்றும் நற்புத்திப் போதித்து தயாராமனிட
மும் இராமகாந்தனைக் கைவிடலாகாதென்றும் சொல்லி பெரியபதம
டைந்தார். கொஞ்ச நாளுக்கு பிறகு இராமகாந்தன் இவ்வளவு பெரிய
சமஸ்தானத்துக்கு அதிபதியாக இருக்கிறோமென்று வீண் கர்வம்
கொண்டு ராஜ்யகாரியத்தில் கொஞ்சமேனும் கவலை செலுத்தாமல்
தன் இஷ்டப்பிரகாரம் நடந்து ராஜ்யத்தை அழிக்கத் தொடங்கி
னான். பொக்கிஷ பணத்தையெல்லாம் கேவலம் இப்பொய்ச்சகங்க
ளுக்கு விரயப்படுத்தினான். இன்னும் எவ்வளவோ அக்ருத்தியங்க

ளெல்லாம் செய்தான். சுருக்கிச் சொல்லின் பணத்தை யெல்லாம் கரியாக்கினான். தயாராமனுக்கோ இவன் செய்யும் காரியங்கள் பிடிக்கவில்லை. பின் யாருக்குத்தான் பிடிக்கும். தயாராமன் இந்த அகிருத்தியங்களைச்சகியாது அநேகஉபாயத்தினால் புத்தி சொல்லியும் கேட்கவில்லை. இதோடு நில்லாமல் இக்கர்வி இராமகாந்தன் தன் தகப்பன் வாக்குமீரியும் தயாராமனை வீட்டிலிருந்து துரத்தியும் விட்டான். நாட்டூர் சமஸ்தானத்திலிருந்து துரத்தப்பட்ட தயாராமன் "இவன் தகப்பனார் முதற்கொண்டு இந்த சமஸ்தானத்தைக் காத்தும் இவர்களுக்கு நற்புத்தியைப் போதித்தும் இவர்களுக்கு எப்போது சுகத்தையுமே எண்ணியிருந்த நான் இம்மித்திர துரோகியின் கொடுமைக்குச் சரியான பரிகாரம் தேடுகிறேன்" என்று சொல்லி மூர்ஷிடாபாத் நவாபிடம் போய்ச் சேர்ந்தான். அக்காலத்தில் மூர்ஷிடாபாத்தை அரசாண்டுவந்த நவாப் அலிவார்டிகான். தயாராமன் பிரதிதினமும் நவாப்புதர்பாருக்குச் சென்று வந்தான். கிரமேண நவாப்பிரீதியையும் சம்பாதித்தான் ஒருநாள் இப்படியிருக்கும் சமயத்தில் தயாராமன் நவாபிடம் "ராமகாந்தன். தங்களுடைய சமஸ்தானத்தையெல்லாம் வீணாக அழிக்கின்றான் சொத்துக்களெல்லாமபகரித்து ராஜதுரோகம் செய்ய ஏற்பாடு செய்து வருகின்றான்" என்று சொன்னான். அக்காலத்து நவாப்புகளோ விசாரசூன்யர்கள். இது சாரம் இது அசாரம் என்பதை கவனித்து நடப்பவர்களல்ல. இன்னும் ஒரு விசேஷம். என்னவெனில் ஒரு சப்தத்தால் ஒருவனை லக்ஷாதிப்பிரபுவாகவும் மற்றொரு சப்தத்தால் பிக்ஷாதிப்பிரபுவாகவும் செய்துகொண்டு வந்திருந்தார்கள். ஆகையால் தயாராமன் விருத்தாந்தத்தைக் கேட்ட மாத்திரத்தில் நவாப் இது சத்தியமா அசத்தியமா என்பதை கவனியாமல் ராமகாந்தனுடைய தனங்களையெல்லாம் கொள்ளையடித்து அவனை பிக்ஷாதிப்பிரபுவாக்கி அவனுடைய பெரிய தகப்பனாரின் குமாரனுக்கு இவ்விராஜ்யத்தையும் சேர்த்து வைக்கும்படி தன்னுடைய சைன்னியத்தையனுப்பினான். தயாராமன் சைன்னியத்தோடுச் சென்றுக் கோட்டைக்குள்ப்புகுந்து கொள்ளையடிக்கும்பொழுது ராமகாந்தன் தன்பிரிய பார்யையாகிய ராணி பவானியுடன் அந்தப் புரவாசியாயிருந்தான். திடீரென நவாப் சைன்னியம் படையெடுத்து வந்திருக்கிறதைக் கேட்டு ஒன்றும் தோன்றாமல் அதை எதிர்க்க அசக்தனாய் வஜ்ரத்தினால் அடிக்கப்





பட்டவன்போல் பிரமித்து நின்றான். இன்னுமொரு நிமிஷம் தாமதித்திருந்தானேயானால் ராமகாந்தன் சிறைபிடிக்கப்பட்டிருப்பான். தற்சமயத்தில் குசாக்ர புத்தியுள்ள அவன் பத்னியாகிய ராணிபவானி போதாவதானியாய் இருந்ததினால் தன்னுடைய பர்த்தாவின் பயத்தையும், துக்கத்தையும் சாந்தப்படுத்தினாள் தூக்க முடிய ஆபரணங்களை யெடுத்துக்கொண்டு கணவனும் தானும் ரகசியமாய் சமஸ்தானத்தைவிட்டகன்றார்கள். பிறந்ததுமுதல் கனவிலும் கஷ்டத்தை நினையாத இச்சுகுமாரி மனதொயுந்த பதிக்கு கஷ்டம் ஒன்றையும் தோன்றவைக்காமல் நேரிட்ட கஷ்டங்களையெல்லாம் பாராது தன்னுடைய குசாக்ர புத்திசாமார்த்தியத்தினால் இழந்த ராஜ்பத்தையும் தன்னுடைய பர்த்தாவுக்கு சேர்ப்பிக்கவைத்து அனந்தகீர்த்தியை யடைந்த இச்சுசீலியின் சரித்திர தொடர்ச்சி அடுத்த சஞ்சிகையில் வரும்.

ப. ர்.

---

## பார்யாலக்ஷணம்.

(11-வது சஞ்சிகையின் 9-வது பக்கத்தின் தொடர்ச்சி)

மனைவியானவள் கணவனிடத்தில் கபடமற்றவளாகவும், நாத்தனார்களிடத்தில் வணக்கமுள்ளவளாகவும், மாமியாள், மாமனார், இவர்களிடத்தில் பக்தியுள்ளவளாகவும், பந்துக்களிடத்தில் சிநேகமுள்ளவளாகவும், வேலைக்காரர்களிடத்தில் தாக்ஷிண்யமுள்ளவளாகவும், சபத்தினிகளிடத்தில் அபிமானமுள்ளவளாகவும், கணவனுடைய மித்திரர்களிடத்தில் கீழ்ப்படிந்து பேசுகிறவளாகவும், அவனுடைய பகைவர்களிடத்தில் விசனமுள்ளவளாகவும் இருக்கவேண்டியது அவசியமான கடமையானதால் மாமியாள் மாமனார் முதலானோருடைய குண முதலானவைகளைத் தெரிந்துகொண்டு பதிவிரதாதரும விதிப்படி கணவனிடத்தில் பக்தியும், தன்னையடைந்தவர்களிடத்தில் கருணையும், மாமி மாமனார் இவர்களைத் தலையால் வணங்கலும் ஓரகத்திகளிடத்தில் பிரீதியும், அபராதஞ் செய்தவர்களிடத்தில் பொறுமையும், இன்னும் நற்குணத்துக்கு ஏற்ற ஒழுக்கங்களையும் கடைப்பிடிக்கவேண்டும். அவ்விதம் நடந்து வந்தால் அவள்

நிந்தைக்குப் பாத்திரமில்லாமல் இருப்பதுடன் மருந்து இல்லாமல் பர்த்தாவை வசப்படுத்திக் கொள்வதற்கும் ஓர் வழியாகும்.

அப்படிக்கு இல்லாமல் பர்த்தாவுக்குத் தன்மீது பிரீதியுண்டாக்கும் பொருட்டு மருந்து இடுவதினால் உள்ளதும் போச்சுதடி நொள்ளைக்கண்ணி யென்பதுபோல உள்ள நம்பிக்கையும் பிரீதியும்கெட்டு அநேக துன்பங்களுக்கும் பாபத்துக்கும் ஆளாகவேண்டும். இது பற்றியே மனைவியானவள் கணவனுக்கு மருந்து இடுவதையும், அதுபோன்ற மற்றவைகளையும் கற்றுக்கொள்ள விரும்புவது கூடாதென்று விஷ்ணுஸ்மிருதி பிரமாணப்படுத்துகின்றது. ஆகையால் மனைவியானவள் துஷ்டரோடிணங்கேல் என்றும், அற்பசகவாசம் பிராணசங்கடம் என்றும் சொல்லப்பட்டிருக்கின்ற நீதி ஞாயப்பிரகாரம் பிச்சைக்காரி, சன்னியாசினி, க்ஷபணை, கற்பில்லாதவள், மோசக்காரி, குறி சொல்கிறவள், மருந்து இடுகிறவள் முதலானவர்களோடு சேரக்கூடாது. ஏனென்றால்.

(1) பிச்சைக்காரி யென்பவள், அநேக இடங்களுக்குப் போகக்கூடியவளாகவும், அற்பமானவளாகவும் இருப்பதால் அவளுடைய சிநேகமானது கற்பையழிக்கத் தூதாகநிற்கும்.

(2) சன்னியாசினி யென்பவள், உலகவாழ்க்கையை வெறுத்தவளானதால் அவள் சேர்க்கையானது கிரகாச்சிரம தருமநீதியைக் கெடுப்பதற்குக் காரணமாகும்.

(3) க்ஷபணை யென்பவள், முற்காலத்தில் பரவியிருந்த பௌத்தமதம், அல்லது சைனமதத்தைச் சார்ந்த காவி வஸ்திரம் தரித்த சன்னியாசினியானதால் அவளிடத்தில் சகவாசம் செய்தால் தன் மதத்திற் சேர்க்கவும், கற்பை யழிக்கவும் ஏதுகரமாகும்.

(4, 5, 6) கற்பில்லாதவள், மோசக்காரி, குறிசொல்பவள், ஆகிய மூவரும் பலவித பொய் வார்த்தைகளினால் தாங்கள் சொல்வது உண்மைபோல தோன்றும்படி பசப்பு வார்த்தைகளால் மயக்கிப் புத்தியைக் கலக்கிப் பணத்தையும் அபகரித்துக் கொண்டு கற்பையும் அழிக்கக்கங்கணம் கட்டி நிற்பார்கள்.

(7) மருந்து இடுபவளோடு சேர்க்கை கொண்டால், உன் கணவன் வசப்படுகை இல்லை யென்று போதித்து மருந்து இடச்செய்வாள். அதனால் கணவன் ரோகியாக நேரிடும். அல்லது





மரணமாக நேரிடும். இனக்கக்கேடு பிணக்கை விளைக்கும் என்பது போலவும், கூடா நட்புக்கேடாய் முடியும் என்பது போலவும், பஞ்ச கவ்வியம் ஒரு சொட்டுக்கள்ளோடு சேர்ந்தால் கெட்டு விடுவதும், மோரோடு சேர்ந்தபால் தன்குணத்தையும் இழந்துவிடுவதும், இரும்புதீயோடு சேர்ந்தால் சம்மட்டியால் அடிபடுவதும் சகஜமாக இருப்பதால் துஷ்டர்கள் சேர்க்கையில் சீலமும் அறிவும் அழிந்து கேட்டை விளைக்கின்றது. ஆகையால் வேசி, கெடுதிக்காரி, அபிசாரி, சன்னியாசினி, வேடிக்கை பார்ப்பதில் பிரியமுள்ளவள், ஜாலக்காரி, மருந்து இடுகிறவள், மோசக்காரி கெட்டநடத்தையுள்ளவள் முதலானோர் இருக்கும் இடத்தில் மனைவியிருக்கக் கூடாது என்றும், அப்படி யிருந்தால் பன்றியோடு சேர்ந்த கன்றும் மலந்தின்னும் என்பது போல அந்தக்கெட்ட சேர்க்கையினால் நல்லநடத்தை யழிந்துவிடும் என்று சங்கஸ்மிருதியும் பிரமாணப்படுத்துவதால் பிச்சைக்காரி முதலானவர்களோடு சேருவதும், இந்த வரம்பைக் கடந்து நடந்தால் பத்தினியின் சீலத்தில் பர்த்தாவுக்குச் சம்சயத்தையுண்டாக்குவதற்கு ஏதுவாகும். ஆனால் கற்பெனப் படுவது சொற்றிறம்பாமை யென்ற ஔவைப் பிராட்டியார் திருவாக்குக்கு இணங்க.

கொழுநன் சொற்கட வாதுறை கொள்கையே
வழுவில் நல்லறம் வான்றவ மாற்றுதல்
தொழுது தெய்வம் பராய் மலர் தூவுதல்
பழுதில் கற்புடைப் பத்தினிக் கென்பவே,

அதாவது, ஒரு பதிவிரதையான ஸ்திரீக்கு தவம் விரதம்முதலானவைகளெல்லாம் தன் பர்த்தாவின் சொல்லை மீறிநடவாமல் இருப்பதே யொழிய வேறு இல்லை யென்றநாசிகாண்டப்பிரமாணத்தின்படி வரன் வீட்டிற்கும், கன்னிகை வீட்டிற்கும் விவாகம் நிறைவேறுவதற்காகப் போகுதல், யாகத்தைப்பார்க்கப்போகுதல், தோழிமார்களுடன் சல்லாப முதலியன செய்தல், கடவுள் தரிசனத்திற்குப் போகுதல் ஆகிய இவைகளைக் கணவன் அனுமதி கொடுத்தால் செய்யலாம். மனைவியானவள், விவாக முதலிய சுபங்களையும், சாவுமுதலிய அசுபங்களையுந் தவிர வேறுகாரணத்தைக் கொண்டு பிறந்த வீட்டிற்குப் போககூடாது, அப்படிப்போனாலும் பர்த்தா

வுடைய வேலைக்காரர்களைத் துணையாகக் கொண்டே போக வேண்டும். அப்படிப்போனால் பிறந்த வீட்டில் அதிககாலம் இருக்கக்கூடாது. ஏனென்றால் தாய்வீடோடிய பெண்ணும் பேயோடாடிய கூத்தும் என்பதுபோலவும் பெண்ணுக்குக் கேடு பிறந்த வீடு என்பதுபோலவும் தகப்பன் முதலாகிய பந்துக்களின் வீடுகளில் பெண்கள் வெகுகாலம் வசிப்பதானது அவர்கள் பதிவிரதைகளாக இருந்தாலும் ஜனங்கள் அவர்களைக் கற்பு இல்லாதவர்கள் என்று எண்ணுகிறதற்கு இடமுண்டாகி அவர்களுடைய புகழையும் நல்ல நடத்தையும், தருமத்தையும் அழித்துவிடும். ஆதலால் மனைவியானவள் பர்த்தாவுக்குப் பிரியமானவள் ஆனாலும், அப்பிரியமானவள் ஆனாலும் அவனுடைய சமீபத்திலேயே யிருக்கவேண்டும் என்பது சாகுந்தலத்தின் பிரமாணமாகும்.

அன்றியும், வாசலில் உட்காருதல், சாளரத்தின் வழியாகப் பார்த்தல், கெட்டவார்த்தைகளைப் பேசுதல், சிரித்தல் ஆகிய இவைகள் குலஸ்திரீகட்குக்கூடாது என்பது வியாச வசனப்பிரமாணம் ஆகையால் மனைவியானவள், துற்புத்தி சொல்லுதல் கெட்டபார்வை, கோணல்முகப்பேச்சு, வாசற்றிண்ணை, முதலான இடங்களில் இருக்கை, சாளரம், மச்சு முதலாகிய இடங்களில் இருந்து வெளியிற் பார்த்தல், வீட்டைச் சேர்ந்த தோட்டங்களிற் சென்று ஒருத்தியோடு சம்பாஷித்தல், ஒருவரும் இல்லாத இடத்தில் வெகுநேரம் இருத்தல், ஆகிய இவைகளைத் தவிர்க்கவேண்டும். மேற்கண்ட ஒழுக்கத்திற்கு விரோதமாய் இருத்தல், பிறந்தவீட்டில் வசித்தல், உத்ஸவங்களில் கூடுதல், புருஷர்களுடைய முன்னிலையில் வம்பு கூட்டங்கூடுதல், அடங்காமல் இருத்தல், வேறு ஊரில் வசித்தல், கற்புஇல்லாதவர்களுடன் சேருதல், தன் நடத்தையில் நின்றும் தவறுதல், தன்இஷ்டப்படி பேசுதல், வரம்புஇல்லாமல் புருஷர்களோடுகூடப் பேசுதல், முதலாகிய அடாதகாரியங்கள் யாவும் சந்தேகத்திற்கும் விநாசத்திற்கும் காரணங்களாகும். ஆகையால் எவள் தன்மனமொழி மெய்களைத் தீவழியில் செலுத்தாமல் அடக்கத்தை உறுதியாகக் கைப்பற்றி யிருப்பதினால் தன் பர்த்தாவை அசுத்தப் படுத்தாமல் இருக்கின்றாளோ அவளுக்குத்தன் பர்த்தாவின் லோகம் கிடைக்கின்றதென்றும், அவளே பதிவிரதையென்றும். மனுஸ்மிருதியும், எவள் தன்னுடைய நல்ல ஒழுக்கங்களால் தகப்பனைச்





சந்தோஷப்படுத்துகின்றாளோ அவளேபுத்திரனென்றும், எவள் தன்பர்த்தாவுக்கு மங்களத்தையே கோருகின்றாளோ அவளே மனைவியென்றும், எவள் சுகத்திலும் ஆபத்திலும் ஒரேவிதமாக நடக்கின்றாளோ அவளேமித்திரனென்றும், இம்மூன்றையும் உலகத்தில் புண்யவான்களே யடைகின்றார்களென்றும் பார்த்ரு ஹரியும் பிராமணப்படுத்துவதால் மனைவியானவள் கணவனுக்கு அப்பிரியத்தை வருவிக்காத நல்ல ஒழுக்கத்தில் நடந்து கொள்ள வேண்டும் என்பதையும், இல்லாவிட்டால் அவளுக்கு இவ்வுலகத்திலும் மேலுலகத்திலும் சுகம் கிடையாது என்பதையும் பெண்கள் இங்கு நன்றாய்க் கவனிக்கவேண்டும்.

வே. முத்தனாசாரியார்.

---

## நட்பு.

---

நட்பென்பது மனிதன் அடைதற்கரிய லாபங்களில் ஒன்று. அது மன ஒற்றுமையாலும், குண ஒற்றுமையாலும் நேர்வது. சமநிலைக்கணுள்ளார்க்கே நட்பு உறுதிப்படும். உயர்வு தாழ்வுள்ள நிலைக்கணுள்ளோர் தத்தமுயர்வு தாழ்வுகளைச் சமப்படுத்தாலன்றிச் சிநேகராகார். ஒருவனுக்கு நட்பினும் சிறந்த ஊதியமில்லை. அது பற்றி நண்பரைச் சேர்க்கும் போது, தீரவிசாரிக்க வேண்டும். நெடுநாட் பழகின பின்னர் தாம் நன்பு கொண்ட மகனிடத்துக் குற்ற முள்ளதை யுணர நேரலாம். அப்போது அத்தகையனைச் சேர்ந்தோமே என வெறுக்க வேண்டிவரும். அவ்வகைய துன்பம் நேராது பரிசீலித்துச் சேர்ந்த நண்பனிடத்துத் 'தேற்றுவொழுக்கத்தை' க்காணின் தூற்றாதே தூரவிடலேசிறந்தது. எவ்வகையாலும் 'கோட்டுப்பூப்போல, மலர்ந்து பின் கூம்பாது, வேட்டதே' நட்பாகும். ஒருமுறை சேர்ந்து பிரிந்தவர் கூடினும் உயிர்நீங்கிச் சேர்ந்தது போல் ஒற்றுமையிலராவர்.

நட்புக்கூடிய பின் கவனிக்க வேண்டிய விஷயங்கள் பல. வஸ்திரமிழந்த வொருவனுக்குக்கை யுதவுவதுபோல, முட்டுற்றவிடத்துக் கைகொடுக்கும் நண்பனைக் 'குணனுங் குடிமையுங் குற்றமும் குன்றாவினனுமறிந்து' பின்னர் பழமைபாராட்டுவது மிகவவசியமாம். ஒரு அறத்தைக் கொண்டு நடுவேதரை விடுபவன் எப்படி பயிரை நட்டு அறுக்காதவனினும் கேட்டையடைவனோ

அதுபோல ஒரு நண்பனைத் தேர்ந்து அவனது நட்பை விருத்தி செய்வதற்கான முயற்சி யெடாதவன், ஊதியமில்லாதவாணிபத்தைச் செய்தவனாகிறான். பழைய நட்பினரிடத்துச் சிநேகம் நீங்காதவர் பகைவராலும் விரும்பப்படும் குணமுள்ளவராவர்.

தன் சிநேகிதன் வெறுக்கத்தக்ககாரியங்களைச் செய்யின், அவை யறியாமை யான் வந்ததெனக் கொள்ளுவதுமன்றி தன்னிடத்து ஏற்பட்ட மிக்கவுரிமையாலும் வந்ததெனக் கொள்ளல் வேண்டும். நட்பிற் பிழைபொறுக்குங்குணத்திற்கு மேற்சிறந்த குணமேயில்லை. மிகக்கேட்டைத்தருவன வாயக்குற்றங்களைச் செய்யினும் பழைய நண்பர்கள் தம் தோழமையைக் கைவிடார்.

இந்த நட்பைப் பரிசோதிப்பது ஒருவனது துன்பகாலமே.

காலாடு பொழுதிற் கழிகிளைஞர்வானத்தின்
மேலாடு மீனிற்பலராவரேலா
விடரொருவருற்றக் காலீங்குன்ற நாட
தொடர் புடையே மென்பார்சிலர்.

ஒருவனுக்கு நற்காலமுள்ளபோது பலரும் பின் தொடருவர். இடரெய்தியபோது நிற்பவனே யுற்றபந்துவுந்தோழனுமாவான். கெடுங்காலைக்கைவிடுவான் கேண்மையை நினைத்த காலத்தும் உள்ளம்சுடும்.

நம் நாட்டுச் சிலர் சிநேகத்துக்கே அருகரிலராவர். சாதிப்பிரிவினையும் மதப்பிரிவினையும் அவ்வகைய சிநேகத்துக்குக்குறுக்கே நிற்கின்றன. ஒரு அந்தணன்மற்றொரு அந்தணனிடத்துப் பழகும்போது கூட தஞ்சாவூர் நல்கான் மதுரை யெந்தனிடத்துப்பழகுவது போலவே பழகுகிறான். இருவருக்கும் பரஸ்பர நம்பிக்கையில்லை. தவிரவும் நான் உன்னைப்பற்றிப் பலர் பல மாதிரி பேசும்போது சமையத்துக்குத்தக்கதுபோற் பேசி, யென்னை யுன்னோடு சேர்ந்த காரணத்தாலென்னைக் கீழாக நினையாத படி பார்த்துக் கொள்ளுவேன். நீ கோபங்கொள்ளக் கூடாது' எனத் தம் சிநேகரிடத்து உடன்படிக்கை செய்து கொள்ளுவார். நட்பு எத்தனைவாய்ந்ததெனவுய்துணர்வாருக்குத் தெரியும். ஒரு ஆரியன் தமிழனிடத்துப் பழகும் விதமிதுவே. இவ்விருவருக்கும் எவ்விதம்ன ஒற்றுமையிருக்குமோ தெரியவில்லை. இருவரும் தனியிடத்தில் மனச்சாட்சி சரியென்று சொன்னவற்றை யெல்லாம் செய்தாலும், பகிரங்கமாக வந்தால் ஜாதிப்பிரிவினை மதத்தை விடாது





ஒருவன் மற்றொருவனது ஜாதியைத் தூஷிப்பதே இந்நாட்டியல்பு இதுபற்றியே உண்மையான நண்பரிந்நாட்டிலில ரென்று உயர்ந்த விவேகிகளெண்ணுகிறார்கள்.

மனமொத்த நண்பரிருவர் சேர்ந்தவிடம் கைலாசத்துக்கொப்பாகும். அங்கு சேர்ந்த நண்பரைத் தேவரெனவே சொல்லலாம். ஒரு நண்பன் மற்றவனது சந்தோஷத்தை யதிகப்படுத்தித்துன்பத்தைக் குறைக்கிறான், என நம்தேசத்துப்புலவரொருவர் கூறினர். எனவே நல்ல நண்பர்களை யுறவு கொண்டு, தீநட்பைக்கைவிட்டு நண்பரிடத்துள்ள சிறுமைகளைப்புறங்காத்து, நிற்பதே சிறப்பு இரகசியங்களை வெளிபடுத்துவானது கூட்டுறவு விஷப்பாம்போடு செய்யுங் கூட்டுறவுக்குச் சமமாகும்.

---

## ஒரு வேண்டுகோள்

எனதருமை ஸகோதரிமார்களே !

“நம்ம தேசம் உர்ஜிதாவஸ்தையை அடைவதற்கு பெண் கல்வியே முக்கிய ஆதாரமாயிருக்கின்றது. ஏனென்றால், இப்பொழுது பால்யப்பருவத்தி லிருக்கப்பட்ட பெண்மணிகள் தான் பிற்காலத்தில் தாய் என்னும் பதவியை அடைந்து, அவர்களுக்குள்ள அறிவின் பலனை தங்கள் ஸந்ததிகளுக்களித்து, அவர்களால் பெரும் காரியங்களைச் செய்வித்துக் கொள்ளப் போகிறார்கள். ஆதலால், ஸ்திரீ ஸமூகத்தார் நல்லறிவு அடைவதற்கு தற்காலம் பாடசாலைகளில் படித்துக் கொண்டிருக்கும் பெண்மணிகளுக்கு ப்ரோச்சாகத்தைக் கொடுப்பது கற்றறிந்த ஒவ்வொரு ஸ்திரீ புருஷர்களுடையவும் கடமையாயிருக்கின்றது. நல்லறிவென்னும் மதுரமான பழத்தின் ருசியை அறிந்த ஒவ்வொரு ஸ்திரீ புருஷர்களும் இவ்விஷயத்தில் கவனத்தைச் செலுத்தி தமது பெண்களுக்கும், அல்லயலிலுள்ள பெண்மணிகளுக்கும் ப்ரோச்சாகப்படுத்துவது மிகவும் அவசியம்.

கேவலம் எழுதப்படிக்கத் தெரிந்து கொஞ்சம் கணக்குத் தெரிந்தால், அதற்கு வித்தை என்று சொல்லிவிட முடியாது, பெண்கல்வியில் முக்கியமாய் கற்பு, ஸந்தோஷம், தயை, க்ஷமை, விவேகம், எல்லோரிடத்தும் அன்பு, கோமலத்துவம், முதலிய குணங்கள் இருக்கவேண்டும், மேலும் இல்லறத்தை சிறப்

புடன் நடத்துதல், எல்லாவேலைகளும் செவ்வென அறிதல் குழந்தைகளை வளர்த்துதல் முதலிய வேலைகளை ஸ்திரீகளுக்கு பணிக்காய் செய்யத்தெரிந்திருக்கவேண்டும்.

விலையுயர்ந்த ஆடையாபரணங்களால் தேகத்தை அலங்கரித்துக் கொள்வதைவிட, நற்குணங்களால் தேக காந்தியை விருத்திசெய்வது தான், மேன்மை என்பதை ஒவ்வொரு ஸ்திரீயும் ஞாபகத்தில் வைத்துக் கொள்ளவேண்டும். முற்காலத்து ஸ்திரீ ரத்னங்களாகிய சீதை, திரௌபதி, மண்டோதரி, முதலிய ஸ்திரீமணிகளின் உதாரணங்களை முந்நிலையில் (எதிரில்) வைத்துக் கொண்டு, நாமும் அவர்களைப் போல் கீர்த்திமான்களாக முயலுவதுமல்லாமல், இதர ஸ்திரீகளையும் அவ்வாறு செய்யும்படி வற்புறுத்தவேண்டும். ஆனாற்றான், இகபரத்திலும் நமக்கு நன்மையுண்டாய், கடவுளளித்த மேன்மையான இம்மானிட ஜன்மத்தின் ஸார்த்தகமுண்டாகும்.

நம்ம ஸகோதரிகளுள் சிலருக்கு பாடசாலைச் சென்று கற்க அசௌகரியங்களிருக்கக் கூடும். இருந்த போதிலும், பயனற்ற பேச்சுகளைப் பேசி, காலத்தை வீணேகழிக்காமல், உடன் பிறந்தவர்களுடைய ஸகாயத்தினாலோ அல்லது அந்நியர்களுடைய சகாயத்தினாலோ கல்விகற்கும் விஷயத்தில் விடாமுயற்சி செய்யவேண்டும்.

மேலும், கடவுள் கிருபையினால் தற்காலம் கொஞ்சம் நாகரீக தசையை அடைந்திருக்கிறபடியால், தேடிப்பார்க்கும் கால் கற்றறிந்த ஸ்திரீகள் அகப்படமாட்டார்களா ?

அத்தகையவர்களை சிநேகித்து அவர்கள் மூலமாவது ஒழிவு நேரத்தை இனிதாய் கழிப்பதற்கவசியமானதும், மனதிற்குச் சுகத்தைத் தரும் சத்சரித்திரங்களைப் படிக்கவும், காதிற்கின்பமாயும், பக்திபரமாயுமுள்ள பாட்டுகளைப்பாடவும், காட்சிக்கினிய தையல்வேலைகளைச் செய்யவும், கற்கமுயலவேண்டும்.

ஸகோதரிகளே, மேற்சொன்ன இலாபங்களை அடைய சிநேகம் அத்தியாவசியமானபடியால் நாமெல்லோரும் சிநேக பாவத்துடனும், ஒற்றுமையுடனிருந்து வித்தையை அப்பியசிக்கும் விஷயத்தில் ஒருவருக்கொருவர் உதவி புரிவோமாகில் நமக்கெவ்வளவு நன்மை உண்டாகுமென்பதைப்பற்றி சற்று யோசியுங்கள்.

மங்களாம்பிகா பாய்,





## சேற்றுப்புண்.

இவ்வியாதி ஆண் பெண் இருபாலாருக்கும் உண்டாகிறது. முக்கியமாய் குடும்பத்தில் சமயல் செய்யும் ஸ்திரீகளுக்கு சர்வசாதாரணமாய் வருகிறதைப்பார்க்கிறோம். ஆண்களாகட்டும் பெண்களாகட்டும் இச்சில்லரை விஷயங்களில் கவனம் செலுத்தாததினால் வியாதி வந்தபிறகு, மிகவும் வருத்தமுறுகிறார்கள். போனால் போகட்டும். வியாதி வந்தபிறகாவது சிகிச்சைக்கு வழிதேடுகிறார்களா? அதுவுமில்லை. என்றைக்காவது வீட்டிலுள்ளவர்கள் ஒரு சிகிச்சை சொன்னாலாவது அதை சரிவர பின்பற்றினால் ஒரு துன்பமும் கிடையாது. முக்கால்வாசி சோம்பல், கால்வாசி கவனமின்மை. சேற்றுப்புண்ணினால் பாதங்களை இரணமாகப் பண்ணிக்கொள்ளுகிறார்கள். தனக்கும் கஷ்டம் பார்க்கிறவர்களுக்கும் அஸிங்கம்: நிற்க. இவ்வியாதியைப்பற்றி விவரித்து சிகிச்சைமுறைகளை தெரிவிப்போம்.

நெருப்பு உடம்பின்மேல் பட்டால் எப்படி இரணங்கள் உண்டாகின்றனவோ அதே மாதிரி மிக்கக் குளிர்ச்சியுடைய பொருள்கள் சரீரத்தில் பட்டால் இரணங்கள் உண்டாகின்றன. இத்தகைய இரணங்கள் அவையுண்டாகிய இடத்திற் கேற்றபடி பெயரை அடைகின்றன. இது முகத்தில் உண்டானால் "பிராஸ்டு பைட்" (Frost-bite) என்றும், கைகளில் உண்டானால் "சில்பிளெய்ன்ஸ்" (Chill-blains) என்றும் கால்களில் விரல்களுக்கிடையில் உண்டானால் "சேற்றுப்புண்" என்றும் பெயர் பெற்றிருக்கிறது. இந்நோய் மிகக் குளிர்ச்சி பொருந்தி பனிக்கட்டிகள் நிறைந்திருக்கும்படியான ஐஸ்லாண்டு (Iceland) முதலிய பிரதேசங்களில் காணக்கூடிய நோய். கைகளிலும், முகத்திலும் உண்டாகும் நோய் நம்மிந்தியாவில் கிடையவே கிடையாது. காலில் உண்டாகிற சேற்றுப்புண் மாத்திரம் இந்த உஷ்ணதேசங்களில் குளிர்ச்சியால் உண்டாகாவிட்டாலும், குளிர்ந்த ஜலத்தில் காலிற்கு பாதரக்ஷையின்றி இடைவிடாது நடமாடுகிறவர்களுக்கு சேறு, மண், குப்பை, சத்தை முதலியவைகள் இருக்கின்றமையால் அவைகள் கண்ணில் மண் விழுந்தால் எப்படி உறுத்துகின்றதோ, அதேமாதிரி கால் விரல்களினிடையில் சேர்ந்து உறுத்தி அப்பாகங்களை இரணங்களாக்குகின்றன. அன்றியும் குளிர்ந்த ஜலத்தில் பாதங்களை நனைத்

தால், அவைகள் சுருங்குகின்றன. அவைகள் சுருங்கவே அவ்விடத்தை இரத்தத்தால் பாய்ச்சும் நாடிகளும் சுருங்குகின்றன எனவே, அவ்விடத்திற்குப் போதுமான அளவு இரத்தம் பரவுகிறதில்லை. எப்பொழுது இரத்தம் குறைந்தும் நீரில் நனைந்தும் வருகின்றதோ அப்பொழுதே அந்தவிடம் வெண்குட்டம் போல் வெண்மையாகிவிடுகிறது. அந்தச் சமயமே குப்பை கூளங்கள் உறுத்தி இரணம் உண்டாக்கக்கூடிய தருணம். இப்புண்களுக்குத் தகுந்த சிகிச்சை செய்யாவிட்டால் பாளம் பாளமாய் கால் விரல்களுக்கு நடுவில் பிளந்து இரணங்களாகி மிக்க உபத்திரவத்தைத் தரும்.

### சிகிச்சை.

நீரில் காலை நனைக்காமலிருப்பதே தகுந்த சிகிச்சையாம். காலை நீரில் நனைக்க வேண்டியிருந்தால் நனைக்குமுன் விளக்கெண்ணை, வாசலைன் முதலியவைகளை நன்றாய்ப் பூசி பின் நீரில் நனைந்தால் நீர் சருமத்தில் படாது. நீர் படாதபொழுது இரத்த ஓட்டம் சரியாயிருக்கும். ஆகையால் இரணமுண்டாகாது. இரணம் உண்டாகியபின்,

(1) Zinc oxide — 1 Drachm
ஜிங்கு ஆக்ஸைட் — டிராம்.
Vaseline — 1 ounce
வாசலைன் — அவுன்ஸ்

இதை நன்றாய்க் குழைத்து சேற்றுப்புண்களுக்கு பூசலாம்.

(2) Boric acid — 1 Drachm
போரிக் ஆஸிட் — டிராம்
Vaseline — 1 ounce
வாசலைன் — அவுன்ஸ்

இதை நன்றாய்க் குழைத்துப் பூசலாம்.

### ஆயுர்வேத வைத்தியர் முறை.

(1) மூதார் சிங்கை நெய்யிலாவது, தேங்காய் எண்ணெயிலாவதுக் குழைத்துப் பூசலாம்.

(2) நெல்லிக்காவடகத்தை நீரில் உரைத்துப் போடலாம்.

(3) கடுக்காயை நீரில் உரைத்துப் போடலாம்.

(4) மஞ்சள் பொடியையும் கிரோசின் எண்ணெயையும் கலந்து தடவலாம்.

சேற்றுப்புண் வந்தவுடன் மேற்சொன்ன சிகிச்சைகளில் சுலபமாக அகப்படக் கூடியதை எடுத்து உபயோகிப்பது மிகவும் நலம்.





## ஸரஸ்வதி யந்தாதி.

---

### கட்டளைக் கலித்துறை.

சீர்தந்தவெள்ளிதழ்ப் பூங்கமலாசனத் தேவிசெஞ்சொற்
றார் தந்தவென்மனத் தாமரையாட்டி சரோருகமேற்
பார்தந்தநாதனிசைதந்தவாரணப் பங்கயத்தாள்
வார்தந்தசோதியம் போருகத்தாளை வணங்குதுமே. க.

வணங்குஞ்சிலைநுத லுங்கலைத் தோளும் வனமுலைமேற்
சுணங்கும்புதிய நிலவெழுமேனியுந் தோட்டுடனே
பிணங்குங்கருந்தடங் கண்களு நோக்கிப் பிரமனன்பா
லுணங்குந் திருமுன்றிலாய் மறைநான்கு முரைப்பவளே. உ.

உரைப்பாருரைக்குங் கலைகளெல்லா மெண்ணி லுன்னையன்றித்
தரைப்பாலொருவர் தரவலரோ தண்டரளமுலை
வரைப்பாலமுதந் தெளிக்கவாழ்வித்த மாமயிலே
விரைப்பாசடைமலர் வெண்டாமரைப்பதி மெல்லியலே. ங.

இயலானதுகொண்டு நின்றிருநாமங்களேத்துதற்கு
முயலாமையாற்றடுமாறுகின்றேனிந்த மூவுலகுஞ்
செயலாலமைத்த கலைமகளே நின்றிருவருளுக்
கயலவிடாம லடியேனையுமுவந்தாண்டருளே. ச

அருக்கோதயத்தினுஞ் சந்த்ரோதயமொத் தழகெறிக்குந்
திருக்கோலநாயகி செந்தமிழ்ப்பாவை திசைமுகத்தா
னிருக்கோதுநாதனுந் தானுமெப்போது மினிதிருக்கு
மருக்கோலநாண்மல ராளென்னை யாளு மடமயிலே. ரு.

மயிலேமடப்பிடியே கொடியேயிளமான்பிணையே
குயிலேபசுங்கிளியேயன்னமே மனக்கூரிருட்கோர்
வெயிலேநிலவெழு மேனிமின்னேயினி வேறுதவும்
பயிலேன்மகிழ்ந்து பணிவேனுனதுபொற் பாதங்களே. சு.

பாதாம்புயத்திற் பணிவார் தமக்குப் பலகலையும்
வேதாந்தமுத்தியுந் தந்தருள் பாரதி வெள்ளிதழ்ப்பூஞ்
சீதாம்புயத்தி லிருப்பாளிருப்பவென் சிந்தையுள்ளே
யேதாம்பயிற் பெறலரிதாவ தெனக்கினியே. எ

இனிநா னுணர்வதெண் ணெண்கலையாளை யிலகுதொண்டைக்
கனிநாணுஞ்செவ்விதழ் வெண்ணிறத்தாளைக் கமலவயன்
றனிநாயகியை யகிலாண்டமும் பெற்ற தாயைமணப்
பனிநாண்மலருறை பூவையையாரணப் பாவையையே. ௮

பாவுந்தொடையும் பதங்களுஞ்சீரும் பலவிதமா
மேவுங்கலைகள் விதிப்பாளிடம்விதி யின்முதிய
நாவும் பகர்ந்ததொல் வேதங்களுங்கு நறுங்கமலப்
பூவுந்திருப்பதம் பூவாலணிபவர் புந்தியமே. ௯

புந்தியிற்கூரிரு ணீக்கும்புதிய மதிய மென்கோ
வந்தியிற்றோன்றிய தீபமென்கோநல் லருமறையோர்
சந்தியிற்றோன்றுந் தபனனென்கோமணித் தாம மென்கோ
உந்தியிற்றோன்றும் பிரான்புயந்தோயு மொருத்தியையே. ௰

ஒருத்தியையொன்று மிலாவென்மத்தி னுவந்துதன்னை
யிருத்தியைவெண்கம லத்திருப்பாளையெண் ணெண்கலைதோய்
கருத்தியையைம் புலனுங் கலக்காமற் கருத்தை யெல்லாந்
திருத்தியையான்மற வேன்றிசைநான்முகன் றேவியையே ௧௧.

தேவருந்தெய்வப்பெருமானுநான் மறைசெப்புகின்ற
மூவருந்தானவ ராகியுள்ளோருமுனிவரும்
யாவருமேனைய வெல்லாவுயிருமிதழ்வெளுத்த
பூவருமாதினருள் கொண்டுஞானம் புரிகின்றதே. ௧௨.

புரிகின்ற சிந்தையி னூடேபுகுந்து புகுந்திருளை
யரிகின்றதாய்கின்றவெல்லாவறிவி னரும்பொருளைத்
தெரிகின்றவின்பங் கனிந்தூறிநெஞ்சந் தெளிந்துமுற்ற
விரிகின்றதெண்ணெண் கலைமானுணர்த்திய வேதமுமே. ௧௩.

வேதமும்வேதத்தி னந்தமுமந்தத்தின் மெய்ப்பொருளாம்
பேதமும்பேதத்தின் மார்க்கமுமார்க்கப் பிணக்கறுக்கும்
போதமும்போத வுருவாகியெங்கும் பொதிந்தவிந்து
நாதமுநாதவண் டார்க்கும்வெண்டாமரை நாயகியே. ௧௪.

நாயகமான மலரகமாவதுஞானவின்பச்
சேயகமான மலரகமாவதுந் தீவினையா
லேயகமாறி விடுமகமாவது மெவ்வுயிர்க்குந்
தாயகமாவதுந் தாதார்சுவேத சரோருகமே. ௧௫.

தொடரும்.





## சதுபதேசங்கள்.

---

என்னுற்ற நால்வர் ஒருமலை காணுதற் கேற்படவே
யின்னுற்ற பாறை யொருவன் மரத்தின் றிரளொருவன்
தண்ணுற்ற ஓடை யொருவன் பறவை தனித்தொருவன்
கண்ணுற்ற போல் பல்சமயத்தர் காண்பார் கடவுளையே.

மீனாவாட்சி.

நால்வர் கூடி மலை காணச்சென்றனர். ஒருவன் பாறையைக் கண்டான். ஒருவன் மரக்கூட்டங்களைக் கண்ணுற்றான். வேறொருவன் நீரோடையைப்பார்த்தான். மற்றொருவன் பறவைகளை நோக்கினான். ஒவ்வொருவனும் தான்கண்ட காட்சியே மலையென மதித்து மகிழ்ந்தான். அதுபோலவே இவ்வுலகத்துள்ள பற்பல சமயிகளும் கடவுளை பலபல ரூபங்களாகச் சிந்தித்து வணங்குவர். உண்மை நோக்கில் எச்சமயிகளும் ஒரே கடவுளையே வணங்குகின்றனர். நாமங்கள் வேறுபடுகின்றனவே யன்றி பொருட் பேதமில்லை. ஆதலின் எம்மதமும் நம் மதமே. எல்லா மனிதரும் நம் சகோதரர்களே. எவ்வெவர் நன்மையும் நம் நன்மையே. இதுவே நம் நோக்கம். இக்கொள்கையே நமது சிறந்த வழிகாட்டி.

அமிர்தவசனி.

---

## சீனஸ்திரீகளின் நிலைமை.

---

உலகத்திலுள்ள இராச்சியங்களுக்குள் விஸ்தீரணத்தில் மூன்றாவதும், குடிசனத்தொகையில் முதலாவதுமாய் நிற்பது சீனராச்சியம். இவ்விராச்சியத்தவர்கள் பல்லாண்டுகளாய் அன்னிய சாதியாரையும் அவர்கள் பழக்கவழக்கங்களையுமருவருத்துத் தங்கள் நூதன வழக்கங்களையே யனுசரித்துவந்தும், இப்போது தங்களயற் தேசமாகிய ஜப்பானினுயர்ச்சியைக்கண்டு தாங்களும் முன்னேறிவர வேண்டுமென்று மபேட்சையுடையவர்களாயிருக்கின்றனர். சிறுவிலே பல வருடங்களாய்ச் சீவித்து அவ்விடச் சிர்திருத்தங்களை நன்றாயறிந்த ஐரோப்பிய, அமெரிக்க குருமார் அத்

தேசத்து ஸ்திரீகளின் நிலைமையைப்பற்றி யெழுதியவற்றை யறிதல் நம் பத்திராபிமானிகட்கும் பிரயோசனமாயிருக்கு மென்றெண்ணிச் சில குறிப்புகளை இவ்விடந் தருகிறோம்.

சீன ஸ்திரியின்நிலை தொட்டில் தொடங்கிச் சுடலை மட்டுஞ் சஞ்சலம் நிறைந்ததாகவே யிருக்கின்றது. அவளுடைய பிறப்பினாற் சந்தோஷப்படுவாரில்லை. சிசுவதை சீனாவிற் சாதாரணமாயிருப்பதினால் ஓர் பிதா தன் பெண் குழந்தையை ஓர் கோபுரத்துள்ளெறிந்து விடுவதுமுண்டு. அங்கே, அக்குழந்தையினுடல் மிருகங்களுக்கும் பட்சிகளுக்குமுணவாகும். சிலவேளைகளிற் பெண்குழந்தைகள் ஆற்றிலெறியப்படுவதும், வீட்டுக்குள்ளே தோண்டப்பட்ட குழியிற் புதைக்கப்படுவதுமுண்டு. இவ்வழக்கஞ் சீனருக்குள் எவ்வளவதிகமாயிருக்கிறதென்று விஸ்தரித்தலசாத்தியம். தென் சீனாவிலோர் மிஷனரியம்மாள் பெருந்தொகையான சீனஸ்திரீகளிருந்த ஒரு கூட்டத்தில் அப்பெண்களைப்பார்த்து, உங்களிலெத்தனைபேர் உங்கள் பெண்குழந்தைகளைக் கொன்றிருக்கிறீர்களென்று கேட்டபோது, அவர்களெல்லோரும் குறைந்த பட்சம் ஒரு குழந்தையையாவது கொன்றிருக்கிறதாக அறிக்கை யிட்டார்கள். ஒரு ஸ்திரீ தான் ஐந்து குழந்தைகளைக் கொன்றேனென்றாள். ஒரு மிஷன் பள்ளிக்கூடத்தில் மட்டும் பெற்றோரால் எறிந்து விடப்பட்ட 50 பெண்பிள்ளைகளிருக்கிறார்கள்.

இவ்வாறு பெண்பிள்ளைகளை யழித்து விடுவதற்குச் சனங்களுடைய வறுமையே காரணமென்று சொல்லப்படுகின்றது. நாள் வீதம் 15 சதந்தொடங்கி 25 சதம்வரையுமுழைக்கும் ஒருவன் பெண்பிள்ளைகளுள்ள ஒரு குடும்பத்தை தாபரித்து, விவாககாலத்தில் அவர்களுக்குச் சீதனங்கொடுப்பது கூடாதகாரியம். மேலும் பெண்பிள்ளைகள் பெற்றோருக்கு உதவியாய் வேலைசெய்து கொடுக்கக்கூடிய பருவம் வருவதன் முன்னேயே விவாகமாய் விடுவதனாற் பெண்குழந்தைகளைப் பெற்றுவளர்த்தல் பிரயோசனமற்ற காரியமாயெண்ணப்படுகின்றது. அன்றியும் ஒரு பெண் விவாகமான பின் அப்பெண்ணின் பெற்றோருக்கு மகளாவது மருமகனாவது யாதொரு உதவியுஞ் செய்கிறதில்லை. இதனாலேயே பெண்சிசுவதையங்கே அதிகமாயிருக்கின்றது.



பெற்றோராலெறிந்து விடப்படும் பெண்குழந்தைகளையெடுத்து வளர்ப்பதற்காகப் புத்த சமயத்தவர்களும் அனாதர் சாலைகளையுண்டாக்கியிருக்கின்றனர். ஓர் பிதா தன் பெண் குழந்தையையகற்ற விரும்பினால் அக்குழந்தையைக் கொண்டுபோய் மேற்படி அனாதர்சாலைகளின் மதிற்புறத்தே தூங்குங்கூடையுட் போட்டுவிடலாம். இவ்விதப்பிள்ளைகள் அனாதர்சாலையுட்கொண்டு போகப்பட்டு அங்கே வளர்க்கப்படும். இவ்வனாதர் சாலைகள் பரோபகாரங் கருதி யுண்டாக்கப்பட்டவைகளென்று சொல்லக்கூடாது. ஏனெனில் இச்சாலைகளுக்குக் கொண்டு போகப்படும் பெண்கள் வளர்ந்தவுடன் அடிமைகளாக விற்கப்படுகிறார்கள். மேலும் பல பட்டினங்களிலுள்ள பொதுமகளிர் ஸ்தாபனங்களுக்கு இச்சாலைகளிலிருந்தே பெண்கள் விற்கப்படுகின்றனர்.

சீனப்பெண்ணின் சந்தோஷகாலம் 5 அல்லது 6 வயதுவரையுந்தான். அதன்பின் அவர்களுடைய பாதங்களை வரிந்து கட்டும் வேலை யாரம்பிக்கப்படும். ஏறக்குறைய 2 அங்குல அகலமும் நீளமுமான நாடாவினால் இச்சிறுபெண்களின் கால்விரல்கள் குதிக்காலுக்கு கிட்டவரத்தக்கதாக இரண்டு பாதங்களும் வரிந்து கட்டப்படும். மாசமொருமுறை பாதங்களை வெந்நீரிற் தோய்த்து இந்தக்கட்டுகளை யவிழ்த்துவிட்டுப் பாதங்களைத் தேவையான உருவத்துக்கு வரத்தக்கதாகப் பிசைந்து மறுபடி கட்டுவார்கள். இப்படிச் செய்வதினால் அனேக தருணங்களில் உள்ளங்காற் சதையழுகிப் போவதும் கால்விரல்கள் அழுகி விழுந்து விடுவதுமுண்டு. பாதங்களைச் சிறுப்பிக்கத்தொடங்கிய முதல் 3 வருடங்களிலும் பெண்குழந்தைகள் படுமுபத்திரவம் வர்ணனைக் கடங்காது. சந்தோஷமாய்த்துள்ளி விளையாட வேண்டிய பிள்ளைகள் இராப்பகலாய்க் கதறிக்கொண்டு பெரிய தடிகளிலே சாய்ந்து கொண்டு நிற்பார்கள். அல்லது உட்கார்ந்திருப்பார்கள். இரவிலே இக்குழந்தைகளின் தாய்மார் பக்கத்திலே பெரியதடிகளும் வைத்துக்கொண்டு படுப்பார்கள். குழந்தைகள் சத்தமிட்டழுது நித்திரையைக் குழப்பினால் இரக்கமின்றி யடிப்பார்கள். சிலசமயம் பெரும்பாலும் இப்பெண் குழந்தைகளைப் புறம்பானவிடத்திற் படுக்கவிடுவது வழக்கம். பாதஞ் சிறுப்பிக்கப் படுங்காலத்தில் ஓர் குழந்தையின் கண்ணிலிருந்து சொரியுங் கண்ணீர் அக்குழந்தை முழுகுவதற்குப் போதியதென்று சீனர்சொல்லுவது பொய்யல்ல. இவ்வுபத்தி

ரவத்தினாற் பத்திலொருபங்கு பெண்குழந்தைகளிறந்து போகிறார்கள். பாதங்களை புரிந்து கட்டுதலினால் வருமுபத்திரவம் கொஞ்சகாலத்தோடு முடிந்துபோவதில்லை. குழந்தைகள் வளர்ந்து பெரிய மனுஷிகளான பின்னும் அவர்கள் சொற்ப நேரமாவது எழுந்து நிற்க இயலாதபடி சோர்வாதம் முதலிய வருத்தங்கள் வருவதும் அவர்களுடைய கால்கள் வைத்தியாற் தரிக்கப்படுவதும் நூதனமல்ல.

பிள்ளைகள் விவாகமாவதென்ன வென்றறியத்தக்க பருவத்துக்கு வந்தவுடன் விவாகம் நடைபெற்றுவிடும் மாப்பிள்ளை பெண்பிள்ளையுடைய சம்மதம் கேட்கப்படுவதில்லை. பெற்றாரே தரகர்மூலமாய் விவாகத்தை யொழுங்கு செய்வார்கள். விவாக வழக்கங்களும் நூதனமானவை. விவாகதினத்திற்கு முதல் நாள் பெண்பிள்ளையின் கண்புருவத்தின் மயிர்களெல்லாம் பிடுங்கப்பட்டுப்போகும். இதுவே விவாகமான ஸ்திரீக்கடையாளம். விவாகதினத்திற் பெண்பிள்ளையை யலங்கரித்துப் பலவித வாத்தியங்களுடன் மிக ஆடம்பரமாய்ப் பல்லக்கிலே கொண்டுபோவார்கள். அந்தப் பல்லக்கின் முன் ஒருவன் ஒரு பெரிய பன்றியிறைச்சித்துண்டைக் கொண்டுபோவான். இப்படிச்செய்தால் துஷ்டதேவதைகள் பன்றியிறைச்சியாற் கவரவப்பட்டுப்போமென்றும் பெண்பிள்ளைக்குத் தீங்குசெய்யமாட்டாவென்றும் நம்புகிறார்கள். இவ்வாறு பெண்பிள்ளை போய் மாப்பிள்ளை வீடுசேர்ந்து விவாகத்துக்குரிய சடங்காசாரங்கள் நடைபெற்றபின் அங்கே விருந்துக் கொண்டாட்டங்கள் நடைபெறும்.

விவாகமானபின்னாவது ஸ்திரீகள் சந்தோஷமாயிருக்க விடமில்லை. ஓர்பெண் தன் நாயகன் வீட்டிலுள்ளோர் யாவருக்கும் அடிமையாகிறாள். அவளைத் தண்டிப்பதற்கு அவ்வீட்டார் யாவருக்குமதிகாரமுண்டு. ஒரு கணவன் தன் மனைவியிலும் பார்க்கத் தன் சகோதரரையும் பெற்றாரையுமே அதிகமாய் நேசிக்கவேண்டும். ஏனெனில் ஒரு சகோதரனிறந்தால் மறுபடியொன்று தேடிக்கொள்ளக்கூடாது. மனைவியிறந்தாலோ. அப்படியல்ல வென்று சீனர் சொல்லிக்கொள்வார்கள். மாமன் மாமியை மரியாதை செய்யாமை, சந்தானமின்மை, விபசாரம், பொறாமை, கெட்டநோய், அலப்புக்காரியாயிருத்தல், களவு, என்னும் ஏழு நியாயங்களினா



லொருவன் தன்மனைவியைத் தள்ளிவிடலாம். ஆனால் மனைவி ஒரு உதவியுமற்ற ஏழையாயிருந்தால், அல்லது தன் மாமன் மாமிக்காகத் துக்கங்கொண்டாடுங் காலமாகிய 3 வருஷத்தை இரண்டுமுறை அனுசரித்திருந்தால் அல்லது அவளை விவாகஞ் செய்தபோது புருஷன் தரித்திரனாயிருந்து பிற்பாடு ஐசுவரியமடைந்தவனாயிருந்தால் அவளைத் தள்ளிவிடப்படாது. எந்த நியாயத்திலாவது மனைவிபுருஷனைத் தள்ளிவிடக்கூடாது. அவன் எப்படிப்பட்ட துன்மார்க்கனாயிருந்தாலும் அவனைத் தெய்வமாக மதிக்கவேண்டும்.

சீனர் தங்கள் பெண்பிள்ளைகளைப் படிப்பிக்கிறதில்லை. அவர்களைப் படிப்பித்தால் அன்னியருடைய நாயின் கழுத்திலே பொற்சங்கிலியைக் கட்டுவதற்குச் சரியென்று சொல்வார்கள். அநேக தருணங்களில் பெண்குழந்தைகளைப் பெற்றதற்காக அவற்றின் தாய்மார் கடினதண்டனை யடைவதுண்டு. சீனருடைய சாஸ்திராகமங்களும் பழமொழிகளும் பெண்பாலாரைத் தாழ்ந்த நிலையில் வைக்கவேண்டுமென்றே போதிக்கின்றனர். வானத்துக்கும் பூமிக்குமெவ்வளவு வித்தியாசமுண்டோ அவ்வளவு வித்தியாசம் ஆண்களுக்கும் பெண்களுக்குமிடையிலுண்டென்று அவைகள் கூறுகின்றன. பெண்களுக்குச் சொந்தப் பெயர்களில்லை. பெற்றாரோடிருக்குங்காலத்தில் அவர்கள் "முதலாவது" "இரண்டாவது" என்று இலக்கங்களா லழைக்கப்படுவார்கள். விவாகமானபின் இன்னாருடைய மனைவியென்றும் ஓராண்குழந்தைக்கு மாதாவாய் வந்தால் இன்னாருடைய தாய் என்றும அழைக்கப்படுவது வழக்கம். புருஷன் தன் மனைவியைப்பற்றி பேசநேரிட்டால் "என்னுடைய மந்தமானமுள்ளு" என்று சொல்வான். அவன் மனைவியையடித்துக் கொன்றாலும் அவனுக்குத் தண்டனையில்லை. அவள் தன் கணவனை யொரு அடி அடித்தாலோ அவளுக்குப் பெரிய மூங்கிற்றடியால் 100 அடி கிடைப்பதுடன் விவாகமுந் தள்ளுப்படும்.

சீனருடைய மார்க்ககோட்பாட்டின்படி ஒரு ஸ்திரீயெவ்வளவு நல்லவளாயிருந்தாலும் மரணத்தின்பின் இரத்தவாவியில் வீழ்ந்து தான் பெண்ணாய்ப்பிறந்த தோஷத்தைத் தீர்த்து அதன்பின் ஓர் ஆண்பிள்ளையாக இவ்வுலகத்திற் பிறக்கவேண்டும். இப்படி

ஆண்களாகப் பிறப்பதற்காகவே பெண்கள் செபதபங்கள் செய்கின்றனர். தற்போது கிறிஸ்து மார்க்கம் பரவுமிடங்களிற் பெண்களின் நிலை நயப்படத்தொடங்கியிருக்கின்றது. சீக்கிரத்திலே யவர்களும் ஆண்பிள்ளைகளைப்போலச் சமசுதந்தரமுள்ள நிலைமை யடைவார்களென்று நம்ப இடமுண்டு—இ. போ.

உதயதாரகை.

---

## வித்யா விஷயக் குறிப்புகள்.

---

சென்னை ராஜதானியிலுள்ள செகண்டரி ஸ்கூல்களில் கைப்பழக்கத்தை விருத்திசெய்வதற்குத் தேர்ந்த போதகர்கள் இரண்டுபேரை இங்கிலாந்திலிருந்து மாதம் ரூ. 450 சம்பளத்துக்கு வரவழைக்க டைரக்டர் அவர்கள் செய்த சிபார்சை கவர்ண்மெண்டார் அங்கீகரித்திருக்கிறார்கள்.

* * * *

கீழ்க்கண்டபடி மதராஸ் கவர்ண்மெண்டார் சில பள்ளிக்கூடங்களுக்கு நன்கொடையளித்திருக்கின்றனர்.

| | ரூபாய். |
|---|---|
| மதராஸ் கிறிஸ்டியன் காலேஜி | 12581 |
| மங்களூர் ஸெண்ட் அலாய்ஸியஸ் காலேஜி | 7068 |
| திருச்சி ஸெண்ட் ஜோஸவ் காலேஜி | 1025 |
| சென்னை பச்சையப்பன் காலேஜி | 9130 |
| விஜயநகரம் மஹாராஜா காலேஜி | 4250 |
| விசாகப்பட்டணம் ஏ. வி. என். காலேஜி | 5151 |
| பர்ஹாம்பூர் கள்ளிகோட்டா காலேஜி | 2012 |
| திருநெல்வேலி ஸி. எம். எஸ். காலேஜி | 953 |
| திருச்சி எஸ். பி. ஜி. காலேஜி | 1471 |

* * * *

எல்லூரில் மகம்மதிய ஜனங்கள் ஏராளமாயிருப்பதாயும் அவர்களுக்கு ஒரு பெண்பள்ளிக்கூடம் பிரத்தியேகமாய் ஏற்படுத்தவேண்டுவது அவசியமெனவும் வட ஸர்க்கில் பெண் பள்ளிக்கூட இன்ஸ்பெக்ட்ரஸ் அம்மாள் தெரியப்படுத்தியதின் மேல் மதராஸ் கவர்ண்மெண்டார் இம்பீரியல் பெண் கல்விநிதி 87,000 ரூபாயினின்றும் வருஷமொன்றுக்கு ரூ. 1518 செலவுக்கு மேற்படாமல் ஒருபெண் பள்ளிக்கூடம் அங்கு ஏற்படுத்த ஏற்பாடு செய்திருப்பதாயறிவிக்கப்படுகிறது.



யாழ்ப்பாணம் மருதயினூர் மடத்தடியில ஆனரபிள் மிஸ்டர் பி. ராமநாதன் அவர்களாற்கட்டுவிக்கப்படும் இந்துப்பெண்கள்விடுதிப் பாடசாலையின் சட்டடவேலை அடுத்தமாசத்தில் முடிவாகிப் பிரவேசக்கொண்டாட்டம் விமரிசையாய் நடத்தப்படுமெனக் கேட்டுச் சந்தோஷப்படுகிறோம்.

* * * *

நமது சென்னை கவர்ண்மெண்டார் தற்காலத்துக்குப் புதிதாய் 48 ஸ்கூல் சப் அஸிஸ்டெண்டு இன்ஸ்பெக்டர்களை அடுத்த நவம்பர் முதல் ஒரு வருஷத்துக்கு நியமனம் செய்திருக்கிறார்கள். கவர்ண்மெண்டார் இன்னும் அதிகமாக சப் அஸிஸ்டெண்டு இன்ஸ்பெக்டர்கள் தேவையாயிருக்குமென்று உத்தேசிக்கிறார்கள்.

* * * *

மைசூர் கவர்ண்மெண்டார் பரீக்ஷார்த்தமாக சமஸ்தானத்தில் கட்டாயமான ஆரம்பப்படிப்பை அமுலுக்குக் கொண்டுவர தீர்மானித்திருக்கிறார்கள். இந்த நிர்ப்பந்தனைகள் ஸ்ரீமான் கோகலே இந்திய ராஜப் பிரதிநிதி சட்டசபையில் கொண்டுவந்த இலவசக் கட்டாயப்படிப்பு மசோதாவை கூடிய வரையில் அனுசரித்ததாகவேயிருக்கின்றன.

* * * *

லாகூரில் சிலதினங்களுக்குமுன் ஒரு மீட்டிங் கூடினபோது ஸ்ரீமதி சாரள தேவியென்னும் மாதராள்ச் சிறுபெண்களுக்குமட்டும் படிப்புச் சொல்லிவைப்பதற்கு அநேக பிரமுகர்கள் முன் வருகிறார்களே யன்றி பருவமான பெண்களுக்கும் தனியான பாடசாலைகள் ஏற்படுத்துவது அவசியமும் தகுதியு மென்று கருதுகிறார்களில்லை. அதை பிரமுகர்கள் கவனிப்பது அவசியமென்று வற்புறுத்திப் பேசி ஒரு தீர்மானத்தையும் கொண்டுவந்தார் அது நிறைவேறிற்று.

* * * *

பிரிட்டிஷ் இந்தியாவில் சர்க்கார் பிரைவேட் பள்ளிக்கூடங்களில் 1910-11ல் கல்வி பயின்று வந்தவர்களின் தொகை 6,358,665 ஆம். இவர்களுள் 5,492,422 புருஷர்களும், 866,243 ஸ்திரீகளுமாம். பத்து வருடங்கட்கு முன்னர் 4084,130 புருஷர்களும், 446,382 ஸ்திரீகளும் வாசித்திருந்தனராம். கல்வியின் அபிவிருத்தி பத்து வருடங்கட்கு முன்னர் இருந்ததற்கு இப்போதிருப்பது புருஷர்களுள் நூற்றிற்கு 34 வீதமும், ஸ்திரீகளுள் நூற்றிற்கு 94 வீதமும் அதிகமாகி யிருக்கின்றன. 1910-11ம் வருஷத்தில் 172,478 கல்விச்சாலைகளிருந்தன. அவற்றுள், 157.401 புருஷர்களுக்கும், 15,077 ஸ்திரீகளுக்குமாம்.

* * * *

ஒரு புதிய பெண் பாடசாலை.—லக்ஷ்மிவிலாஸ பாலிகா பாடசாலை என்னும் தலைப்பெயர் புனைந்த ஒரு பெண்பாடசாலை புதிதாய் மைசூர் இன்ஸ்பெக்டர் ஜெனரல் ஆப்ரிஜிஸ்டரேஷனை மிஸ்டர் ஷாமராவ் எம். ஏ. அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

161976

# பலவகைச் சமாசாரங்கள்.

---

அமெரிக்காவிலுள்ள நியூயார்க்கில் மாத்திரம் இலட்சம் ஸ்திரீகள் 35.000. 000, சுருட்டுப் பிடித்து வருகின்றார்களாம்.

*  *  *  *

வியன்னாவில் ஜனங்கள் இரவு 10-மணி முதல் 12-மணி பரியந்தம் வெளியேசென்று வியவகாரஞ்செய்வதற்கு 2 பென்ஸ் வரிகொடுக்க வேண்டுமாம்; இரவு 12 மணிமுதல் காலை 6-மணி பரியந்தம் வெளியே சென்று விவகாரஞ் செய்வதற்கு 4 பென்ஸ் வரிகொடுக்க வேண்டுமாம். இன்னும் வேடிக்கையான வரியும் அங்குண்டாம்.

*  *  *  *

ஜர்மனி தேசத்தில் தபால் தந்தி இலாக்காவில் 242000 பெண்களும், அமெரிக்காவில் 239000 பெண்களும், இங்கிலாந்து முதலிய விடங்களில் 184000 பெண்களும் வேலை செய்து வருகிறார்களாம்.

*  *  *  *

ஐக்கிய மாகாணத்தில் ஆதன்ஸ்கோட் என்ற மாது நியாயாதிபதியாயிருக்கிறாளாம். உலகமெங்கும் ஐகோர்ட் ஜட்ஜிகளாயிருப்பவர்கள் கல்வியிற்றேறிய புருடர்கள் தான். ஆனால் கல்வியிற்றேறி நியாய சட்டத்தில் மிகப் பயிற்சியும் ஞானமும் வாய்ந்தமாது இம்மாதொருவள் தானும்.

*  *  *  *

ஹாலண்டு தேசத்து ராணியார் சிம்மாசனம் அமர்ந்து கொஞ்ச நாளைக்கெல்லாம் அரண்மனை நகைக் கிபரை சிலகள்வர்கள் வந்து கட்டி உருட்டி விட்டு விலையுயர்ந்த நகைகளைத் திருடிப்போய் விட்டார்களாம். திருட்டுப் போன நகைகளைப் பற்றித்துப் புச்சொல்வோருக்கு 5000, பவுன் கொடுப்பதாக விளம்பரம் பிரசுரித்தார். இரண்டு வருஷம் கழிந்து ஒருபிராஞ்சுக்கரன் நகையிருப்பிடத்தை காண்பித்து விட்டு வெகுமதியை அடைந்தானும் நகைகள் எலலாம் அகப்பட்டு விட்டன. திருடர்கள் இன்னும் அகப்படவில்லையாம்.

*

ஆசியாக்கண்டத்திற்கும் ஐரோப்பகண்டத்திற்கும் மத்தியிலுள்ள ருஷியாதேச எல்லையில் யெய்வால்சின் என்னுமொரு பட்டணமுண்டு. அப்பட்டணத்தின் விசேஷம் என்னையெனில், அதில் வசிப்பவர் எல்லோரும் புருஷர் என்பதுதான். பெண் என்றபேச்சே அப்பட்டணத்திற் கிடையாதாம் பெண் இல்லாமல் பிரபஞ்சமேது என்று பலர் சொல்லக்கேட்டிருக்கிறோம்.



[library stamp]